உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

புளந்திரன் தூது.

சென்னை சூளை

பு. முனிசாமி நாயுடு & ஸன்

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1929. [அணா 8

உ

கடவுள் துணை.

புனந்திரன் தூது.

விநாயகர் தோத்திரம்.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்தியின்புத்திரனே சரிந்தவயிற்றோனே
முத்தியளிக்கின்ற முருகற்மூத்தோனே
வித்தையெனக்கருளும் வேலவற்குமூத்தோனே
திருவலமாம்மேற்படி தெற்கிசைந்தவெட்டாலை
வெட்டாலைக்குள்ளிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
பொற்பாதம்நான்மறவேன் பொன்னுக்கணபதியே
பொன்னுக்கணபதியே பிரபலமாய்முன்னடவாம்
ஏடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமையா
குரலில்குடியிருந்து குரலோசைதாருமையா
தப்பாமலெந்தனுக்கு சரஸ்வதியேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்தான்படிக்க
செஞ்சொல்சோதையுட தேவியர்கள்பாலகனே
கஞ்சன்வலதழித்த கார்மேகாமுன்னடவாய்
எல்லையளந்தபிரான் ஏழுமரம்எய்தவரே
புனந்திரனார்தூதுரைக்கப் புண்ணியனேவாக்கருளும்
இந்திரனார்தூதுரைக்க யெந்தனுக்குவாக்கருளும்
தப்பிதங்கள்வாராமல் தாழ்வுகள்நேராமல்
குற்றங்கள்வாராமல் குறைவுகள்நேராமல்
ஒப்பிமனம்பொறுத்து உத்தமனேவாருமையா
கார்க்கடனுனக்கு கர்த்தாவேமெய்ப்பொருளே

முருகர் தோத்திரம்.

சீரானமாமுகனே சிற்றடியைவேலவரே
மாயோன்மருகனே வள்ளிமணவாளா
கந்தனேயெந்தனிட கவலையெல்லாந்தீர்த்தவனே
புனந்திரனார்தன்தூதைப் புத்தியுடன்தான்பாட
புத்திதனைநீகொடுத்தால் புகழ்ச்சியாய்நான்படிப்பேன்

சரஸ்வதி தோத்திரம்.

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
வாணிசரஸ்வதியே மறையவனார்தேவியரே
என்னைவிட்டு [illegible]இருந்து நடத்துமம்மாயிக்கதையை
செஞ்சிற்குடியிருந்து நீநடத்தவேண்டுமம்மா
அஞ்சியுனைப்பணி[illegible] ஆனந்தவாழ்மாரி
வஞ்சியுமையவளே வல்லியேதாருமம்மா

செஞ்சொல்தவறாமல் சீராகவிக்கதையை
பஞ்சையானெந்தனுக்குப் பாடவருள்புரியும்
புனந்திரனார் தூதுரைக்க புகழ்ச்சிதரவேண்டுமம்மா
மகிழ்ச்சியாகயிக்கதையை மண்டலத்தில்பாடுகிறேன்

கதையின் வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளும்காலையிலே
ஏதுகுறையில்லாமல் இனியாசையாண்டிருந்தார்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

திரியோதிரன் சேனைத்தலைவர் ஆலோசனைக்கூட்டம்.

நூலார்கடுந்திரளார் நூற்றிருருவர்தான்தேடி
அம்பலத்துவாசலிலே யனைவோரும்வந்திருந்தார்
காஞ்சிவளநாடாளுங் கர்னரும்வந்திருந்தார்
சாமதுரோகி சகுனியுமங்கிருந்தான்
பாட்டர்புலவர் பதினெட்டுமந்திரியும்
அல்லவருமங்கிருந்து வாலோசனைகள்செய்து
ஐவர்பஞ்சபாண்டவரை அங்கேவரவழைத்து
தர்மர்க்கெதிராக சகுனியவன்வந்திருந்து
தார்வேந்தன்முன்பாக சண்டாளன்வந்திருந்து
மாயத்தால்சூதாடி மனமுறுகமண்பறிந்து
மாதைதுயிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
ஐவரையுங்காடோட்டி ஆண்டிருந்தான்ராச்சியத்தை
பதின்மூன்றுதன்வருஷம் பாரவனம்வோட்டி
பஞ்சவரைக்காடோட்டி பாருலகமாண்டிருந்தான்
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே

ஐவர் விராடபுரத்தில் மறைவாயிருந்தது.

ஐவர்பஞ்சபாண்டவரும ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும மயிலணையாள்துரோபதையும்
பன்னிரண்டுதன்வருஷம பாரவனம்தீர்ந்து
பதின்மூன்றும்தன்வருஷம் விராடபுரத்தில்வந்து
மாறுவேஷங்கொண்டு மருமம்தெரியாமல்
உருவங்கள்தெரியாமல் உத்தமர்கள்வாசம்பண்ணார்
அந்தவருஷம் அதுவுந்தொலைந்தபின்பு
பதினாலாந்தன்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு

பெருமாளுடன் பஞ்சவர்கள் தூதுரைக்க ஆலோசனைசெய்கிறது.

ஐவரைவரும் ஆழிவுசந்தாரும்
வேந்தர்பெருமாளும் வெளிமண்டபத்தில்வீற்றிருந்தார்
தக்கப்புகழுடைய தருமரெழுந்திருந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாளடிபணிந்து

ஆளப்பிறந்த அபிமனும்பட்டானே
அந்தாளர்தீர்த்த அரவானும்பட்டானே
தாமமுடியான் கடோற்கஜனும்பட்டானே
ஆரையனுப்புவோம் ஆளடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரியதூதுக்கு
என்றுமவனுரைத்து ஏங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னர்மனஞ்சலித்து மர்மமாய்வீற்றிருந்தார்
ஏழுலகமாளுகிற எம்பெருமாளேதுசொல்வாள்
போட்டசிறைமீட்க ர்ளாச்சுமன்னவரே
தூதுக்குபோவார் சொல்லுந்தருமரேநீர்

துரோபதைபிள்ளையை பெருமாள்வேண்டாமென்று தடுக்கிறது.

ஆரையனுப்புவோம் அடல்பெரியதூதுக்கு
என்றுமவருரைக்க ஏதுசொல்வார்தருமலிங்கம்
பச்சைமடல்விரியும் பாளைவிரிபூமணக்கும்
பாஞ்சாலமகாராசன் சுயமணப்பூம்பந்தலிலே
வில்லோசைக்கொண்டு இளங்கொடியைமாலையிட்டோம்
வில்வளைத்துமாலையிட்ட மெல்லிதுரோபதையாள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போலாகவிடுவோம்
அந்தவுரைகேட்டு ஆதிமூலமேதுசொல்வார்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
இளம்பஞ்சபாண்டவர்கள் இணைபிரியாமன்னவர்கள்
ஐவரையும்போகவிட்டால் அனர்த்தம்வந்துநேர்ந்துவிடும்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கப்புகழுடைய தருமாதுகேட்டு

பெருமாள் நல்லரவானையும் வேண்டாமென்று தடுக்கிறது.

வீடெல்லாமாணிக்கம் வாசலெல்லாமாணிக்கம்
கட்டியுடைத்தால் கலந்தேறுமாணிக்கம்
மாணிக்ககூண்டுகட்டி வாசலிலேதானம்பண்ணை
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போகவிடுவோம்
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்தான்கேட்டு
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
பாசத்திளவறையன் பள்ளிபழகையிலே
பாரதமோசிரதமோ என்றுன்படைத்தலைவன்
பெருமாளோபொரியாவோ என்றுசொன்னான்புண்ணியனும்
சொல்லிபெருமாளும் தூதுரைக்கமாட்டான்காண்
எரிநாகங்கொண்டவனோ டெதிராளமாட்டானே
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கபுகழுடைய தருமாதுகேட்டு
இனியாரைப்போகவிடுவேன் எழில்பெரியதூதுக்கு

பெருமாள் மின்னொளியாள் பிள்ளையை
வேண்டாமென்று தடுக்கிறது.

தேசத்தால்மடையடைத்தால் செல்லேறப்போகுதென்று
பணத்தால்மடையடைத்தால் பாசிபிடிக்குமென்று
துட்டால்மடையடைத்தால் தூசேறப்போகுதென்று
காசால்மடையடைத்தால் களும்புபிடிக்குமென்று
சோத்தால்மடையடைக்கும் சோழன்றிருமடந்தை
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாள்நாயகியாள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போகவித்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்தான்கேட்டு
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
கொற்றப்பூர்மன்னன் குறக்கோலங்கொண்டலவோ
கொற்றம்போரம்பலத்தே கூசாமல்போயிருந்து
கொச்சியங்கள்சொல்லி யுரைப்பார்களைவரையும்
எளிதங்கள்சொல்லி யுரைப்பார்களைவரையும்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கப்புகழுடைய தருமாதுகேட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
இனியாரையனுப்புவோம் ஆனடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரியதூதுக்கு
ஏழுகோடிசேனைக ளெல்லாமடிந்தார்கள்
ஒருகோடிபாலகர்கள் ஒக்கமடிந்தார்கள்
யாரையனுப்புவோம் ஆளடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரியதூதுக்கு
என்றுமவருரைத்து ஏங்கிமுகந்தளர்ந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாளேதுசொல்வார்

கிருஷ்ணமூர்த்தி புனந்திரனைத் தூதுக்கனுப்ப சம்மதித்தது.

மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
மதுரையன்பத்தறுகாதம் ஆளுகிறபாண்டியர்கள்
ஆறுயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
மைந்தருமில்லையென்று மன்னர்மனஞ்சலித்து
மாளுகிறோமென்று மலையேற்றவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
மன்னன்விஜயன் மடலூர்ந்தமாதேவி
காளைவிஜயன் கடலூர்ந்தமாதேவி
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டிதலைதுணித்து வீரபட்டங்கட்டினவள்
பாவையிளங்கொடியாள் பயின்றெடுத்தரத்தினங்கள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போகவிடுவோம்
உத்தமியாள்பெற்றெடுத்த புத்திரனைப்போகவிடுவோம்

ஏழுலகமாளுகிற எம்பெருமான்தானுரைக்க
தக்கப்புகழுடைய தருமாவர்கேட்டு

தருமர் வேண்டாமென்று தடுக்கிறது.

ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
ஏழுவேவிமஞ்சள் எடுத்தந்தபாண்டியர்கள்
ஏழேரிதண்ணீரிலே எல்லாமுன்னரத்தவர்கள்
ஸ்ரீகாரங்கொண்டார்கள் சீருடையபுத்திரனை
மஞ்சநீர்கொண்டார்கவ் மைந்தன்புலந்திரனை
மைந்தனுக்கும்எந்தனுக்கும் பேசவழக்கில்லை
என்றுமவருரைத்து யிருக்கின்றவேளையிலே

புலந்திரன் வரலாறு அருச்சுனன் தருமருக்குக் கூறுதல்.

காண்டாபுரமெரித்த காளையதுகேட்டு
வில்லாளிபார்த்தன் விசையனெழுந்திருந்து
அண்ணனெதிரிலே அடிவணங்கிதெண்டனிட்டு
கூத்தனெனுஞ்சோலையிலே போயிருந்தேனொருநாள்
வாழ்மதுரைபட்டணத்தில் போயிருந்தேன்நான்சிலநாள்
தொட்டுக்கொடுத்ததில்லை சுந்திரப்பெண்பாண்டியற்கு
எடுத்துக்கொடுத்ததில்லை எந்தனிடபுத்திரனை
மைந்தருக்கும்எந்தனுக்கும் வழக்குண்டுஎம்பெருமான்
வில்லாவிபார்த்தன் விசையனுரைக்கவுமே

தருமர் சம்மதித்தது.

தக்கப்புகழுடைய தருமரவர்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
தேகம்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உண்ணுதேபூரித்து உடம்பெல்லாம்பூட்டிவிட்டு
சந்தோஷங்கொண்டாரே தருமர்பெருமாளும்
சரள்குளிர்ந்தா இருவருமோடிவந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமானைப்பணிந்து
தக்கப்புகழுடைய தருமரடிபணிந்து
கைகட்டிவாய்புதைத்து வந்துமுன்னேநின்றார்கள்
எங்களையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றார்

தருமர் அல்லியரசாணிக்கும் புலந்திரனுக்கும் ஓலையெழுதுகிறது.

தக்கப்புகழுடைய தர்மாதுகேட்டு
பங்கயஞ்சிர்கண்ணனுக்கு ஓலையெழுதுமென்றார்
தம்பிப்புலந்திரற்கு சுபவோலையெழுதுமென்றார்
சரலப்பூந்தாரார் இருவருந்தான்கேட்டு
அருனருளுமென்னண்ணு அப்படிக்கேயாகுதென்று
தாளிப்பனையோலை வாரிதலைசேர்த்து
வெள்ளைப்பனையோலை விளிப்பிரண்டுந்தான்சிவி
புக்கமுஞ்சிர்வாரி பவளஞ்சிர்ஒப்பமிட்டு

செம்பொன்னெழுத்தாணி தேர்விசையர்கைபிடித்து
என்னவென்றுசொல்லி எழுகவென்றுரோலையிலே
தக்கப்புகழுடைய தருமரெடுத்துரைப்பார்
இன்னமின்னங்காடுறைய மாட்டாளிளங்கொடியும்
எங்குந்திரிந்தார்கள் எள்ப்பானகல்லிறடி
பருக்கல்லுறுத்த பனிவந்தலைமோத
ஓடும்பருக்கேனும் உள்ளங்கால்தானுறுத்த
கவிந்தமரத்தடியில் கண்பள்ளிகொண்டிருந்தோம்
இன்னமின்னங்காடுறைய மாட்டாளிளங்கொடியாள்
தொங்கலெனும்பூமுடியாள் தூதுரைக்கவேணுமிப்போ
சுந்திரப்பூமுடியாள் இங்கேவரவேணுமென்று
ஓலையெழுதி சதுராய்க்குறியுமிட்டு
இராசாக்களோலைக்கு இரத்தினக்குறியுமிட்டு
மந்திரிமாரோலைக்கு மஞ்சட்குறியுமிட்டு
ஓலைச்சுருளெடுத்து செந்திரிக்கந்தான்போட்டு
காற்றிலேயும்வேகமுள்ள தூதுவரைத்தானழைத்து
ஓலைச்சுருளெடுத்து உத்தமர்கள்கைகொடுத்து
மதுரைவளநாட்டுக்கு மன்னவர்களேநீர்போய்
மடக்கோலைகட்டுவச்சி மன்னுதிரும்புமென்று
சுருளோலைகட்டுவச்சி தூதர்திரும்புமென்றார்
தூதுவருந்தான்கேட்டு தொழுதிரங்கிதெண்டனிட்டு
அருளருளுமென்னையா அப்படிக்கேயாகுமென்று
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து

தூதன் மதுரைக்கு ஓலைகொண்டுபோகுதல்.

மடக்கோலைகட்டெடுத்து மன்னர்மடியில்வைத்து
சுருளோலைகட்டெடுத்து தூதர்மடியில்வைத்து
அத்திபுரமும் நடந்தார்அழகான
குருக்ஷேத்திரபூமி குருபூமிதேசம்விட்டார்
எல்லையதுதாண்டி இளந்தோப்புந்தான்தாண்டி
வைகைக்கரைதாண்டி வனமாய்வனந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
மதுரைதிசைநோக்கி வாறார்கள்தூதுவர்கள்
வாரவழிதனிலே என்னென்னவதிசயங்கள்
கொன்றைகள்பொன்காய்க்க வேங்கைகள்குட்டிமீனை
முத்துக்காய்காய்க்க பவளக்கொடிகனக்க
நீர்முத்துஞ்சால்களும் நின்றுநிழல்காக்க
நீரோடும்நீர்முதலை நின்றுவிளையாட
சேறுங்கழலுமங்கே சென்றுவிளையாட

வாழைபழுக்க கரும்புகொலேசாய
ஆலேப்பழுக்க அணிகள்விளையாட
கிள்ளேப்பழுக்க கிளிகள்விளையாட
மாலேவுதிர மலர்கள்சொரிந்துவிழ
சந்தன ஆறு தளும்பிபெருகிவர
குங்குமஆறு குளம்பிபெருகிவர
சிதேவியம்மன் உரைவாள்பலதுறையுங்
திருவினையால் அம்மன் திரிவால்பலதுரையும்
சோலேமலர்கண்டார் சொக்கரிடபாதங்கண்டார்
சொக்கரிடபாதம் தொழுதிறங்கிதெண்டனிட்டான்
ஆனேமலேகண்டான் அம்மனிடபாதங்கண்டான்
அம்மனிடபாத மடிவணங்கிதெண்டனிட்டான்
அடிவணங்கிதெண்டனிட்டு அப்பாள்நடக்கலுற்ருன்

பொற்ருமரை சிறப்பு.

அல்லிப்பிறந்தாள் அவள்பிறந்தபொய்கைகண்டான்
பூவில்பிறந்தாள் பிறந்ததொருபொய்கைகண்டான்
மலரிற்பிறந்தநாளும் அவளுதித்தபொய்கைகண்டான்
பொய்கைப்பதுமைகளே போனவனும்பார்த்திருந்தான்
படிக்குப்படிகளொரு பன்னிருகாதவழி
படியகலங்கண்டதொரு பள்ளூற்றைங்காதவழி
ஏறும்படிகளது எண்ணூறுகாதவழி
இறங்கும்படிகளொரு எண்ணூற்றைங்காதவழி
நாலுபடிகளின்மேல் ஞானவிளக்கெரியும்
அஞ்சுபடிகளின்மேல் பஞ்சவர்னம்போட்டிருக்கும்
எட்டுபடிகளின்மேல் இலிங்கம்புதைத்திருக்கும்
பத்துபடிகளின்மேல் பத்தினிமார்வோதிநிற்பார்
தட்டோடேதன்னகையுந் தாமரைப்பூங்காவுகளும்
கட்டுகழுத்திக் கடலாடும்பொய்கையது
புத்திரசந்தானங் கொடுக்குமந்தபொய்கையது
கைம்பெண்டுஸ்நானஞ்செய்தால் கைலாசஞ்சேர்க்கும்பொய்கை
அறிவிலாள்ஸ்நானம்பண்ணுல் அரிவிளங்கும்பொய்கையது
மலடிகள்ஸ்நானம்பண்ணுல் மைந்தனளிக்கும்பொய்கை
கன்னிகழியாப்பெண்கள் கடுகெனவேஸ்நானம்பண்ணுல்
கன்னிகழிந்திடுவார் காளேகளேயீன்றிடுவார்
மைந்தர்களேயீன்றுடுவார் மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவார்
பிள்ளேகளேயீன்றிடுவார் போகவளர்ந்திடுவார்
இப்படியாய்பதவிதரும் இயலானபொய்கைதனே
கண்டானேதூதுவனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தானேதூதுவனும் பார்வைரெண்டுங்கொள்ளாமல்
அப்பொய்கைதான்தாண்டி அப்பாலேபோகலுற்ருர்
அரிதேசிபரிதேசி யாவர்வந்துநின்ருலும்

இல்லையென்றுசொல்வார்கள் மெல்லியுடபுண்ணியத்தால்
முத்துபவளம் மொண்டுமவர்க்களிப்பார்
வச்சிரமாணிக்கம் வாரியவர்க்களிப்பார்
பிழைத்தேனென்றுபோவார்கள் பொற்கொடியாள்புண்ணியத்தால்
அப்போது தூதுவனும் அந்தத்தெருதாண்டி
மற்றுமொருவீதியிலே வாரார்கள் தூதுவர்கள்
ஆனைகட்டிப்போர்படுப்பார் அல்லியிடராச்சியத்தில்
குதிரைகட்டிப்போர்படுப்பார் உத்தமியாள்சீமையிலே
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அரிதாளறுத்துவர மறுதாள்பயிராகும்
அரிதாளின்கீழிருந்து ஐங்கலத்தேன்கூடுகட்டும்
கரும்புமிளநீரும் கண்திறந்துமடைபாயும்
வாழைவடக்கிலும் வான்கமுகுதெற்கிலும்
சோலைகிழக்கிலும் துய்யபலாமேற்கிலும்
இப்பெரியராச்சியத்தை கண்டானே தூதுவனும்
கண்டானே தூதுவனும் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தானே தூதுவனும் பார்வைரெண்டுங்கொள்ளாமல்
அந்தத்தெருதாண்டி மற்றுமொருவீதியிலே
மற்றுமொருவீதியிலே வாரானே தூதுவனும்
வேலைப்பழிக்கின்ற விலைமாதர்வீதிகளும்
சேலைவிலைமதிக்கும் சேணியர்கள்வீதிகளும்
யானைவிலைமதிக்கும் அரசர்கள்வீதிகளும்
சேனைத்தலைவர்கள் சூழ்ந்திருக்கும்வீதிகளும்
குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிகளும்
ஒட்டைவிலைமதிக்கும் உத்தமர்கள்வீதிகளும்
கொட்டியேபொன்னளக்கும் கோமுட்டிவீதிகளும்
தட்டிகொட்டிப்பணிசெய்யும் தட்டார்கள்வீதிகளும்
செட்டால்சரக்குவிற்கும் செட்டியார்வீதிகளும்
வில்பிடித்துலாவுகிற வேந்தர்கள்வீதிகளும்
மலப்போருதான்செய்யும் மன்னர்கள்வீதிகளும்
வேதமுறைதவறா வேதியர்கள்வீதிகளும்
நீதிமுறைதவறா நெறிமன்னர்வீதிகளும்
அந்தத்தெருதாண்டி மற்றொருவீதியிலே
மற்றொருவீதியிலே வாரானே தூதுவனும்
கடையும்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அல்லியுடவாசலுக்கு வாரானே தூதுவனும்
அரசிலையுந்தோரணமும் காக்கும்தலைவாசலிலே
அல்லிகொடிகட்டி யார்க்குந்தலைவாசல்
பூதம்பணிகள்செய்யும் பொற்கொடியாள்வாசலிலே
மேகம்பணிகள்செய்யும் மின்னனையாள்வாசலிலே
கண்டானே தூதுவனும் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்

பார்த்தானே தூதுவனும் பார்வைரெண்டுங்கொள்ளாமல்
தூதுவனுமப்போது துருசாகத்தானடந்து
ஓடமலர்க்கண்ணுளும் உட்கட்டிற்போய்புகுந்து
கோசவளநாடான் கொலுவுக்குமுன்னேவந்தான்

புலந்திரன்கொலுச்சபை தூதன்காண்கிறது.

ஐயன்றிருக்கொலுவி லமரர்கொலுவிருந்தார்
செம்பொன்முடிதரித்த கிருஷ்ணரவரங்கிருந்தார்
இரத்தினமுடிதரித்த ராஜாக்களங்கிருந்தார்
முத்துமுடிதரித்த முடிமன்னரங்கிருந்தார்
வயிரமுடிதரித்த மந்திரிகளங்கிருந்தார்
ஈட்டிபிடிமன்னர் இளவரையாங்கிருந்தார்
போட்டசட்டைவாங்காத போர்மன்னரங்கிருந்தார்
இட்டசட்டைவாங்காத இடிமன்னரங்கிருந்தார்
ஆறாயிரவரும் அணிதிரளாரங்கிருந்தார்
பொன்னுமலைநாடாளும் போரெழுதியங்கிருந்தார்
போரஞ்சாமன்னர் புலந்திரனார்வீரியரும்
நடுவேகொலுவிருந்தான் ஞாயருதித்தாற்போல்
அப்போதுதூதுவனும் ஆறலைழுகுமன்னர்
போஜவளநாட்டான் கொலுவுக்குமுன்னேவந்து
மடக்கோலைகட்டுவச்சி மன்னர்வணங்கிநின்றார்
சுருளோலைகட்டுவச்சி தூதர்வணங்கிநின்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
அண்ணாந்துபார்த்து அவையர்திருமுகத்தை
ஆரடாதூதுவரே எங்கிருந்துவந்தீர்கள்
எந்தவூரெந்தநாடு எனக்கறியச்சொல்லுமென்றார்
அப்போதுதூதுவர்கள் அடிவணங்கியேதுசொல்வார்
இந்நாட்டானல்லகாண் இந்திசையானல்லகாண்
தென்னாடுஞ்சூழ திரைவணங்கவந்தவன்காண்
அத்திபுரமாளும் ஐயமார்தூதுவன்காண்
உங்கள்-ஐயமார்தானனுப்ப அடிவணங்கவந்தேன்காண்
ஐயமார்தூதென்று அடிவணங்கிதெண்டனிட்டான்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
ஐயமார்தூதனென்ன அஞ்சிப்பயப்தவனும்
ஐவருடன்பாதம் அடிநோக்கிதெண்டனிட்டு
அடுத்துமவன்தெண்டனிட்டு யெடுத்தான்சுருளோலை

புனந்திரன் ஓலையைவாசிக்கிறது.

மடக்கோலைதானெடுத்து மன்னவனுந்தான்விரித்து
சுருளோலைதானவிழ்த்து துரிதமுடன்வாசிக்க
ஓலைச்சுருள்விரித்து வாசித்தானுத்தமனும்
ஓலையின்வாசகத்தை யுத்தமனும்பார்க்கலாமே

சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
அடித்தான் தலைமேலே கடகம்கழண்டுவிழ
மோதிரக்கையாலே முகத்திலறைந்துகொண்டான்
மணிக்கடகக்கையாலே மார்மேலறைந்துகொண்டான்
வேல்பொருதுங்கண்ணன் விழுந்துபுரண்டழுதான்
தாமமுடியான் தரைமேல்புரண்டழுதான்
மாலைமுடியானும் மண்மேல்புரண்டழுதான்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
அங்கிருக்குந்தூதுவர்கள் அவசரமாயோடி
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தானிருக்கும்
மண்டபமேதேடியல்லோ மன்னவர்கள்வாரார்கள்
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி

அல்லியைக் காண்கிறது.

ஓடைமலர்க்கண்ணன் உட்கட்டில்போய்புகுந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்முன்னேவந்து
அல்லியெதிரேவந்து அடிவணங்கிதெண்டனிட்டு
தெண்டனிட்டுதூதுவர்கள் திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதான்
பிறவாமுடிதரித் பெண்பெருமாள்தான்பார்த்து
நீ-யாருடையதூதன் அறியவுரையுமென்றாள்
யார்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல உம்முடையநற்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமானேவுன்பணிதான்
நீயிங்கேவந்ததெனக் கறியவுரையுமென்றாள்
உத்தமர்களைவர் உத்தாரந்தானனுப்ப
அனுப்பியஓலைதன்னை அலைதாரன்தான்பார்த்து
ஓலைச்சுருள்விரித்து வாசித்தான்உத்தமனும்
தம்பியிறந்தானென்று தனித்துப்புலம்புகிறான்
வேல்பொருதுங்கண்ணாள் விழித்துப்புலம்புகிறாள்
அந்தனிசேஷ மதுசொல்லவந்தோமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு

அல்லிபுனந்திரனைக்காண கொலுவுக்குவருகிறது.

கழட்டாமுடிகழட்டி காரிகைமார்கைகொடுத்து
வீரமுடிகழட்டி மெல்லியர்கள்கைகொடுதது
மகுடமுடிகழட்டி மங்கையர்கள்கைகொடுத்து
அங்கிரிஜாரு அழகாகத்தான்களைந்து
பாவாடையுள்ளுடுத்தி பட்டாடைமேல்சாத்தி
ஆனந்தவாழ்மாரி அலரத்தலைசொருகி
பல்லக்கிலேறாமல், பாண்டிப்பெருமாளும்
தண்டகையிலேறாமல் தாரார்குழலாளும்
கால்நடையாய்த்தானே கடுகவழிநடந்து

காக்காடிபோலே கடுகவழிநடந்து
எட்டடியும்ஓரடியாய் இட்டுமிகநடந்து
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புறந்தாண்டி
பேடைமயில்கண்ணாள் உட்கட்டில்போய்புகுந்து.
கோசலநாடாள் கொலுவுக்குமுன்னேவந்தாள்
பிள்ளைபுலந்திரற்கு பெண்பெருமாளேதுசொல்வாள்

அல்லி புலந்திரற்கு சொல்லுகிறது.

தருமர்வலுவிழந்தீர் தம்பிமார்தோளிழந்தீர்
வீமர்வலுவெழுந்தீர் விஜயனார்தோளிழந்தீர்
உப்பிட்டவாளை வஞ்சனைபுரிவிட்டாற்போல்
தப்பிவிட்டீர்நீயுமிப்போ தம்பிபுலந்திரரே
ஆறிவிடும்ஆறிவிடும் ஐயாவேயாறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் தேவனேதேறிவிடும்
ஆனைத்தமார்பனை அனைத்துமடியில்வைத்து
மாலைமுடியானை மடிமேலேகொண்டுசென்று
கொற்றவனார்கோபங் குணப்படுத்திகொண்டவளும்
மன்னவனார்கோபம் வசப்படுத்திக்கொண்டிருந்து
இப்படியாக இருக்கின்றவேளையிலே
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியரும்
பொன்னுமலைநாடாளும் அனைவருமேவேஓடிவந்து
போர்ராசாமன்னர் புலந்திரத்தான்பார்த்து
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவந்தார்கள்
சுந்தரப்பஞ்சவர்கள் சுகமாயிருக்கிறார்கள்
ஆறிவிடும் ஆறிவிடும் ஐயாவே ஆறிவிடும்
தேறிவிடும் தேறிவிடும் தேவனேதேறிவிடும்
இப்படிக்கேசொல்லி இருந்தார்கள்பாண்டியர்கள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமும்
ஓலைச்சுருளெடுத்து உத்தமியாள்கைபிடித்து
பவளசேனைமந்திரியை பட்டோலைவாசியென்றாள்
பவளசேனைதாவங்கி பட்டோலைதான்விரித்து
ஓலைச்சுருள்விரித்து வாசித்தாளுத்தமியும்
வாசித்தவாசகத்தை கேட்டந்தமெல்லியரும்

அல்லியரசாணி புலந்திரனுக்குக் கோபித்து **உரைக்கிறது.**

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு . .
கத்திகுத்திமண்டி கண்கள்நெருப்பாக
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
பக்கச்சதைத்துடிக்கப் பத்தினியாளேதுசொல்வாள்
போபோபுலந்திரரே போகவிடேன்தூதுக்கு
முன்னையும்பூசல் முடிந்துமிருக்குதே
மூத்தமுடிபாண்டியனும் பட்டுமிருக்கிறானே
இப்பவும்பூசல் எழுப்புகிறார்பஞ்சவர்கள்

கொல்லகீற்பார்பஞ்சவர்கள் கூட்டியிருப்பார்கள்
சிம்மாடுகட்டி சுமப்பார்கள்பஞ்சவர்கள்
கூடலைக்கரைக்குந் தொடருவார்பஞ்சவர்கள்
ஆலோலமென்று அழுவார்கள்பஞ்சவர்கள்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
போபோபுனந்திரரே போகவிட்டேன்தூதுக்கென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் மறுத்துச்சொல்லுகிறது.

ஐவரரையற்கும் அழிவுசந்தாற்கும்
அவர்க்கேதெரியாதே யுனக்கேதெரியுமோ
போகவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
சோரவளநங்கை சுபத்திரையைப்போலேன்றன்
சடையாய்சடைவிரித்து சன்றுசிவேடங்கொண்டு
பிலாக்கணஞ்சொல்லி யழமாட்டேன்புண்ணியனே
ஒப்பாரிசொல்லி யழமாட்டேன்வுத்தமனே
போபோபுனந்திரரே போகவிட்டேன்தூதுக்கென்றான்
போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
என்னென்னசொன்னாலும் இனிகேளேன்என்றாச்சி
போகவிடைதாருமென்றார் போர்விஜயன்புத்திரனும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
நல்லதனத்திலே சொன்னாலுங்கேளானே
சொன்னாலுங்கேளானே சுந்தரப்பூமுடியான்
கடுத்தமொழியாக காளையற்குநாமுரைத்தால்
அப்போதுநிற்கானே ஆனந்தவாழ்மார்பன்
பொற்கொடியாளல்லியரும் புத்திரற்கேதுசொல்வாள்
ஆருடையபுத்திரனும் என்றாளேஅல்லியரும்
என்றுசொன்னவார்த்தையை இந்திரனுந்தான்கேட்டு
இவ்வுலகம்தானறியும் எம்பெருமாள்தானறிவார்
மண்டலங்கள்தானறிய மன்னவர்கள்தானறிவார்
சோலைமலருடைய சொக்கருந்தாமறிவார்
ஆனைமலையுடைய அம்மனும்தானறிவாள்
கவிஞ்சிவளைத்த காளையுடபுத்திரன்யான்
எட்டாதவில்வளைத்த விஜயனுடபுத்திரன்யான்
என்றுமவனுரைக்க ஏதுசொல்வாளல்லியற்கு
பொழுதுமேதானாச்சு போகவிடைதாருமென்றான்
போகவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
விடைதாரும்ஆச்சியென்று வேந்தனுந்தெண்டனிட்டான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
அங்கிருக்குந்தாதிகளி லதிலொருத்திதானழைத்து
பொன்னுமல்லநாடாளு மன்னனைக்கூப்பிடென்றாள்

தாதிகள் பொன்னுமலைநாடானைக் கூப்பிடுகிறது.

அருளருளுமென்னுச்சி யப்படிக்கேயாகுமென்று
சொல்லப்பெற்றோமென்று சுறுக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லிக் கும்பிட்டெழுந்திருந்து
பட்டெடுத்துக்கட்டி பலர்மகிழ தங்களைப்போல
எலுமிச்சம்பூப்பட்டு நன்றாய்வரிந்துடுத்தி
போராளவள் தாதி பொன்னபரணமின்ன
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
மாநகரமாளும் மகாராஜனமாளிசென்றான்
பொன்னுமலைநாடாளும் அண்ணர்க்கெதிரில்வந்து
அண்ணற்கெதிரில்வந்து அடிவணங்கிதெண்டனிட்டு
தெண்டனிட்டுதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
பொன்னுமலைநாடாளும் அண்ணவுந்தான்பார்த்து
நீ-யார்பெண்ணேதாதி யறியவுரையுமென்றான்
யார்பணியுமல்ல வடியேன்திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல வும்முடையநற்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமாளேஉன்பணிதான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தாதியென்றான்
பொன்னுமலைநாடானு அண்ணவுந்தான்கேட்டு
நீயிங்கேவந்த தெனக்கறியச்சொல்லுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
உம்மையழைத்துவரக் கட்டளைகளிட்டார்காண்
வாருமையாவென்றுசொல்லி வருந்தியேதெண்டனிட்டான்
பொன்னுமலைநாடாளும் அண்ணவுந்தான்கேட்டு
இந்நேரமங்கே இருந்துநான்வந்தேனே
நானறியாக்காரியங்கள் உண்டோடிநாயகமே
ஏதுவகையா யென்னைவரவழைத்தார்
வரவழைத்தகாரியங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
தாமக்குழலாளும் தாதியவளேதுசொல்வாள்
இராஜாக்கள்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
க்ஷத்திரியர்காரியங்கள் கருமம்வெளிப்படுமோ
மந்திரிகாரியங்கள் மர்மம்வெளிப்படுமோ
என்னமோயேதோ எனக்கொன்றுந்தெரியாது

பொன்னுமலைநாடான் அல்லிகொலுவுக்குவருகிறது.

பொன்னுமலைநாடாளும் அண்ணவெழுந்திருந்து
முத்துமெரிவடியைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
...யும்வீதி தெருவும்பலதாண்டி
...வீதி தெருவும்பலதாண்டி

தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதிவிட்டு அரண்மனையுட்புகுந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்முன்னேவந்து
ஏதுவகையா என்னைவரவழைத்தீர்
வரவழைத்தகாரியங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வார்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
போராஞ்சாமன்னன் புனந்திரனார்வீரியனும்
ஐவரையுங்காணுதற்கு ஆணழகன்போகவென்றான்
ஆலாலமுள்ளவனே ஆற்றிலேஆதரித்து
காவடிதன்ஜலத்தில் கைகழுவிநீர்குடித்து
காவலனார்வீரியனே கண்ணுண்டாய்பாருமென்றாள்
பொன்னுமலைநாடாலும் அண்ணாவுந்தான்கேட்டு
அருளருமென்னாச்சி அப்படியேயாகுதென்று
போரஞ்சாமன்னர் புனந்திரனார்முன்னேவந்து
இனிவாருந்தம்பியென்று யிருவருமெழுந்திருந்து
அத்தமுஞ்சத்தமும் அழைக்காதேஆணழகன்
தாமமுடியான் தனித்தாவடமசைய
சாத்தியபூதாலும் தனித்தாவடமசைய
வில்லுங்கைமார்பன் யணிகலமுங்கூட்டாதே
யானையும்சேனையும் யணிகலமுங்கூட்டாதே
இருவருந்தானெழுந்து நடந்தார் துரிதமுடன்

புனந்திரன் தர்மரைக்காணுகிறது.

வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
குருக்ஷேத்திரபூமி குருபூமிதேசம்வந்தான்
ஐவரிடகாவலிலே ஆணழகன்போய்புகுந்தான்
தாரார்புகழுடைய தருமருக்கெதிரேவந்து
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னீறுஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
தர்மராசிர்பாதம் தார்வேந்தன்சுத்திபண்ணி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்று தான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
ஆனந்தவாழ்மார்பன் அடிவணங்கிநிற்கையிலே
தாரார்புகழுடைய தருமரவர்பார்த்து
வந்துபணிந்தவனுங் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
தூதுரைக்கவந்தீரோ சுந்தரப்பூமுடியே

வாழ்வீர்வளர்ந்திடுவீர் வந்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
கற்பகித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தாரமுடிபெறுவீர்
பின்னைப்பெறுவீர் பெருமாள்முடிபெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
பெண்களைக்கொள்ளுவீர் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
மாதர்களைப்பெற்றிடுவீர் மைந்தர்களைப்பெற்றிடுவீர்
ஆலிலைபோல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காளென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்ந்திடுவீரென்று மனதாரவாழ்த்தினார்
தூதுரைத்தமீளுமையா சுந்தரப்பூமுடியோ
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தான்
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்

புனந்திரன் கிருஷ்ணமூர்த்தியைக் காணுகிறது.

ஏழுலகையாளுகின்ற யெம்பெருமாள்முன்னேவந்து
பூபும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையம்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பாதமதுதுலக்கி பன்னீரால்சுத்திசெய்து
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்காலடிபணிந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
மாமனார்பாதம் வணங்கினின்றான்மன்னவனும்
அம்மான்தன்பாதம் அடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரைக் கண்டுமனமகிழ்ந்து
ஏழுலகையாளுகிற எம்பெருமாள்மனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
தூதுரைக்கவந்தீரோ சுந்தரப்பூமுடியே
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வந்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
கற்பகித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
எதிர்த்தார்முடிபெறுவாய் எம்பெருமாள்பதம்பெறுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் பேருண்டாய்வாழ்ந்திடுவாய்
போருக்குப்போவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவாய்
ஆலிலைப்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்தழைத்து முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காளென்று மனங்குளிரவாழ்த்தினார்
ஆயர்திருக்கழுத்தில் அணிந்தபதக்கமது

திருமார்பிலிட்டதொரு திருப்பதக்கந்தான்வாங்கி
ஆனந்தமார்பனுக்கு அழகுபடசாத்தினர்
தூதுரைக்கப்போமிடத்தில் சொல்கிறேன்கேளுமையா
ஒன்றுக்குபத்து ஒருநூற்றுக்காயிரமாம்
பத்துக்குநூறு பழுதில்லாமலுரைத்த
நாவுதவருமல் நல்வார்த்தைக்குண்ணுமல்
சொல்லுதவருமல் சொற்சிலவுசாயாமல்
சொல்லுக்குசொல்லுரைத்து வாருமையாசுந்தரமே
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்து
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்

புனக்திரன் வீமனைக்காணுகிறது.

வெற்றிமதயானை வீமர்க்கருகில்வந்து
ஏழானைபலமுடைய இயல்வீமர்முன்னேவந்து
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டருந்தி
பன்னீரால்காலலம்பி பாதமதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
வெற்றிமதயானை வீமரவர்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
நிற்பாய்நிலைதரிப்பாய் நீரரசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே வெகுநாளரசாள்வாய்
போருக்குபோவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டம்கட்டிடுவாய்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினர்
வாழ்ந்திருப்பீரென்று மனமாரவாழ்த்தினர்
தூதுரைக்கப்போமிடத்தை சொல்லுகிறோம்கேளுமையா
சகுனிதலையைத் தவிடுபொடியாக்கி
அம்பலங்கள்தோறும் இடித்துதவிடாக்கி
ஆஸ்தானந்தோறும் அடங்கலும்நீயிடித்து
ஒன்றுக்குப்பத்து ஒருநூற்றுக்காயிரமாம்
சொல்லுவழுவாமல் சொற்சிலவுசாயாமல்
நாவுதவருமல் நல்வார்த்தைகுண்ணுமல்
தூதுரைத்துமீளுமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்

புனந்திரன் அர்ச்சுனனைக் காணுதல்.

காண்டாபுரமெரித்த காளையற்கெதிரில்வந்து
பூவும்புதுமலரும் பொன்னருகு அட்சதையும்
பன்னீரும்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
ஐங்கால்வலம்வந்து அடிவணங்கிதெண்டனிட்டு
காண்டாபுரமெரித்த காளையவர்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வார்த்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே வெகுகாலமரசாள்வாய்
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
போருக்குபோய்விடுவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டமாண்டிடுவாய்
கன்னிகளைக்கொண்டிடுவாய் காளைகளையீன்றிடுவாய்
புத்திரரைப்பெற்றிடுவாய் பேருண்டாய்வாழ்ந்திடுவாய்
பிள்ளைகளைப்பெறுவாய் பிரபலமாய்வாழ்ந்திடுவாய்
மைந்தர்களைப்பெற்றிடுவாய் மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினார்
உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கங்களெல்லாம் பரிவாகத்தான்தடவி
தூதுரைத்துமீளுமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் வேந்தர்பெருமாளும்
ஈரல்புகுந்தார் இருவரருகில்வந்து

புனந்திரன் நகுலசகாதேவரைக் காண்கிறது.

பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
தூதுரைக்கவந்தீரோ சுந்தரப்பூமுடியே
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்

நிற்பாய்நிலைதரிப்பாய் நீரரசையாண்டிடுவாய்
கற்பதித்த தூண்போலக் கலங்காதரசாள்வாய்
விற்பதித்த தூண்போல வெகுநாளரசாள்வாய்
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைபெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
போருக்குப்போய்விடுவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டங்கொண்டிடுவாய்
எதிர்த்தவரைச்சங்கரித்து எல்லையரசாள்வாய்
மாதர்களைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவாய்
பெற்றிடுவாய்வளர்த்திடுவாய் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காண்என்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்ந்திருப்பீரென்று மனமாரவாழ்த்தினார்.
தூதுரைக்கப்போமிடத்தை சொல்லுகிறேன்கேளுமையா
ஈரல்பூந்தாரானை எழுதினான்சித்திரத்தில்
அபிமன்னராசாவை அங்கேயெழுதிவைத்து
செத்தவன்பிள்ளையென்று சற்றும்நினையாமல்
இறந்தவன்பிள்ளையென்று எண்ணியவன்பாராமல்
அம்பலவாசலிலே அங்கேபடமெழுதி
அம்பலந்தானறிய அங்கேயவன்கட்டிவைத்தான்
தம்பியைக்கண்டுநீ தற்சோர்ந்துநில்லாதே
உடப்பிறப்பைக்கண்டுநீ உற்றஉயிர்சோராதே
கொம்பனையாள்பாடிசென்று கூடிவிளையாடாதே
மைந்தரைக்கண்டுநீ மகிழ்ந்துவிளையாடாதே
பிள்ளையைக்கண்டுநீ பித்தம்பிடியாதே
சொல்லுதவறாமல் சொற்சிலவுசாயாமல்
நாவுதவறாமல் நல்வார்த்தைகுண்ணாமல்
தூதுரைக்கமீளுமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்றுசொல்லி பொருந்திவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்
ஐவரிடஉத்தாரம் ஆணழகன்பெற்றுக்கொண்டு
தென்னமுடியானுஞ் சின்னாச்சிமாளிசென்றான்

புலந்திரன் சுபத்திரையைக்காணுகிறது.

சோரவளநங்கை சுபத்திரையாள்முன்னேவந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பாதமதுகழுவி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு

மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டு
வந்துபணிந்தவரைக் கண்டுசுபத்திரையும்
நீர்கொடுத்தகண்கள்ரெண்டும் நீக்கிநிகர்விழியும்
கண்ணீர்கலங்கிடவே கட்டழகியேதுசொல்வாள்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பிருத்திருப்பீர்
நிற்பாய்நிலைதரிப்பாய் நீரரசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வாய்
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
போருக்குப்போய்விடுவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவாய்
எதிரியைவென்றிடுவாய் எல்லையரசாண்டிடுவாய்
மாற்றானைவென்றிடுவாய் மண்டலத்தையாண்டிடுவாய்
பெற்றிடுவாய்பெற்றிடுவாய் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காண்யென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்த்திவிடைகொடுத்து மடிமேலேகொண்டிருத்தி
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
உன்னோடேகூட விளையாடுகிறானென்றிருந்தேன்
பொன்னுலகநாட்டுக்கு போனசெய்திநானறியேன்
இவ்வுலகைவிட்டு எழுந்துநடந்துவிட்டான்
பஞ்சவர்கள்என்மேல் பகைமுடித்தார்கண்டீரே
பாரளந்தார்என்மேல் பகைமுடித்தார்கண்டீரே
என்றுசொல்லிமங்கையரும் இருகண்ணால்முத்துதிர்த்தாள்
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவளம்போல்கண்ணீரை பங்கமெல்லாஞ்சோரவிட்டாள்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
வந்துவிழுங்கண்ணீரை வெண்துயிலால்தான்துடைத்து
மாதாவருந்துவது மன்னன்மனங்கொள்ளாமல்
இருக்கிறார்அபிமரும் செத்தார்புனந்திரரும்
உத்தரமேசெய்வதற்கு உன்புத்திரனிங்குவந்தேன்
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சிநீஆறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் தேன்மொழியேதேறிவிடும்.
அப்போதுசுபத்திரையாள் ஆரணங்கேதுசொல்வாள்
ஐயோபுனந்திரரே அறிவுள்ளகண்மணியே
பொன்னுமணியே புனந்திரராசாவே
கட்டிமணியே கலிங்கத்துராசாவே
காலாளுமன்றியிலே கனகதண்டியென்றீரே
திருமேனிக்காவலனே சேவகனுமில்லாமல்
வாழ்விசையன்சீமானே வந்தவரைசொல்லுமென்றான்

மைந்தர்புனந்திரனே வந்தவகையேது
வளநாட்டுபுத்திரரே வந்தவகைசொல்லுமென்றாள்
அல்லியிடசீர்மகனே அறியவுரையுமென்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரரேதுசொல்வார்
பெற்றபெருமாளும் பிரியமுடையவரும்
ஐவரைவரும் ஆழிவுகந்தவரும்
வேந்தர்பெருமாளும் விலாடபுரம்வந்தமர்ந்து
என்னைவரவழைத்தார் என்னைப்பெற்றராஜாக்கள்
பேரப்பாரப்பார் பெரியப்பாதங்களுக்கு
விடையருளவிட்டார்கள் வீரப்பெரும்புலிகள்
தோரணயானையால் தூதுரைக்கப்போரேனென்றான்
துந்நீலம்கண்ணாளே தூதுரைக்கப்போரேனென்றான்
சோரவளநங்கை சுபத்திரையாள்தான்கேட்டு
கதும்பிக்கதும்பிக் கண்கள்எறிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புத்தணலாகி
பத்தியநாகம் பவளம்போற்கண்சிவந்து
முன்னேயும்பூசல் முடிந்துயிருக்குதே
இப்பவும்பூசை யெழும்புவார்பஞ்சவர்கள்
கொல்லவினைப்பார்பஞ்சவர்கள் கூடியிருப்பார்பஞ்சவர்கள்
சிம்மாடுகட்டி சுமப்பார்கள்பஞ்சவர்கள்
சுடலைகரைக்குந் தொடருவார்பஞ்சவர்கள்
ஆலோலமென்று அழுவார்கள்பஞ்சவர்கள்
ஐவருடன்சேதி யறியாளோயல்லியரும்
வையகத்தையாண்டமவள் மதிகுலைந்துபோனாளே
இப்போதும்பிள்ளையைத்தான் பக்கல்வரவிட்டாளே
மாத்தான்படைநடுவில் மைந்தரைப்போகவிட்டாள்
போபோபுனந்திரரே போகவிடேன்தூதுக்கென்றாள்
அப்போபுனந்திரனும் ஆச்சியற்கேதுசொல்வார்
ஐவரைவரும் ஆழிவுசந்தரும்
போகவிடைதந்தார்கள் போர்மன்னராஜாக்கள்
நீயும்விடைதாருமென்றான் நித்திலம்பூமுடியான்
சோரவளநங்கை சுபத்திரையுந்தானெழுந்து

சுபத்திரை புனந்திரனுக்குப் பிரார்த்தனை செய்கிறது.

மண்ணளந்தான்பாதத்தை நோக்கிமனதிலெண்ணி
அறுபதுமுழச்சல்லா ஆரணங்குதானெடுத்து
மஞ்சள்துணிநனைத்து மங்கையவள்தானெடுத்து
ஆயிரம்பொன்னெடுத்து அடவுடனேதான்முடித்து
சோலைமலருடைய சொக்கரைதானினைத்து
ஆனைமலையுடைய அம்மனையுந்தானினைத்து
தொங்கலெனும்பூமுடியான் தூதுரைத்துமீண்டாக்கால்
தண்டிவரும்பொன்னையெல்லாம் சரிகைக்குடத்துடனே

கொண்டுவந்துகொட்டுவேன் கோபுரவாசலண்டை
மாத்தான்படைநடுவில் மைந்தர்புனந்திரரை
கண்ணுடையாய்பாருமென்று கர்த்தரைக்கைதொழுதாள்
மைந்தரைக்காருமென்று மங்கைபிரும்கைதொழுது
போய்வாருமென்றுசொல்லிப் போகவிடைகொடுத்தாள்

புனந்திரன் துரோபதையைக் காணுகிறது.

தோராவடிவழகி துரோபதையைத்தேடிவாரான்
தோராவடிவழகி துரோபதையாள் தாதியவள்
ஓட்டம்பெருநடையும் ஓடிவந்துஉட்புகுந்து
தோராவடிவழகி துரோபதையாள் முன்னேவந்தாள்
ஆட்டமும்கூத்தொளிவும் ஆரணங்குபார்த்திருந்தாள்
நட்டுமுட்டுசாலை நாட்டியங்கள்பார்த்திருந்தாள்
தாமக்குழலாளும் தாதிவந்துதெண்டனிட்டாள்
தோராவடிவழகி துரோபதைநாயகியே
இன்னாட்டார்நல்லவர்காண் இத்திசையார்நல்லவர்காண்
தென்னாடுஞ்சூழத் திசைவணங்கிவந்தவன்காண்
வையைவளநாட்டில் பெற்றெடுத்தபுத்திரன்காண்
வாழ்பாண்டிநாட்டான் பயின்றெடுத்தகண்மணிகா
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
உன்-பிள்ளைவருகுதென்று பின்னொருக்கால்தெண்டனிட்டாள்
மைந்தர்வருகுதென்று மறுத்தொருக்கால்தெண்டனிட்டாள்
தோராவடிவழகி துரோபதையாள் தான்கேட்டு
மைந்தர்வருகுதென்ன பூவைமனமகிழ்ந்து
ஆட்டமுங்கூத்துகளும் அமருமென்றுகையமர்த்தி
நட்டுமுட்டுசாலையை நாளையென்றுகையமர்த்தி
அடிசிலம்புபாடகமும் ஆர்க்கக்குதித்திறங்கி
பூஞ்சிலம்பும்பாடகமும் பொங்கக்குதித்திறங்கி
கூடவேசோதிமின்ன கொம்பரிடையாளும்
மற்றுமொருவாதீனத்தில் மாதரவள்வீற்றிருந்தாள்
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
ஓடமலர்க்கண்ணனும் உட்கட்டிற்போய்ப்புகுந்து
தோராவடிவழகி துரோபதையாள் தானிருக்கும்
ஆதீனத்தின்முன்னேவந்தான் அல்லித்திருமகனும்
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பாதமதுகழுவி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்

தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இப்பாரையாளவே எங்கள்கண்மணியே
அல்லித்திருமகனே ஆனந்தவாழ்மார்பா
வருகவருகவென் வள்ளலேவருகவென்றாள்
திருவருகபூவருக தேனேவருகவென்றாள்
குடிகாரகொற்றடிமை கொண்டுவருகவென்றாள்
அங்கத்துக்குள்ளே அமர்ந்திருக்கும்பார்குடத்தை
சொக்கர்த்திருவாசலுக்குத் தூண்டாமணிவிளக்கே
கப்பலுஞ்சோங்குங் கரைதுறையுமுள்ளவனே
முத்துப்படுந்துறையும் முழுதிலுங்கொண்டவனே
பவளப்படுந்துறையும் பத்துலட்சமுள்ளவனே
வையைவளநாட்டை வாழ்விக்கவந்தவனே
வாழ்மதுரைராச்சியத்தை ஆளவந்தரத்தினமே
ஆறாயிரம்பாண்டியற்கு அழகானபேரனே
ஆனந்தவாழ்மாரி அல்லித்திருமகனே
மகுடதுரை அல்லியற்கு மனதானபுத்திரரே
கண்ணானகண்மணியே கட்டழகன்சீர்மகனே
பொன்னானபொற்குடமே புனந்திரராசாவே
பொன்னுரெண்டுஞ்சித்தடிவை பூவிரண்டுங்கண்ணிலொத்தி
தங்கத்தால்சிற்றடியைத் தார்குழலாள்கண்ணிலொத்தி
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
இந்திரரைத்தூக்கி எடுத்துமடியில்வைத்தான்
அப்போபுனந்திரனார் ஆனந்தவாழ்மார்பன்
மடியைவிட்டுக்கீழ்குதித்து மாதாவின்முன்னேவந்து
மாதாவின்சீர்பாதம் வணங்கினான்மன்னவனும்
காண்கிறேனாச்சியென்று கால்மேல்முடிசாய்த்தான்
தோராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வாழ்ந்திருப்பீருத்திருப்பீர்
நிற்பாப்பிலேதரிப்பாய் நீரரசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே விளங்காதரசாள்வாய்
என்னைப்பெறுவா யெதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
போருக்குப்போய்விடுவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சூட்டிடுவாய்
எதிரிகளைச்சங்கரித்து யெல்லையரசாண்டிடுவாய்
மாற்றானைச்சங்கரித்து வையகத்தையாண்டிடுவாய்
கன்னிகளைமாலையிட்டுக் காளைதனையீன்றிடுவாய்
பெண்களைமாலையிட்டு பிள்ளைகளைப்பெற்றிடுவாய்

மங்கைகளைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவாய்
பெற்றிடுவாய்பெற்றிடுவாய் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காண்என்று மனங்குளிரவாழ்த்தினார்கள்
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
புத்திரரைக்கொஞ்சி யெடுத்துமடியில்வைத்து
காலாளுமன்றியிலே கனகதண்டியன்றியிலே
திருமேனிக்காவலனே சேவகனுமில்லாமல்
என்-வாழ்விஜயன்சீர்மகனே வந்தவகையேது
ஏதுவகையாக இங்கேவந்தீர்சொல்லுமென்றார்
அப்போபுனந்திரரும் ஆச்சியருக்கேதுசொல்வான்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
பெற்றபெருமாளும் பிரியமுடையவரும்
ஐவரையரும் ஆழிவுயர்ந்தாரும்
பேரப்பாரப்பார் பெரியப்பருடையவரும்
விடையருளவிட்டார்கள் வீரப்பெரும்புலிகள்
தோரணயானையாய் தூதுரைக்கப்போறேனென்றான்
தூங்கீலங்கண்ணனும் தூதுரைக்கப்போறேனென்றான்
தோராவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
மைந்தர்முகம்நோக்கி மாதாவுமேதுசொல்வாள்
மாபாவிவாசனுக்கு மன்னவரேபோரீரோ
அரும்பாவிவாசனுக்கு ஐயாநீர்போரீரோ
பெரும்பாவிவாசனுக்கு புத்திரரேபோரீரோ
தூதுரைக்கப்போமிடத்தை சொல்லுகிறேன்கேளுமையா
பாசத்திளவரையா படைகூட்டந்தன்னுடனே
யானையின்மேல்நீயேறி அவ்வீதிபோம்போது
கச்சாயம்வேண்டிக் களையாகிவந்தாலும்
கச்சாயந்தீண்டாதே கண்ணிலான்மாளிகையில்
தண்ணீர்களையாகி தாகமெடுத்தாலும்
தாகந்தணியாதே தனஞ்செயனார்மாளிகையில்
வெற்றிலைவேண்டி விருப்பமதுகொண்டாலும்
வெற்றிலைகொள்ளாதே வேந்தர்கடைத்தெருவில்
சுண்ணாம்புகொள்ளாதே சூதுள்ளவாசலிலே
அடைக்காயும்நஞ்சிடுவார் ஆனந்தமார்பனுக்கு
அடைக்காயுந்தீண்டாதே ஆணழகன் அம்பலத்தில்
வாசனைகொண்டுவந்து வகையாயெடுக்கவென்பார்
வாசனைகள்தீண்டாதே வலுவாயனம்பலத்தில்
பொய்யாதினமிடுவார் பொற்கைவளபாண்டியரே
ஆதினஞ்சென்றேராதே ஆனந்தவாழ்மார்பா
பட்டுங்கயிறும் கயிறுகளத்தனையும்

இந்தாருமென்று எடுத்தவள்கைகொடுத்து
கண்ணிலான்பெற்றெடுத்த கபடன்திரியோதிரன்
கொலுமுகவாசலிலே கோடிபலவுரைப்பார்
சிம்மாதனக்கொலுவில் சேனையெடுத்துரைப்பார்
உன்னையவன்கண்டாலும் ஒருகோடியெடுத்துரைப்பான்
சொல்லுக்குசொல்லுரையும் சுந்திரப்பூமுடியே
தூதுக்குத்தூதுரையுந் தங்கீலங்கண்ணனே
சொல்லுவழுவாமல் சொற்சிலம்புசாயாமல்
நாவுதவறாமல் நல்வார்த்தைக்குண்ணாமல்
தூதுரைத்துமீளுமையா சுந்திரப்பூமுடியே
சிந்தைகவலையுற்றுத் திரும்புமையாசுந்திரரே
மனதில்பயம்நீங்கி மன்னரேபோய்வாரும்
என்றுமவளுரைத்தாள் ஏலப்பசங்கிளிபாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனார் தான்கேட்டு
அப்படிக்கேயாகுதென்று ஆச்சிசரணமென்றான்
போய்வாரேனுச்சியென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
தோராவடிவழகி துரோபதையுந்தானெழுந்து
அமுதுண்ணவாருமையா என்றுமவளெழுந்து
அமுதுண்ணுமண்டபத்தை யாரணங்குமுட்புகுந்து
செம்பொன்முக்கால்நிறுத்தி செம்பொன்தளிகையிட்டாள்
புலிமுக்கால்தானிறுத்திப் பொன்னால்தடுக்குமிட்டாள்
வாழையிலைபோட்டு மணிச்செம்பில்நீர்தெளித்து
தும்பைமலர்போல் போசனமுந்தான்சொரிந்தாள்
தாளிதமும்பச்சடியும் தன்னில்வகைக்கறியும்
கூட்டுக்கறியில் கொழம்புவகைக்கறியும்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
ஆயிரத்தெட்டு அருங்கறியும்போஜனமும்
சத்திக்கறியைவைத்துப் புத்துருக்குநெய்வார்த்தாள்
வாருமையாசங்கமரே வந்தமுதுகொள்ளுமென்றாள்
அப்போபுனத்திரனும் ஆச்சியருக்கேதுசொல்வான்
தம்பியைநான்கொடுத்து தற்சேர்க்துநிற்கையிலே
உடற்பிறப்பைநான்கொடுத்து உத்தஉயிர்சோர்வையிலே
நெய்யமிர்தமுண்டாலும் நிற்குமோபொங்கியிலே
பாலடிசிலுண்டாலும் நிற்குமோபொங்கியிலே
வேண்டாங்காண்ஆச்சியென்று வண்ணமுடிசாய்த்தான்
ஆழிதடங்கையால் அழுத்தியவன்வீற்றிருந்தான்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
தூதுரைத்துமீளுமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்தவிடைகொடுத்தார்

விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்
அரண்மனை ஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி

புனந்திரன் அல்லியரசாணியைக் காண்கிறது.

அவ்வீதியாக அழகாகவேநடந்தான்
பென்னும்மலைநாடானும் அண்ணவுந்தான்கூட
இருவருமாக இசைந்துவழிநடந்தார்
குருக்ஷேத்திரபூமி குருபூமிதேசம்விட்டு
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
வாழ்மதுரைராச்சியத்தில் வந்தாரிருவருமாய்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளண்டைவந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொந்நீரும்செம்பிலே பந்நீருங்கொண்டுவந்து
பந்நீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
மாதாவின்பாதம் மண்ணூவிதெண்டனிட்டான்
தெண்டனிட்டதன்மகனைக் கண்டந்த அல்லியரும்
வாழ்வாய்வளர்ந்திடுவாய் வர்த்திப்பாயுத்திருப்பாய்
நிற்பாய்நிலைதரிப்பாய் நீரரசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே வெகுநாளாய்வாழ்ந்திடுவாய்
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
போருக்குப்போவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவாய்
மாத்தானைக்கொன்றிடுவாய் வையகத்தையாண்டிடுவாய்
சினத்தவர்கள்பூமுடியை செண்டாட்டமாட்டிடுவாய்
பகைத்தவர்கள்பூமுடியை பருந்தாட்டமாட்டிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் போதவேவாழ்ந்திடுவாய்
மைந்தர்களைப்பெற்று மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினள்
வாழ்ந்திடுவீரென்று மனதாரவாழ்த்தினள்
வாயாரவாழ்த்தி மனதுமிகக்குளிர்ந்து
வாரியெடுத்து மார்மேலேகொண்டணைத்து
உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
போய்வந்தகாரியத்தை கேட்கலுற்றார்வுத்தமியும்
அப்பாபுனந்திரரே அழகுள்ளகண்மணியே
அர்ச்சுனனார்பெற்றெடுத்த ஆனந்தவாழ்மார்பன்

புண்ணியத்தால்வந்துதித்த பிள்ளைபுனந்திரரே
சொக்கரருளாலே திலங்கவந்தகண்மணியே
காலாளுமில்லாதே கனகதண்டியில்லாதே
திருமேனிக்காவலனே சேவகனுமில்லாதே
வாள்விஜயன்சீர்மகனே வந்தவகைகளெல்லாம்
மைந்தர்புனந்திரரே வந்தவகைசொல்லுமென்றாள்
ஒன்றுங்குறையாமல் வுத்தமனேசொல்லுமென்றாள்
போய்வந்தகாரியத்தை புண்ணியனேசொல்லுமென்றாள்

புனந்திரன் சேதி யுரைக்கிறது.

அப்போபுனந்திரரும் ஆச்சியற்கேதுசொல்வரர்
மடியைவிட்டுக்கீழிறங்கி வந்துயெதிரில்நின்று
கைகட்டிவாய்புதைத்து காலையுடபுத்திரனும்
வளாடியல்லியற்கும வாய்திறந்தேதுசொல்வான்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
பெற்றபெருமாளும் பிரியமுடையவரும்
உடையாருங்கூடி உடனுனமண்டபத்தில்
ஐவரரையும் ஆழிவுயர்ந்தாரும்
வேந்தர்பெருமாளும் மேல்மண்டபத்தில்வீற்றிருந்து
என்னைவரவழைத்து எனக்கிட்டனர்கட்டளைகள்
பேரப்பாரப்பா பெரியப்பாதங்களுக்கு
விடையருளவிட்டார்காண் வீரப்பெரும்புலிகள்
தோரணயானையாய் தூதுரைக்கப்போரேனென்றான்
தூந்நீலங்கண்ணனும் தூதுரைக்கப்போகவென்று
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கதிக்குக்கனலாண்டி கண்களெரிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புத்தணலாகி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தை எட்டிச்சிவாலயமாய்
குண்ணுபோல்கண்சிவந்து கோபமதிகமாய்
ஸ்ரீமதுரைக்குள்ளே திருவாயின்வாயிலுள்ளே
கட்டிவரும்பாற்குடங்கள் காவலனார்வாசலிலே
எட்டிவரவிடுவார் எம்முடையவாசலுக்கு
இத்தனையும்தளளிவிட்டு ஏனோநீபோரேனென்றாய்
அப்பாநீபோனால் அடியேன்பொறுப்பேனோ
மைந்தாநீபோனால் மனதுதரிப்பேனோ
உள்ளந்தரித்திடுவோம் உத்தமனார்புத்திரனே
அறிவீரறிவீர் அடியேன்குடிவிளங்க

அடியேன்குடிவிளங்க வந்துதித்தஆணழகர்
எங்கள்குடிவிளங்க வந்துதித்தரத்தினமே
மன்னுவுன்பூமுடிக்கு வாட்டங்கள்வந்ததென்றால்
தென்னுவுன்பூமுடிக்கு தீங்குகள்வந்ததானால்
ஆருயிரவர் அணிதிரளார்பாண்டியரும்
ஆருயிரவரும் அடியவளும்ரான்கூட
ஆளும்அரசும் அனலிலேபாய்ந்திடுவோம்
பொன்னுமலைநாடாளும் அண்ணவும்பாய்ந்திடுவார்
போகாதேபோகாதே. புண்ணியனார்சீர்மகனே
என்றுமவளுரைக்க ஏதுசொல்வானிந்திரனும்
தோராவடிவழகி துரோபதையாளென்னுச்சி
மஞ்சள்துணியெடுத்து மலராமல்போய்நினைந்து
சொக்கர்பொன்னைதாமெடுத்து சவாமியைநானினைத்து
முடிப்பெடுத்துகட்டினார் மொய்குழலாள்ஆச்சியர்கள்
போகவிடைதந்தார்கள் பேர்விஜயன்தேவியர்கள்
நீயும்விடைதாருமென்றான் நித்திலங்கும்பூமுடியான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
சீறியெழுந்து சிங்கக்குட்டிபோல்கதும்பும்
வாளுருவிகைபிடித்து மாதுநல்லாளல்லியரும்
சிம்மாதனத்தைவிட்டு திகழகுதித்திறங்கி
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்தாள்
பத்தடியுமோரடியாய் விட்டுமிகநடந்தாள்
வேகமாய்த்தானடந்தாள் வேல்பொருதுங்கண்ணாளும்
ஆங்காரந்தன்னுடனே அல்லியவள்ஓடிவந்து
ஐவரிடகாவலிலே ஆணழகிபோய்புகுந்து
காண்டாவனமெரித்த காளையெதிரில்வந்து
அர்ச்சுனற்குமுன்பாக அல்லியவள்வந்திருந்து
வில்லாளிபார்த்தருக்கு மெல்லியெடுத்துரைப்பாள்

அல்லிக்கும் அர்ச்சுனர்க்கும் தர்க்கம்.

அறியாதறியுமோ ஆனந்தவாழ்மார்பா
முத்துசூழ்கன்னாடு முழுதிலுமவனறியான்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
வைகையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஐம்பத்தாறுகாதம் ஆணழகன்ராச்சியந்தான்
முத்துப்படுந்துறைகள் மூன்றுலட்சம்கோடியுண்டு
பவளம்படுந்துறைகள் பத்துலட்சம்கோடியுண்டு
இத்தனையுந்தானிருக்க யெந்தனிடபுத்திரன்காண்
ஒன்றுமறியானே வுந்தனிடபுத்திரனும்
பட்டணத்திலுள்ள படைமன்னர்தானறியார்

கொத்தளத்திலுள்ள குடிபடைகள்தானறியார்
அறியாதறியுமோ ஆனந்தவாழ்மார்மா
சிறியவனுக்கேது தெரியவரும்ராஜாவே
அவனையனுப்புதற்கு ஞியாயமுண்டோகட்டழகா
உனக்குப்பெரியவர்களுண்டோதான்வையகத்தில்
அண்டமுலகளந்த ஆதிநாராயணரும்
ஆதிநாராயணரும் அவர்போனலாகாதா
தக்கப்புகழுடைய தர்மர்போனலாகாதா
கித்திலங்குபூமுடியான் நீர்போனலாகாதா
இன்னம்சிறியவர்கள் இருவர்போனலாகாதா
நகுலசகாதேவ ராஜர்போனலாகாதா
அறியாததைபோகவிட ஞியாயமுண்டோவுந்தனுக்கு
தெரியாப்புனந்திரரைப் போகவிடலாகாது
போபோபுனந்திரரே போகவிடேன்தூதுக்கு
என்றுமவள்சீறி எடுத்துரைத்தாளல்லியரும்
காண்டாவனமெரித்த காளையதுகேட்டு
வில்லாளிபார்த்தர் விஜயரெடுத்துரைப்பார்
அல்லிமுகம்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வார்
ஆளப்பிறந்த அபிமரைப்பெற்றுப்போல்
தாமமுடியான் கடோற்கஜனைப்பெற்றுப்போல்
அந்தாலந்தீர்த்த அரவானைப்பெற்றுப்போல்
போரஞ்சாமன்னர் புனந்திரனைப்பெற்றேனே
மாலைமுடியானை வழியில்கண்டெடுத்தேனே
அசலார்கள்பிள்ளையென்று தோணுதனுப்பினேனே
தூரத்தார்பிள்ளையென்று தோணுதனுப்பினேனே
என்பிள்ளையாகையினால் போகஅனுப்பிவிட்டேன்
நான்-பெற்றபிள்ளையென்று தூதுக்கனுப்பிவிட்டேன்
என்பிள்ளைதூதென்றால் பின்னொருக்கால்வார்த்தைசொன்னாய்
என்றுமவன்கோபித்து ஏதுசொல்வாரர்ச்சுனரும்
முத்துவிரல்சுழட்டி மூக்கின்மேல்கையைவைத்தான்
பவளவிரல்சுழட்டி பல்லின்மேல்கையைவைத்தான்
தங்கவிரல்சுழட்டித் தாடையின்மேல்கையைவைத்தான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கோபங்கொண்டு
அர்ச்சுனரைப்பார்த்து அல்லியவளேதுசொல்வாள்

அல்லியரசாணி அர்ச்சுனன்மேல் கோபிக்கிறது.

எடுத்தெடுத்துச்சொல்லுறதும் என்சொல்மறைக்கிறதும்
அத்தனைக்கும்வந்த கெருவமடக்குதற்கு
எடுத்துவாபெரியகத்தி இருதுண்டாய்வெட்டிடுவேன்
கத்தியெடுத்துவா கடுகெனவேவெட்டிடுவேன்

என்றுமவள்சிறி யெக்கலித்துப்பல்சிறி
மண்டியிட்டுச்சுத்துகிறாள் மாதுநல்லாளல்லியரும்
தாமக்குழலாளும் தாதியவளோடிவந்து
அல்லிக்குமுன்னேவந்து அடிவணங்கிதெண்டனிட்டாள்
அல்லி-கைத்தலத்தைத்தான்பிருத்து கட்டழகியேதுசொல்வாள்
ஆனைகட்டிவந்தாலும் ஆனந்தவாழ்மாரி
ஆளன்பெருமை வேணுமம்மா ஆரணங்கே
குதிரைகட்டிவாழ்ந்தாலும் கொத்தார்குழலியரே
கொண்டார்பெருமை வேணுமம்மா கொம்பனையே
தங்கமதிலேறி தானடந்துவாழ்ந்தாலும்
தாலிப்பெருமை வேண்டுமம்மாதையலரே
மஞ்சட்பெருமையது வேண்டுமம்மாதையலரே
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சியரேஆறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் தேவியரேதேறிவிடும்
தணியுமதணியுமம்மா தனஞ்செயனார்தேவியரே
என்றுமவளுரைத்தாள் ஏந்திழையாள்தாதியரும்
பிறவாமுடிதரித்தபெண்பெருமாள்நாயகியும்
கொம்பனையாள்கோபம் குணப்படுத்திக்கொண்டவளும்
மங்கைநல்லாள்கோபம்வசப்படுத்திக்கொண்டவளும்
பிடித்தப்பிடியோடே பொன்மதுரைகொண்டுவந்தாள்
அணைத்தப்பிடியோடு அணிமதுரைகொண்டுவந்தாள்
வாழ்பாண்டிநாடாளும் வையவளநாடுவந்தாள்
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
ஓடமயில்கண்ணாள் உட்கட்டிற்போய்ப்புகுந்தாள்
சிம்மாசனத்தருகே சென்றாளே அல்லியரும்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்ஓடிவந்து

அல்லியைப்புனந்திரன் காண்கிறது.

அல்லிக்கெதிர்வந்து அடிவணங்கிதெண்டனிட்டு
போனதொருகாரியங்கள் புறத்தியிலேகேட்டிருந்தேன்.
நீசென்றகாரியங்கள் நின்னையங்கள்காணறியேன்
அர்ச்சுனரும்நீயும் அடுக்குமோயுத்தம்செய்ய
நீ-கோபித்துக்கண்சிவந்து கொல்லத்துணிந்ததுவும்
எல்லாமறிவேன்காண் என்னுடையஆச்சியரே
போகவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
அப்போதுஅல்லியரு மாரணங்கேதுசொல்வாள்
மைந்தர்முகம்நோக்கி மாதாயெடுத்துரைப்பாள்
வம்புகள்பேசி விகடங்கள்பண்ணுதற்கு
வீம்புகள்பேசி விகடங்கள்பண்ணுதற்கு
விகடங்கள்பண்ணுதற்கு விஜயன்மகனல்லவோ
என்றுமவனுரைத்து எழுந்துநடக்கலுற்றாள்

சொக்கர்கோவிலுக்கு அல்லிபோகிறது.

மண்ணளந்தான்பாதமது நோக்கிமனதிலெண்ணி
அரண்மனை எழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
வைகைக்கரையோரம் வந்தாளே அல்லியரும்
ஆடைகளைந்து ஆபரணந்தான்களைந்து
பொய்கையில்ஸ்நானம்பண்ணி புனல்கங்கைநீராடி
ஈரமெடுத்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
களைந்ததுயில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்று அணிந்தானே வெண்ணீறு
திக்கெங்கும்நோக்கித் திசையெங்குமாதரித்து
ஆலாலமுண்ட அரனுரடிபணிந்து
ஆதிசிவனை அடிவணங்கிதெண்டனிட்டு
இந்திரரைநோக்கி இரங்கியவள்தெண்டனிட்டு
ஐயனேமெய்யனே ஆயிரங்கண்ணிந்திரனே
பொய்சொல்லார்க்கெல்லாம் புறங்காக்கும்புண்ணியனே
மெய்சொல்வார்க்கெல்லாம் விளக்கொளியாய்நின்றவனே
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையுக்தெண்டனிட்டு
சுத்தியவள்வந்து செவியிலொருபூச்சொருகி
வைகைக்கரையைவிட்டு வாராளே அல்லியரும்
சொக்கரிடஆலயத்தில் சுந்தரியும்போய்புகுந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
சாமிக்கும்அம்மனுக்கும் சடுதியிலேவந்துநின்று
சொக்கரைத்தான்பார்த்து தோகைநல்லாளேதுசொல்வாள்
அம்மனைத்தான்பார்த் தல்லியருமேதுசொல்வாள்
தொங்கலெனும்பூமுடியான் தூதுரைத்துமீண்டாக்கால்
சிந்தனைகளில்லாமல் சிறுவன்வந்துசேர்ந்தாக்கால்
அண்ணாமலையாற்கு ஆடுகிறபெண்ணிடுவேன்
உண்ணாமலையாட்கு வுடைபோடப்பண்ணிடுவேன்
தண்டிவரும்பொன்னையெல்லாம் சரிகைக்குடத்துடனே
கொண்டுவந்துகொட்டுவேன் கோபுரவாசலிலே
தூதுரைக்கப்போகுதற்கு சிலவருளவேண்டுமென்றாள்
உத்தரவுதாருமென்று சிற்றடிக்குதெண்டனிட்டாள்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டாள்

சொக்கர் அல்லிக்கு வரம்கொடுத்தது.

அப்போதுசொக்கர் அம்மன்மனமகிழ்ந்து
போகவிடைகொடுத்தார் புனந்திரராசநுக்கு
வாழ்த்திவிடைகொடுத்தார் வாளெடுத்துக்கைகொடுத்தார்

மாயத்திருநீற்றை அள்ளியிட்டார்மங்கையற்கு
வண்ணலட்சம்சேனைகளை வரவிடுகிறேன்பின்னாலே
சிந்தனைகளில்லாமல் சிறுவன்வந்திடுவானே
மனக்கவலையில்லாமல் மன்னன்வந்திடுவான்
போகஅனுப்பிவிடும் புனந்திரர்சாவை
என்றுவிடைகொடுத்து யிருந்தாரேசொக்கலிங்கம்
விடைபெற்றுமீண்டாளே மேன்மையுடனல்லியரும்
ஆலயத்தைவிட்டுமல்லோ ஆரணங்குவாராளே
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
அரண்மனை எழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
ஓடமயில்கண்ணாளும் உட்கட்டில்போய்புகுந்து
போரஞ்சாமன்னர் புனந்திரனை தானழைத்து
சொக்கர்திருநீற்றை சுந்தரியும்அள்ளியிட்டு
சாமியார்தான்கொடுத்த திருநீற்றைஅள்ளியிட்டு
வாழ்த்திவிடைகொடுத்து வாளெடுத்துகைகொடுத்து
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தாள்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமாளும்
அரண்மனை எழுகட்டும் அந்தப்புரங்தாண்டி
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
பாட்டனரண்மனையைத் தேடிவந்தாரிந்திரரும்

புனந்திரன் பாட்டன்மார் அரண்மனைக்கு வருகிறது.

ஆறாயிரவர் அணிதிரளார்முன்னேவந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகு அட்சதையும்
பொங்நீருஞ்சொம்பிலே பந்நீருந்தான்வார்த்து
பந்நீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
ஆறாயிரவற்கும் அடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டஇந்திரனைக் கண்டந்தபாண்டியர்கள்
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
திரேகம்குளிர்ந்து இருதோளும்பூரித்து
மனதுமகிழ்வாக மைந்தரைவாழ்த்தலுற்றார்
வாழ்வீர்வளர்வீர் வாழ்ந்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போல கலங்காதரசாள்வீர்

விற்பதித்த தூண்போல வெகுநாளரசாள்வீர்
போருக்குபோய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சூட்டிடுவீர்
எதிரிகளைக்கொன்றிடுவீர் எல்லையரசாண்டிடுவீர்
மாத்தானைகொன்றிடுவீர் வையகத்தையாண்டிடுவீர்
பகைத்தார்கள்பூமுடியை பருந்தாட்டம்மாட்டிடுவீர்
கன்னிகளைமாலையிட்டு காளைகளையீன்றிடுவீர்
மங்கையைமாலையிட்டு மைந்தரையீன்றிடுவீர்
பெண்களைமாலையிட்டுப் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெறுவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆலிலைபோல்தழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்ற முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்தானென்று மனங்குளிரவாழ்த்தினார்
வருகவருகயென் வள்ளல்வருகயென்றார்
திருவருகபொன்வருக தேவேந்திரன்வருக
அதிகாரஅச்சுதனே அப்பாவருகவென்றார்
குடிகாரகொற்றடிமை கொண்டுவருகவென்றார்
அண்டத்துக்குள்ளே அமர்ந்திருக்கும்பாற்குடமே
சொக்கர்திருவாசலுக்குத் தூண்டாமணிவிளக்கே
கப்பலுஞ்சேரங்குங் கரைதுறையுள்ளவனே
சங்கின்றமுத்துஞ் சல்லாபமுடையவனே
பவளம்படுந்துறையும் பத்துலட்சமுள்ளவனே
எங்கள்-ஆராயிரவருக்கும் அழகானகண்மணியே
அல்லியம்மாள்பெற்றெடுத்த அழகுபுனந்திரரே
வாருமையாவென்று மடிமேலேகொண்டணைத்தார்
மைந்தர்புனந்திரரை மடிமேலேகொண்டணைத்தார்
பொன்னுரெண்டுஞ்சித்தடியை பூவானகண்ணிலொத்தி
தங்கத்தால்சிற்றடியை தங்களிருகண்ணிலொத்தி
ஐயாபுனந்திரரே யானுரைக்கநீர்கேளும்
காலாளுமில்லாதே கனகதண்டியில்லாதே
திருமேனிக்காவலனே சேவகனுமன்றியிலே
வாழ்விஜயன்சீர்மகனே வந்தவகையேது
மைந்தர்புனந்திரரே வந்தவகையேது
வளநாடுபுத்திரனே வந்தவகைசொல்லுமென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருமேது சொல்வார்

புனந்திரன் சேதியுரைக்கிறது.

ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும் எந்தனிடவார்த்தை
ஐவரையரும் அறிவுசந்தாரும்

வேந்தர்பெருமாளும் வெளிமண்டபத்தில்வீற்றிருந்து
உடையாருங்கூட வுடனுனமண்டபத்தில்
எல்லவரும்வந்திருந்து என்னை வரவழைத்தார்
என்னை வரவழைத்து எனக்கிட்டகட்டளைகள்
பேரப்பாரப்பா பெரியப்பாதங்களுக்கு
விடையருளவிட்டார் வீரப்பெருப்புலிகள்
தோரணயானையாம் தூதுரைக்கப்போகிறேன்
துன்னிலங்கண்ணனும் தூதுரைத்திவாரேனையா
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
ஆருயிரவர் அணிதிரளார்தான்கேட்டு

புனந்திரனைப்பற்றி பாண்டியர்கள் பரதவிக்கிறது.

சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
நாராசங்காய்ச்சி நடுச்செவியில்விட்டாப்போல்
போரஞ்சாமன்னர் புனந்திரற்குயேதுசொல்வார்
அறிவீர்தெரிவீர் அடியேன்குடிவணங்க
அடியேன்குடி வணங்க வந்துநித்தஆணழகா
மன்னவுன்பூமுடிக்கு வாட்டங்கள்வந்ததானல்
நாங்களனைவோரும் நாடாளுங்கன்னியரும்
ஆளும்அரசும் அனலிலேதீய்ந்திடுவோம்
போபோபுனந்திரரே போகாதேயென்றுரைத்தார்
அப்போபுனந்திரரும் அவ்வார்த்தையேதுசொல்வார்
ஐவரையற்கும் ஆழிவுசந்தார்க்கும்
அவர்க்கேதெரியாதே வுமக்குத்தெரியுமோதான்
போகவிடைதாரும் போய்வாரேன்தூதுக்கென்றார்
ஆருயிரவர் அணிதிரளாப்பாண்டியர்கள்
மைந்தர்புனந்திரற்கு மறுவார்த்தையேதுசொல்வார்
ஐவரும்தேவியரும் ஆரணியம்போனபின்பு
மன்னவரும்தேவியரும் வெண்காடுறைந்தபின்பு
காவலருந்தேவியரும் காடுறைந்துபோனபின்பு
உனக்-கென்னகுறைசெய்துவைத்தோ மிந்திரராஜாவே
ஏதுகுறைசெய்துவைத்தோம் எங்களிருகண்மணியே
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
மதுரையன்பத்தாறுகாதம் ஆளவென்றுபட்டங்கட்டி
முத்துசூழ்நன்னாடு முழுதிலும்வுன்னுடதென்று
பட்டணத்திலுண்டான படைமன்னர்உன்னுடதென்று
பாசத்திளவரையர் பறைகொண்டுசாத்திவைத்தோம்
பாசத்திளவரையர் பட்டந்தரிப்பித்தோம்
என்னகுறையாக போதீர்காணிந்திரரே

ஏதுகுறையாக போதீர்காணிந்திரரே
என்றுமவருரைக்க கேட்டார்புனந்திரரும்
வேர்த்துவிரித்து மீசைசுருண்டேறி
சித்திடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்னுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
மடியைவிட்டுக்கீழ்குதித்து வந்துமுன்னேயேதுசொல்வான்
எங்கள்-ஐவருந்தேவியரும் ஆரணியம்அற்றபின்பு
மன்னவரும்தேவியரும் வெண்காடுறைந்தபின்பு
காவலருந்தேவியரும் காடுறைந்துபோனபின்பு
எத்தால்குறைச்சலென்று என்னை யிங்கேவிட்டுவிட்டார்
என்னையடமானமிட்டு அடகுவிட்டுக்கொண்டாரோ
ஒத்திபிட்டுபஞ்சவர்கள் ஓலையிட்டுக்கொண்டாரோ
கண்ணோட்டம்பஞ்சவரைக் கைவிலக்கிக்கொண்டீரோ
கொண்டாட்டமெல்லாங் கொழுப்பின்மகிமையல்லோ
பணமுந்தனமும் பறையன்படைக்கிலேயோ
பண்ணைகலவை பரட்டைபுளிகரணை
தும்பைபுளிகரணை தூதுவெளிமுள்கீரை
முன்னேமுசுட்டை மூதாரிக்கீரையுடன்
உங்கள்-பாட்டனார்தேடும் பழம்பொருளைக்கண்டீரோ
உங்கள்-ஐயமார்தேடும் ஆஸ்தியென்றெண்ணலையோ
எனக்கு-விடைதாருமென்று இணையடிக்குதெண்டனிட்டான்
ஆறுயிரவர் அணிதிரளார்தான்கேட்டு
மௌனமாய்த்தானிருந்தார் மன்னர்துரைராசாக்கள்
பொன்னுமலைநாடாளும் அண்ணாவுமேதுசொல்வார்

பொன்னுமலைநாடான் புனந்திரனுக்கு
உத்திரவுவாங்கிக் கொடுக்கிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரராஜாவே
ஆனந்தமார்பனே அனுப்பவிடைகொடுத்தால்
தாமமுடியான் தனிசண்டைபோடானே
போகவிடைகொடுத்து அனுப்புங்கள்புண்ணியனே
ஆறுயிரவர் அணிதிரளார்தான்கேட்டு
ஐயாபுனந்திரரே அழகுள்ளகண்மணியே
போகவிடைதருவேன் போரஞ்சாராஜாவே
மனம்பொருந்துகில்லுமென்று மகுடமுடிராஜாக்கள்
கொடுத்தான்குமாரனுக்கு கூடவளநாடு
கொல்லுங்குதிரைகளாம் கூர்வளமாம்அம்புகளாம்
வெற்றிலைப்பெண்களிலே வேணநூறுயிரமாம்
பச்சோலைப்பெண்களிலே பத்துநூறுயிரமாம்

அத்தனையுந்தானெடுத்தார் ஆனந்தமார்பனுக்கு
பொன்னுமலைநாடாளு மண்ணுவுக்கேதுசொல்வார்
பெண்பெருமாள்பெற்றெடுத்த பிள்ளைபுனந்திரனார்
தாமமுடியான் தனித்தூதுபோகாதே
ஆளும்அரசு அடங்கலுந்தான்கூடி
கூடவேநீர்போய் குணப்படுத்திவாருமென்றார்
மைந்தர்புனந்திரரை வரவழைத்துவாருமென்றார்
கோசவளநாட்டானைக் கூட்டிவந்துசேருமென்றார்
பொன்னுமலைநாடாளும் அண்ணுவுந்தான்கேட்டு
அருளருளுமென்னையர் அப்படியேயாகுதென்று
சொல்லப்பெற்றேனென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லிக் கும்பிட்டெழுந்திருந்தார்

புனந்திரன் விடைபெற்றுக்கொண்டு போகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரராசருக்கு
போகவிடைகொடுத்தார் போர்விஜயன்பாண்டியர்கள்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
கோசவளநாட்டான் கொலுக்கூடம்வந்தமர்ந்தான்
இவளிப்படியாக யிருக்கின்றவேளையிலே
பொன்னுமலைநாடாளும் அண்ணுவெழுந்திருந்து
மதுரைப்பெருந்தெருவில் மண்டபத்தில்வந்திறங்கி
அங்குமொருதூதுவரை ஆணழகர்தானழைத்தார்
தூதுவரும்வந்து தொழுதிறங்கிதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னன் திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றார்
உன்னையழைத்தது ஒன்றுங்குறைவுமில்லை
பறையறையுமன்னவனை சாப்புவனை கூப்பிடென்றார்
தோட்டியைத்தானழைத்து வாருமென்றார்மன்னவனும்
அருளருளுமென்னையா அப்படிக்கேயாகுதென்று
சொல்லப்பெற்றேனென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்றுசொல்லிக் கும்பிட்டெழுந்திருந்து
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய்ப் பற்றியவன்நடந்து
தோட்டியருகில்வந்து தூதுவனுமேதுசொல்வான்
பொன்னுமலைநாடாளும் அண்ணுவுந்தானழைத்தார்

அரைநாழிகைப்போதே யழைத்துவாவென்றுசொன்னார்
வந்தாலேயாச்சுது வாராமல்நீயிருந்தால்
வாராமல்நீயிருந்தால் வல்லுயிரைவாங்கிடுவோம்
நிமிஷமரைநாழிகைக்குள் நீவருகவென்றுசொன்னார்
பறையறையுமன்னவனும் சாம்புவனுந்தான்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னன்மனநடுங்கி வார்த்தைகளேதுசொல்வான்
என்னாலேயேதுகுற்ற மெனக்கறியச்சொல்லுமென்றான்
சொல்லுமையா சுவாமியென்று தூதுவனைத்தெண்டனிட்டான்
அப்போது தூதுவனும் ஆணழகனேதுசொல்வான்
ராஜாக்கள்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
க்ஷத்திரியர்காரியங்கள் கலக்கம்வெளிப்படுமோ
மந்திரிகள்காரியங்கள் மருமம்வெளிப்படுமோ
தொடர்ந்துநீவாடாவென்று யெழுந்துநடக்கலுற்றார்
தூதுவனுஞ்சாம்புவனும் துரிதமுடனோடிவந்து
பொன்னுமலைநாடாளும் அண்ணர்க்கெதிரில்வந்து
பறையறையுஞ்சாம்புவனும் பார்மன்னனேதுசெய்தான்
தூரவிருந்து தொழுதிறங்கிதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னன் திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதான்
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றான்
பொன்னுமலைநாடாளும் அண்ணுவுமேதுசொல்வான்

சாம்புவனை பறையறையும்படி உத்திரவு கொடுத்தது.

பெண்பெற்றெடுத்த பிள்ளைபுனத்திரனார்
தாமமுடியான் தனித்துதுபோகாதே
ஆளும்அரசும் அடங்கலும்பயணமென்று
சேனைப்படைதலைவர் திரள்வேந்தர்பயணமென்று
ஆனைப்படைத்தலைவர் அடங்கலும்வருகவென்று
குதிரைப்படைத்தலைவர் கொற்றவர்வருகவென்று
வருகவென்றுசொல்லித் தெரியப்பறையறையும்
வாராமலேயவர்க ளிருந்துவிட்டாராமானல்
ஊருக்குமேற்கே உயிர்க்கழுவில்போட்டிடுவோம்
நாமமணிகட்டி நரிக்கிடுவோம்பூமுடியை
நாக்கோடேநாக்கருந்து நகரிவிட்டுஓட்டிடுவோம்
மூக்கோடேமூக்கரிந்து முன்முடியைச்சக்கரிப்போம்
அப்படிக்கேசொல்லி யறையும்பறையோசை
என்றுமவருரைக்க யேதுசொல்வார்சாம்புவனும்
அருளாருளுமென்னையா அப்படியேயாகுதென்று
சொல்லப்பெற்றேனென்று கும்பிட்டெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்று கும்பிட்டெழுந்துநின்று
பொன்னுமலைநாடாளும் அண்ணுயெழுந்திருந்து

வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
மாநகரமாளும் மகாராசன்மாளிசென்று
கோசவளநாட்டான் கொலுவில்வந்துவீற்றிருந்தான்
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே

சாம்புவன் பறையறைகின்றது

பறையறையுமன்னவர்கள் பார்மன்னரோடிவந்து
வெள்ளியால்பறைகொண்டு வெங்கலத்தால்கோலூணி
முத்தாலேபறைகொண்டு முழுவயிரத்தால்கோலூணி
ஆனைமேலேவைத்து அலர்தாரன்போடலுற்றான்
மதுரைப்பெருந்தெருவும் நடுவீதிவந்துசென்று
அடித்தார்பறையோசை அண்டங்கிடுகிடென்ன
வெள்ளிமலைவாள்பேரிகை விருதுமுழக்கிவிட்டார்
தங்கத்தால்பேரிகை தானேமுழக்கிவிட்டார்
என்னவென்றுசொல்லி யறையலுற்றார்பேரிகையை
பெண்பெருமாள்பெற்றெடுத்த பிள்ளைபுனந்திரனார்
தாமமுடியான் தனித்துதுபோகாதே
ஆளும்அரசும் அடங்கலும்வாருமென்று
ஆனைபரிசேனை யடங்கலும்வாருமென்று
குதிரைபடைத்தலைவர் கொற்றவர்வருகவென்று
சேனைப்படைத்தலைவர் சேர்ந்துவருகவென்று
வரவேண்டுமென்றுசொல்லி விருதுபறையறைந்தான்
வாராமல்நீங்கள் இருந்தீர்களாமானால்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளுத்திரவு
ஊருக்குமேற்கே உயிர்க்கழுபோட்டிடுவோம்
தாமமுடிகழட்டி தரித்திடுவோம்பூமுடியை
மூக்கோடேநாக்கரிந்து முன்முடியைச்சங்கரிப்போம்
அப்படிக்கேயென்று அறைந்தார்பறையோசை
அறைந்தபறையோசை அந்நகரிதான்கேட்டு

சேனைகளெல்லாம் பயணப்பட்டு புனந்திரனிடம் சேருகிறது.

சிலமன்னரெல்லாம் திடுக்கிட்டெழுந்திருந்து
பலமன்னரெல்லாம் பயந்துயெழுந்திருந்து
குலமன்னரெல்லாம் குலைநடுங்கஓடிவந்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மனதுகலங்கி மறுவார்த்தைசொல்லாமல்
முன்னேமுரசெடுத்து முன்னானைமேற்போட்டார்
பின்னேமுரசெடுத்து பின்னானைமேற்போட்டார்
சிலமன்னரெல்லோரும் தேரின்மேலேறினார்
குலமன்னரெல்லோரும் குதிரையின்மேலேறினார்

பலமன்னரெல்லோரும் பல்லக்கிலேறினர்
ஆனதொருமந்திரிக ளானையின்மேலேறினர்
பட்டர்புலவர் பதினெட்டுமந்திரிகள்
தூரத்துராசாக்கள் துடர்ந்துவந்தமந்திரிகள்
காதத்துராசாக்கள் கடந்துவந்தமந்திரிகள்
சிங்கம்கரடிபுலி சேரமுழங்கிவர
யாளிகரடிபுலி யருகில்முழங்கிவர
சின்னத்தொனிமுழங்க சிலமன்னர்வாருர்கள்
முத்துக்குடைகவிய முடிமன்னர்வாருர்கள்
பவளக்குடைகவிய பலமன்னர்வாருர்கள்
தங்கக்குடைகவிய் தாண்டந்துவாருர்கள்
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருக்களெல்லாந்தாண்டி
புலிமுகவாசலிலே வந்துமிகநின்ருர்கள்
அங்குமொருதூதர் அருகாகவந்துநின்று
கோசவளநாட்டான் கொலுவுக்குமுன்னேவந்து
போரஞ்சாமன்னர் புனந்திரற்குயேதுசொல்வான்

சேனைவந்தசமாச்சாரம் தூதன்சொல்லுகிறது.

சேனையும்வந்ததென்று திசைநோக்கிதெண்டனிட்டான்
படைமன்னர்வந்தாரென்று பார்நோக்கிதெண்டனிட்டான்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
மகுடமுடியசக்தி மன்னவனுந்தான்பார்த்து
யானைபணிக்கர்களை ஒடியழையுமென்ருன்
அருளருளுமென்னையா அப்படிக்கேயாகுதென்று
ஓடியழைத்தான் ஒருகொடியில்தூதவனும்
யானைப்பணிக்காரர்களில் ஆறுநூருயிரம்பேர்
யானைப்பணிக்காரர்களில் அதிகாரிதானெழுந்து
ஏதுக்கழைத்தார்காண் என்னுடையராசாவும்
தூதவனுமப்போது துரிதமுடனேதுசொல்வான்
ராஜாக்கள்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
க்ஷத்திரியர்காரியங்கள் கலக்கம்வெளிப்படுமோ
மந்திரிகள்காரியங்கள். மருமம்வெளிப்படுமோ
என்னமோயேதோ வெனக்கொன்றுந்தெரியாது
தொடர்ந்துவருகவென்று வெழுந்துநடக்கலுற்ருன்

யானைப்பணிக்கர்கள் இந்திரனைக் காணுகிறது.

யானைப்பணிக்கர்கள் ஆறுநூருயிரம்பேர்
அத்தனைபேர்களும் அவனருகிலோடிவந்தார்

தூதுடன்கூட துடர்ந்துவழிநடந்தார்
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
கோசவளநாட்டான் கொலுவுக்குமுன்னேவந்து
போரஞ்சாமன்னர் புனந்திரராசருக்கு
யானைப்பணிக்கரெல்லாம் அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டமன்னர் திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதார்
கைதொழுதராஜருக்கு கட்டழகரேதுசொல்வார்
எங்களையழைத்தபணி யேதுகருமமென்றார்
உங்களையழைத்தது வொன்றுங்குறைவுமில்லை
அத்திப்புரம்போக யானைகொண்டுவாருமென்றார்
யானைப்பணிக்கர்களடங்கலுமேதுசொல்வார்
எவ்வானைகொண்டுவர யெங்களிளவரசே
மேகனேமின்னனே வெளிநாடங்கொண்டவனே
கொம்பில்பெரியவனே கொளம்புவிசையுள்ளவனே
தில்லைப்பதியோ சிவகாமிசுந்தரனே
கற்பகவல்லி கதித்தமதகளிரோ
பொற்புள்ளகொம்பு நிகளமுடையவனே
எவ்வானைகொண்டுவர யெங்களிளவரசே
போரஞ்சாமன்னன் புனந்திரனுமேதுசொல்வார்
பாசுபதம்பெருபெற்ற பார்த்தனுடபேரமைந்த
ஆணலழகுமன்னன் அர்ச்சுனனார்பேரமைந்த
வில்லாளிபார்த்தன் விஜயனுடபேரமைந்த
அவ்வானையெந்தனுக்கு கொண்டுவரவேண்டுமென்றார்
யானைப்பணிக்கர் அடங்கலுந்தான்கேட்டு
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
ஆளப்பிறந்த அபிமரைப்பாடெழுந்து
முத்துமுடிதரித்த ராஜாவைந்தானெழுந்து
ஆறெல்லாமண்டி அனலண்டிதீயண்டி
கத்திபலமார்ந்து காட்டகத்தேபோயிருந்து
பிள்ளைபகையாலே பெருங்கோபங்கொண்டதுவும்
தன்னிழலைத்தான்பார்த்து தவித்துப்புலம்புறதும்
ஆள்வருவதைக்கண்டாலே அந்தமதயானை
தும்பிக்கையைத்தூக்கி சுழட்டியெறிந்துவிடும்
அவ்வானைமுன்பாக அஞ்சவோம்நாங்களையா
குலவானைமுன்பாக கூசுவோம்நாங்களையா

போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
வேர்த்துவிரிவிரித்து மீசைசருண்டேறி
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
அடங்காதகோபமுடன் ஆணழகனேதுசொல்வான்
அடுத்தடுத்துசொல்லுறதும் என்சொல்மறைக்கிறதும்
அத்தனைக்கும்வந்த கெருவம்அடக்கிடுவேன்
அஞ்சுவதுமென்னே யதுவேவருகவென்றான்
கூசுவதுமெண்ணுமேத கொண்டுவருகவென்றான்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆணழகரேதுசொல்வார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும் எங்களுடநயவார்த்தை
அவ்வானைதான்பிடிக்க அவ்வன்த்தைப்போனாலே
எங்களைக்கண்டாலே யெழும்பியதுமேல்விழுந்து
தும்பிக்கையைச்சுத்தி சுழட்டியடித்துவிடும்
போனஜனங்களெல்லாம் பின்னேவரப்போறதில்லை
சென்றஜெனங்களெல்லாம் திரும்பிவந்துசேர்வதில்லை
பெண்டுகள்பிள்ளை முகத்தில்விழிப்பதில்லை
மாளுவதுநிச்சயங்காண் மதயானைதன்னாலே
உங்களடையாளம் ஏதாகிலுங்கொடுத்தால்
அடையாளந்தந்தாலே யானைபிடித்திடுவோம்
ஆனைபிடித்திடுவோம் அணிமதுரைசேர்ந்திடுவோம்
மத்தகஜந்தான்பிடித்து மதுரைவந்துசேர்ந்திடுவோம்
என்றுமவருரைத்து இறங்கியவர்தெண்டனிட்டார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் மோதிரங்கொடுத்து அர்ச்சுனன்பேர்கொண்ட யானையைக் கொண்டுவரச்சொன்னது.

கணையாழிமோதிரத்தைக் கழட்டியவன்முன்போட்டு
அடையாளங்கைகொடுத்து ஆனைகொண்டுவாருமென்றார்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தான்
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
நெஞ்சுலர்ந்துவாய்வரண்டு நித்திலங்குபூமுடியார்
ஒருவர்க்கொருவர் உவமைகள்சொல்லிடுவார்
மூர்க்கன்சோருண்டகளே முடிந்ததுயின்றோடே
அவதிசோருண்டகளே அற்றதுயின்றோடே
போதுமையாசாமியென்று ஏகிவழிநடந்தார்
அவ்வீதிவீதி நடந்தார்அழகாக
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தங்கள்தங்கள்மாளிகையில் தார்வேந்தர்போய்புகுந்தார்

தூதர் காட்டில்யானைக்குப்பயந்து இருந்துபோவோமென்று நினைத்து தங்கள்பிள்ளைகள் பெண்ணுக்குக் கலியாணஞ்செய்கிறது.

வன்னிமரம்பிளந்து வாசலெல்லாம்பந்தலிட்டார்
ஈர்க்துப்பிளந்து இருகாதம்பந்தலிட்டார்
முத்துப்பிளந்து முக்காதம்பந்தலிட்டார்
பவளத்தால்கால்நிறுத்தி பதிங்காதம்பந்தலிட்டார்
கன்னியற்குங்காளையற்குங் கலியாணஞ்செய்துவிட்டார்
விருந்துகள்தான்சமைத்து வேடிக்கைபார்த்தார்கள்
அப்போதுமன்னவர்கள் ஆலோசனைசெய்தார்கள்
மதயானைத்தான்பிடிக்க வனம்போய்த்திரும்புவோமோ
போயித்திரும்புவோமோ பிள்ளைமுகம்பார்ப்போமோ
மறித்துத்திரும்புவோமோ மைந்தர்முகம்பார்ப்போமோ
சாவோம்பிழைப்போமோ யென்றுமனதிலெண்ணி
தங்கள்தங்கள்பெண்டுகளைத் தார்வேந்தன்தானழைத்து
கொற்றப்போர்மன்னரெல்லாம் கோடிப்புடவையிட்டு
மற்றப்போர்மன்னரெல்லாம் மதயானையைக்கைபிடிக்க
வாய்க்கரிசிகைப்பிடித்து வாரார்கள்மன்னரெல்லாம்
போகவிடைபெற்று புறப்பட்டார்வீரரெல்லாம்
யானைப்பணிகளில் அதிகாரிமுன்னடக்க
குதிரைப்பணிக்கர்களில் கொற்றவர்பின்னடக்க
சேனைப்படைத்தலைவர் சிலவீரர்பின்னேவர
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலகடந்து
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
அரண்மனைவீதிவிட்டு அங்காடிதான்தாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
தெருவும்பலதிசையும் தேரோடும்வீதிவிட்டு
மாலைமுடியார்கள் மதுரைக்குப்பின்னுரைத்தார்
காடுகடந்து கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
ஒங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சிங்கப்உலாகொடுக்கும் செந்நாய்வனந்தாண்டி
கரடியுலாகொடுக்கும் கரடிவனந்தாண்டி
கணையாழிகைப்பிடித்து கட்டழகர்வாறார்கள்
வாய்வேகமாகவே வாறார்கள்தூதுவர்கள்
யானைப்பிடிப்பதற்கு வாறார்கள்தூதுவர்கள்

தூதர் காட்டில் யானையைத் தேடுகிறது.

யானையிருக்கிற அடர்ந்தவனம்வந்துவிட்டார்
யானையைத்தேடுகிறார் அப்பெரியதூதுவர்கள்
எந்தமலைமேலே யிருக்குமோ அவ்வானை
எந்தச்சுனையருகில் இருக்குமென் றநாமறிவோம்
என்றுமவர்பேசி யேறினர்பூமரத்தில்
தாழ்ந்தமரத்தைவிட்டு வுயர்ந்தமரமேறி
தாழ்ந்தமலையைவிட்டு வுயர்ந்தமலையேறி
மலையேறிப்பார்த்தார்கள் மதயானையிருப்பிடத்தை
அப்போமதயானை அக்காடெல்லாந்திரிந்து
காடெல்லாந்தான்திரிந்து கண்டதழையைப்பிடித்து
கர்வமெடுத்தவ்வானை கானகமேசுத்திடுமாம்

தூதர் யானையைக்கண்டது.

தாழைந்தமரந்தேடி தான்வந்துபள்ளிகொள்ளும்
ஆலமரத்தடியில் ஆனைவந்துபள்ளிகொள்ளும்
பள்ளிகொண்டபாவனையைப் பார்த்தந்த தூதுவர்கள்
யானைதிரும்புதற்கு அவ்வீரரேதுசொல்வார்
அவர்-என்னவென்றுசொல்லியப்போ ஊதுகிறார்சின்னத்தொனி
மதுரையறுகாதம் ஆளுகிறார்பாண்டியர்கள்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
அன்பத்தறுகாதம் ஆளுகிறார்பாண்டியர்கள்
மைந்தனுமில்லையென று மலைமேல்தவமிருந்தார்
மாளுகிறோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலரிலவதரித்தாள்
நீங்கள்தவசுசெய்து பெற்றெடுத்தஅல்லிநல்லாள்
மன்னன்விஜயன் மடலூர்ந்தகட்டழகி
காளைவிஜயன் கடலூர்ந்தகட்டழகி
ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைச்சங்கரித்து நீலிபட்டமாண்டவள்காண்
அப்படிக்கொத்ததொரு ஆரணங்குபெற்றபிள்ளை
அல்லியம்மாள்பெற்றெடுத்த அழகுபுனந்திரனார்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
பெண்பெருமாள்பெற்றெடுத்த பிள்ளைபுனந்திரனார்
பேரப்பரப்பா பெரியப்பாமாளிகைக்கு
தாமமுடியான் தனித்தூதுபோகாதே
காண்டாவனமெரித்த காளைவருகவென்று
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தாவருகவென்று
வில்லாளிபார்த்தன் விஜயாவருகவென்று
கணையாழிமோதிரத்தை கழட்டியவர்கைகொடுக்க

உம்மையழைத்துவர வெங்களையனுப்பிவைத்தார்
ஐயாவருகவென்று ஊதினார்தாரிசின்னம்
ஊதினார்சின்னம் வுலகேழுந்தானதிர
ஊதினார்காளை ஏழுவுலகந்தானதிர
செம்பொன்னார்காளை திசைவிளங்கவூதினார்
அம்பொன்னார்காளை அவனியெல்லாம்வூதினார்
பொன்னினாகாளை பொருந்தவின்றாதினார்
வருகவருகவென்று வூதினார்தாரைசின்னம்
ஊதினசின்னத்தொனி கேட்டுது அவ்வானை
மகுடமுடியசக்கி மரத்தின்கீழ்பள்ளிகொண்டு
ஆலோசனைசெய்கிறது அந்தமதவானை
அப்போது தூதுவர்கள் ஆனாலழகரெல்லாம்
மரத்தைவிட்டுக்கீழிரங்கி மன்னவர்ஓடிவந்து
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருந்தானெடுத்து
கணையாழிமோதிரத்தை கட்டழகர்கைபிடித்து
யானையின்முன்னேவந்தார் அழகானதூதுவர்கள்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
கணையாழிமோதிரத்தைக் காலுக்குமுன்னேவைத்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
யானையின்பாதம் அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டமன்னவர்கள் திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
பெண்பெருமாள்பெற்றெடுத்த பிள்ளைபுனந்திரனார்
தூதுரைக்கப்போவார்காண் சுந்தரப்பூமுடியான்
தாமமுடியான் தனித்தூதுபோகாதே
ஐயாவருகவென்று அடிவணங்கிதெண்டனிட்டார்
தாங்கள்வருகவென்று தார்வேந்தர்தெண்டனிட்டார்

யானை மதுரைக்கு வருகிறது.

அப்போதுமதயானை அவர்களுக்குயேதுசொல்லும்
போவோம்மதிலிடிப்போம் பெண்சேனையும்பிடிப்போம்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கஅடித்திடுவோம்
சாயாம்புமேனி சகுனிதலையுடைப்போம்
தங்கைமணவாளன் தருதலையன்பூமுடியை
தருதலையன்பூமுடியைத் தடியாலடித்திடுவோம்
காஞ்சிநாடாளுங் கருணரிடபூமுடியை
என்றுமதயானை யெழுந்துநடந்தது
மடுவிலேபோயிறங்கி மஞ்சநீர்தானுடி

அசைந்துநடந்தது அப்பெரியகாட்டகத்தில்
சாய்ந்துநடந்தது சாயப்பெருமாளை
கானகத்தைத்தாண்டி வருகிறதுதென்மதுரை
இருண்டவனந்தாண்டி எலுமிச்சந்தோப்புவிட்டு
கருத்தவனந்தாண்டி கானகமுந்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
சிங்கமுலாகொடுக்கும் செந்நாய்வனந்தாண்டி
கரடிஉலாகொடுக்கும் கருநாய்வனந்தாண்டி
வாழ்மதுரைராச்சியத்தில் வருகிறது அவ்வானை
தூதுவர்கள்முன்னும்பின்னுந் தொடரவருகிறது
மதுரைப்பெருந்தெருவில் வீதியில்வருகையிலே

மதுரையில் ராஜாக்கள் யானையைக்கண்டு திகில்படுகிறது.

மதுரையில்வாழுகின்ற மன்னவர்கள்கண்டார்கள்
சிலமன்னரெல்லோரும் திடுக்கிட்டெழுந்திருந்து
பலமன்னரெல்லோரும் பதைபதைத்துதானெழுந்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
நெஞ்சுலர்ந்துவரண்டு நித்திலங்கும்பூமுடியான்
ஒருவர்க்கொருவர் உண்மையாய்ச்சொல்லிக்கொள்வார்
ஆளப்பிறந்த அபிமரைப்பாடெழுந்து
ஆரெல்லாமாண்டி யனலண்டி தீயண்டி
கத்தியிலமர்ந்து கானகத்தில்போயமர்ந்து
மனங்கொள்ளாக்கோபமுடன் இருக்கும்மதயானை
அந்தமதயானை யிந்தத்தெருவில்வந்தால்
என்றுமனதிலெண்ணி யெல்லவருமோடிவந்து
கோட்டையடைத்திடுவார் கொத்தளங்கள்சாத்திடுவார்
மாளியடைத்திடுவார் மண்டபங்கள்சாத்திடுவார்
ஏக்கம்பிடித்து யிருப்பார்சிலபேர்கள்
மனதுபயமெடுத்து மன்னவர்கள்சூழ்ந்திடுவார்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
அப்போதுயானை அசந்துநடைநடந்து
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவந்து
புலிமுகவாசல்வந்து புகுந்துநின்றவ்வானை
அரண்மனைவாசலிலே நின்றது அவ்வானை
அங்குமொருதூதன் ஆணழகனோடிவந்து
போரஞ்சாமன்னர் புனந்திரற்குமுன்னேவந்து

புனந்திரற்கு சேதியுரைக்கிறது.

சணையாழிமோதிரத்தை கழட்டியவன்முன்னேவைத்து
யானைப்பிடிக்க அடர்ந்தவனம்போனதுவும்
போனதுவும்வந்ததுவும் புதுமைகளுள்ளதெல்லாம்
ஆனையைக்கண்டு அழைத்தோடிவந்ததுவும்
அத்தனையுஞ்சொல்லி யடிவணங்கிதெண்டனிட்டார்
யானையும்வந்ததென்று யடிவணங்கிதெண்டனிட்டார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
துள்ளியெழுந்தான் துவண்டமலரெடுத்தான்
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
அத்தனையுங்கண்டுமல்லோ ஆணழகனிந்திரனும்
பன்னீரால்காலலம்பிப் பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
யானையின்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
அப்போதுயானையது ஆணழகர்க்கேதுசொல்லும்
உந்தனுக்கோதுக்கமப்பா உத்தமனேர்வீரியனே
எந்தனுக்குதுக்கம் இருக்குதெழுந்திரென்று
துக்கமாய்த்தானிருந்து தும்பிக்கைதானெடுத்து
இந்திரராசாவை யெடுத்துநிறுத்தியது

யானை புனந்திரற்கு தேறுதல் சொல்லுகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரருக்தான்பார்த்து
அங்குமொருதூதுவனை ஆணழகன்தானழைத்து
செந்நெல்பயறு சிறுபயறுதேங்காயும்
கொள்ளும்உளுந்துகளும் கொப்பரைத்தேங்காய்களும்
கூட்டிக்கவளம் கொடுமென்றான்யானைக்கு
அப்போதுயானை ஆணழகர்க்கேதுரைக்கும்
ஆளப்பிறந்த அபிமருயிர்வாங்கி
கொன்றுபழிசெய்து கொலுசெய்துபோட்டவரை
அவரைக்கொன்றுபழிவாங்கி குடல்பிதுங்கித்தோள்போட்டு
அத்திபுரமுழுதும் அடங்கலுந்தானிடித்து
நமதுசப்தம் முடிந்ததின்பிற்பாடு
அன்றுகவளம் எடுப்பேன்காணணழகா.

யானை சப்தமிடவும் புனந்திரன் அத்திப்புரத்துக்குத் தூதுக்குச் செல்லுகிறது.

என்றுமதுவுரைத்து இருந்ததுஅவ்வானை
அப்போதுஇந்திரரும் ஆணழகர்தான்கேட்டு

படிபடியென்றான் படிந்தது அவ்வானை
முக்கம்பம்தட்டி முதுகின் மேல்காலைவைத்து
மத்தகம்தட்டி மதயானையேறினான்
அம்மானுந்தானும் அழகானையேறினார்
மாமாவுந்தானும் மதவானையேறினார்
வந்தவர்பேர்களெல்லாம் வாகனங்களேறுமென்றார்
சரியானையேறினார் தன்னொத்தராசாக்கள்
பக்கானையேறினார் பத்துலட்சம்ராசாக்கள்
அறுகானையேறினார் அஞ்சுலட்சம்ராசாக்கள்
முன்னானையேறினார் மூன்றுலட்சம்ராசாக்கள்
இன்னஞ்சிலமன்னவர்களெழுந்தார்கள் துருசாக
முன்னைமுரசெடுத்து முன்னானைமேல்போட்டார்
பின்னைமுரசெடுத்து பின்னானைமேல்போட்டார்
சிலமன்னரெல்லோரும் தேரின்மேலேறினார்
பலமன்னரெல்லோரும் பல்லக்கிலேறினார்
குலமன்னரெல்லோரும் குதிரைமேலேறினார்
அழகானமன்னரெல்லாம் ஆனையின்மேலேறினார்
உத்தமனார்வீரியர்கள் ஒட்டையின்மேலேறினார்
பட்டர்புலவர் பதினெட்டுமந்திரிகள்
சித்தர்சுகர்சாரணர் சேனைபேர்மந்திரிகள்
இன்னஞ்சிலமன்னவர்களெங்கும்நிறைந்தார்கள்
சிங்கங்கரடிபுலி சேர்ந்துமுழங்கிவர
இப்படியாய்ச்சேனைகளேறினார்வாகனத்தில்
ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடைகள் முழுமாணிக்கபொற்குடைகள்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பச்சைகுடையாம் பவளநெடுங்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியநற்குடையாம்
எங்கும்நிறைந்தார்களெண்ணாயிரங்குடைகள்
சுத்திநிறைந்தார்கள் சூரியனைக்காணாமல்
பக்கம்நிறைந்தார்கள் பகவானைக்கண்மறைக்க
பச்சைகுடைகவிய பார்மன்னன்தேர்நடக்க
முத்துக்குடைகவிய முடிமன்னர்தேர்நடக்க
தங்கக்குடைகவிய தார்வேந்தர்தேர்நடக்க
ரத்தினக்குடைகவிய ராஜாக்கள்தேர்நடக்க
பொன்னின்குடைகவிய பூபாலர்தேர்நடக்க
ஒத்தக்குடைநடுவில் உத்தமனார்வாராரே
யானையசைந்துவர அடல்வீரர்கொக்கரிக்க
சேனையசைந்துவர திரல்மன்னர்கொக்கரிக்க
குதிரையனுமாணிக்க கோடிமன்னர்சத்தமிட
யானையும்சேனைகளும் அசைந்துவழிநடந்தார்

அவ்வீதிவீதி நடந்தாரழகா
அவ்வீதிதாண்டி மறுவீதிபோம்போது

புனந்திரன் அல்லிவீதி போகிறது.

அல்லியம்மாள்வீதியிலே யானைவருகிறது
வருகிறவேளையிலே வாத்தியங்கள் ஊதுகிறார்
ஊதினான் சின்னம் உலகேழுந்தானதிர
செம்பொன்னாற்காளை பொறந்துநின்றாதினார்
ஊதினசின்னத்தொனி வுத்தமியாள்கேட்டு
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
தனக்குகவரியிடும் தாதியர்க்குயேதுசொல்வாள்
மாத்தான்படையோ மறுமன்னர்தன்படையோ
எதிராளிதன்படையோ யிவ்வீதிவாரார்கள்
சரியொத்தராசாக்கள் சண்டைக்குவாரார்கள்
என்னை கெலிக்கவென்று வாராரோநானறியேன்
மதுரைகெலிக்கவென்று வழக்காடவாராரோ
யார்வரவுதாதி அறிந்தோடிவாருமென்றாள்

அல்லி தாதிகளைவிட்டுப் பார்க்கச் சொல்லுகிறது.

தனக்குகவரியிடுந் தாதியெழுந்திருந்து
திடுக்கென்றெழுந்திருந்து திமிதிமியென்றோடலுற்றாள்
வாசல்படியில்வந்து மங்கையரும்பார்க்கலுற்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
புனந்திரராசாவும் போரெழுதியண்ணாவும்
மதுரைக்குடிபடைகள் மண்டலத்துராசர்களும்
தென்மதுரைகுடிபடைகள் சேனைபேர்மந்திரியும்
கண்டாளேதாதியவள் கடுகெனவேயோடிவந்து
அல்லிப்பெருமாட்கு அடிவணங்கிதெண்டனிட்டு

தாதி அல்லிக்குச் சேதிசொல்லுகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
பொன்னுமலைநாடாளும் அண்ணாவுடனாக
தூதுரைக்கவாரார்கள் சுந்திரப்பூமுடியாள்
பிள்ளைபடையெடுத்து வருகிறாரென்றுசொன்னாள்
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
திரேகங்குளிர்ந்து யிருதோளும்பூரித்து

அல்லி பிள்ளையைக்காண உப்பரிகையேறிப் பார்க்கிறது.

மைந்தரைக்காணவென்று மாதாவெழுந்திருந்து
ஏழாநிலையும் யெழுநிலையும்மேலேறி
மேலாங்கதவை விடுகதவைதாள்திறந்து
பலகோடிவாசல் துரந்தபத்தினியும்
காசிப்படியைக் கணக்கமிதித்தேறி
பவளப்படிமிதித்துப் பத்தினியாள்பார்க்கலுற்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்சீர்வடியை
கண்டாளேபுத்திரரைக் கட்டழகிஅல்லியரும்
அருகிருக்கும்தாதியற்கு அல்லியவளேதுசொல்வாள்
அரையில்சொருகழகும் ஐம்பொன்னாற்சிரழகும்
கத்திச்சொருகழகும் கத்திகட்டுவுள்மருங்கும்
கச்சீகட்டும்உள்மருங்கு கனிவாயின்பேரழகும்
தக்கபுகழுடைய தருமருடபேரழகும்
வெற்றிமதயானை வீமருடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடகைவீச்சும்
நாமமுடியான் நகுலநடையழகும்
தாமமுடியான் சகாதேவன்கைவீச்சும்
காஞ்சிநாடாளும் கருணருடபேரொளியும்
ஆறுபேர்தன்னழகை பெற்றுவந்தானழகன்
கண்ணேச்சல்கண்ணேச்சல் காண்டிபபுத்திரற்கு

புனந்திரற்கு ஆலாத்திக்காட்டுகிறது.

அர்ச்சுனனார்புத்திரற்கு ஆலாத்திகாட்டுமென்றார்
தேர்விஜயன்புத்திரற்கு திருஷ்டியைக்காட்டுமென்றார்
அங்குமொருதாதி அரிவுடையாளோடிவந்து
இன்றுமுறையென்னுதென்று எழுந்தாளேதாதியவள்
முத்தினாலாலாத்தி முப்பதுநூறாயிரமாம்
பவளத்தாலாலாத்தி பத்துநூறாயிரமாம்
கற்பூரஆலாத்திக் காட்டினாராயிரம்பேர்
திருஷ்டிகழித்து தெருவெங்கும்விட்டெரிந்து
ஆலாத்திக்காட்டி அணியிழைமார்வீற்றிருந்தார்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தாரழகாக
மற்றுமொருவீதியிலே வாராரேயிந்திரரும்

புனந்திரன் பாண்டியர்கள் வீதிவருகிறது.

ஆராயிரவர் அணிதிரளார்தான்கேட்டு
ஆரப்பதக்கமும் அதிப்பதக்கந்தன்னுடனே
பாரப்பதக்கம் பருத்தமுத்துதாவடமும்

ஏலலவுங்கமும் இன்பக்களிப்பாக்கும்
காச்சாகளிப்பாக்கும் கப்மாறுவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் மோகிரங்கிவெற்றிலையும்
சாதிப்பெருங்கடலும் சங்குசுட்டசுண்ணும்பும்
வச்சிரதட்டுகளும் வகைவகையாத்தானெடுத்து
ஆறாயிரவர்களும் அங்கெனவேயோடிவந்து
போரஞ்சாமன்னர் புனந்திரற்குமுன்னேவந்து
இந்தாருமென்று எடுத்து அவர்கைகொடுத்து
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
மகுடமுடியசைக்கி மன்னவனுமேதுசொல்வான்
ஆழிகடங்கையமர்த்தி ஆணழகன்போய்நடந்தான்
மாலைமுடியானும் மதுரைக்குப்பின்னுரைத்தான்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சில்லென்றகாடுஞ் செடியும்வனந்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
அங்குமொருபூங்காவைக் கண்டுமந்தவாணழகன்
ஆச்சாவுந்தேக்கும் அழலோங்கும்பாதரியும்
சண்பகமுல்லைகளும் சேர்ந்ததொருபாதிரியும்
பாதரிமுல்லைப் பருத்ததொருசண்பகமும்
சிறுமல்லிகுடமல்லி சேர்ந்ததொருசண்பகமும்
மல்லிகைமுல்லை மருக்கொழுந்துசண்பகமும்
இத்தனையும்பூர்த்து சொரியும்அழகாக
மாத்தில்புறாவும் மயிலும்விளையாடும்
கோவில்புறாவும் குயிலும்விளையாடும்
அன்னமுந்தாராவும் அசைந்துநிழல்காட்டும்
சாரையும்சர்ப்பமும் சற்றேயிழைந்துவிடும்
புலியும்பசுவும் ஒருதுறையில்நீர்குடிக்கும்
போரஞ்சாமன்னர் புனந்திரரும்தான்பார்த்து
யாருடையகாவிதென்றான் அல்லித்திருமகனும்
அங்கிருந்ததாதுவர்கள் ஆணழகரேதுசொலவார்
தக்கபுகழுடைய தருமருடபூங்காவி

தருமர் பூங்காவை இந்திரன் காணுகிறது.

பருவமதயானை பஞ்சவர்களைவரது
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆளுகிறபூங்காவு
போரஞ்சாமன்னன் புனந்திரருந்தான்பார்த்து
இப்பெரியகாவும் எழில்பெரியயாதினமும்
சொற்பெரியகாவும் தோள்பெரியமண்டபமும்
இத்தனையுமிங்கிருக்க எங்போனார்பஞ்சவர்கள்
மண்டபங்களிங்கிருக்க மன்னவர்கள்காடுசேர்ந்தார்

என்றுமனங்கலங்கி ஏங்கிமனந்தளர்ந்து
சிந்தித்துமன்னன் இருக்கண்ணில்முத்திர்ந்தான்
பொன்னுமலைநாடாளும அண்ணாவுமேதுசொல்வார்
ஏன்காணுமன்னன் இந்தமதிவுந்தனுக்கு
வந்தகருமம் முடியுங்காண் மன்னவனே
என்றுமனந்தேறி யிருக்கின்றவேளையிலே
போரஞ்சாமன்னன் புனந்திரருமேதுசொல்வார்
யானைவிட்டுகீழிரங்கி ஆனந்தவாழ்மார்பன்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனங்கள்விட்டிறங்கி
இன்றைக்குமத்தியானம் இங்கேவிடும்மென்றார்
பொன்னிறக்கூடாரம் போட்டார்புனந்திரர்க்கு
வண்ணவண்ணக்கூடாரம் மன்னவர்க்கும்போட்டார்கள்
ஆசினங்கள்போட்டார்கள் வந்தவந்தமன்னவர்க்கு
ஆசினத்தின்மேலேறி ஆணழகன்வீற்றிருந்தான்
பட்டர்புலவர் பதினெட்டுமந்திரிகள்
கட்டக்கொலுவிருந்தார் கொற்றம்புவீரியர்கள்
சரியாய்க்கொலுவிருந்தார் தன்னொத்தராசாக்கள்
பட்டப்புலவர்கள் பாடத்தொடங்கினார்
தருமர்வளம்பாடித் தம்பிமார்சீர்பாடி
வீமர்வளம்பாடி விசயனார்சீர்பாடி
காண்டாவனமெரித்த காளைபுகழ்பாடி
நாமன்முடியான் நகுலதுபோர்முடியான்
தாமன்முடியான் சகாதேவன்சீர்பாடி
போரஞ்சாமன்னர் புனந்திரனார்பேர்பாடி
வந்தபேர்களின்மேல் பாடினாமன்னவர்கள்
அப்போதுயிந்திரனார் ஆணழகன்தான்பார்த்து
பட்டப்புலவர் பாடினபேருக்கும்
ஆடையும்பொன்னும் அளித்துமேவாரான்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனங்களேறுமென்றார்
படிபடியென்றான் படிந்தது அவ்வானை
முகக்கம்பம்தட்டி முதுகின்மேலேகாலைவைத்து
மத்தகத்தைத்தட்டி மதயானையேறினான்
அம்மானும்தானும் அழகானையேறினார்
மாமாவுந்தானும் மதயானையேறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
அக்காவுங்காவும் நடந்தாரழகாக
மற்றுமொருபூங்காவும் வாரார்கள்மன்னவர்கள்
அக்காவுந்தன்புதுமை ஆணகள்கண்டானே

திரியோதிரன் பூங்காவை புனந்திரன் கண்டழிக்கிறது.

ஆச்சாவுந்தேக்கும் அனலோங்கும்பாதரியும்
பாதறிமுல்லைப் பருத்தயிருவாட்சி
இருவாட்சிசண்பகமு மிருபுரமுங்கஸ்தூரி
மல்லிகைமுல்லை மருக்கொழுந்துயிருவாட்சி
சண்பகமும்முல்லைகளாம் சேர்ந்தயிருவாட்சி
எங்கும்நிறைந்திருக்கும் இருவாட்சிசண்பகமும்
மருவும்மருக்கொழுந்தும் வனமெல்லாம்பூத்திருக்கும்
வேம்பும்அரசமங்கே விஸ்தாரமாய்பூத்திருக்கும்
போரஞ்சாமன்னர் புனந்திரன் தான்பார்த்து
ஆறிதுபூங்காவென்றார் அல்லித்திருமகனும்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாதே
நின்றபுனந்திரற்கு நீதிசொல்லமாட்டாதே
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலங்கும்பூமுடியான்
தேசத்தையாளுந் திரியோதிரன்காவென்றார்
உங்கள்பெரியப்பாபூங்காவு யென்றார்கள்மன்னவர்கள்
ஐயருடகாவிதென்ன ஆணழகன்கேட்டு
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலங்குபூமுடியார்
பச்சைமுகங்கருவி பால்முகம்வேறுபட்டு
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
யானைவிட்டுக்கீழிறங்கி யானந்தவாழ்மார்பன்
பூமரத்தைசார்ந்துக்கொண்டு நின்றார்புனந்திரரும்
அங்கிருக்குந்தூதுவரை ஆணழகன் தானழைத்து
ஆச்சாவுந்தேக்கும் அழலோங்கும்பாதரியும்
வேம்பரசமெங்கே வெட்டிப்போராக்குமென்றார்
பூமரத்தைவேர்பிடுங்கி போடுமென்றார்ஓர்புறமாய்
மாமரத்தைவேர்பிடுங்கி மரத்தோடேசாயுமென்றார்
அப்போதுதூதுவர் ஆணழகர்தானெழுந்து
அவ்வளவுபோதுமென்று ஆணழகர்தூதரெல்லாம்
வேம்புமரசமங்கே வெட்டிப்போரிட்டார்கள்
பூமரத்தைவேர்பிடுங்கி சாடினார்புண்ணியர்கள்
மாமரத்தைவேர்பிடுங்கி மடித்தார்ஒருபுறமாய்
பத்துபனைமரத்தை யொன்றாய்ப்பிடுங்கிடுவார்
எட்டுபனைமரத்தை யிருதுண்டாய்போட்டிடுவார்
தென்னமரங்களெல்லாந் திரிகியெறிந்திடுவார்
இப்படியாக அழித்தார்வனங்களெல்லாம்
போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்

தேனல்லோதாரன் திரையெடுத்துதான்முடிந்து
சாயாம்புமேனியனுஞ் சாஸ்திரங்கள் தான்பார்த்து
மேகமலேபோல மெள்ளநடந்தசைந்து
பணிபணியென்ருன் பணிந்தது அவ்வானே
முதக்கம்பம்தட்டி மதவானேயேறினர்
மத்தகத்தைதட்டி மதவானேயேறினர்
அம்மானுந்தானும் அழகானேயேறினர்
மாமாவுந்தானும் மதவானேயேறினர்
வந்தவந்தபேர்களெல்லாம் மதவானேயேறினர்
வக்காவுங்காவும் நடந்தாரழகாக

கர்னன் பூங்காவை இந்திரன்கண் டழிக்கிறது.

மற்றுமொருபூங்காவும் வாரார்கள்மன்னவர்கள்
அந்தவொருபூங்காவும் அதிசயத்தைப்பார்த்தார்கள்
சந்தனவிருட்சங்களும் சாலேகளும்சோலேகளும்
தேவதாரிஷிமலேயும் திகழாகசோலேகளும்
எங்கெங்கும்சோலேகளும் எத்திசையும்சாலேகளும்
மாடப்புருவும் மயிலும் விளேயாடும்
கோயில்புருவும் குயிலும்விளேயாடும்
அன்னமுந்தாராவும் அசைந்துவிளேயாடும்
சாரையுஞ்சர்ப்பமும் சற்றேயிழைந்துவிடும்
புலியும்பசுவும் ஒருதுறையில்நீர்குடிக்கும்
காஞ்சிநாடாளும் கருணரிடமாளிகையும்
வில்பிடித்துலாவுகிற வேந்தனது மண்டபமும்
சனியெண்ணேயாடுகிற சமர்த்தனதுமண்டபமும்
தாமமுடியான் சதுரங்கமண்டபமும்
சுந்தரப்பூமுடியான் சொக்கட்டான்மண்டபமும்
அத்தனேயுங்கண்டானே ஆனந்தவாழ்மார்பன்
ஆறிதுபூங்காவென்ருன் அல்லித்திருமகனும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரைகளெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாமல்
நின்றபுனந்திரற்கு நீதிசொல்லமாட்டாமல்
நெஞ்சுலர்ந்துநாவரண்டு பச்சைமுகங்கருவிப்
பச்சைமுகங்கருவிப் பால்முகம்வேறுபட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
காஞ்சிநாடாளும் கருணருடகாவிதென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
பிள்ளேயைக்கொன்ற பெரும்பாவிகாவிதுகாண்
மைந்தரைக்கொன்ற மாபாவிபூங்காவோ

வேறுவழியில்லையோ வேந்தர்பெருமானே
மற்றும்வழியில்லையோ மைந்தர்பெருமானே
அயிராவதம்போல் யானையைத்தானழைத்து
இடித்துநகத்தி யெமபுரஞ்சேருமென்றான்
மதிலைச்சுவரிடிங்கள் மண்டபங்கள்தானிடித்து
ஆலயங்கள்கோபுரங்கள் அடங்கலுந்தானிடித்து
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணிவாருமென்றான்
யானையதுகேட்டு அப்படியேநல்லதென்று
வெங்கண்சிவந்து வெளிவால்பிருமுருக்கி
கொம்பைபகைத்தி குளம்பால்நிகங்கீறி
தும்பிக்கையாலே சுழற்றிடுமவ்வானை
மதிலேமதிலிடித்து மண்டபத்தைவேர்பிடுங்கி
கோபுரஞ்சிகாரங்களைக் குத்திகிளப்பிவிடும்
இடித்துமேநத்தி யெமபுரஞ்சேர்த்துவிடும்
குத்திக்கிளப்பியது கோளாறம்பண்ணிவிடும்
இந்திரனார்தன்னருகில் வந்தது அவ்வானை
பணிபணியென்றான் பணிந்தது அவ்வானை
முதக்கம்பந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
மத்தகந்தட்டி மதயானையேறினார்
அம்மானுந்தானும் அழகானையேறினார்
மாமாவுந்தானும் மதயானையேறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
ஏறினபோதே யெடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடைகவிய முடிமன்னர்தேரசைய
பவளக்குடைகவிய பார்மன்னர்தேர்நடக்க
ரத்தினக்குடைகவிய ராசாக்கள்தேர்நடக்க
வக்காவுங்காவும் நடந்தாரழகாக
இஞ்சிவனந்தாண்டி யெலுமிச்சந்தோப்புவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளம்புசோலைவிட்டு
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
எல்லையிளந்தோப்பு தாண்டியிளவிசையா
அத்திபுரத்தைவந்து சேர்ந்தார்கள் ஆணழகர்
இதுயாருடையவீதியென்றான் அல்லிதிருமகனும்
அங்கிருக்குமன்னவர் அரையர்துரைகளெல்லாம்
தாமமுடியான் தைலாட்டான்வீதியென்றார்

புனந்திரன் திருதராட்டிரன் வீதிவருகுதல்.

கண்ணில்லான்வீதியென்று காவலர்கள்சொன்னார்கள்
குருடனுடவீதியென்றார் கொற்றம்பூதூதுவர்கள்
பேரஞ்சாமன்னர் புனந்திருந்தான்கேட்டு
ஊதிஞாசின்னம் உலகேழுந்தானதிர

ஊதினார்காளை உலகுகலைமுழக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கவென்றூதினார்
வெள்ளினார்காளை விளங்கவென்றூதினான்
வையைவளநாட்டான் வந்தேனென்றாதினான்
வாழ்மதுரைபாண்டியனார் வந்தேனென்றாதினார்
தாமமுடியான் தைலாட்டான்பூமுடியும்
தேசத்தையாளும் திரியோதிரன்பூமுடியும்
நூலால்கடுந்திரளா நூற்றொருவர்பூமுடியும்
காஞ்சிநாடாளும் கருணரிடபூமுடியும்
தங்கைமணவாளன் தருதலையன்பூமுடியும்
சாமத்துரோகி சகுனியிடபூமுடியும்
அம்மான்சகுனி யவனுடபூமுடியும்
அத்தனைபோபூமுடியை அரிவேன் அரிவேனென்றான்
தப்பாதுநானறிவேன் என்றுமவனூதினான்
தைலாட்டானென்றுசொல்லி தாரைசின்னமூதினான்
திரியோதிரனுக்கென்று சங்கெடுத்தூதினான்
ஊதினான்சின்னம் உலகேழுதாண்டிர
செம்பொன்னாற்காளை திசைபிளக்கவூதினான்
பொன்னினாற்காளை பொருந்தநின்றாதினான்
இப்படியாயூதுகிறார் எங்கெங்கும்இந்திரனும்
அந்தத்தெருவிருக்கும் அணியிழைமாரெல்லோரும்
ஒருவருக்கொருவரல்லோ வுதமைசொல்லிக்கொள்வார்கள்
பாண்டியர்கள்பேரமைதான் பஞ்சவர்கள்புத்திரன்தான்
ஆறாயிரவருக்கும் அழகானபேரமையோ
அல்லியம்மாள்பெற்றெடுத்த அழகுபுனந்திரனார்
மாயன்மருமகன்காண் வளநாடிப்புத்திரன்காண்
இப்படிக்குசொல்லி யிருக்கின்றவேளையிலே
போரஞ்சாமன்னா புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தாரழகாக
மற்றுமொருவீதியிலே நடந்தாரேமன்னவனும்

புனந்திரன் கர்னன்வீதி காணுகிறது.

அந்தவொருவீதியிலே அதிசயங்கள்மெத்தவுண்டு
மாடப்புறாவும் மயிலும்விளையாடும்
கோவில்புறாவும் குயிலும்விளையாடும்

எங்குமணிவிளக்கும் எத்திசையும்விளக்கும்
மாவிலைதோரணமும் மகுடநல்லதோரணமும்
அந்தநெடுவீதிதன்னை கண்டானே ஆணழகன்
ஆறிதுவீதியென்றான் அல்லிதிருமகனும்
அங்கிருக்குமன்னர் அரையர்துரையரெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாதே
நின்றபுனந்திரற்கு நீதிசொல்லமாட்டாதே
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலங்கும்பூமுடியான்
பச்சைமுகங்கரிகிப் பால்முசம்வேறுபட்டு
காஞ்சிநாடாளுங் கருணரிடவீதியென்றான்
போரஞ்சாமன்னன் புனந்திரருந்தான்கேட்டு
கருணரிடவீதியென்ன கண்கள்மிகச்சிவந்து
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
பிள்ளையைக்கொன்ற பெரும்பாவிதன்தெருவோ
ஐ மந்தரைகொன்றதொரு மாபாவிதன்தெருவோ
வேறுவழியில்லையோ வேந்தர்பெருமானே

கர்ணனை இந்திரன் கொல்வேனென்று சபதமிட்டது.

மற்றுவழியில்லையோ மன்னர்பெருமானே
காஞ்சிநாடாளும் கர்ணனார்பூமுடியை
சாமத்துக்குள்ளேதான் கொல்வேனென்றுசொல்லி
ஊதினார்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை வுலகுதலைதுமுக்க
செம்பொன்னார்காளை திசைவணங்கஊதினார்
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே

பொன்னுருவிக்கு தாதிசொல்லுகிறது.

போதேவருந்தடங்கும் பொன்னுருகிதாதியவள்
போதேவருந்தடங்கு பொன்னுருகிமுன்னேவந்து
அடிகள்முடிசாய்த்து ஆரணங்குமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீகேளும் இன்னமொருவார்த்தை
பார்த்தால்பிராயம் பதினாறுங்காணவில்லை
எண்ணப்பிராயம் இருபதுங்காணவில்லை
துடுக்கென்றமீசையுஞ் சூரைக்கருக்குழலும்

சோலைக்கெதிராக மாந்தளிரோனூரியனே
தக்கப்புகழுடைய தருமரிடமேனியுமாய்
வெற்றிமதயானை வீமருடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடைகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
தாமமுடியான் சகாதேவன்போரழகும்
காஞ்சிநாடாளும் கருணருக்கொப்பிடலாம்
காஞ்சிநாடாளும் கருணரிடபூமுடியை
சாமத்துக்குள்ளே தாங்கொள்வேனென்றுசொல்லி
ஊதினன் சின்னம் உழுகேழுலகதிர
ஊதினசின்னத்தொனி கேட்டுவந்தேனென்றாள்
போதவருந்தடங்கும் பொன்னுருவிதான்கேட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மாதுமனஞ்சலித்து மண்டபஞ்சென்றேறினள்
ஏழாநிலையும் எழுநிலையுமேலேறி

பொன்னுருவி உப்பரிகை யேறிப்பார்க்கிறது.

மேலாந்தளத்தில் விடுகதவைத்தான்திறந்து
பலகேணிவாசல் திறந்தந்தபைங்கிளியும்
பவளப்படிமிதித்து பார்க்கனூற்றாள்பத்தினியும்
காசிப்படியேறிக் கட்டழகிதான்பார்த்து
அரையில்சொருகழகும் ஐம்பொன்னார்சிராவும்
கத்திசொருகழகுங் கச்சிகட்டுஉள்மருங்கும்
கச்சிகட்டுஉள்மருங்கும் கனிவரயுங்கண்மலரும்
தக்கப்புகழுடைய தருமருடமேனியுமாய்
வெற்றிமதயானை வீமருடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடைகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
தாமமுடியான் சசாதேவன்போரழகும்
காஞ்சிநாடாளும் கருணரென்றேசொல்லிடலாம்
காஞ்சிநாடாளுங் கருணரிடபூமுடியை
சாமத்துக்குள்ளே தாங்கொள்வேனென்றுசொல்லி
ஊதினன்சின்னத்தொனி யேதுமேநானறியேன்
நானுமுரவுண்டோடா நாயகனேவுங்களுக்கு
முடிச்சோடேமங்கிலியம் கட்டவிதித்திருந்தேன்
இழிகுலத்தானென்றுசொல்லி எண்ணியேநானிருந்தேன்

8

தேர்ப்பாகனென்றுசொல்லித் தீண்டாமல்நானிருந்தேன்
ஜாதிகெட்டானென்றுசொல்லித் தீண்டாமல்நானிருந்தேன்
தாலிகயற்றுக்குத் தாயவராநாளாச்சோ
மங்கிலியமற்றுவிழ நாளாச்சோமன்னவனே
பாஞ்சாலிபட்டுறியப் பஞ்சவர்கள்காடுறைய
பஞ்சவர்கள்காடுறைய பாழுஞ்சிறையிருக்க
மன்னவர்கள்காடுறைய மாதுசிறையிருக்க
ஐவருங்காடுறைய நாங்கள்சிறையிருக்க
நாங்கள்சிறையிருக்க நாளாச்சுமன்னவனே
என்றுமனங்கலங்கி யேங்கிமனந்தளர்ந்தாள்
மோதிரக்கையை முகத்திலறைந்துகொண்டாள்
அடித்துப்புரண்டழுதாள் ஆனந்தவாழ்மாரி
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
பூரணதிரேகத்தைப் புழுதிபலதுடைத்து
பட்டுத்துயிலாடைத் தொட்டுமிகவுடுத்தி
வந்துவிழுங்கண்ணீரை வெண்துயிலால்துடைத்து
தேசத்தையாளுந் திரியோதிரற்குசொல்வோம்
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சியரேஆறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் திருவினையேதேறிவிடும்
என்றுமிகத்தேத்தி யெழுந்திருந்தாள்தாதியவள்
பட்டெடுத்துக்கட்டி பலவீரியர்தங்களைப்போல்
ஒட்டெடுத்துக்கட்டியங்கே ஓடிவாராள்தாதியவள்
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தேசத்தையாளுகிற திரியோதிரன்மாளிவந்தாள்
மாநகரமாளும் மகாராசனம்பலத்தில்

தாதி திரியோதிரன் அம்பலங்காணுகிறது.

தாமமுடியான் தையலாட்டானருகிருந்தான்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவரங்கிருந்தார்
காஞ்சிநாடாளுங் கருணருமங்கிருந்தார்
தங்கைமணவாளன் தறுதலையங்கிருந்தான்
சாமத்துரோகி சகுனியுமங்கிருந்தான்
அத்தனையுநீக்கி நடந்தாள்அவள்தாதி
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்தாள்
தேசத்தையாளுந் திரியோதிரனுற்கு
சிம்மாதனத்துக்கு முன்பாகதெண்டனிட்டாள்

தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்தான்பார்த்து
நீ-யார்பணிதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
போரல்பெயர்பெற்றுடைய பெருமாளுடன்பணிதான்
ஒருவர்பணியுமல்ல உம்முடையநற்பணிதான்
போதவருந்தடங்கும் பொன்னுருவிதாதியென்றாள்
நீயிங்கேவந்த தெனக்கரியகூறுமென்றான்
பார்த்தால்பிராயம் பதினாறுந்தோன்றவில்லை
எண்ணப்பிராயம் இருபதுந்தோன்றவில்லை
துடுக்கென்றமீசையுஞ் சூரக்கருங்குழலும்
சோலைமலைமேலே தோற்றுகின்றசூரியனும்
அரையில்சொருகழகன் ஐம்பொன்னாற்சிராவும்
கத்திச்சொருகழகும் கத்திகட்டிவுள்மருங்கும்
கச்சைகட்டிவுள்மருங்குங் கனிவாயுங்கண்மலரும்
தக்கப்புகழுடைய தருமருடமேனியுமாய்
வெற்றிமதயானை வீமரிடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
தாமமுடியான் சகாதேவன்பேரழகும்
காஞ்சிநாடாளும் கருணருக்குமொப்பிடலாம்
காஞ்சிநாடாளும் கருணரிடபூமுடியை
சாமத்துக்குள்ளே தாங்கொள்வேனென்றுசொல்லி
ஊதினான்சின்னம் உலகேழுந்தானதிர
ஊதினசின்னத் தொனிகேட்டாளுத்தமியும்
போதவருந்தடங்கும் பொன்னுருவிதான்கேட்டு
மாலைமுடியாளும் மண்மேல்விழுந்தழுதாள்
ஆனந்தமாரி அடித்துப்புரண்டழுதாள்
அந்தவிசேஷமது சொல்லவந்தேனென்றாள்
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு

திரியோதிரன் கருணரைவிட்டு புனந்திரனைக் கொல்லச் சொல்லுகிறது.

செண்டாடுமன்னன் திரியோதிரன்கேட்டு
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்

பத்தியகாகம் பவளம்போல்கண்சிவந்து
கட்டருந்தநாகங் கொடிபோலேகண்சிவந்து
நெற்றியிற்புருவம் நெருப்பாயனல்பரந்து
காஞ்சிவளநாடாளுங் கருணருக்குயேதுசொல்வான்
வைகைவளநாடான் வந்தானும் அத்திபுரம்
காளையவன்பெற்றெடுத்த கடுங்காளைவந்தானும்
சந்தனத்தோப்பிலே தார்வேந்தன்போய்புகுந்து
வேம்பும்அரசுமங்கே வெட்டிப்போரிட்டானும்
உந்தன்தலையறுக்க வந்தானன் இந்திரனும்
பையன்தலையறுக்க பாரமில்லையெந்தனுக்கு
நீபோய்தலையறுத்து வாருமென்றானிப்போதே

திரியனுக்கு கர்னன் பதில் கூறுவது.

காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலக்குடைமுடியான்
பச்சைமுகங்கருகி பாலமுகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து வார்த்தைகளேதுசொல்வான்
சொல்மாத்திசொல்லுரைப்பான் திரியன்முகங்கோணாமல்
பேரப்பாரப்பா பெரியப்பாருங்களேத்தான்
காணவருகிறான் நின்றறியுங்காவலனே
பார்க்கவருகிறான் பார்த்தறியுங்காவலனே
மாமியார்வீட்டுக்கு வருகிறான்பாண்டியனும்
மச்சினியாள்மாளிகைக்கு வருகிறானென்றறியும்
பிள்ளையைப்பார்க்க வருகிறான்மன்னவனும்
மைந்தனைப்பார்க்க வருகிறான்மன்னவனும்
பிள்ளையைநீயனுப்பி பேச்சையறியுமென்றான்

புனந்திரரைக்காண சின்ன அர்ச்சுனனை யனுப்பும்படி
கர்னன் திரியனுக்குரைப்பது.

மைந்தரைநீயனுப்பி வார்த்தையறியுமென்றான்
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
நல்லதென்றுசம்மதித்தான் நாமமுடியானும்
அங்கிருக்குந்தூதுவரை யாழனகன்தானழைத்து
தோகைமயிலனையாள் துற்சடையாள்மாளிசென்று
ஐந்துவயதுடைய அர்ச்சுனரைநேர்பார்த்து

அரைநாழிபோதே யழைத்தோடிவாருமென்றான்
தூதுவனுந்தான்கேட்டு தொழுதிரங்கிதெண்டனிட்டு
சொல்லப்பெற்றோமென்றுசொல்லி சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்து

தூதர் துற்சடையாள் அரண்மனைக்குப் போகிறது.

அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி வீதிபலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தோகைமயிலனையாள் துற்சடையாள்வீற்றிருக்கும்
சிம்மாதனத்தருகே சேரவந்தான்தூதுவனும்
செம்பொன்முடிசாய்ந்து சேரவந்துதெண்டனிட்டான்
ஐம்பொன்முடிவணங்கி அருகில்வந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டதூதன் திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதான்
ஆருடையதூதவநீ யறியவுரையுமென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்தூதனென்றான்
நீயிங்கேவந்த தெனக்கரியகூறுமென்றாள்
அஞ்சுவயதுடைய அருச்சுனராசாவை
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
அரைநாழிப்போதே அழைத்தோடிவாருமென்றார்
ஆகையினாலே அழைக்கவந்தேனென்றுசொன்னான்
தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்கேட்டு
ஆணுலழகுமன்னன் அர்ச்சுனராசதுரை
அருச்சுனனீன்றெடுத்த அழகுபுனந்திரனார்
புனந்திரனாற்பெற்றெடுத்த பூபாலருச்சுனனும்
சித்திரவில்பேரனவன் சின்னஅருச்சுனனும்
அஞ்சுவயதுடைய அருச்சுனராசதுரை
தேனல்லோதாரன் வேட்டைக்குப்போனான்காண்
அங்கேநீசென்று அழைத்தோடிவாருமென்றார்

சின்ன அருச்சுனனை வேட்டையில் தூதர்காணுகிறது.

தூதுவனுந்தான்கேட்டு தொழுதிரங்கிதெண்டனிட்டு
அருளருளுமென்னாச்சி யப்படிக்கேயாகுதென்று
தெத்தாத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு

அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
பாலனவன்போயிருக்கும் வனம்நோக்கிபோகலுற்றான்
அருச்சுனர்போயிருக்கும் அந்தவனம்நோக்கி
வனமாய்வனந்தாண்டி வாராரேதூதுவனும்
அங்கே அருச்சுனனார் ஆணழகர்ஏதுசெய்தார்
அஞ்சுவயதுடைய அருச்சுனவீரியனும்
காட்டானைசிங்கம் கரடிபுலிகுத்திடுவான்
செந்நாய்புலிகரடி சேனைவேட்டையாடிடுவான்
காட்டானைசிங்கம் கரடிபுலியாளிகளை
கொன்றுஉறுவாக்கி சொற்றம்புவீரியனும்
காவடிதன்னுடனே கழுகண்டந்தேளேந்தி
செந்நாய்கள்சூழ்ந்துவர சேவகர்கள்முன்னடக்க
கருநாய்கள்சூழ்ந்துவரக் காவலர்கள்பின்னடக்க
நடந்தாரருச்சுனரும் நாலுதிக்குந்தானதிர
அசைந்துநடந்துவர ஆணழகர்கண்டார்கள்
அழைக்கவந்ததூதுவர்கள் கண்டார்களாணழகர்

அருச்சுனனை தூதர்கண்டது.

அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தான்பார்த்து
அருச்சுனரைத்தான்பார்த்து ஆணழகரேதுசொல்வார்
அரையில்சொருகழகும் ஐம்பொன்னுற்சீரழகும்
கத்திசொருகழகும் கத்திகட்டிஉள்மருங்கும்
கச்சைகட்டிஉள்மருங்கும் கனிவாயுங்கண்மலரும்
தக்கப்புகழுடைய தருமருடமேனிகளும்
வெற்றிமதயானை வீமருடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
தாமமுடியான் சகாதேவன்பேரொளியும்
காஞ்சிநாடாளுங் கர்னர்திருமுடியும்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்வீரியனே
இவாகளழகையெல்லாம் பெற்றுவந்தான்புண்ணியனும்
ஒருமிக்கப்பெற்றுவந்தான் உத்தமனார்வீரியனும்
இப்படியாய்சொல்லி நெருங்கிவழிநடந்து

அஞ்சுவயதுடைய அர்ச்சுனர்க்குமுன்னேவந்து
அருச்சுனராசருக்கு அடிவணங்கிதெண்டனிட்டான்

அருச்சுனன் தூதுவரையாரென்று விசாரிக்கிறது.

தெண்டனிட்ட தூதுவனைக் கண்டந்த அர்ச்சுனனும்
யார்வந்தார் தூதா அறியவுரையுமென்றான்
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள் தூதவனோ
தோராவடிவழகி துரோபதையாள் தூதுவனோ
சோரவளநங்கை சுபத்திரையாள் தூதுவனோ
நாகமடந்தை நறுநுதலாள் தூதுவனோ
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் தூதுவனோ
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடி தூதுவனோ
பொற்கலசவாழ்முலையாள் போகவதி தூதுவனோ
ஆருடைய தூதுவர்கள் அரியவுரையுமென்றான்
அப்போது தூதுவர்கள் அறியவுரைக்கலுற்றார்
ஆருடைய தூதல்ல அடியேனுட தூதன்
ஒருவருடைய தூதல்ல உம்முடைய தூதன்
தேசத்தையாளுந் திரியோதிரன் தூதனென்றான்
திரியோதிரன் தூதனென்ன தெண்டனிட்டானப்போது
அஞ்சுவயதுடைய அருச்சுனருமேதுசொல்வார்
ஏன்வந்தாய் தூதா யெனக்கரியகூறுமென்றான்
வந்தவரவுதன்னை வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போது தூதுவனும் அடிவணங்கியேதுசொல்வான்
பார்த்தனார்தந்தை வருகிறாரென்றுசொல்லி
அர்ச்சுனனார்தந்தை வருகிறாரென்றுசொல்லி
உங்கள்-ஐயர்க்கெதிரே அனுப்பவென்று ஆணழகர்
தந்தைக்கெதிரே அனுப்பவென்றுதார்வேந்தர்
அருச்சுனரைத்தேடி யழைத்தோடிவாருமென்றார்
ஆகையினாலே அழைக்கவேவந்தேனான்
வருகவருகவென்று மறித்தொருகால்தெண்டனிட்டார்
அஞ்சுவயதுடைய அருச்சுனருமேதுசொல்வார்
ஐயர்வரவுசொல்ல ஆணழகன் உளமகிழ்ந்து
திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னாபரணமின்ன
அரைச்செழுந்தசந்தனத்தில் வீற்றிருந்தபாவனைபோல்
தருமருக்குஇப்போது சனியன் தொலைந்ததோ
வீமருக்குயிப்போது விதிகழிந்ததோ
ஐவருமிப்போது அடுத்ததுநற்காலம்
மாதுமயிர்முடிக்க ஆச்சுதுநற்காலம்
கோதுகுழல்முடிக்க நாளாச்சுகொற்றவரே
திரியோதிரன்படையுஞ் சேனைகளத்தனையும்

காஞ்சிநாடாளுங் கருணரும்அவர்படையும்
இன்னஞ்சிலகாலம் இருந்தரசையாள்வாரோ
மூன்றுநாளார்பொழுது முடிமன்னர்ஆளுவது
நாலாநாளெங்களுக்கு ஆகுதுகாண்ராச்சியங்கள்
ரெட்டிப்புசம்பளம் நானேதருகிறேன்காண்
அஞ்சாதீர்அஞ்சாதீர் ஆணழகர்வீரியரே
எதுக்கும்அஞ்சாதீர் என்பிறகேவாருமென்றார்

சின்ன அருச்சுனன் தகப்பனைக்காண வருகிறது.

பச்சைமலையைப் பனிவந்துசூழ்ந்தாற்போல்
பாலகனுமங்கே பதறிவழிநடந்தார்
தோட்டந்திறந்தானே தொன்னைதைத்துப்பூவெடுத்தான்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீரும்கொண்டுவந்து
பன்னீருங்கைகொண்டு பதறிவழிநடந்தான்
காடுமலைதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
ஓங்கிவளர்ந்த மூங்கில்வனந்தாண்டி
அத்திபுரந்தேடி அடுத்துநடந்தானே
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்அம்பலத்தில்

சின்ன அருச்சுனன் இந்திரனைக்காணமல் புஷ்பத்தை
காலில் சொரிந்து கொள்ளுகிறது.

அம்பலத்துவாசல் அடுத்துவந்தார்அருச்சுனனும்
எங்கெங்கும்பார்த்தான் இனியவிடமாராய்ந்தான்
சுத்திவந்துபார்த்தானே சுந்திரரைக்காணவில்லை
எங்கெங்கும்பார்த்தானே இந்திரரைக்காணவில்லை
ஐயர்வந்தாரென்று அழைத்தீரே ஆணழகா
என்-தந்தைவந்தாரென்று என்னையழைத்தீர்களே
என் தந்தையைக்காணேனே தார்வேந்தர்சபைநடுவே
ஐயரைக்காணேனே அரசர்சபைநடுவே
கொண்டுவந்தபூமலரை என்செய்வேன்கொற்றவரே
ஆர்பாதம்போட்டுத் தொழுவேனான் ஆணழகா
என்றுமவருரைத்து ஏதுசொல்வார்அர்ச்சுனரும்
தன்னிரண்டுபாதமதில் தார்வேந்தர்பூச்சொரிந்து
கொண்டுவந்தபூமலரைக் கொட்டிக்கொண்டான்தன்பாதம்
நான்கும்பிட்டுக்கொண்டேன் நீகூறிட்டுக்கொள்ளுமென்றான்
அங்கிருக்குமன்னர் அரையர்துரையரெல்லாம்
தொப்பையசைந்திடவே தொந்திசரிந்திடவே
கைதட்டிதானகைத்தார் கட்டழகரெல்லோரும்

துய்யர்குலத்திலே துரோணவர்பார்த்து
அங்காணிதொப்பை யானைமருங்கசைய
உடம்புகுலுங்கிடவே உத்தமனுந்தானகைத்தான்

திரியோதிரன் அருச்சுனனைக் கொல்லச்சொன்னது.

தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளப்போல்கண்சிவந்து
கட்டறுந்தநாகம் கொடிபோலகண்சிவந்து
காஞ்சிநாடாளுங் கருணர்முகம்நோக்கி
காஞ்சிவளநாடாளுங் கருணர்க்கேயதுசொல்வான்
தூதுரைக்கவந்ததொரு சுந்தரனார்பூமுடியை
அஞ்சுவயதுடைய அருச்சுனனார்பூமுடியும்
இருவர்தலையறுத்து என்பாதத்தில்வையுமென்றான்

கருணர் திரியோதிரனுக்கு தேறுதல்சொல்லுகிறது.

காஞ்சிவளநாடாளுங் கருணரவர்கேட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
நெஞ்சுலர்ந்துநாவரண்டு திக்திலக்குபூமுடியான்
பச்சைமுகம்கருகிப் பால்முகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து மறுவார்த்தையெடுத்துரைப்பார்
சொல்மாத்திசொல்லுரைப்பான் திரியன்முகங்கோணாமல்
அரியாதரியுமோ ஆனந்தவாழ்மார்பா
இதற்குள்பாரப்புத்தி எங்கேகற்றானருச்சுனற்கு
நல்லதனத்தாலே கேளுமென்றான்மன்னவனும்
இன்னமொருவார்த்தை இளவரசேகேளுமென்றான்

திரியன் அர்ச்சுனனை மடியில்வைத்துக்கொண்டு கேட்கிறது.

அப்போதிரியோதிரன் ஆணழகன்தான்கேட்டு
அஞ்சுவயதுடைய அருச்சுனனைத்தானழைத்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
உச்சிமுகந்துவவன் உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கம்தடவி பவளவாய்முத்தமிட்டு
அஞ்சுவயதுடைய அர்ச்சுனரேநீர்கேளும்
அர்ச்சுனனார்புத்திரனும் வந்தானாம்ஆணழகன்
அல்லித்திருமகனும் வந்தானாம்ஆணழகன்
சந்தனத்தோப்புதனில் தார்வேந்தன்போய்புகுந்து
வேம்புமரசுமங்கே வெட்டிப்போரிட்டானாம்
உன்-ஆச்சிகலந்தாரி ஆனந்தவாழ்மாரி

அவளை-வைத்துசிறைகாப்பேன் வையகமும்நான்கொடுப்பேன்
தேசமுழுதும் யிருந்தரசையாண்டிடுவாய்
வையகமுழுதும் இருந்தரசையாண்டிடுவாய்
வையைவளநாடான் வந்தானேஉன் தகப்பன்
சையன் தலையறுக்க பாரமில்லையெந்தனுக்கு
உங்கள்-அய்யர் தலையறுத்து வாருமென்றான் ஆணழகன்
பையன்தலையறுத்துப் பாதத்தில்வையுமென்றான்

திரியனுரைக்கு அர்ச்சுனன் கோபித்துசொல்லுகிறது.

அஞ்சுவயதுடைய அர்ச்சுனருந்தான்கேட்டு
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
உள்ளுடம்புநடுங்கி வுடம்பும்படபடத்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்தது இவன்கோபம்
மனமடங்காக்கோபமுடன் மடியைவிட்டுகிழ்குதித்து
மடியைவிட்டுக்கிழிறங்கி மன்னவனுமேதுசொல்வான்
இந்தசபைநடுவே இருக்கின்றராஜர்களே
மன்னர்சபைநடுவே வீற்றிருக்கும்மன்னர்களே
குருக்கள்மார்துரோணரே கூறுகிறேன்கேட்டிருங்கள்
பாட்டன்மார்வீஷ்மரே பாலனுரைகேட்டிருங்கள்
காஞ்சிநாடாளும் கர்னரேநீர்கேளும்
என்னுச்சிகலந்தாரி ஆனந்தவாழ்மாரி
அவளை-வைத்துசிறைகாப்பான் வையகமுந்தான்கொடுப்பான்
இருத்திசிறைகாப்பா னிவ்வுலகந்தான்கொடுப்பான்
வையமுழுதும்நான் இருந்தரசுஆண்டிடுவேன்
தேசமுழுதும் சிறப்பாகவாழ்ந்திடுவேன்
என்னுச்சிகலந்தாரி ஆனந்தமாரியற்கு
காஞ்சிநாடாளுங் கர்னருடகாவலது
ஆழக்குழிதோண்டி ஆகாசங்கோட்டைகட்டி
மேலேகுழிதோண்டி விஷநாகக்கோட்டைகட்டி
எட்டுத்தலைவாசல் இடிமன்னர்காத்திருக்க
பத்துத்தலைவாசல் படைமன்னர்காத்திருக்க
காஞ்சிநாடாளுங் கர்னரிடகாவல்துள்ள
அப்பெரியகாவலிலே வந்தானே ஆணழகன்
மாதுயிருக்கிற மதிலேறிச்சென்றாரே
ஆச்சியும்அப்பாவும் அக்கணமேதான்கலந்து
அன்றிரவு அங்கிருந்து ஆணழகர்போய்நடந்தார்

திரியன்மேல் கோபிக்கிறது.

மாதுகுளியாகி மைந்தனென்றுளனைப்பெற்றாள்
மாணாகங்கொண்டவனே மன்னவனேநான்பிறந்தேன்
எரிநாகங்கொண்டவனே யிந்திரற்குயான்பிறந்தேன்
அன்றுதலையறுத்து ஆண்டீரோராச்சியத்தை
இன்றுதலையறுக்கச் சொன்னீரேயிந்திரரும்
இவன்-ஆச்சிகலந்தாரி ஆனந்தவாழ்மாரி
நாலாங்குளிகுளித்து ஞாயிறுதித்தாற்போல்
மூன்றாங்குளிகுளித்தால் முத்தந்தவாழ்மாரி
ஏழுவருஷம் சிறையாயிருந்தாள்காண்
இவளைத்தொட்டுதாலிகட்ட எல்லவரும்பயந்து
இவளைத்தொட்டாரேயாமானால் திட்டென்றுமாண்டிடுவார்
அந்தப்பயத்தாலே யாரும்வந்துகொள்ளாமல்
மண்டலத்துராசாக்கள் மாலையிடயாருமில்லை
தேசத்துராசாக்கள் தாலிகட்டயாருமில்லை
இப்படியாக யிருந்தாள்சிலகாலம்
அப்போதொருபார்ப்பான் ஆணழகன்ஏதுசெய்தான்
ஆட்டுக்கடாகையாலே தாலிகட்டதானமைந்தான்
ஆட்டுக்கடாதாலிகட்ட அந்திகண்ணன்பெண்டானாள்
பெண்டானாங்காலத்திலே பிள்ளைகளில்லாமல்
பிள்ளைகளிலாமல் பெருமலடாய்ப்போனார்கள்
அப்போபிலாரிஷியும் அறிந்தார்இவள்துயரம்
துயரமவரறிந்து சேர்ந்துஉறவாடி
அவரைக்கலந்துவுறவாடிக் காந்தாரிபிள்ளைபெற்றாள்
ஆட்டுக்கடாதாலிகட்ட அந்திகண்ணன்பெண்டாள
கருப்புக்கடாதாலிகட்ட கண்ணில்லான்பெண்டாள
பிலாத்தழுவிநூற்றொருவர் பெற்றாளேவுன்னாச்சி
உன்னாச்சிதலையறுத்து ஆண்டீரோராச்சியத்தை
கண்ணில்லான்பிள்ளையென்று கலியுகத்தில்பேராச்சு
குருடனிடபிள்ளையென்று குவலயத்தில்பேராச்சு
பிலாத்தழுவிபெற்றபிள்ளை பேருலகையாளுகிறீர்
ரிஷிசேர்ந்துபெற்றபிள்ளை இராச்சியத்தையாளுகிறீர்
உன்னாச்சிதலையறுத்து ஆண்டீரோராச்சியத்தை
உன்-ஐவர்தலையறுத்து ஆண்டீரோராச்சியத்தை
என்-ஐவர்தலையறுக்கச் சொன்னாரே ஆணழகர்
எங்களைவர்தலையறுக்க அடாதுகாணெங்களுக்கு
என்றுகூறியெழுந்திருந்தான் குந்திகுருமணியும்
அங்கிருக்குமன்னா அரையர்துரையரெல்லாம்
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கநகைநகைத்தார்

திரியன் கோபிக்கிறது.

தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
கோபித்துக்கண்சிவந்து சொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
காஞ்சிநாடாளுங் கர்னர்முகம்நோக்கி
பஞ்சவர்க்குஎன்று பிறக்குமோபாற்குடங்கள்
ஐவர்கள்செய்த அதஷ்டனுஞ்செய்யவில்லை
தூதுரைக்கவந்தவொரு புத்திரனார்பூமுடியும்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனனார்பூமுடியும்
இருவர்முடியறுத்து என்பாதத்தில்வையுமென்றான்

திரியனுக்கு கர்னர் தேறுதல்சொல்லுகிறது.

காஞ்சிநாடாளுங் கர்னரவர்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
பச்சைமுகங்கருகி பாலமுகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து வார்த்தையொன்றெடுத்துரைப்பான்
சொல்மாத்திசொல்லுரைப்பான் தோழன்முகங்கோணாமல்
குலத்தில்குடிகேட னானேயாகொற்றவனே
மறுத்தொருக்கால்வார்த்தைசொல்ல வாயுண்டோமன்னவனே
பாசத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே
ஆனந்தவாழ்மார்பன் அனுப்பிவிடைகொடென்றான்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தானழைத்து
பாசத்திளவரையர் படைகூட்டந்தன்னுடனே
ஆனந்தவாழ்மார்பன் அய்யாவைக்காணுமென்றான்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனருமேதுசொல்வார்
உந்தன்விருதுவேண்டாம் உன்மேளம்நாதுவேண்டேன்

சின்ன அர்ச்சுனனுக்குப் பாட்டன்சேனையனுப்புகிறது.

அரவக்கொடிவேண்டேன் ஆள்வேண்டேன்ஊர்வேண்டேன்
ஐவரிடவிருது அடைவாகநீர்கொடுத்து
விடைகொடுத்துநீயனுப்பும் வேந்தர்பெருமானே
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
காஞ்சிநாடாளுங் கர்னருக்கேதுசொல்வார்
ஐவருடசேனைகளும் அவர்படையானைகளும்
கால்விலங்குபோட்டோமே காவலிலேவைத்தோமே
இணைவிலங்கைநீகழட்டி யிவனுக்கனுப்புமென்றான்

காஞ்சிநாட்டாளுங் கர்ணரவர்கேட்டு
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
செம்பொன்மெரிவடியில் ஏறியக்தசிர்சருணர்
முத்துமெருவடியைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பஞ்சவர்கள்சேனை யிருக்குமிடத்தில்வந்தார்
ஐவருடசேனைக்கு அருகேவரும்போது
பஞ்சவர்கள்சேனையர்கள் பார்மன்னதான்பார்த்து
கர்னரைத்தான்பார்த்து காவலர்கள்யேதுசொல்வார்
நெஞ்சுலர்ந்துநாவாண்டு நித்திலங்குபூமுடியான்
பச்சைமுகங்கருகிப் பாலமுகம்வேறுபட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
ஒருவர்க்கொருவர் உண்மையாய்ச்சொல்லிக்கொள்வார்
என்னமோஏதோ இவர்இங்கேவரலாச்சு
கர்னர்வருகிறது காரியமாய்த்தோற்றுது
என்றுமவர்பேசி இருக்கின்றவேளையிலே
காஞ்சிநாடாளும் கர்னருகில்வந்து

கர்னர் தேறுதல்சொல்லுகிறது.

அஞ்சாதீர்அஞ்சாதீர் அரையர்களே அஞ்சாதீர்
ஒன்றுக்கும்அஞ்சாதீர் உத்தமனார்சேனைகளே
இன்னஞ்சிலகாலம் இருந்தரசையாள்வோமே
காலம்கழித்து கர்த்தன்பதிசேர
நாளுக்கழித்தது ஏமன்பதிசேர
மூன்றுநாளார்பொழுது முடிமன்னராளுவது
நாலாம்நாள்உங்களுக்கு ஆகுதாராச்சியங்கள்
நாங்கள்-பார்த்தன்கையம்பாலே படுவதுநிச்சயந்தான்
மன்னர்கையம்பாலே மாளுவதுநிச்சயந்தான்
தர்மருக்குஇப்போ சனியன்தொலைந்தது
வீமருக்குஇப்போ விதிதொலைந்தது
மாதுமயிர்முடிக்க நாளாச்சுயிப்போது
கோதிகுழல்முடிக்க நாளாச்சுயிப்போது
பத்தினியாளசாபம் பலித்ததுஎங்களுக்கு
உத்தமியாள்சாபம் உடனேபலித்தது

என்றுமேசொல்லியல்லோ இணைவிலங்கைதட்டிவிட்டான்
கால்விலங்குகழட்டினான் காவலனுமப்போது
ஆடைகொடுத்தான் அடைக்காயுந்தான்கொடுத்தான்
சேனைமதவீரருக்குச்சேனதிரவியங்கொடுத்தான்
இனிவாருமென்றுசொல்லி எழுந்திருந்தார்கர்னரும்
மேகமலைபோலே மெள்ளநடந்துவந்தார்
காவலர்கள்சூழ்ந்துவரக் கர்னர்வழிநடந்து

திரியன் சபைக்குவருகிறது.

தேசத்தையாளுந் திரியோதிரன்சபையில்
வந்துநுழைந்தார்கள் மன்னர்பெருஞ்சபையில்
காஞ்சிநாடாளுங் கர்னர்வந்துவீற்றிருந்தார்
வந்ததொருசேனையெல்லாம் மன்னர்களைக்கண்டார்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்தான்
மகுடமுடியசக்தி மன்னவனும்சாய்ந்திருந்தான்
தெண்டனிட்டமன்னர் திரும்பியெழுந்திருந்து
அஞ்சுவயதுடைய அர்ச்சுனரும்ஏதுசொல்வார்

அர்ச்சுனன் தேறுதலுரைப்பது.

அஞ்சாதீர்அஞ்சாதிர் அரையர்களேஅஞ்சாதீர்
மூன்றுநாளார்பொழுது முடிமன்னர்ஆளுவது
நாலாநாள்எங்களது ஆததுகரஸ்ராச்சியங்கள்
ரெட்டிப்புசம்பளங்கள் நானேதருகிறேன்
தர்மருக்குயிப்போ சனியன்தொலைந்தது
வீமருக்குயிப்போ விடுதிதொலைந்தது
மாதுமயிர்முடிக்க நாளாச்சுமன்னவனே
கோதிகுழல்முடிக்க நாளாச்சுமன்னவனே
எதுக்குஅஞ்சாதீர் என்பிறகேவாருமென்றார்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
கடுகடுத்துவீற்றிருந்தான் கடுநாகங்கொண்டவனும்
அஞ்சுவயதுடைய அருச்சுனர்தான்பார்த்து

அர்ச்சுனர் கர்னருக்குச்சொல்லுகிறது.

காஞ்சிநாடாளுங் கர்னரெதிரில்வந்து
யானைக்கொடுத்தீர் அடைக்காய்மிகக்கொடுத்தீர்
சேனைகொடுத்தீர் திரவியமுந்தான்கொடுத்தீர்
ஒன்றுகுறைநீக்கி விட்டீரேவுத்தமரே

அந்தக்குறைநீக்கி யனுப்புமென்றான் உத்தமனும்
காஞ்சிநாடாளும் கர்னரவர்கேட்டு
அஞ்சவயதுடைய அர்ச்சுனருக்குஏதுசொல்வார்
என்னகுறையாக்கி விட்டேன்காண் இந்திரரே
ஏதுகுறையாச்சு எந்தனுக்குசொல்லுமென்றான்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனருமேதுசொல்வார்

அர்ச்சுனர்க்கு வெள்ளையானை கொடுத்தது

சிற்றப்பாரேறிவந்த செல்வமதக்களிரே
வேந்தரவரேறிவந்த வெள்ளானைவேணுமென்றார்
வெள்ளானைநீகொடுத்து விடையருளுமென்றார்கள்
காஞ்சிநாடாளும் கர்னரதுகேட்டு
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
திரேகங்களார்பரித்து யிருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெங்கும்பூரித்து
அரைச்செழுந்தசந்தனத்தில் வீற்றிருந்தபாவனைபோல்
வெள்ளானைச்சோடித்து வேந்தர்க்கனுப்புமென்றான்
அங்கிருக்குந்தூதுவர்கள் ஆணழகர்தான்கேட்டு
சொல்லப்பெற்றேமென்றுசொல்லி சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றேமென்றுசொல்லிக் கும்பிட்டெழுந்திருந்து
அவ்வீதிவீதி நடந்தார் அழகாக
யானைப்பணிக்கர் இருக்குமிடந்தில்வந்து
வெள்ளையானைசோடித்து வாருமென்றான் தூதுவனும்
யானைப்பணிக்கர்கள் அவ்வார்த்தைதான்கேட்டு
யானையவிழ்த்து அலைதாராஓடிவந்து

தூதுவர் யானைகொண்டுவருவது.

யானைக்குநீராட்டி அலர்கண்ணுக்குமையெழுதி
கண்ணுக்குமையெழுதிக் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
நாலுகால்வண்டயமாம் நடுநெற்றிக்குச்சுகளாம்
வெள்ளிக்கொலுசுகளாம் வெண்முத்துத்தாவடமாம்
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்சுங்குவிட்டு
யானையைசோடித்து வந்தார்அலைதாரர்
அரண்மனைவாசலிலே யானைவந்துநின்றது
காஞ்சிநாடாளுங் கர்னருக்குதெண்டனிட்டு
யானைவந்ததென்றான் அழகானதூதுவனும்

யானையும்வந்ததென்று அடிவணங்கிதெண்டனிட்டான்
காஞ்சிநாடாளுங் கர்னாவர் ஏதுசொல்வார்
பாசத்திளவரை படைகூட்டந்தன்னுடனே
ஆனந்தவாழ்மார்பா உன்ஐயாகாணுமென்றான்
வெள்ளையானைமேலேறி வேந்தனைக்காணுமென்றான்

அர்ச்சுனன் யானையில்வருகிறது.

அஞ்சுவயதுடைய அர்ச்சுனருந்தான்கேட்டு
துள்ளியெழுந்தான் துவண்டமலரெடுத்தான்
பூவும்புதுமலரும் பொன்னறுகு அட்சதையும்
பொன்னுனைசொம்பினிலே பன்னீருங்கொண்டுவந்து
யானையின்முன்னேவந்தான் அர்ச்சுனரானவரும்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குப்புறுமென்றுதான்சொரிந்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நார்க்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரைக் கண்டதுவெள்ளானை
உந்தனுக்கோதுக்கம்ஐயா உத்தமமோவீரியனே
எந்தனுக்குதுக்கம் இருக்குதெழுந்திருந்து
துக்கமாய்தானிருந்து தும்பிக்கையால்தூக்கிறது
அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசாவும்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
நீண்டிடுங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூச்சலலடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குளிட்டு
உருவினகத்தியுடன் உத்தரியந்தோளிலிட்டு

அர்ச்சுனன் யானையின்மேலேறிப் பயணப்படுகிறது.

படிபடியென்றான் படிந்ததுஅவ்வானை
மூகக்கம்பந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
மத்தகத்தைதட்டி கருத்தானையேறினான்
வீரமதயானை வெள்ளானைமேலேறி
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறுமென்றான்
அப்படிக்கேயாகுதென்று ஆனந்தவாழ்மார்பன்
கரியானைஏறினான் தன்னுடொத்தராசாக்கள்
சிலமன்னரெல்லோருந் தேறின்மேலேறினார்
பலமன்னரெல்லோரும் பல்லக்கிலேறினார்
குலமன்னரெல்லோருங் குதிரையின்மேலேறினார்
அழகானமன்னரெல்லாம் ஆனையின்மேலேறினார்
முன்னேமுரசெடுத்து முன்னணைமேற்போட்டான்

ஒருகோடிவாத்தியங்கள் ஒருமிக்கச்சத்தமிட
இருகோடிவாத்தியங்கள் எங்குமேசத்தமிட
பட்டபுலவர் பதினெட்டுமந்திரிகள்
சிங்கங்கரடிபுலி சேர்ந்துமுழங்கிவர
இப்படியாய்வீரரெல்லாம் ஏறினார்வாகனங்கள்
ஏறினபோதே எடுத்தார்சிலவிருது

குடையின் சிறப்பு.

ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடையாம் முழுமாணிக்கப்பொற்குடையாம்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பட்டுக்குடையாம் பவளக்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியக்குடையும்
எடுத்துநிறுத்தினார்கள் எண்ணாயிரங்குடைகள்
சுத்திநிறைந்தார்கள் சூரியனைக்காணாத
பக்கம்நிறைந்தார்கள் பகவானைக்கண்மறைக்க
ஒத்தைக்குடைநடுவி லுத்தமனும்வாராரும்
பூச்சக்கரக்குடைநடுவில் பூபாலர்வாராரும்
அலங்காரக்குடைநடுவில் அருச்சுனனும்வாராரே
பச்சைக்குடைகவிய பார்மன்னர்தேர்நடக்க
முத்துக்குடைகவிய முடிமன்னர்தேர்நடக்க
இரத்தினக்குடைகவிய ராசாக்கள்தேர்நடக்க
யானைகிறுகிறென்ன அணிமன்னர்கொக்கரிக்க
குதிரையனுமானிக்க கோடிமன்னர்சத்தமிட
ஊதினான்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை வுலகுதலைமுடிக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கஊதினான்
பொன்னினாற்காளை பொருந்தநின்றூதினான்
அவ்வீதி நடந்தார்அழகாக

அருச்சுனன் பெருந்திருவாள்வீதி வருகிறது.

தெத்துத்தெருதாண்டி தோரோடும்வீதிவிட்டு
மற்றுமொருவீதியிலே வாராரேஅர்ச்சுனனார்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசதுரை
அருச்சுனன்போறேனென்று ஊதினான்சின்னத்தொனி
ஊதினசின்னத்தொனி கேட்டாளேஉத்தமியும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
நாலார்கடுந்திரலார் நூற்றொருவர்பெண்டுகளும்
அத்தனைபெண்டுகளும் அல்லவருந்தான்கூடி

அம்மானாடி அழலாடிபந்தாடி
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானடி
கொம்பனைமாரெல்லோரும் கூடிவிளையாடிருந்தார்
திருவிணைமாரெல்லோருஞ் சேர்ந்துவிளையாடிருந்தார்
அந்தச்சமயத்தி லாரணங்குதான்பார்த்து
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளேதுசொல்வாள்
பந்தாடும்பெண்டுகளே பார்த்தர்வருகிறார்
வளநாடுபோனவன் வருகிறான்வீதியிலே
வல்லிடும்போனவன் வீராண்டிவீதியிலே
இந்தமனைபுகுந்து யாவரையுங்கண்டாலே
பாட்டிமாரென்றுசொல்லி பரியாசம்பண்ணிடுவான்
கொம்பனைமாரெல்லோருங் கூடிஒளியுமென்றாள்
அங்கிருக்குமங்கையர்கள் அனைவோருஞ்சம்மதித்து
அப்படிக்கேயாகுமென்று அனைவோரும்போயொளித்தார்
மங்கையர்களெல்லோரும் மறைவாகப்போயொளித்தார்
திரியோதிரன்தேவி திருவினைநாயகியும்
என்னசெய்யப்போறான் இளவிசயனருச்சுனனும்
அதுவும்அறிவோம் அவனுடையவித்தைகளை
என்றுமவள்சொல்லி இடும்மாளிகைவீற்றிருந்தாள்
இப்படியாக யிவளிருக்கும்வேளையிலே
அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசதுரை
பாபத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வாசல்வந்து
யானைவிட்டுக்கீழிறங்கி யானந்தவாழ்மார்பன்
வாளுருவிகைபிடித்து வள்ளயத்தைதோளிலிட்டு
பாசத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே

பெருந்திருவா ளரண்மனையில் திஷ்டோதிரன் தேவியை
சின்ன அர்ச்சனன் மானபங்கமாய் சேலையுரிகிறது.

பேடைமயிற்கண்ணாள் உட்கட்டில்போய்புகுந்தாள்
திஷ்டோதிரன்தேவி திருவினையாள்முன்னேவந்து
அவளோடுங்கழல்பறித்தான் அம்மானைதான்பறித்தான்
பாடுங்கழல்பறித்தான் பள்ளாங்குழிபறித்தான்
கொம்பனையாளோடுமவன் கொஞ்சுங்கிளிபறித்தான்
பெண்பெருமாளோடும் அவன்பேசுங்கிளிபறித்தான்
பட்டான்விளையாடிப் பரியாசம்பண்ணைப்போல்
சிரித்துவிளையாடி சேலைகளைந்தானே
கொஞ்சிவிளையாடி கூறையவிழ்த்தானே
பாசத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே
மாலைமுடியானும் மந்திரிகள்கைகொடுத்தான்
மந்திரிகள்கைகொடுத்து மன்னவனும்யேதுசெய்தான்

அருச்சுனன் சாட்சிவைத்தது.

கண்டீரோராசாக்கள் காணவில்லையென்னாதீர்
பார்த்தீரோராசாக்கள் பார்க்கவில்லைஎன்னாதீர்
ஆடம்பலத்தில் அரசர்சபைநடுவே
பேரம்பலத்தில் பெரியோர்சபைநடுவே
தோராவடிவழகி துரோபதையாள்என்னாச்சி
அவளழகும்ஒப்பனையும் ஆருமில்லைவையகத்தில்
திருவழகும்மொப்பனையுஞ் தேசத்தில்கண்டதில்லை
துரோபதையைக்கொண்டுவந்து தூங்குமஞ்சமேற்றிவைத்தான்
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலமேற்றிவைத்தான்
ஆடம்பலத்தில் ஔவையார்சபைநடுவே
பேரம்பலத்தில் பெரியோர்சபைநடுவே
பஞ்சவர்கள்தேவியைப் பங்கப்படுத்தவென்று
சொல்லாதுஞ்சொல்லித் துகிலுமுறிந்தானே
பேசாதும்பேசி புடவையவிழ்த்தானே
அவிழ்க்கப்புடவை அனேகஅம்பலத்தில்
உரிந்தபுடவையது கோடானகோடியுண்டு
ஆரானுஞ்சொல்லி யளவிடலாகாது
ஒருவராற்சொல்லி உவமையிடப்போகாது
அதுசற்றேனழுவி உடைகுலையுமாமானால்
மாளுவதுஅன்றலவோ ஐவர்பஞ்சபாண்டவர்கள்
பிடித்ததுவில்லுமல்லோ போர்விஜயர்பஞ்சவர்க்கு
மாயனருளாலே மானமிருந்தது
தேவனருளாலே நின்றாள்காண்பூமியிலே
எதிராளிசெய்த இடும்பைத்திருப்பினேன்
பங்காளிசெய்த பருவந்திருப்பினேன்
சரிக்கிச்சரியாய் துகிலுரிந்தேன்மன்னவனே
ஐயாவுக்கிப்போ தடையாளங்கொண்டுபோறேன்
என்றுமவன்சொல்லி எழுந்துநடக்கலுற்றான்

அர்ச்சுனன் பெருந்திருவாளைக்கண்டது.

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியை
கண்ணாலேகண்டானே காளைஅருச்சுனனும்
ஓடியொளித்தாயே ஓடமயிற்கண்ணாளே
உன்னையுங்கூட வுடனாகத்தான்சேர்த்து
வெட்கங்கெடுப்பேன் வேடிக்கையைப்பார்ப்பேன்
பலவற்குமுன்பாக பவிஷைகெடுப்பேன்
மறைந்துயிருந்ததனால் பிழைத்தீர்காண்பெண்ணனங்கே
என்றுமவன்சொல்லியல்லோ எழுந்துநடக்கலுற்றார்

அருச்சுனன் யானையேறுகிறது.

படிபடியென்றான் படிந்தது அவ்வானை
முக்கம்பல்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
மத்தகம்தான்பிடித்து மதயானையேறினான்
கைத்தளத்தைதட்டி கறுத்தானையேறினான்
வீரமதயானை வெள்ளானைமேலேறி
வந்தவந்தபேர்களெல்லாம் மதயானையேறினார்
அப்படிக்கேயாகுதென்று யானையின்மேல்ஏறினார்
அவ்வீதிவீதி நடந்தார் அழகாக
மற்றுமொருவீதி மன்னர்கள் தாண்டியல்லோ
சோலையடுத்தார்கள் சுந்திரப்பூமுடியார்
தென்னமரச்சோலை திரும்பியந்ததேர்விசயன்
மாமரச்சோலைத் திரும்பியந்ததேர்விசயன்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசதுரை
யானைவிட்டுக்கீழிறங்கி யானந்தவாழ்மார்பன்

அருச்சுனன்பூங்காவில் கோலிகுண்டு ஆடுகிறது.

உப்புகந்தமாடுகிறான் உததமனார்வீரியனும்
செண்டுவிளையாடுகிறான் சேனைகள் தன்னுடனே
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்ஏதுசொல்வான்
திஷ்டோதிரன்தேவி திருவினைக்கேஏதுசொல்வான்
அப்போதேசொன்னேனே தப்புவருமென்றுசொல்லி
என்வார்த்தைகேளாதே இருந்தாயேஆரணங்கே
வெட்கங்கெடுத்தானே வீணாகிப்பார்த்தானே
சிலபேரைக்கூட்டிவைத்துப் பற்றித்துகிலுறிந்தான்
மண்டலத்தார்முன்பாக மானங்கெடுத்தானே
பாகைவிரைபோட்டால் பயித்தங்காய்காய்த்திடுமோ
கத்திரிசெடிபோட்டால் கஸ்தூரிப்பூர்த்திடுமோ
மரமல்லிசெடியதுதான் குடமல்லிபூர்த்திடுமோ
நாகத்தின்குட்டிக்கு நல்லவிஷமில்லையோ
சென்னாகங்குட்டியது சீறுமல்விடுவதுண்டோ
என்றுமவள்சொல்லி இருந்தாள்பெருந்திருவாள்
சிந்தைகலங்கிடவே திஷ்டோதிரன்தேவி
மாரடித்துமங்கையரும் மண்மேல்பிரண்டழுது
மோதிரக்கையை முகத்திலறைந்துக்கொண்டு
சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
மானங்குலைந்தபின்பு மண்மேலிருப்பேனோ
புடவையவிழ்ந்தபின்பு பூமியிலேதங்குவேனோ

என்றுமவள் அழுதாள் ஏலங்கருங்குழலும்
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
வாரியெடுத்து மடிமேலேகுந்தவைத்து

தாசி சீர்த்திருத்துகிறது.

பூணாரகேசகத்தில் புழுதிபலதுடைத்து
ஆபரணந்தான்திருத்தி அழகாகசொப்பனிட்டு
கொப்புத்திருத்தியவள் கோர்வைகள்தான்திருத்தி
அவிழ்ந்ததலைமயிரை அள்ளியவள்சொருகி
ஆச்சிநீர்கேளும் அடியேன் ஒருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
மருமகள்பெற்றெடுத்த மதயானைக்கண்ணல்லோ
அஞ்சுவயதுடைய அறியாதபாலகன்றான்
அவன்மேலேகுற்றஞ் சொல்லலாகுமோஎன்னாச்சி
பாட்டியார்என்றுசொல்லி பார்த்தன்விளையாடினான்
சிறுபாட்டியென்றுசொல்லி சிறித்துவிளையாடினான்
கோபித்துக்கொள்வாரோ கொத்தார்குழலாரே
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சிநீர்ஆறிவிடும்
தேறிவிடுந்தேறிவிடுந் திருவினையேதேறிவிடும்
என்றுமவளுரைக்க ஏதுசொல்வாள்திருவினையும
ஒருத்தனாய்வந்தானோ வுத்தமியாள்தாதியரே
பலபேரைக்கூட்டிவந்து பற்றுந்துகிலுரிந்தான்
சேனைகளைக்கூட்டிவந்து சேலையவிழ்த்தானே
மானங்குலைந்தபின்பு மண்மேலிருப்பதில்லை
இன்னமொருநாழி நில்லேனான் மண்மேலே
சாவேன்கெடுவேன் சமுத்திரத்திலபோய்விழுவேன்
தாமக்குழலாளுந் தாதியவளேதுசொல்வாள்

திரியோதிரனுக்கு சமாச்சாரந் தாதிகளுரைப்பது.

தேசத்தையாளுந் திரியனுக்குச்சொல்லுவோம்
அம்பலத்துவாசலிலே யனைவோர்க்குஞ்சொல்லிடுவோம்
அனைவோர்க்குஞ்சொல்லி அவன்தலையைவாங்கிடுவோம்
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சியரேயாறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் திருவினையேதேறிவிடும்
பட்டெடுத்துக்கட்டி பலவீரியர்தங்களைப்போல்
ஒட்டெடுத்துக்கட்டியங்கே ஓடிவாராள்தாதியவள்
எட்டடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறிமிகநடந்து
தெத்துத்தெருதாண்டி தேரோடுவீதிவிட்டு
தோரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தேசத்தையாளுந் திரியோதிரன்கொலுவில்

சிங்காதனத்துக்கு முன்பாகதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
நீ-யார்பெண்ணேதாதி அரியவுரையுமென்றான்
யார்பணியுமல்ல பெருமாள்திருபணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல உம்முடையநற்பணிதான்
திஷ்டோதிரன்தேவி திருவினையாள்தாதியென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
செண்டாடுமன்னன் திரியோதிரனேதுசொல்வான்
நீயிங்கேவந்த தெனக்கரியக்கூறுமென்றான்
ஐயாவேநீர்கேளும் அடியாளொருவார்த்தை
என்னையாநீர்கேளும் இன்னமொருவார்த்தை
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
நூலார்கடுந்திரளார் நாற்றுவர்பெண்டுகளும்
கொம்பனைமாரெல்லாம் கூடிவிளையாடினார்கள்
திருவினைமாரெல்லாருஞ் சேர்ந்துவிளையாடினார்கள்
பந்துகழலாடிப் பைங்கிளிமார்வீற்றிருந்தார்
அந்தச்சமயத்தில் அர்ச்சுனவீரியனும்
பாசத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே
ஓடமயிற்கண்ணனும் உட்கட்டிற்போய்புகுந்தான்
திஷ்டோதிரன்தேவி திருவினையாள்நாயகியாள்
ஆடுங்கழல்பறித்தான் அம்மானைதான்பறித்தான்
பாடுங்கழல்பறித்தான் பள்ளாங்குழிபறித்தான்
கொம்பனையாளோடுமவன் கொஞ்சுங்கிளிபறித்தான்
பெண்பெருமாளோடுமவன் பேசுங்கிளிபறித்தான்
பாட்டன்விளையாடிப் பரியாசம்பண்ணைப்போல்
சிறித்துவிளையாடி சேலைகளைந்தானே
கொஞ்சிவிளையாடிக் கூறையையவிழ்த்தானே
திஷ்டோதிரன்தேவி திருவினைநாயகியும்
சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
செத்துமடிவேனென்றாள் சிலவழிந்துபோவேனென்றாள்
மாண்டுமடிவேனென்றாள் வைகுண்டஞ்சேர்வேனென்றாள்
இனியிருப்பதில்லையென்று ஏலங்கருங்குழலும்
அழுதுப்புலம்புகின்றாள் ஆனந்தவாழ்மாரி
அந்தவிசேஷம் அதுசொல்லவந்தேனென்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
வெட்கம்பெரிதாகி வேல்புருவக்கண்ணனும்

திரியன்வெட்கித் தலைகுனிந்தது.

தாமமுடியான் தலைகுனிந்துவீற்றிருந்தான்
அங்கிருக்குமன்னர் அரையர்துரையரெல்லாம்
கெக்கலிகொட்டி நகைத்தாரேமன்னரெல்லாம்
கைகொட்டித்தானகைத்தார் கட்டழகரெல்லோரும்
திரியோதிரன்தம்பி திஷ்டோதிரன்பார்த்து
கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பரந்து
மீசைதுடிக்க முடிகள்பொறிபறக்க
சிந்தைகலங்கிடவே திஷ்டோதிரனே துரைப்பான்
அர்ச்சுனன்செய்ததெல்லாம் ஆனந்தமாச்சுதே
பார்த்தனவன்செய்ததெல்லாம் ஆனந்தமாச்சுதே
சிரிக்கவுடலெடுத்தோம் சீயென்னப்பேரெடுத்தோம்
நகைக்கவுடலெடுத்தோம் நாயென்னப்பேரெடுத்தோம்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனனார்வீரியத்தை
அரைநாழிகொள்ளையிலே யல்லவரும்பார்த்திருக்க
அவன்தலையைவாங்கி வருகிறேன்பாரென்று
அண்ணன்முகம்நோக்கி ஆணழகன்ஏதுசொல்வான்
ஒரு-அக்ரோணிசேனையது உத்தமனே நீகொடுத்தால்

திஷ்டோதிரன் யுத்தத்திற்குப்போக அண்ணனை சேனைகேட்பது.

தூதுரைக்கவந்ததொரு சுந்தரனார்பூமுடியும்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனனார்பூமுடியை
இருவர்தலையறுத்து இப்போதேகொண்டுவந்து
அண்ணாஉன்பாதமதில் அடைவுடனேவைப்பேனென்றான்
தேசத்தையாளுந் திரியோதிரன்தான்கேட்டு
செண்டாடுமன்னன் திரியோதிரன்தான்கேட்டு
மெத்தமகிழ்ந்தானே வேல்பொருதுங்கண்ணனும்
சந்தோஷமாகி சரீரங்கள்பூரித்து
தேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
ஒரு-அக்ரோணிசேனையது உத்தமனுந்தான்கொடுத்து
திஷ்டோதிரனுக்கு சேதிகள்ஏதுசொல்வான்
தூதுரைக்கவந்ததொரு சுந்தரனார்பூமுடியும்
அஞ்சுவயதுடைய அர்ச்சனனார்பூமுடியும்
அரைநாழிகொள்ளையிலே அறுத்துவந்துசேருமென்றான்
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தான்
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்
சிந்தைகலங்கிடவே திரியோதிரன்தானெழுந்தான்

கருணர்வேண்டாமென்று தடுக்கிறது.

காஞ்சிநாடாளுங் கருணரவர்பார்த்து
திஷ்டோதிரனுக்கு சொல்வான் ஒருவார்த்தை
போகாதேபோகாதே போர்மன்னுபோகாதே
அறியாதபையனென்று அமருக்குப்போகாதே
சரியானபையனென்று சண்டைக்குப்போகாதே
ஐவரிடகும்புக்கு எல்லாபலமுமுண்டு
மாயர்வலுமையுண்டு மகாதேவர்கிருபையுண்டு
சுவாமிவலுமையுண்டு தேவர்கிருபையுண்டு
ஆதிசிவன்சங்கரனார் அவர்வலுமைமெத்தவுண்டு
பரமனுடன்வாதாடி பாசுபதம்பேறுபெற்றான்
பாசுபதம்பெற்ற பார்த்தனுடபேரனல்லோ
அவர்களுடன்யுத்தஞ்செய்ய யாரால்முடிந்திடும்
போகாதேபோகாதே சவுரியங்களற்றிடுவாய்
என்றுசொல்லக்கர்னரவர் ஏதுசொல்வார்திஷ்டோதிரன்
கருணா-உன்பேச்சுகேட்பேனென்று எண்ணாதீர்நீர்கருணா
காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
சித்தத்துக்கேற்றபடி செய்தருளுமென்றுசொன்னார்
கொலுவைவிட்டுநீங்கியல்லோ கொற்றம்பூவீரியனும்
காசிவளநாடாளுங் கருணர்பெருமாளும்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
மாளிகைக்குவந்து படுத்தாரேமன்னவனும்
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டார்கருணரும்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே

திஷ்டோதிரன் யுத்தத்திற்குப்போகிறது.

சிந்தைகலங்கிடவே திஷ்டோதிரன்தானும்
அவர்அக்குரோணிசேனையுடன் உத்தமனும்வெளியானான்
சிந்தைகலங்கிடவே தேரின்மேலேறினான்
திஷ்டோதிரராசன் தேரின்மேலேறினான்
ஒருஅக்ரோணிசேனையுடன் உத்தமர்கள்வந்தார்கள்
ஊதினான்சின்னம் உலகேழுமதிர
ஊதினான்காளை பிறகுதலைதுடிக்க
அஞ்சுவயதுடைய அர்ச்சுனன்வீரியன்மேல்
போர்பொருந்தவாரேனென்று ஊதினான்தாரைசின்னம்
சண்டைக்குப்போறேனென்று சங்கெடுத்துஊதினான்
அவ்வீதிவீதி நடந்தார்அழகாக
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தென்னமரச்சோலை திரும்பினார்தேர்விசையார்
மாமரச்சோலையிலே வந்தானேமன்னவனும்
திஷ்டோதிரன்வந்தானென்று சின்னமெடுத்தூதினான்

சண்டைக்குவந்தேனென்று சங்கமெடுத்தூதினன்
சண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரெணங்கள்ரெணங்களென்று ரெணபேரியடிபடுது
அஞ்சுவயதுடைய அருச்சுனருந்தான்கேட்டு
ஏறமுகம்பார்த்தான் எத்திலங்குபூமுடியான்

சின்ன அருச்சுனன் யுத்தஞ்செய்கிறது.

அண்ணாந்துபார்த்தான் அரையன்திருமுகத்தை
கொட்டிநகைத்தாலே குலுங்கவிருபுஜமும்
கைகொட்டித்தானகைத்தான் காவலன்போர்வீரியனும்
ஆனந்தமார்பன் அட்டங்கால்தான் துடைத்து
மாலைமுடியானும் மண்கையைத்தானுதறி
படிபடியென்றான் படிந்ததுஅவ்வானை
வீரமதயானை வெள்ளானைமீதேறி
முக்கம்பம்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
சைத்தலத்தைத்தட்டிக் கறுத்தானையேறினன்
அஞ்சுவயதுடைய அருச்சுனவீரியனும்
திஷ்டோதிரனுக்கு சொல்வானொருவார்த்தை
முன்னையும்பூசை முதற்பூசைவந்தாயோ
சற்றேமனந்தளர்ந்து சண்டைக்குவந்தாயோ
தாமமுடியானே தருமமாய்ச்சொல்லுகிறேன்
சரியாயிருந்தல்லோ சண்டைபண்ணிவெல்லுவையே
எதிராயிருந்தல்லவோ சண்டைபண்ணிவெல்லுவையே
எதிராயிருந்தல்லோ என்னைநீவெல்லுதற்கு
உந்தனலாகுமோ உத்தமனார்வீரியனே
ஓடிப்பிழைத்திரென்றான் உத்தமனார்வீரியனே
உந்தனலாகாது வோடிப்பிழையுமென்றான்
பாலனல்லவென்றுசொல்லிப் பதறியங்கேவில்லெடுத்தான்
அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தான்பார்த்து
அறியாதபாலகன்மேல் அரசன்வந்துதானெதிர்த்தான்

அருச்சுனன் மாயவரை நினைக்கிறது.

ஐவரையுங்கார்க்கின்ற மாயவரேவாருமையா
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்வந்தருளும்
சோலைமலருடைய சொக்கரேவந்தருளும்
ஆனைமலருடைய அகிலாண்டயீஸ்பரரே
அல்லியிலைமேலே பிறப்பித்தயாச்சியரே
அறியாதுசண்டைசெய்ய அருகாகவந்தருளும்
வாளுமுனையிலே வந்தருளுமீஸ்பரரே
என்றுமவன்சொல்லி யெடுத்தானேவில்லதனை

அருச்சுனன் யுத்தம்.

வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
விட்டான்ஒருபாணம் விண்ணதிரமண்குலுங்க
விண்ணதிரமண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
மற்றுமொருகணையை மறுகணையைத்தான்தொடுத்தான்
இன்னமொருபாண மெடுத்துவிட்டானிந்திரனும்
திஷ்டோதிரன்பார்த்து சிந்தைகலங்கிகின்றான்
மற்றுமொருகணையை மறுகணையைத்தானதொடுத்தான்
அக்ரோணிசேனைகளை அடங்கலும்பட்டார்கள்
ஒருமிக்கப்பட்டார்கள் உத்தமனார்சேனைகள்
சண்டைக்குவரவில்லையென்று சலாம்பண்ணியோடுவாராம்
பிச்சைக்குவந்தோமென்று பூநூலைக்காட்டிடுவார்
நாமத்தைக்காட்டிடுவாரும் நான்தாதனென்பாரும்
பூநூலைக்காட்டுவாரும் பிராமணனென்பாரும்
அஞ்சுவயதுடைய அருச்சுனருந்தான்பார்த்து
மற்றுமொருகணையை மறுகணையைத்தொடுத்தான்
இன்னஞ்சிலகணையை யெடுத்தானேஇந்திரனும்
விட்டான்சிலகணையை விண்ணதிரமண்குலுங்க
மண்ணதிரவிண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
சிந்தைகலங்கிடவே திஷ்டோதிரன்பார்த்து

திஷ்டோதிரன் தோற்றது.

கால்நடுங்கக்கைநடுங்கக் கட்டழகன்வீரியனும்
கொலைகள்நடுங்கிடவே குப்புரவேதான்படுத்தான்
தேரின்மேல்தான்படுத்தான் திஷ்டோதிரப்பெருமான்
அஞ்சுவயதுடைய அருச்சனரும்தான்பார்த்து
நெற்றிக்குநேர்பிடித்து விட்டான்ஒருபாணம்
வந்தசிலபாணம் வல்லிடிபோலேவிழுந்து
திஷ்டோதிரனும் தோற்றான்சிகரமற்றான்
தோற்றான்சிகரமற்றான் தேர்ப்பாகன்முடியுமற்றான்
அரசுஅற்றான்ஆணியற்றான் அம்புராத்தூணியற்றான்
தேரைவிட்டுக்கீழ்குதித்து திருடன்போலோடுகிறான்
தேருமுடைந்தது செப்புரவிசெத்தது
ஒருத்தனாய்ஓடுகிறான் உத்தமனார்வீரியனும்
பதாதியாய்ஓடுகிறான் பாவிதிஷ்டோதிரனும்
திஷ்டோதிரன்ஓடுவதை சிறுவனவன்பார்த்து
அஞ்சுவயதுடைய அருச்சுனருமேதுசொல்வார்
போகாதேபோகாதே போர்மன்னாபோகாதே
முன்னையும்பூசை முதற்பூசைவந்தாயே
சண்டைபண்ணிவெல்லாமல் போகலாமோதார்வேந்தா
மின்காட்டப்பின்கொடுத்து போகாதேபுண்ணியனே
இப்படியாகச்சொல்லுகையி லோடுகிறான்திஷ்டோதிரன்

அப்போது அருச்சுனரும் ஆணழகரேது சொல்வார்
போகாதேபோகாதே புண்ணியனேபோகாதே
பகற்காவிற்பெற்றெடுத்தப் படுக்கனேபோகாதே
அந்துகண்ணன்பெற்றெடுத்த ஆணழகா ஓடாதே
குருடனவன்பெற்றெடுத்த குலக்கொழுந்தே ஓடாதே
கண்ணில்லான்பெற்றெடுத்த கட்டழகா ஓடாதே
உன்னையர்திருவாணை கண்டாய் ஆச்சிமேலாணை கண்டாய்
அண்ணன்மேலாணைகண்டாய் இனிதிரும்பிஓடாதே
அண்ணன்மேலாணையென்ன அஞ்சிப்பயந்தானே

திஷ்டோதிரன் அருச்சுனனைக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆயுதத்தைக்கீழ்போட்டு அடியேன்சரணமென்றான்
உன்புண்ணியத்தினாலே பிழைத்தோடிப்போறேனென்றான்
தருமத்தினாலே பிழைக்கவழிபாருமையா
அஞ்சுவயதுடைய அருச்சுனன்தான்கேட்டு
அங்கிருக்குமன்னவர்க்கு ஆணழகனேதுசொல்வான்
சமர்த்துள்ளவீரியன்போல் சண்டைபண்ணவந்தானே
என்னைக்கெலியாமல் ஏன்திரும்பிஓடுகிறான்
அப்படிக்கொத்ததொரு வாணழகன்வீரியனை
வெட்கங்கெடுக்கவேண்டும் வேந்தர்சபைநடுவே

திஷ்டோதிரனை அர்ச்சுனன் பண்ணிவடிவமாக்கி
பாட்டன்மார்களுப்புதல்.

மானங்கெடுக்கவேண்டும் மன்னவர்கள்மண்டபத்தில்
பங்கப்படுத்தவேண்டும் பாட்டனுக்கனுப்பவேதான்
என்றுமவனுரைத்து எழுந்திருந்தார்அர்ச்சுனனும்
ஊஞ்ஞங்கொடியறுத்தான் உத்தமனார்வீரியனும்
பச்சைக்கொடியறுத்தான் பாலகனருச்சுனனும்
திஷ்டோதிரன்கைகாலே சிறுவன்அவன்பிடித்து
கால்கட்டுங்கைகட்டுங் கட்டியங்ககாவலனும்
அசையாமல்கட்டினான் ஆனந்தவாழ்மார்பன்
நாலுகால்மத்தியிலே நடுவேவொருகொம்பைவிட்டு
பண்ணிவடிவாக பார்த்தனைசோடித்து
கூர்மவடிவாகக் கொற்றவனைச்சோடித்து
என்னவென்றுசாபம் இடுகிறானருச்சுனனும்
கட்டவிழ்க்கவந்ததொரு காவலனார்அத்தனையும்

திஷ்டோதிருக்குச் சாபம்.

தச்சன்கருமான் மறிந்தசிப்பாச்சாரி
மந்திரிபிரதானிகள் மற்றுமுள்ளராசாக்கள்
கட்டவிழ்க்கவந்ததொரு கனமுள்ளவீரியரும்
ஒட்டிக்கொண்டுபோகவென்று உத்தமனுஞ்சாபமிட்டான்
கெட்டுவந்தமன்னரெல்லாம் ஒட்டிக்கொண்டுபோகவென்றான்
எந்தன்வமிசத்தார்லந்து தொட்டால்விட்டுவிடவேணுமென்று

தூதுவரைத்தானழைத்து தூக்கிநடவுமென்றான்
நாலுபேர் தூதுவர்கள் நன்றாகத்தானெடுத்தார்
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தான்
நாலுபேர் தூக்கி நடந்தார்கள்வீதியிலே
அந்தஅந்தவீதிகளில் வாழுகின்றமன்னவர்கள்
இதுஎன்னகோரமென எல்லவரும்வோடிவந்து
கட்டையவிழ்த்தார்கள் காவலனார்வீரியர்கள்
குய்யோமுறையோவென்று கூவினார்மன்னவர்கள்
ஐயையோதெய்வமென்று அலறிப்புலம்புகிறார்
அந்தத்தெருதாண்டி மற்றுமொருவீதியிலே
தச்சன்கருமான் தாமறிந்தசிற்பாசாரி
மந்திரிபிரதானி மற்றுமுள்ளராசாக்கள்
கட்டவிழ்க்கவந்தார்கள் காவலனார்வீரியர்கள்
தொட்டுஅவிழ்த்திடவே ஒட்டமிகநடந்தார்கள்
ஒருஅக்ரோணிசேனையுடன் உத்தமர்கள்போறார்கள்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுப்போறார்கள்

திரியோதிரனம்பலத்தில் போய்விழுந்தது.

தேசத்தையாளுந் திரியோதிரன்சபையில்
அம்பலத்துவாசலிலே எல்லவரும்போய்விழுந்து
அங்கிருக்குமன்னவர்கள் அரையர் துரைகளெல்லாம்
குஞ்சிரிப்புக்கொண்டு குலுங்கநகைத்தார்கள்
தட்டிநகைத்தார்கள் தாமமுடியார்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து மறுமம்வெளிப்பட்டு
தலைகுனிந்துவீற்றிருந்தான் தாமமுடியானும்
துய்யகளத்துதித்த துரோணரவர்பார்த்து
அங்கிருந்ததூதுவரை யாணழகர்தான்பார்த்து
காஞ்சிநாடாளும் கருணரைக்கூப்பிடென்றார்

தூதுவன் கருணரைக்கூப்பிடுகிறது.

தூதுவனுந்தான்கேட்டுத் தொழுதிரங்கிதெண்டனிட்டு
அருளருளுமென்னையா அப்படிக்கேயாகுதென்று
எட்டடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய் மற்றிவருநடந்து
காஞ்சிநாடாளுங் கருணருக்குத்தெண்டனிட்டான்
தெண்டனிட்ட தூதன் திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதான்
காஞ்சிநாடாளுங் கருணரவர்பார்த்து
நீயாருடையதூதன் அறியவுரையுமென்றான்
யாருடையதூதனல்ல அடியேன்தூதன்

அம்பலத்தார் தூதரென்று அடிவணங்கிதெண்டனிட்டான்
நீயிங்கேவந்த தெனக்கறியகூறுமென்றான்
துப்யர்குலத்திலே துரோணக்குருக்களும்
உம்மையழைத்துவரக் கட்டளைகளிட்டார்காண்
அரைநாழிபோதே அழைத்தோடிவாருமென்றான்
வாருமையாவென்று வருந்தியேதெண்டனிட்டார்
இன்னேரமங்கேநான் யிருந்துநான்வந்தேன்
நானறியாக்காரியங்கள் வுண்டோடாநாயகனே
எதுவகையாக என்னைவரவழைத்தார்
வரவழைத்தகாரியங்கள் வாய்திறந்துசொல்லுமென்றான்
அப்போதுதூதுவனும் அடிவணங்கியேதுசொல்வான்
என்னமோஏதோ எனக்கொன்றுந்தெரியாது
ராசாக்கள்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
கஸ்திரியர்காரியங்கள் கலக்கம்வெளிப்படுமோ
மந்திரிகள்காரியங்கள் மருமம்வெளிப்படுமோ
வருகவருகவென்று வருந்தியேதெண்டனிட்டான்

கருணர் திரியனம்பலத்துக்குப் பயணப்பட்டுவருகிறது.

காஞ்சிநாடாளுங் கருணரெழுந்திருந்து
முத்துமெரிவடியைத் தொட்டுமிகநடந்து
அம்பலத்துவாசலிலே ஆணழகன்வந்திருந்து
துய்யர்குலத்திலே துரோணரவர்பார்த்து
கருணர்பெருமாளுக்குங் கண்சாடைகாட்டினார்
காஞ்சிநாடாளுங் கருணரதுவறிந்து
திஷ்டோதிரனறிய திட்டெனவேவந்து
அப்போதுசொன்னேனே தப்புவருமென்றுசொல்லி
முன்னமேசொன்னேனே மோசவருமென்றுசொலலி
என்பேச்சைக்கேளாமல் எழுந்துநடந்தீரே
அறியாதான்என்றுசொல்லி அமருக்குப்போனீரோ
அமருக்குப்போனிடத்தே அவகேடுகண்டீரே
சண்டைக்குப்போனிடத்தே சதிசெய்தான்கண்டீரே
காஞ்சிநாடாளும் கருணரவருரைத்து
கட்டையவிழ்த்தாரே காவலனர்வீரியரும்
அவர்-அக்ரோணிசேனைகளும் உத்தமனர்வெளியானர்
காலுதறிக்கையுதறிக் கடுகவழிநடந்தார்
அவரவர்மாளிகைக்கு அவரவர்போய்சேர்ந்தார்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரர்வீரியரும்
காஞ்சிநாடாளுங் கருணருடவீதிவிட்டு

புனந்திரர் சூற்சடைவீதிவருகிறது.

மற்றுமொருவீதியிலே வாரார்புனந்திரரும்
ஊதினன்சின்னம் உலகேழுலகதிர

ஊதினன்காளை உலகுதலை துமுக்க
செம்பொன்னற்காளை திசைவிலங்கஊதினன்
பொன்னினற்காளை பொருந்தநின்றூதினன்
ஊதினன்சின்னத் தொனிகேட்டாளுத்தமியும்

துற்சடைக்குத் தாதிசேதியுரைக்கின்றது.

தாமக்குழலாளுந் தாதியவள்கேட்டு
எட்டடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடிஓரடியாய் பதறிமிகநடந்து
தோகைமயிலணையாள் துற்சடையாள்மாளிசென்று
சிம்மாதனத்துக்கு முன்பாகத்தெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பஎழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
நீயார்பெண்ணேதாதி அரியவுரையுமென்ருள்
யார்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல வும்முடையநற்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமானேஉன்பணிதான்
நீயிங்கேவந்ததெனக்கரியகூறுமென்ருள்
வந்ததொருகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்ருள்
சந்தோஷமாக உரைக்கலுற்ருள்தையனல்லாள்
இந்நாட்டானல்லகாண் இத்திசையானல்லகாண்
தென்னடுஞ்சூழ்த்திசை வணங்கவந்தவன்காண்
வையவளநாட்டான் வந்தான்காண்வீதியிலே
மாதுமணவாளன் வந்தான்காண்வீதியிலே
மாதுமணவாளன் வரவுசொல்லவந்தேனென்ருள்
தேவிமணவாளன் வரவுசொல்லவந்தேன்னென்ருள்

துற்சடை சந்தோஷப்படுகிறது.

தோகைமயிலணையாள் துற்சடையுந்தான்கேட்டு
தேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
சந்தோஷப்பட்டுச் சரீரங்கள்பூரித்து
வளநாடிபுத்திரனும் வந்தானோஅத்திபுரம்
மாதுமணவாளன் வந்தானோயித்தெருவில்
தென்னடுசேர்மகனும் வந்தானோதிசைவிலங்கி
தேவிமணவாளன் வந்தானோவீதியிலே
என்றுமனமகிழ்ந்து இருந்தாளே துற்சடையும்

தாதிக்கு வெகுமதி கொடுத்தது.

மாதுமணவாளன் வரவுசொன்னதாதியற்கு
என்னத்தைநான்கொடுப்பேன் ஏலங்குழலியற்கு
வச்சிரமாணிக்கம் வாரிக்கொடுங்களென்ருள்
தோகைமயிலணையாள் துற்சடையாளேதுசெய்தாள்

ஏழாநிலையும் எழுநிலையுமேலேறி
மேலாந்தளத்தை விடுகதவைத்தாள்திறந்து
பலகோணிவாசல் துறந்தந்தபைங்கிளியும்
சாசிபடியேறி கனக்கமிதித்தேறி
பவழப்படிமிதித்து பைங்கிளியும்பார்த்திருந்தாள்
போரஞ்சாமன்னர் புலந்திரனார்சீர்வடிவை
அரையில்சொருகழகும் அம்பொன்னார்சீராவும்
கத்திச்சொருகழகும் கச்சுகட்டுவுள்மருங்கும்
கச்சுகட்டுவுள்மருங்குங் கனிவாயும்பேரழகும்
காஞ்சிவளநாடாளுங் கர்னருடசீர்வடிவும்
தக்கப்புகழுடைய தருமரிடமேனிகளும்
வெற்றிமதயானை வீமருடகால்நடையும்
சாண்டீபவனமெரித்தக் காளையுடகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
தாமமுடியான் சகாதேவன்பூமுடியும்
ஆறுபேர்தன்னழகை பெற்றுவந்தான் ஆணழகன்
அடியாளுடன்பிறந்த நூற்றொருவர் அரசர்கள்
எந்தனுடன்பிறந்தார் இளவிசையர் நூற்றொருவர்
நூற்றொருவாராசர்களும் இவனுக்குஎதிரலவே
நூற்றொருவர்பேரழகும் இவனழகுக்கீடாமோ
காஞ்சிநாடாளுங் கருணருமீடலவே
ஈஸ்வரனைப்போலே யிருக்கிறானிந்திரனும்
மன்மதனைப்போலே யிருக்கிறான்மன்னவனும்
மாதுமணவாளன் மன்மதன்போல்தோணுகுது
கலந்தாரிக்கேத்தவன்காண் கட்டழகன்சீர்மகனும்
மாதுக்கிசைந்தவன் மணவாளன்பெற்றபிள்ளை

தாதிகள் ஆலாத்திசுத்தி காட்டுகிறது.

கண்ணேச்சல்கண்ணேச்சல் காவலனார்வீரியற்கு
ஆலாத்திக்காட்டுமென்றார் அர்ச்சுனனார்புத்திரற்கு
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
இன்னமுறையெந்தனது என்றுசொல்லித்தாதியவள்
முத்தினாலாலாத்தி வேணநூறாயிரமாம்
பவளத்தாலாலாத்தி வேணநூறாயிரமாம்
கற்பூரஆலாத்திக் காட்டியந்ததாதிமார்
திருஷ்டிகழட்டித் தெருவெங்கும்விட்டெறிந்தார்
ஆலாத்திகாட்டி அணியிழைமார்நீங்கினின்றார்
தோகைமயிலணையாள் தூற்சடையாளேதுசொல்வாள்

மருமகன் வரவுகண்டு பள்ளியறை ஜோடிக்கிறது.

தாமக்கருங்குழலாள் தாதிமுகம்நோக்கி
மாதுமணவாளன் வருவானேமாளிகைக்கு

பாங்கிகளேநீங்களெல்லாம் பள்ளியறைசோடியென்றாள்
அங்குசிலதாதியர்கள் அறிவுடையாளோடிவந்து
சொல்லப்பெற்றோமென்று சுருக்காகயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்று கும்பிட்டெழுந்திருந்து
பள்ளியறைமண்டபத்தைப் பைங்கிளிமார் தான்திறந்து
எங்குநலங்கிட்டு எத்திசையும்நீர்த்தெளித்து
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
குங்குமத்தாலே குளிரத்தரைமெழுகி
கட்டில்மெத்தை கனக்கவிரித்துதரி
ஏழாயிரம்பொன்பெற்ற இந்திரவர்னப்பட்டுடுத்தி
இந்திரவர்னப்பட்டெடுத்து எங்குமலங்கரித்து
காம்பரிந்தஜங்கலப்பூ கட்டிலின்மேல்பரப்பி
பொன்னால்திரைவளைத்துப் பூமாலைச்சூட்டினார்
சன்னலிலேபன்னீரை சாடினாரெத்திசையும்
குடம்குடமாய்ப்பன்னீரைக் கொட்டித்தெளித்தார்கள்
கெண்டிகையும்பூமலரும் வைத்தார் அழகாக
கிண்ணியிற்சந்தனமுங் கெண்டியில்தீர்த்தம்வைத்தார்
கச்சாயங்கொண்டுவந்து வைத்தார்கிளிமொழிக்கு
சோடித்தோமாச்சியென்று தொழுதிரங்கிதெண்டனிட்டாள்
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரனார்வீரியரும்
மந்தத்தெருதாண்டி மற்றுமொருவீதியிலே
மற்றுமொருவீதியிலே வாரானேமன்னவனும்
நிரலைமுடியானும் மன்னவனும்வாரானே
நின்றால்நிலாவெரிக்கும் நீலமணிமண்டபமும்
நடந்தால்நிலவெரிக்கும் நீலமணிமண்டபமும்
பவளத்தால்கால்நிறுத்திப் பதிங்காதம்பந்தலிட்டு
முத்தாலேகால்நிறுத்தி முக்காதம்பந்தலிட்டு
இப்படியாக இருக்குமந்தவீதிகளை
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
யாருடையவீதியென்றான் அல்லிக்திருமகனும்

புனந்திரன் மாமனார்வீதி வருகிறது.

அங்கிருக்குமன்னவர்கள் அறையர்துரையரெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாமல்
நின்றபுனந்திரற்கு சொல்லவுமாட்டாமல்
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலங்கும்பூமுடிபார்
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னவர்முகங்கருகி வார்த்தைகளேதுசொல்வார்

மாலைமுடியானை மாமன்மார்வீதியென்றான்
தங்கைமணவாளன் தருதலையன்வீதியென்றான்

புனந்திரன் சபதங்கூறல்.

போரஞ்சாமன்னர் புனந்திரனரேதுசொல்வார்
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
சீறியெறிபறந்து சிங்கக்குட்டிபோலுரைப்பான்
பிள்ளையைக்கொன்றான் பெரும்பாவிதன்தெருவோ
மைந்தரைக்கொன்றதொரு மாபாவிதன்தெருவோ
வேருவழியில்லையோ வேந்தர்பெருமானே
மறித்தவழியில்லையோ வேந்தர்பெருமானே
பிள்ளைகொன்றவீதியிலே போகலாமன்னவரே
மைந்தர்கொன்றவீதியிலே வரலாமோமன்னவரே
தாமமுடியான் தருதலையன்பூமுடியை
சாமத்துக்குள்ளே தாங்கொல்வேனென்று
அரைநாழிக்குள்ளே அறிந்துஎறிவேனென்று
கொட்டினான்மேளங் குமரவிட்டான்பேரிகையை
ஆழிகரைபுரள அடித்தான்ரணபேரி
ஊழிகாலத்திடிபோல ஊதினர்சின்னத்தொனி
ஊதினான்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை உலகுதலைதுமுக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கவூதினர்
பொன்னினாற்காளை பொருந்தநின்றூதினர்
இப்படியாயிந்திரரு மிவரிருக்கும்வேளையிலே
ஊதினசின்னத்தொனி கேட்டாளாமுத்தமியும்

துற்சடை புலம்பல்.

தோகைமயிலனையாள் துற்சடையாள்தான்கேட்டு
மரம்வெட்டிசாய்த்தாப்போல் மாதருங்கீழ்விழுந்து
என் மாதுக்குவாழ்வு வருகிறதென்றிருந்தேன்
என் மங்கிலியம்போரசேதி மண்மேலேநானறியேன்
தாலிபறிபோகுமென்று தரணியிலேநானறியேன்
என்றுமனதுருகி ஏங்கிபுலம்புகிறாள்
தாமமுடியாள் தரையில்புரண்டழுதாள்
ஆனந்தமாரியரும் அடித்துபுரண்டழுதாள்
அந்தக்குரல்கேட்டு ஆனந்தவாழ்மாரி
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரியோடிவந்து
வாரியெடுத்து மாதாவைகொண்டணைத்து
தொட்டிட்டுமாதா துகிலால்முகந்துடைத்து
வந்துவிழுங்கண்ணீரை வெண்துகிலாள்தான்துடைத்து

 P. V. Press, Madras:—1929.

பூஞ்ஞரகேசத்தைப் புழுதிபலதுடைத்து
கலந்தாரி பிள்ளையை வரவழைத்தல்.
பட்டுத்துகிலாடை கொட்டுமேலுடுத்தி
அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தானழைத்து
ஐவருக்குமுன்பாக அரசனைப்போகவிட்டு
மைந்தரைப்போகவிட்டு வார்த்தையறிந்திடலாம்
பிள்ளையைப்போகவிட்டு பேச்சியறிந்திடலாம்
ஆறிவிடும்ஆறிவிடும் ஆச்சியரேஆறிவிடும்
தேறிவிடுந்தேறிவிடும் தேவியரேதேறிவிடும்
கருநீலபூங்குழலாள் கலந்தாரிநாயகமும்
அங்குமொருதாதியரை ஆரணங்குதானழைத்து
அஞ்சுவயதுடைய அருச்சுனவீரியரை
தாதி அழைக்கிறது.
அவன்யெங்கேயிருந்தாலும் எவ்விடத்திற்சென்றாலும்
அரைநாழிப்போதே அழைத்தோடிவாருமென்றாள்
அப்படிக்கேகல்லதென்று யானந்தவாழ்மாரி
போமுளவள்தாதி பொன்னுபரணமின்ன
பொற்பிறப்பங்கோல்பிடித்துப் போமுளவள்தாதி
தென்னமரச்சோலைத் திரும்பியந்ததாதியரும்
மாமரச்சோலைவந்து மன்னவரைக்கண்டாளே
உப்புகந்தமாடுகிற உத்தமனரண்டைவந்து
அமுதுபொசிப்பதற்கு யாச்சியழைத்தாள்காண்
வாருமையாசுந்திரரே வந்தமுதுகொல்லுமென்று
தூக்கிமடியில்வைத்து துருசாய்வழிநடந்தாள்
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தோகைமயிலணையாள் துற்சடையாள்பாவிவந்து
கருநீலபூங்குழலாள் கலந்தாரிமுன்னேவந்து
அஞ்சுவயதுடைய அர்ச்சுனரும்வந்தார்காண்
அர்ச்சுனர்க்கு போசனமிட்டு சிங்காரித்தல்.
அமுதுபடையுமென்றார் ஆனந்தவாழ்மாரி
கருநீலபூங்குழலாள் கலந்தாரிதான்கேட்டு
அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசருக்கு
மஞ்சனீராட்டி மயிர்முடிந்துபின்போட்டு
ஈரமுலர்த்தி யிழைசேர்ந்தபட்டுடுத்தி
சீரானநெற்றியிலே திருநீற்றுக்காப்புமிட்டு
கமலதிருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
ஐவரதுமோதிரம் அழகுபெறச்சாற்றினார்
வட்டபதக்கங்களும் மார்நிறைந்ததாழ்வடமும்
தாலிபதக்கங்களும் சன்னல்பின்னல்தாழ்வடமும்
தொப்பிளிலேமாணிக்கம் வைத்தாளேசுந்திரற்கு

கொம்பில்சிறிதேனுங் கோதுபடாசர்க்கரையும்
மலையில்சிறிதேனும் மங்காளச்சர்க்கரையும்
கூட்டிகுழப்பியந்த கொற்றவர்க்குவூட்டினன்
தள்ளிப்பிசைந்துமந்த தார்வேந்தர்கூட்டினள்
உண்டுபொசித்தபின்பு உத்தமற்குகையலம்பி
பொன்னிறற்துப்பட்டி போர்த்தியவள்மூடி
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
அஞ்சுவயதுடைய அர்ச்சுனரேநீர்கேளும்
வையைவளநாட்டார் வந்தாராம்உங்களையர்
உங்களையருககிப்போது அதிசயமாய்நீபேசி
மன்னவரைக்கூட்டி வரவழைத்துவாருமென்றாள்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனனுந்தான்கேட்டு

அர்ச்சுனன் மாதாவுக்கு உத்தரவுகூறுதல்.

மாதாவுரைகேட்டு மைந்தர்மனமகிழ்ந்து
ஆச்சியுரைகேட்டு ஆணழகன்சம்மதித்து
மடியைவிட்டுக்கீழிரங்கி மன்னவன்யேதுசொல்வான்
கைகட்டிவாய்புதைத்து கட்டழகன்யேதுசொல்வான்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னச்சிநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
ஐவர்கள்பட்ட அக்கிரமம்நீயறிவாய்
பஞ்சவர்கள்பட்ட பரிபோகந்தானறிவாய்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்அம்மான்மார்
மண்டலத்தார்தானறிய மன்னவரைத்தானழைத்து
ஐவர்பஞ்சபாண்டவரை அங்கேவரவழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணுருகமண்பறித்து
மாதைதுகிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
கோதைதுகிலுரிந்து கொற்றவரைக்காடோட்டி
பறுக்கல்லுறுத்த பனிவந்துதலைமோத
ஒடும்பருக்கலது உள்ளங்கால்தானுறுத்த
கவிந்தமரத்தருகில் கனபள்ளிகொண்டிருந்தார்
வையைவளநாடான் சுவர்ந்தாரேயாமாகில்
தண்ணியிலேநஞ்சிடுவார் தாமமுடியாற்கு
அடைக்காயும்நஞ்சிடுவார் ஆனந்தமார்பனுக்கு
பொய்யாதினமிடுவார் பொய்கைவ்ளநாட்டாற்கு
உன்-அம்மான்மார்செய்த அக்கிரமம்நீகேளாய்
மாமன்மார்செய்த வஞ்சனைகள்நீயறிவாய்
அம்மான்மார்யெல்லாம் அடங்கலுமாண்டபின்பு
மாமியார்தாலி யறுத்தபிரகாக
அத்தைமாதாலி யடங்கலுமறுத்தபின்பு
ஐயாவைத்தேடி யழைத்தோடிவாரதுவும்
வையைவளநாடார் வருவாருன்மாளிகைக்கு

பாலமுர்தமுண்பதுவும் பத்தியுலாவதுவும்
அடிசல்சமைப்பதுவும் ஆலித்துவாழ்வதுவும்
அன்றைக்குமாகட்டும் ஆச்சியரேயென்றுரைத்தான்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிதான்கேட்டு
மைந்தருரைத்ததற்கு மாதாமனமகிழ்ந்து
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கம்தடவி பவளவாய்முத்தமிட்டு
மைந்தரைத்தானிடுக்கி வந்தாளேமாதாயிடம்

அர்ச்சுனன் துற்சடையென்னும் பாட்டியாரைக் காணுகிறது.

அஞ்சுவயதுடைய அர்ச்சுனராசரவும்
பாட்டியார்பாதமது பார்த்தன்வணங்கினின்றான்
துற்சடையாள்பாதம் செல்வன்வணங்கினின்றான்
தோகைமயிலனையுந் துற்சடையுந்தான்பார்த்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிருப்பீர்
கற்பதித்ததூணதுபோல் கலங்காதரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாளைப்போல்வாழ்வீர்
போருக்கும்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சேர்த்திடுவீர்
மாத்தானைவென்றிடுவீர் மண்டலத்தையாண்டிடுவீர்
எதிரிகளைக்கொன்றிடுவீர் எல்லையரசாண்டிடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினார்
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்தான்

சின்ன அர்ச்சுனனுக்கு துற்சடையாள் தன்சடையாள்
காப்பாற்றும்படி கூறுதல்.

அஞ்சுவயதுடைய அர்ச்சுனரேநீர்கேளும்
ஆரார்கள்பட்டாலும் அம்பலத்தார்பட்டாலும்
எவரெவர்கள்பட்டாலும் இளவரையில்மாண்டாலும்
நூலார்கடுந்திரள்ளார் நூற்றொருவர்பட்டாலும்
காஞ்சிநாடாளுகிற கர்னரவர்மாண்டாலும்
கண்மணியானதொரு கர்னருமாண்டாலும்
தாலிதருவீரே சுவாமிபெருமாளே
மங்கிலியம்வாங்கி வருவீரேமன்னவரே
வையைவளநாட்டான் வந்தாரேவுங்களையர்
உங்களையருக்கிப்போது அதிசயமாரீயுரைத்து
மங்கிலியம்நிற்கவேதான் வழிபாருமன்னவனே
தாலிகயரிருக்க வரந்தாரும்புண்ணியனே
என்றுமவருரைக்க ஏதுசொல்வானருச்சுனனும்

பாட்டியார் துற்சடைக்கு சின்ன அர்ச்சுனன் உத்தரவுகூறுதல்.

மடியைவிட்டுக்கீழ்குதித்து வந்துமுன்னின்றல்லவோ
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகனேதுசொல்வான்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் உன்னுடையநல்வார்த்தை
நூலோர்கடுந்திராளர் நூற்றொருவரனைவோரும்
ஐவரையுங்கொண்டுவந்து ஆட்டிவைத்தாரனைவோரும்
பாஞ்சாலியைக்கொண்டுவந்து பற்றிதுகிலுரிந்தார்
துரோபதையைக்கொண்டுவந்து துகிலுமுறிந்தாரே
துரோபதைநாயகியைத் தூங்குமஞ்சமேற்றிவைத்தார்
அம்பலத்தார்தங்கள்முன்னே ஆட்டாதுமாட்டிவைத்தார்
ஆட்டினதுமல்லாமல் ஒட்டிவிட்டார்ஊரைவிட்டு
கட்டழகரைவருமே கானகத்தில்வாசம்பண்ணூர்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
எப்போதுலையுமென்று ஏங்கிமனந்தளர்ந்து
வனமாய்வனந்திரிந்தார் வையகங்கள்தானறிய
நாட்டைத்துறந்தார்கள் நல்லபதியிழந்தார்
வீட்டைத்துறந்தார்கள் வேந்தர்களைவருமே
ஊரைத்துறந்தார்கள் உற்றபதியிழந்தார்
மன்னவரும்தேவியுமாய் வனத்திலேவாசம்பண்ணூர்
தோராவடிவழகி துரோபதைநாயகியாள்
அவளழகுமொப்பனையும் ஆருமில்லைவையகத்தில்
திருவழகுமொப்பனையும் தேசத்தில்கண்டதில்லை
தேசத்தையாளும் திரியோதிரன்தானும்
மாலைமுடியானும் மைத்துனனைதானழைத்து
துரோபதையைக்கொண்டுவந்து தூங்குமஞ்சமேற்றிவைத்தால்
பாவையரைக்கொண்டுவந்து படுக்கமஞ்சமேற்றிவைத்தால்
இப்பெரியநாடும் எழில்பெரியசீமைகளும்
என்னுடையநாடுங் கர்னர்மறையாதினமும்
அத்தனையுந்தாரேனென்றான் ஆனந்தவாழ்மார்பன்
நல்லதென்றுசம்மதித்தான் தாமமுடியானும்
துரௌபதையைக்கொண்டுவந்து சேர்க்கிறேனென்றுசொல்லி
தாம்பூலம்பெற்றானே தாமமுடியானும்
ஒண்டிரதமேறி உத்தமனும்போகலுற்றான்
அவர்ஒளித்திருக்குமவ்வனத்தை வுத்தமனுந்தான்தேடி
ஒக்கபிறந்த வுடற்பிறப்பெண்ணாதே
மைத்துனர்தேவியென்று மனதிலேஎண்ணாமல்
பஞ்சவர்கள்தானிருக்கும் பாரவனம்புகுந்து
ஐவரில்லாவேளையிலே ஆணழகர்வந்துநின்று
தோராவடிவழகி துரோபதையாள்தன்னுடனே
நல்லத்தனமாக நாயகிக்குத்தானுரைத்து

அவளையழைத்துப்போக வாலோசனைகள்செய்து
ஆயுதத்தைகீழ்போட்டு ஆணழகன்தேரேறி
துரிதமுடனாகத் தேரைநடத்தலுற்ருன்
துரோபதையுந்தான்பார்த்துத் துடித்துமிகவெழுந்து
ஆயுதத்தைதானெடுத்து அண்ணுவேதானழைத்தாள்
இந்தாருமாயுதங்கள் என்றழைத்தாள்துரோபதையும்
மூன்ரும்படியேறி கொடுத்தாள்மொய்குழலும்
அவளெட்டிக்கொடுக்கையிலே தட்டிநடத்திவிட்டான்
அப்போதுதுரௌபதையாள் அலறிப்புலம்பினுள்காண்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுத்தானழுதாள்
கூச்சல்குரல்கேட்டு கொற்றவர்களோடிவந்து
அலறினசொற்கேட்டு ஐவர்களுமோடிவந்து
இவ்வுலகத்தானறியும் எம்பெருமாள்தானறியார்
மண்டலங்கள்தானறியும் மன்னர்கள்தானறியார்
சோலைமலருடைய சொக்கரவர்தானறியார்
உந்தன்மணவாளன் வந்தபெருங்கோலம்
கழுதையாய்போகவிட்டார் கட்டழகர்வீரியர்கள்
பஞ்சவர்கள்பட்டதொரு பாடுகள்மெத்தவுண்டு
உங்களால்பட்டதெல்லாஞ் சொல்லிமுடியாது
உனக்குத்தாலிதருகிறது எப்படிகாண்தையலரே
எல்லார்தாலிகளை அந்திக்கறுத்தாலே
பாட்டியேஉன்தாலி பகலிக்கறுப்பேனென்ருன்
தோகைமயிலணையாள் துற்சடையுந்தான்கேட்டு

சின்ன அருச்சுனன்சொல்லப் பாட்டி புலம்புகிறது.

இதுக்கோதான்மன்னவனே இத்தனைபாடுபட்டேன்
மாலைமுடியானும் மண்மேல்புரண்டழுதான்
தாமமுடியாளுந் தரையில்புரண்டழுதாள்
கருநீலபூங்குழலாள் கலந்தாரிவோடிவந்து
தொட்டிட்டுமாதர் துகிலால்முகந்துடைத்து
வந்துவிழுங்கண்ணீரை வென்சட்டால்தான்துடைத்து

கலந்தாரி தன்தாயார் துற்சடைக்கு சமாதானங்கூறல்.

அறியாதறியுமோ ஆனந்தவாழ்மார்பா
இதற்குள்ளபாரப்புத்தி எங்கேகற்ருனர்ச்சுனனும்
வையைவளநாட்டானுக்கு மனமுருகச்சொல்லிடுவோம்
ஆறிவிடும்ஆறிவிடும் என்னுச்சிஆறிவிடும்.
தேறிவிடும்தேறிவிடும் என்னுச்சிதேறிவிடும்
அஞ்சிவயதுடைய அர்ச்சுனரைத்தான்பார்த்து
திருஷ்டிகழட்டினுர் தேனர்கருங்குழலும்
பூமியைக்கிள்ளியல்லோ பொருந்திவிடைகொடுத்தாள்
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தாள்

விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தன்பெருமானும்

அருச்சுனன் புறப்படுகிறது.

வீரமதயானை வெள்ளானைமேலேறி
முக்கம்பம்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
கைத்தலத்தைதட்டி கறுத்தானையேறினான்
மத்தகத்தைதட்டி மதயானையேறினான்
சரியானையேறினார் சரியொத்தராசாக்கள்
அருகானையேறினார் ஐந்துலட்சம்ராசாக்கள்
பக்கானையேறினார் பத்துலட்சம்ராசாக்கள்
சிலமன்னரெல்லாருந் திடுக்கிட்டெழுந்திருந்து
முன்னேமுரசெடுத்து முன்னானைமேல்போட்டார்
பின்னேமுரசெடுத்து பின்னானைமேல்போட்டார்
சிலமன்னரெல்லாருந் திடுக்கிட்டெழுந்திருந்து
குலமன்னரெல்லாருங் குதிரையின்மேலேறினார்
பலமன்னரெல்லாரும் பல்லக்கிலேறினார்
அழகானமன்னரெல்லாம் ஆனையின்மேலேறி
பட்டர்புலவர்பதி பதினெட்டுமந்திரியும்
சிங்கங்கரடிபுலி சேர்ந்துமுழங்கிவர
எத்திலங்குபூமுடியார் ஏறினார்வாகனங்கள்

குதிரையின் சிறப்பு.

ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடையாம் முழுமாணிக்கக்குடையாம்
தங்கக்குடையாம் முழுமாணிக்கக்குடையாம்
பட்டுக்குடையாம் பவளநெடுங்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியநற்குடையாம்
எடுத்துநிறுத்தினார்கள் எண்ணாயிரங்குடைகள்
சுத்திநிறைந்தார்கள் சூரியனைக்காணாமல்
பக்கம்நிறைந்தார்கள் பகவானைக்காணாமல்
ஒற்றைக்குடைநடுவில் இருந்தந்தபுண்ணியனும்
பூச்சக்கரக்குடைநடுவில் இருந்தந்தவுத்தமனும்
ஒற்றைக்குடைபிடிக்க வுத்தமர்கள்தேர்நடக்க
பச்சைக்குடைகவிய பார்வேந்தர்தேர்நடக்க
பட்டுக்குடைகவிய பகவானைக்கண்மறைக்க
இரத்தினக்குடைபிடிக்க ராசாக்கள்தேர்நடக்க
குடைகள்பிறித்திடவே கொற்றவர்கள்சூழ்ந்துவர
ஊதினான்சின்னம் உலகேழுந்தானதிர
ஊதினான்காளை வுலகுதலைமுடிக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கஊதினான்
பொன்னினாற்காளை பொருந்தநின்றாதினான்

சின்ன அருச்சுனன் பாட்டன்மார்பேர் சொல்லுவதும் பாட்டிமார் ஏழுபேரையும் தான்மாலையிட்டதாக தாரைசின்ன மூதுகின்றது.

என்னவென்றாதினான் எழில்விசையன்போனவன்
பொய்யாதவாசகனார் புகழுடையதருமலிங்கம்
தக்கபுகழுடைய தருமரென்றாதினான்
கைலாசம்போயிருந்து சமர்த்தரைக்கண்டலவோ
பரமனுடயுத்தம்பண்ணி பாசுபதம்பேறுபெற்று
பச்சைமடல்விரியும் பாவிரிபூமணக்கும்
பாஞ்சாலராசன் பூமணப்பந்தலிலே
பாசுபதம்பேருபெற்ற பார்த்தீபனென்றாதினான்
வில்லைவளைத்து யிளங்கொடியைமாலையிட்டு
சுண்டுவிரல்பிடித்து சுந்தரனார்என்றாதினான்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
சாலுங்கரமும் முன்பாகத்தாலிகட்டி
அரசாணிசுத்திவந்து ஆண்பிள்ளைஎன்றாதினான்
அவளுக்கு-வாச்சமணவாளன் வந்தேனென்றாதினான்
சோரவளநங்கை சுபத்திரைநாயகியாள்
சந்நாசிவேஷங்கொண்டு சடுதியில்போயிரங்கி
மாயரனுமதியால் மங்கையரைத்தூக்கியல்லோ
ஒண்டி ரதத்தோடே வுத்தமியைக்கொண்டுவந்து
மாலையிட்டுக்கொண்ட மணவாளனென்றாதினான்
தாலிகட்டிவந்த தனஞ்செயனென்றாதினான்
நாகமடந்தை நறுநுதலால்நாயகியை
காண்டாவனமெரித்த கர்த்தர்வருகையிலே
வனமெரித்தவண்மைகளை கண்டநாகேந்திரனு
எந்தன்வடிவுகளைக் கண்டநாகேந்திரனு
மாதாவையெந்தனுக்கு மாலையிட்டுதந்தார்கள்
தாரார்குழலாளைத் தாலிகட்டவந்தேன்காண்
நாககன்னிக்கானதொரு நல்லமணவாளன்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்அல்லியற்கு
மாலையிடவேண்டுமென்று வந்தேன்மதுரையிலே
வேட்டைகளாடினேன் மெல்லிஅவளுடனே
அம்புபொருக்கிதந்தேன் ஆனந்தமாரியற்கு
காளியம்மன்கோயிலுக்கு காவுகொடுங்களென்றாள்
அதுக்குபிழைத்தேனே ஆயருடபுண்ணியத்தால்
பூதகிடங்கதனில் போட்டுஅடையுமென்றாள்
அதுக்கும்பிழைத்தேனே ஆயருடபுண்ணியத்தால்
அங்கேஒருநாளில் ஆண்டிவடிவெடுத்தான்

படம்விரித்துப்பிச்சைகேட்டும் பாவாடைவாங்கிவந்தேன்
பாப்பானும்பாப்பாத்தி போலவடிவெடுத்தேன்
அல்லியுடமாளிகையில் அங்கேவந்துதானமர்ந்து
இலட்சுமிநோன்பு நடத்தினேமப்போது
குஷ்டரோகிவேஷங்கொண்டு கட்டினேனப்போது
அவளுடவிருதறுத்துப் போய்சேர்ந்தேனத்திபுரம்
அவளை வந்துமடலூர்ந்த மைத்துனனென்றாதினன்
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாள்நாயகியை
தாலிகட்டிக்கொண்ட தனஞ்செயனென்றாதினன்
வந்துமடலூர்ந்த மன்னவனென்றாதினன்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடியாளை
மைந்தனுக்குத்தேர்வேண்டி வந்தேனவள்ராச்சியத்தில்
வேட்டைகளாடிவந்தாள் வேல்பொருதுங்கண்ணாளும்
கட்டழகிநாயகியைக் கண்டுமையலானேன்
அன்னவடிவெடுத்து அவளைவந்துமாலையிட்டேன்
அவள் மாலையிட்டுக்கொண்ட மணவாளனென்றாதினன்
தாலிதரித்த தனஞ்செயனென்றாதினன்
எட்டாதபொன்னுலகம் ஏறிப்போயிந்திரபடை
புட்பமலர்கொண்டுவந்த புண்ணியனென்றாதினன்
நாமமுடியான் நகுலனென்றாதினன்
சாத்திரக்கொடிவேந்தன் சகாதேவனென்றாதினன்
விருதுமுழங்கிடவே வேந்தன்நடக்கலுற்றான்
ஊதினன்சின்னம் உலகேழுலகதிர
ஊதினன்காளை உலகுதலைதழுக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கவூதினன்
பொன்னினாற்காளை திசைவிளங்கவூதினன்
அருச்சுனனார்போகிறனென்று யாற்றுதுதாரைசின்னம்
விசையனார்வாரேனென்று முரசுமுழங்குது
ஐவர்களும்வாரேமென்று யாற்றுதுதாரைசின்னம்
காதவழிக்கிப்பாலே ஊதுதுதாரைசின்னம்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஊதினசின்னத்தொனி கேட்டானுத்தமனும்

சின்ன அர்ச்சுனன் ஊதுகிற தாரைசின்னத்தை பொன்னு

மலைநாடானுடன் புனந்திரன் ஆலோசனைசெய்கிறது.

மாமாமுகம்நோக்கி மன்னனுமேதுசொல்வான்
அம்மான்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
ஐவருடவிருது அறுவாகமுழங்கிற்றே
ஆர்வரவுமாமா அறியவுரையுமென்றான்
பொன்னுமலைநாடாளும் அண்ணவுமேதுசொல்வார்

மைந்தர்படையெடுத்து வருகிறான் மன்னவனே
பிள்ளை படையெடுத்து வருகிறான் புண்ணியனே
எதிர்போய்காணுமென்றார் எத்திலங்குபூமுடியார்
போரஞ்சாமன்னன் புனந்திரனுந்தான் கேட்டு
ஐவர் திசைநோக்கி யாணழகன் தெண்டனிட்டான்
யானைவிட்டுக்கீழிரங்கி யானந்தவாழ்மார்பன்

தகப்பனும் பிள்ளையும் யானையைவிட்டிறங்கி
எதிர்கொண்டு காண்கிறது.

காலால்நடக்கலுற்றான் காவலன்வீரியனும்
நடுவாகவாரானே ஞாயறுதித்தாற்போல்
எட்டிநடைநடந்தான் எதிரேநிற்குஞ்சூரியன்போல்
அஞ்சுவயதுடைய அருச்சுனருந்தான்பார்த்து
ஐயர்குறிப்பறிந்து அடிவணங்கிதெண்டனிட்டு
யானைவிட்டுக்கீழிரங்கி யானந்தவாழ்மார்பன்
வீரமதயானை வெள்ளானைவிட்டிறங்கி
தோட்டமதுதிறந்து தொன்னைதைத்துப்பூவெடுத்து
மல்லிகைமுல்லை மருவுமருக்கொழுந்து
பாதிரிமுல்லை பருத்ததொருசெண்பகமும்
இருவாட்சிபுன்னை இசைந்ததொருகஸ்தூரி
சிறுமல்லிகுடமல்லி சேர்ந்ததொருபுஷ்பமெல்லாம்
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
வீசிநடந்தானே வேல்புருவங்கண்ணனும்
அய்யருக்கெதிரேவந்து அருச்சுனராசாவும்

தகப்பனுக்கு பிள்ளை சாஷ்டாங்கிக்கிறது.

பன்னீரால்காலலம்பிப் பட்டாலடிதுவட்டி
வண்ணவண்ணபூமலரை விதவிதமாய்த்தானெடுத்து
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுவாள்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
அஞ்சுவயதுடைய அருச்சுனன்வீரியனும்
நின்றானேபூமியிலே நெடுங்கால்கடுத்துவிழ
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியனும்
ஏனென்றுகேளாமல் ஏகமுகம்பாராமல்
வாயைத்திறவாமல் மறுவார்த்தைசொல்லாமல்
மறுவார்த்தைசொல்லாமல் மரமாகநின்றுவிட்டார்
எண்ணாதும்எண்ணாத இந்திரவீரியற்கு
தோணாதுந்தோணாது தோகைநல்லாள்புத்திரற்கு
அங்குமொருதூதன் அருகாகவோடிவந்து

தூதர் பொன்னிமலை நாடானை அர்ச்சுனனுக்கு
அம்மானென்றுரைத்தது.

அஞ்சுவயதுடைய அர்ச்சுனர்க்குச்சொல்லுவான்
உங்கள் அய்யருக்கம்மான் அவர்காணுமென்றுசொன்னான்
அஞ்சுவயதுடைய அருச்சனருந்தான்கேட்டு
மோப்பிமகனாரே முன்னமேசொல்லொண்ணாதோ
அறியாதபாலனுக்கு அப்போதேசொல்லொண்ணாதோ
என்றுமவன்கோபங்கொண்டு எத்திலங்குபூமுடியான்
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
வேர்த்துவிரிவிரித்து விழிகள்சிவப்பேறி
அத்தனைகோபமெல்லாம் அடங்கிஒருபுறமாய்
பூவும்புதுமலரும் பொன்னுறுகுஅட்சதையும்
பன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பொன்னுமலைநாடாளும் அண்ணருக்கெதிரில்வந்தார்
கொண்டுவந்தபூமலரைக் குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
அறியாதான்செய்தபிழை ஐயாபொருத்தருளும்
பார்த்தனவன்செய்தபிழை பாட்டாபொருத்தருளும்
பொறுத்தருளவேண்டுமென்று பின்னொருகால்தெண்டனிட்டான்
இன்னம்பொறுக்கவென்று இனியொருக்கால்தெண்டனிட்டான்

பொன்னுமலைநாடான் அருச்சுனனை ஆசீர்வதிக்கின்றது.

பொன்னுமலைநாடானும் அண்ணுஅவர்பார்த்து
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
அருசசுனராசாவை அவருமேவாழ்த்துகிறார்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திப்பீருத்திருப்பீர்
கிற்பீர்கிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
விற்பதித்ததூணதுபோல் விளங்கஅரசாள்வீர்
எந்தனைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைப்பெறுவீர் பெருமாளைப்போலிருப்பீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளறியிலே வீரபட்டங்கட்டிவைப்பீர்
ஆலைபோலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போற்சுற்றம் மூசியாமல்வாழ்ந்திருப்பீர்
வாழ்வீர்காணென்று மனதாரவாழ்த்தினார்
மைந்தரைக்கொஞ்சி எடுத்துமடியில்வைத்து
வருகவருகவென்று வள்ளல்வருகவென்றார்
அதிகாரஅச்சுதரே அய்யாவருகவென்றார்
திருவருகபொன்வருக தேனேவருகவென்றார்

குடிகாரகொற்றவருமைக் கொண்டுவருகவென்றார்
சொக்கர்திருவாசலுக்குத் தூண்டாமணிவிளக்கே
கப்பலுஞ்சோங்குங் கரைதுறையுமுள்ளவனே
சங்கினமுத்துஞ் சலாபமுடையவனே
ஐவர்க்குநூற்றுவர்க்கும் அழகானபேரமையே
அழகியசீர்கொம்பனையாள் அல்லியும்பேரமையே
ஐயாவருகவென்று அணைத்தார்மடிமேலே
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்தார்
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியர்மேல்
கண்சாடைக்காட்டினார் காவலம்பூவீரியரும்
காட்டினசாடை யறிந்தந்தகாதலனும்
மடியைவிட்டுக்கீழ்குதித்து மன்னர்பெருமாளிடம்
அஞ்சுவயதுடைய அருச்சுனராசாவும்
உரிந்ததொருசேலையது வுத்தமனுங்கைபிடித்து
போரஞ்சாமன்னர் புனந்திரனார்முன்னேவந்து
ஐயாவின்பாதம் அடிவணங்கிதெண்டனிட்டான்
மன்னவனார்பாதம் வணங்கினான்மன்னவனும்
பொன்னுமலைநாடாளும் பேரெழுதிஅண்ணவும்

பொன்னுமலைநாடான் புனந்திரனை பிள்ளையை
எடுக்கச்சொல்லுவது.

போரஞ்சாமன்னர் புனந்திரர்க்கேதுசொல்வார்
வந்துபணிந்தவனை வாரியெடுக்காமல்
வாரியெடுக்காமல் வண்ணமடிவைக்காமல்
நின்றானருச்சுனனும் நெடுங்கால்தடுத்துவிழ
மண்மேலேநிற்கையிலே மைந்தன்கால்நோகாதோ
பூமியிலேநிற்கையிலே பொன்னுங்கால்நோகாதோ
மைந்தரைக்கொஞ்சி எடுங்காணுமன்னவனே
பிள்ளையைக்கொஞ்சி எடுங்காணும்புண்ணியரே
என்றுமவருரைக்க ஏதுசொல்வாரிந்திரரும்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலணையாள் துரோபதையும்
அவர்களெடுக்காதே அருங்குழந்தைதீண்டேனென்றான்
மன்னரெடுக்காதே மைந்தரைத்தீண்டேனென்றான்
புண்ணியர்கள்தீண்டாதே பிள்ளையெடுக்கேனென்றான்
ஆச்சியார்காணாதே அருங்குழந்தைதீண்டேனென்றான்
பொன்னுமலைநாடாளும் அண்ணவுமேதுசொல்வார்
ஏன்காணுமன்னவனே இந்தமதிவுந்தனுக்கு
மைந்தரைக்கொஞ்சி எடுங்காணுமன்னவனே
பிள்ளையைக்கொஞ்சி பிடிங்காணுமன்னவனே

புனந்திரன் சின்ன அருச்சுனனை எடுக்கிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்கேட்டு
நாளதுகேட்டு நடுநாள்முகூர்த்தமிட்டு
தேனல்லோதாரன் திரையெடுத்துத்தான்பாப்பி
தட்டோடேவெற்றிலையாம் சாதிக்களிப்பாக்காம்
கொத்தோடேவாழைப்பழங் கொண்டுவரச்சொல்லி
காயாம்புமேனியனும் சர்க்கரைதான்வணங்கி
காணிகள்பூமிகள் கடுகெனவேதானம்பண்ணி
நாமமுடியானுக்கு நாமகரணம்பண்ணி
அருச்சுனராசனென்று அவனுக்குப்பேருமிட்டு
ஐயாவருகவென்று அழைத்தாரேஇந்திரரும்
அஞ்சுவயதுடைய அருச்சுனனுந்தான்பார்த்து

தகப்பன் பிள்ளையை ஆசீர்வதிக்கிறது.

வாழ்வீர்வளந்திடுவீர் வர்த்திப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூணதுபோல் கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூணதுபோல் விளங்கவரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைப்பெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போயிடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
மாதர்களைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவீர்
கன்னிகளைமாலையிட்டுப் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைபதினறும்
எதிரிகளைச்சங்கரித்து எல்லையரசாண்டிடுவீர்
மாத்தானைவென்றிடுவீர் வையகத்தையாண்டிடுவீர்
மதுரையரசாண்டு மனதாரவாழ்ந்திடுவீர்
ஆலைபோல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காண்என்று மனங்குளிரவாழ்த்தினர்
வாழ்ந்திருப்பீர்என்று மனங்குளிரவாழ்த்தினர்
மைந்தருரைவாழ்த்தி மனங்குளிரவாழ்த்தினர்
வருகவருகவென் வள்ளல்வருகவென்றான்
திருவருகபொன்வருக தேனேவருகவென்றான்
அதிகாரஅச்சுதனே அப்பாவருகவென்றார்
குடிகாரகொற்றருமை கொண்டுவருகவென்றான்
அக்கத்துக்குள்ளே அமர்ந்திருக்கும்பாற்குடமே

சின்ன அருச்சுனனை புனந்திரன் கொஞ்சுகிறது.

சொக்கர்திருவாசலுக்கு தூங்காமணிவிளக்கே
கப்பலுஞ்சோங்கும் கரைதுறையுமுள்ளவனே

... ஆவணக் காப்பக நூல...
183457
சென்னை-600 008

சங்கீன்றமுத்துஞ் சலாபமுடையவனே
ஐவர்க்கும்நூற்றுவர்க்கும் அழகானபேரமையே
அழகியசீர்கொம்பனையாள் ஆச்சியுடபேரமையே
தோராவடிவழகி துரௌபதையாள்பேரமையே
சோரவளநங்கை சுபத்திரையாள்கண்மணியே
மின்னொளிக்குஏற்ற விளங்குங்குலக்கொழுந்தே
நாககன்னிக்கண்மணியே ராசாங்கரத்தினமே
பவளக்கொடியாட்குப் பட்சமுடையவனே
கோணுதமாதவத்துக் குந்திக்குருமணியே
ஐயாவருகவென்று அருச்சுனரைத்தானெடுத்தார்
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேவைத்துக்கொண்டு
என்-ஐயன்சிறுகைத்தலத்தை யாரோடேஒப்பிடுவேன்
சினத்தார்கள்பூமுடியை செண்டாட்டமாட்டுங்கையோ
பகைத்தார்கள்பூமுடியை பந்தாட்டமாட்டுங்கையோ
மூத்தோர்கள்சொல்லை முடிமேலேவைக்குங்கையோ
இளையார்கள்சொல்லை எடுத்தெறியுங்கைகளிகோ
என்ஐயன்சிறுகைத்தளத்தை யாரோடேஒப்பிடுவேன்
தக்கப்புகழுடைய தருமரேவாருமையா
வெற்றிமதயானை வீமரேவாருமையா
பாசுபதம்பெற்ற பார்த்தரேவாருமையா
நாமமுடியான் நகுலரசேவாருமையா
தாமமுடியான் சகாதேவாவாருமையா
என்-ஐயன்சிறுகைத்தளத்தை யாருடன்ஒப்பிடுவேன்
பச்சைமடல்விரியும் பாளைவிரிபூமணக்கும்
பாஞ்சாலமகாராசன் சுயமணப்பந்தலிலே
வில்வளைத்துமாலையிட்ட விஜையரும்நீர்தானே
பாஞ்சாலிதன்னுடனே பந்தல்மணம்பொருந்தி
சுண்டுவிரல்பிடித்த சுந்தரனுற்நீர்தானோ
அரசாணிசுத்திவந்து அம்மிமிதித்தீரோ
அருந்துதிபார்த்தீரோ ஆனந்தவாழ்மார்பன்
என்மாதாவைமாலையிட்ட மன்னவனும்நீர்தானோ
துரோபதையைமாலையிட்ட சுந்திரரும்நீர்தானோ
என்னுச்சிமணவாளா ஐவர்களும்நீர்தானோ
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நீர்தானோ
மதுரைக்குவந்திருந்து மங்கையரைமாலையிட்டு
அவளைமணம்புரிந்து ஆணழகர்நீர்தானோ
அல்லிமணவாளன் அருச்சுனரும்நீர்தானோ
சோரவளநங்கை சுபத்திரையாளென்னுச்சி
சந்நாசிவேஷங்கொண்டு சடுதியிலேவந்திரங்கி
ஒண்டிரதத்தோடே வுத்தமியைக்கொண்டுவந்து
மயக்கமடலூர்ந்த மணவாளர்நீதானோ

மேகம்பயின்றெடுத்த மின்னொளியாளென்னாச்சி
மின்னொளியைமாலையிட்ட வேந்தனும்நீர்தானோ
நாகம்பயின்றெடுத்த நாககன்னிஎன்னாச்சி
அந்தக்கன்னியரைமாலையிட்ட காளையரும்நீர்தானோ
பொற்கலசவாழ்முலையாள் போகவதிஎன்னாச்சி
போகவதிக்கேற்ற புருஷனும்நீர்தானோ
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிஎன்னாச்சி
பவளக்கொடிகேற்ற பாண்டியனும்நீர்தானோ
என்னாச்சிகளைமாலையிட்ட ஆணழகாநீர்தானோ
என்ஐயன்சிறுகைத்தலத்தை எவரோடேஒப்பிடுவேன்
இவருடையகைத்தலத்தை எவரோடேஒப்பிடுவேன்

சின்ன அருச்சுனன் குழந்தையில்பழகிய ஆட்டங்களை
தகப்பனுக்குமுன்பாக ஆடுகிறது.

அஞ்சுவயதுடைய அருச்சுனரேநீர்கேளும்
நீ-அறியாதநாளையிலே ஆச்சியருகிருந்து
உன்நாச்சியவள்காண ஆடினஆட்டமெல்லாம்
இந்திரனாற்பேரமையே எனக்குமெள்ளகாட்டுமென்றார்
அருச்சுனனார்பேரமையே யருகில்மெள்ளவாருமையா
அஞ்சுவயதுடைய அருச்சுனரும்தான்கேட்டு
மாயைவிட்டுக்கீழிரங்கி வந்துமெள்ளஏதுசொல்வார்
மாரால்நகந்து மண்மேல்தவருது
முன்கந்துபாயுறதும் பின்கந்துபாயுறதும்
தவழ்ந்துவிளையாடுவதுந் தானேநடிக்கிறதும்
எட்டிஎட்டிப்பார்க்கிறதும் எகிறிநடக்கிறதும்
தும்பிபறக்கிறதும் தும்தூவாலடிக்கிறதும்
பண்டிப்பிறக்கிறதும் பாலடிசிலுண்ணுகிறதும்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்தான்பார்த்து
மைந்தர்முகம்பார்த்து சிந்தைகலங்கினார்
மாதாவைத்தானினைந்து மன்னருருகிறார்

புனந்திரன் விசனப்படுகிறது.

காணாதேஎன்னாச்சி கண்ணற்றுளானாளே
பாராதேஎன்னாச்சி பாவியாளானாளே
குன்றின்மேற்பேய்ந்த மழையானாள்மாபாவி
குடத்திலேயிட்ட விளக்கானாள்என்னாச்சி
என்று-இத்தித்துமன்னன் இருகண்ணில்முத்துதிர்த்தான்
பொன்னுமலைநாடாளும் அண்ணாவுமேதுசொல்வார்
ஏன்காணும்மன்னவரே இந்தமதியுந்தனுக்கு
வந்தகருமம் முடியுங்காண்இந்திரனே
வந்துவிழுங்கண்ணீரை வெண்துகிலாள்கண்துடைத்து

மனைந்தனரக்கண் துடைத்து ஏன்காணுமன்னவனே
புத்திரரைக்கொஞ்சி எடுங்காணுமன்னவனே
பரோஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தான்பார்த்து

மறுபடியும் சின்ன அருச்சுனனை புனந்திரனைமடிமேல்வைத்து சேலைகளைந்தவரலாறு கேட்கிறது.

வண்ணமடிமேலே வைத்தார்புனந்திரரும்
அஞ்சிவயதுடைய அருச்சுனரேநீர்கேளும்
சேலைகளைந்துவந்தீர் யாருதுகாண்இந்திரரே
கூரையிதுயாருதுகாண் கொற்றவரேசொல்லுமென்றார்
அஞ்சுவயதுடைய அருச்சுனருமேதுசொல்வார்
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும் அடியேனொருவார்த்தை
திரியன்சபையைவிட்டுத் திரும்பிவருகையிலே
வெள்ளானைமேலேறி வீதிவருகையிலே
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிசென்றேன்
உள்ளேநுழைந்தேனே ஒருகோடிசேனையுடன்
திஷ்டோதிரன்தேவி திருவினையாள்நாயகியாள்
தனியாகவீற்றிருந்தாள் தாமமுடியாளும்
அவளாடுங்குழல்பறித்தேன் அம்மான்மார்தான்பறித்தேன்
பச்சைகழல்பறித்தேன் பள்ளாங்குழிபறித்தேன்
கொம்பனையாளோடுமல்லோ கொஞ்சுங்கிளிபறித்தேன்
பெண்பெருமாளோடுமல்லோ பேசுங்கிளிபறித்தேன்
பாட்டன்விளையாடி பரியாசம்பண்ணப்போல்
சிரித்துவிளையாடி சேலைகளைந்தேன்
ஆடம்பலத்தே அவ்வையார்சபைநடுவே
பேரம்பலத்தே பெரியோர்சபைநடுவே
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலங்களேற்றிவைத்தான்
துரோபதையைக்கொண்டுவந்து துரைகள்சபைநடுவே
சொல்லாதுஞ்சொல்லித் துகிலுமுரிந்தானே
பேசாதும்பேசிப் புடவைஅவிழ்த்தானே
அந்தவிசேஷம் அதுகொண்டுசிந்தையிலே
படைகூட்டந்தன்னுடனே பற்றித்துகிலுரிந்தேன்
எதிராளிசெய்த இடும்பைநான்தீர்த்துவைத்தேன்
பங்காளிசெய்த பருவங்கொலையவைத்தேன்
அய்யாவேவுந்தனுக்கு அடையாளங்கொண்டுவந்தேன்

சின்ன அருச்சுனன் அடையாளங்காட்டுகிறது.

இதோபாருமென்று யெடுத்தான்துயிலாடை
போரஞ்சாமன்னர் புனந்திரனார்தான்பார்த்து
குழந்தையைத்தானெடுத்து கொஞ்சிமடியில்வைத்து
எந்தன்குலம்விளங்க வந்துதித்தரத்தினமே

அடியேன்குலம்விளங்க வந்துதித்தவாணழகர்
என்று-கட்டியணைத்து கனிவாயைமுத்தமிட்டு
உச்சிமுகந்தபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
அஞ்சுவயதுள்ள அருச்சுனரேநீர்கேளும்
பகையாளிபேரில் படைவந்தாருங்களையர்
எதிராளிபேரி லெதிர்த்துவந்தாருங்களையர்
சினத்தபடைநடுவே செல்வாரிறந்தாரே
பகைத்தார்படைநடுவில் பாலரிறந்தாரே
முத்துமுடிதரித்த முடிமன்னர்பட்டாரே

அபிமன்னன் இறந்ததைப்பற்றி தகப்பன் பிள்ளையை விசாரிக்கிறது.

ஆளப்பிறந்த அபிமன்னராசாவே
எடுத்தாரோகொண்டாரோ இழுத்தெறிந்துபோனாரோ
உன்னாச்சிகலந்தாரி அழுதாளோதின்னாளோ
பாலுங்குடித்தாளோ பாலமிர்தமுண்டாளோ
நிலத்தில்படுத்தாளோ நீலபசுங்கிளியாள்
சிரித்துவிளையாடி யிருந்தாளேவுன்னாச்சி
ஏதுகருமம் எனக்கொன்றுந்தோன்றவில்லை
அந்தவதிசயங்கள் அருச்சுனரேசொல்லுமென்றாள்
அஞ்சுவயதுடைய அருச்சுனருந்தான்கேட்டு
மடியைவிட்டுகீழ்குதித்து வந்துமெள்ளயேதுசொல்வார்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகனேதுசொல்வான்

சின்ன அருச்சுனன் தகப்பனுக்கு அபிமன்னன் வரலாறுரைப்பது.

அப்பாவேநீர்கேளு மடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளு மின்னமொருவார்த்தை
பகையாளிபேரில் படைவந்தாரெங்களையர்
தாமமுடியான் தைத்தலையன்கையாலும்
காஞ்சிநாடாளுங் கர்ணரிடகையாலும்
தாமமுடியான் தைத்தலையன்கையாலும்
முத்துமுடிதரித்த முடிமன்னர்பட்டாரென்று
ஆளப்பிறந்த அபிமரும்பட்டாரென்று
கொட்டினதுமேளங் குமுறிற்றுகைத்தலங்கள்
ஊதினான்சின்ன முழகேழுலகதிர
ஊதினசின்னத் தொனிகேட்டாளென்னாச்சி
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
கட்டழகுவாழ்மார்பன் களத்திலேபட்டாராம்
மைத்துனரைக்கொண்டுவந்து மனைவியிடத்தில்சேருமென்றார்
தூதுவருந்தான்கேட்டு தொழுதிரங்கிதெண்டனிட்டு
ஆகட்டுமென்றுசொல்லி அப்படியேநல்லதென்று
நடந்தார்கள்தூதுவர்கள் நாலுதிக்குந்தானதிர

காசிகாடாளுங் கர்னருக்குதானுரைத்தார்
நல்லதென்றுசம்மதித்தார் நாடாளுங்கர்னராசன்
கர்னருந்தூதுவருங் களந்தனிலோடிவந்து
செத்தவபிமரைச் செந்தூக்காயெடுத்துவந்து
கலந்தாரிமாளிகையில் கட்டழகர்கொண்டுவந்தார்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிதான்பார்த்து
பஞ்சவர்னஞ்சித்தரித்த பலகையின்மேல்வளர்த்தி
கால்கட்டுங்கைகட்டுங் கட்டியந்தகாவலற்கு
சீரானநெற்றியிலே திருநீற்றுக்காப்புமிட்டு
கலந்ததிருமுகத்திற் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
சாயாம்புமேனியற்கு சந்தனபொட்டுமிட்டு
ஐவரில்மோதிரம் அழகுபெறச்சாற்றினர்
பாரபதக்கம் பருமுத்துத்தாவடமும்
தாளிப்பதக்கமுஞ் சன்னபின்னல்தாவடமும்
மார்நிறையசாற்றினர் மைத்துனரானவர்க்கு
பொன்னிற்றுப்பட்டி போர்த்தியவள்மூடி
உதிரந்தெரிந்துவிழ உத்தமியாளென்னச்சி
அடித்துப்புரண்டழுதாள் ஆரணங்குயென்னச்சி
பாதம்பிடித்தழுதாள் பத்தினியாளென்னச்சி
அவிழ்ந்ததலைமுடியாள் ஆரணங்குயென்னச்சி
பாலுங்குடித்தறியாள் பாலமிர்தமுண்டறியாள்
வேல்புருவங்கண்ணாளும் வெற்றிலைதின்றறியாள்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பெண்களும்
காஞ்சிகாடாளுங் கர்னரதுதேவியரும்
தோகைமயிலனையாள் துற்சடைநாயகியும்
பட்டணத்திலுள்ள படைமன்னர்பெண்டுகளும்
துய்யகுலத்திலுதித்த துரோணரிடதேவியரும்
கொம்பனைமாரெல்லாருங் கூடிமிகவழுதார்
என்னச்சிதன்னுடனே அடித்துப்புரண்டழுதார்
கொம்பனைமாரெல்லாருங் கூடியெழவுகொண்டார்
திருவினைமாரெல்லாருஞ் சேரயெழவுகொண்டார்
நான்-வீதிதிரிந்து விளையாடிவீட்டில்வந்தேன்
திருநீலப்பூங்குழலால் கலந்தாரிதான்பார்த்து
சீருடையார்புத்திரனே வுன்சிற்றப்பாகாணுமென்றாள்
ஆனந்தமார்பாநான் அடித்துப்புரண்டழுதேன்
வேல்புருவங்கண்ணான் விழுந்துபுரண்டழுதேன்
கலந்தாரிமாளிகையில் கண்ணில்லானோடிவந்தான்

குருடன் தடவையிலே அடித்ததை சின்ன அருச்சுனன்
தகப்பனுக்குரைப்பது.

கொம்பனையாள்மாளிகையில் குருடனவனோடிவந்து

தாமமுடியான் தவடையிலேதானறைந்தான்
அழுவானேஎன்றுசொல்லி அடித்தான்தவடையிலே
அடித்தவடியாலே கோபித்துநானழுவேன்
காஞ்சிநாடாளுங் கர்னரவர்பார்த்து
ஆனந்தமார்பனென்னை யணைத்துமடியில்வைத்து
தின்னபழங்கொடுத்துத் தேங்காயுங்கைக்கொடுத்து
கண்ணீரைத்தான்துடைத்து கட்டழகர்வீற்றிருந்தார்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்வந்திருந்தார்
பட்டணத்திலுள்ள படைமன்னர்வந்திருந்தார்
சாமத்துரோகி சகுனியும்வந்திருந்தார்
தங்கைமணவாளன் தறுதலையனங்கிருந்தான்
மற்றுமுள்ளராசாக்கள் மன்னவர்களங்கிருந்தார்
துய்யகுலத்துதித்து துரோணரவரேதுசொல்வார்

அபிமன்னன் சீவித்தகாலத்தில் சடங்குசெய்தது.

காசிதீர்த்தங்கொண்டுவந்து கட்டழகர்பூமுடிக்கு
எந்தனதுகையாலே எடுத்துச்சொரியுமென்றார்
அபிமன்னராசாவுக்கு அபிஷேகமாட்டுமென்றார்
புஷ்பங்கள்சாத்தினார் புண்ணியனார்பூமுடிக்கு
சீரானநெற்றியிலே திருநீற்றுக்காப்பணிந்தார்
கமலத்திருமுகத்திற் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
பொன்னிறைற்றுப்பட்டி போர்த்துமெள்ளமூடுமென்றார்
பொன்னரிசிகொண்டு போற்றினார்மன்னவர்க்கு
வாய்க்கரிசிபோட்டார்க ளானந்தமார்பனுக்கு
சந்தனக்கட்டை யடுக்கினார்கொற்றவர்க்கு
குங்குமக்கட்டை யடுக்கினார்கொற்றவர்க்கு
பல்லக்குசோடித்துப் பாடையைத்தானெடுத்து
நடந்தார்கள்ராசரெல்லாம் நாலுதிக்குந்தானதிர
கொட்டுமுழக்குடனே கொற்றவரைக்கொண்டு
மயானக்கரைதேடி மன்னரைக்கொண்டுவந்து
காஷ்டத்தின்மேலே வளர்த்தினார்காவலனை
கொற்றவனார்பூமுடிக்கு கொள்ளிச்சொரியுமென்றார்

அபிமன்னனுக்கு சின்ன அருச்சுனன் கொள்ளியிட்டது.

ஐயோசிவனேயென்று அழுதுமேயோடிவந்து
சுத்திவந்துகொள்ளியிட்டேன் சுந்தரப்பூமுடிக்கு
வலையவந்துகொள்ளிவைத்தேன் மன்னவர்க்குபூமுடிக்கு
அந்தனாள்போக்கி அடுத்ததோர்மற்றுனாள்
சுற்றுஎலும்புக்கு சோறிட்டுநீர்தெளித்து
பாண்டியர்பூமுடிக்கு பாலுந்தெளித்துவந்தேன்
ஒற்றைஒருபொழுதா யுண்டிருந்தேனையாவே
மற்றைக்கடன்கழித்தேன் மன்னரந்தராசருக்கு

பெற்றகடனுங் கழித்துவிட்டேன்புண்ணியற்கு
என்றுமவனுரைக்க இந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் விசனப்படுகிறது.

நல்லயிரவு நடுச்சாமவேளையிலே
பாதியிரவு பதினைந்துநாழிகையில்
காசிநாடாளுங் கர்னருடகாவல்விட்டு
ஈட்டிகத்திவாங்காத இடிமன்னர்காவல்விட்டு
அவள்-கட்டைநான்சோதித்துக் காவலதுவழித்து
கன்னியிடந்தேடிக் கனவினில்வந்தேனே
மங்கையரைநான்தேடி மதிலேறிசென்றதுவும்
கன்னியருந்தானுங் கலந்துவிளையாடினதும்
கலந்துவிளையாடிக் காளையைப்பெற்றெடுத்தோம்
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
அஞ்சுவயதுடைய அருச்சுனரைப்பார்த்ததில்லை
பிள்ளையில்லையென்றுசொல்லிப் பூரித்துக்கண்டதில்லை
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
சிற்றப்பாவென்றுசொல்லி சிரித்துவிளையாடவில்லை
ஐயரென்றுசொல்லி யறியானேயருச்சுனனும்
கொள்ளிக்கோபிள்ளை கொடுத்தார்மகாதேவர்
என்றுசொல்லிமன்ன னிருகண்ணுல்முத்துதிர்ந்தான்

பொன்னுமலைநாடான் புனந்திரற்கு சமாதானஞ் சொல்லுகிறது.

ஏன்காணும்மன்னவனே யிந்தமதியுந்தனுக்கு
வந்தகருமம் முடியுங்காண்மன்னவனே
வந்துவிழுங்கண்ணீரை வெண்துகிலாற்றான்துடைத்து
கொற்றவனார்கோபம் குணப்படுத்திக்கொண்டணைத்து
மன்னவனார்கோபம் வசப்படுத்தியானபின்பு
பிள்ளையைக்கொஞ்சி யனுப்புங்காண்மன்னவரே
போரஞ்சாமன்னன் புனந்திரருந்தான்கேட்டு
அஞ்சுவயதுடைய அருச்சுனரைத்தான்பார்த்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
அஞ்சுவயதுடைய அருச்சுனரேநீர்கேளும்

புனந்திரன் பிள்ளைக்குப்பாட்டன் வலுமைவுரைக்கிறது.

இன்னமும் மூன்றுநாளொருபொழுது முடிமன்னராளுவது
நாலாநாள்நம்முது ஆகுதுகாண்ராச்சியங்கள்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியும்
காஞ்சிநாடாளுங் கர்னருடபூமுடியும்
தங்கைமணவாளன் தறுதலையின்பூமுடியும்
சாமத்துரோகி சகுனியுடபூமுடியும்
ஐவர்பஞ்சபாண்டவர்க ளதமாக்கிப்போட்டிடுவார்
அத்தனைபேர்முடியும் கிள்ளியெறிந்திடுவார்
அப்போது அத்திபுரம் அடக்கலும்நம்முதுகாண்

மாற்றானைகொன்றுவிட்டு வையகத்தையாண்டிடலாம்
எதிரிகளைக்கொன்றுக்கால் இவ்வுலகமாண்டிடலாம்
அந்தமட்டுமன்னவனே ஆணழகா நீயிருந்தால்
யானையுஞ்சேனை யனுப்புவேனுங்களுக்கு
தாதிகளைக்கூட்டி யனுப்புவேன் தார்வேந்தா
உன்-நாச்சியம்மாளும் அடிபிடித்துவாருமென்றார்
மாதாவும்நீயும் மதுரைவந்துசேருமென்றார்
அஞ்சுவயதுடைய அருச்சுனனுந்தான்கேட்டு

சின்ன அருச்சுனன் பாட்டியின்பேரில் சரசமுரைக்கிறது.

மதுரைகுடையாளும் மகுடமுடியல்லியரை
நான்வந்துமேமாலையிட்டேன் மறித்துவந்துகண்டதில்லை
தேடிவந்துமாலையிட்டேன் திரும்பிவந்துகண்டதில்லை
முத்துப்படுந்துறையும் முழுமையுங்காணவேணும்
பவளம்படுந்துறையும் பாண்டியசீர்கணக்கும்
கப்பல்படுந்துறையும் கணக்குகள்உள்ளதெல்லாம்
அந்தக்கணக்குகளை யறியவேவேணுமையா
அவன்மனமறியவாரேன்காண் மன்னர்பெருமாளே
நானும்வருவேனென்றான் இராசாக்கள்வீரியனும்
கூடவருவேனென்றான் கொற்றப்போர்வீரியனும்
போரஞ்சாமன்னன் புனந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் சந்தோஷப்படுவது.

மைந்தனுரைத்ததெல்லாம் மனதுமிகக்கொள்ளாமல்
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கநகைநகைத்து
உடம்புகுலுங்கிடவே வுத்தமருந்தானகைத்து
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
உண்ணுதேபூரித்து உடம்பெல்லாமபூட்டுவிட்டு
மைந்தர்முகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
அருச்சுனரைத்தான்பார்த்து ஆணழகர்ஏதுசொல்வான்
அல்லியவளறிந்தால் ஆனந்தமாகிடுவாள்
அல்லிகெருவம் அடக்கவென்றுவாரீரோ
என்-மாதாவறிந்தால் மனமகிழ்ச்சிகொண்டிடுவாள்
அஞ்சுவயதுடைய அருச்சுனரேநீர்கேளும்
தூதுரைக்கவந்தேன் சந்திரபூமுடியே
வந்தவிடந்தன்னிலே வுந்தனைநானழைத்து
அருச்சுனுவுந்தனைநான் அழைத்துமேபோனாலே
மன்னர்களுக்குமெங்களுக்கு அனர்த்தம்வந்துநேர்ந்துவிடும்
அவனவர்க்குமெங்களுக்கும் மாளாதபோராகும்
போராடிவந்தவன்நான் பிள்ளையையழைக்கலாமோ

மல்லாடிவந்தவன் மைந்தனையழைக்கலாமோ
அழைத்துக்கொண்டுநான்போக ஆகாதுமன்னவனே

சின்ன அருச்சுனனுக்கு சமாதானஞ் சொல்லி
யானைசேனை பரிவாரங்கொடுக்கிறது.

நல்லதனத்தாலே பிள்ளைமனந்தேற்றி
குளிர்ந்தமொழியாலே குழந்தைமனந்தேற்றி
கொடுத்தான்குமாரருக்கு கூடைவளநாடு
கொல்லுங்குதிரைகளாம் கூர்வாளாம்அம்புகளாம்
வெற்றிலைப்பெண்களிலே வேணநூறாயிரமாம்
பச்சோலைப்பெண்களிலே பத்துநூறாயிரமாம்
கொடுத்தான்குமாரனுக்கு கூடைவளநாடு
ஆனைபொருகோடி அணிமன்னர்முக்கோடி
குதிரையறுகோடி கொற்றவர்கள்முக்கோடி
ஒட்டையறுகோடி முடிமன்னர்முக்கோடி
ஏறிவிளையாட எழிலானபொன்னாலே
குந்திவிளையாட குதிரைகளும்பொன்னாலே
இத்தனையுந்தான்கொடுத்தா னிந்திரராசாவும்
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தான்

சின்னஅருச்சுனன் தாய்வீடுவருகிறது.

விடைபெற்றெழுந்தாரே வேந்தர்பெருமாளும்
வீரமதயானை வெள்ளானைமேலேறி
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
அவ்வீதிவீதி நடந்தான்அழகாக
மற்றுமொருவீதி மன்னவனுந்தாண்டி
கலந்தாரிமாளிகையில் கட்டழகன்வந்துநின்றான்
யானைவிட்டுக்கீழிறங்கி ஆனந்தவாழ்மார்பன்
யானையுஞ்சேனையும் அனுப்பிவிடைகொடுத்து
வாளுருவிக்கைபிடித்து வல்லபத்தைதோளிலிட்டு
ஒடமயில்கண்ணனும் உட்கட்டுபோய்புகுந்து
மாதாவின்முன்னேவந்து மன்னவனுந்தெண்டனிட்டான்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிதான்பார்த்து
வாழ்த்திவிடைகொடுத்து மாதாவுமென்னசெய்வாள்

கலந்தாரி பிள்ளையை வாழ்த்துகிறது.

வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரானயாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைப்பெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளறியிலே வீரபட்டங்கட்டிடுவீர்

பகைத்தார்கள்பூமுடியைப் பருந்தாட்டமாட்டிடுவீர்
சினத்தார்கள்பூமுடியைச் செண்டாட்டமாட்டிடுவீர்
மாதர்களேமாலையிட்டு மைந்தரைப்பெற்றிடுவீர்
கன்னிகளேமாலையிட்டு காளைகளையீன்றிடுவீர்
பெண்களேமாலையிட்டுப் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
அன்பத்தாறுகாதம் ஆண்டிடுவீர்ராச்சியத்தை
மதுரையையாள்வதற்கு மைந்தர்களைப்பெற்றிடுவீர்
அத்திபுரமாள்வதற்கு ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
ஆல்போலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனமாரவாழ்த்தினர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினர்
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து

கலந்தாரி தன்பிள்ளையை தகப்பனிடத்திற்போன செய்தியைக் கேட்கிறது.

அஞ்சுவயதுடைய அருச்சுனராசாவை
வையகத்தையாளவந்த மன்னர்பெருமாளே
பூலோகமாளவந்த புத்திரனர்புத்திரனே
ஐவர்க்கும்நூற்றுவர்க்கும் அழகானபேரமையே
அழகியசீர்கொம்பனையா ளல்லியிடபேரமையே
தக்கப்புகழுடைய தருமருடபேரமையே
வெற்றிமதயானை வீமருடபேரமையே
ஆணழகுமன்ன ரருச்சுனர்பேரமையே
சரல்ப்பூந்தாரார் இரட்டையர்கள்பேரமையே
ஆணழகுமன்ன னருச்சுனரேநீர்கேளும்
ஐயரைக்காணுதற்கு போனீரோஆணழகா
உங்கள்-ஐயரைக்கண்டதுவும் அதிசயஞ்சொன்னதுவும்
மன்னரைக்கண்டதுவும் வார்த்தைகளாடினதும்
ஒன்றுமொளியாமல் உத்தமரேசொல்லுமென்றாள்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனருந்தான்கேட்டு
மடியைவிட்டுக்கீழிரங்கி மன்னவனரேதுசொல்வார்

அருச்சுனன் மறுமொழிகூறல்.

கைகட்டிவாய்புதைத்து கட்டழகரேதுசொல்வார்
ஆச்சிநீர்கேளு மடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளு மென்னுடையநல்லவார்த்தை
ஐயாவைக்காண போனேனேவாணழகி
ஐயரிருந்தார்கா ணரையர்சபைநடுவே
ஐயரைக்கண்டு அடிவணங்கித்தெண்டனிட்டேன்

தெண்டனிட்டயென்னை சேர்த்துமவரெடுத்தார்
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்தார்
எந்தன்முகம்பார்த்து ஏதுசொல்வாரிந்திரரும்
சிற்றப்பாசெத்ததுவும் சேதிதெரிந்ததுவும்
மாண்டுமடிந்ததுவும் வைகுந்தஞ்சேர்ந்ததுவும்
ஆச்சிகலந்தாரி யழுத்துவுந்தின்றதுவும்
அத்தனையுஞ்சொல்லுமென் ருனந்தவாழ்மார்பன்
ஐயர்முகம்நோக்கி அடியேனுனேதுரைத்தேன்
ஆளப்பிறந்த அபிமரும்பட்டதுவும்
முத்துமுடிதரித்த முடிமன்னர்காண்பதுவும்
சந்தனக்கட்டை தனிக்கட்டைதானடுக்கி
குங்குமக்கட்டை யடுக்கியந்தக்கொற்றவர்க்கு
கொள்ளிகள்வைத்துக் குடங்களுடைத்ததுவும்
ஒத்தஒருபொழுது சேறுண்டிருந்ததும்
அத்தனையுந்தானுரைத்து அடியேனும்வாரேனென்றேன்
மதுரைக்குஉன்னுடனே மன்னவனேவாறேனென்றேன்
அய்யரதுகேட்டு ஆணழகர்ஏதுசொல்வார்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
நூற்றொருவர்பூமுடியை நறுங்கஅடித்தபின்பு
வீமனார்தண்டாலும் விசையனார்வாளாலும்
விசையனார்வாளாலும் வெட்டிமடிப்பதற்கு
மூன்றுநாளுக்குள்ளே முடியுங்காண்மன்னவனே
மூன்றுநாளார்பொழுது முடிமன்னர்ஆளுவது
நாலாநாள்எங்களது ஆகுதுபார்ராச்சியங்கள்
ஆனையுஞ்சேனையும் அனுப்புகிறேனென்றுசொன்னார்
ஆச்சியும்நீயும் அடிபிடித்துவாருமென்று
ஏறிவிளையாட எழிலானைத்தான்கொடுத்தார்
குந்திவிளையாட பொன்னூனைத்தான்கொடுத்தார்
அம்மானார்பந்துகளும் அத்தனையுந்தான்கொடுத்தார்
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றுமீண்டுவந்தேன் வேந்தர்பெருமானும்
இதுதான்புதுமைகண்டீர் எழில்விசையன்மருமகனே
போனஅதிசயங்கள் புதுமையிதுகாணும்
என்றுமவருரைத்தார் இந்திரனாருச்சுனரும்
கலந்தாரிதான்கேட்டு கட்டழகிமனமகிழ்ந்து
இப்படியாக யிவரிருக்கும்வேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்

புனந்திரன் திரியன்வீதி வருகிறது.

அந்தத்தெருதாண்டி மற்றுமொருவீதியிலே
மற்றுமொருவீதியிலே வாராரேயிந்திரரும்
ஊதினன்சின்னம் உலகேழுலகதிர

ஊதினன்காளே உலகுதலே துமுக்க
செம்பொன்னற்காளே திசைவிளங்கவூதினன்
பொன்னினற்காளே பொருந்தகின்றாதினன்
வையைவளநாட்டான் வந்தேனென்றாதினன்
வளநாடிப்புத்திரன் வந்தேனென்றாதினன்
ஊதினசின்னத் தொனிகேட்டாளுத்தமியும்
பஞ்சவர்கள்தாதியரும் பைங்கிளியாள்தான்கேட்டு
மஞ்சள் துகில்களைந்து மற்றுந்துகிலுடுத்தி
வேல்பொருதுங்கண்ணளும் வெள்ளைத்துகிலுடுத்தி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
போரஞ்சாமன்னர் புனந்திரனர்முன்னேவந்து
யானையின்முன்னேவந்து அடிவணங்கிதெண்டனிட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரனர்தான்பார்த்து

பஞ்சவர்தாதி புனந்திரனைக்காணுகிறது.

பஞ்சவர்கள்தாதியென்று பாண்டியனுந்தானறிந்து
ஐவருடதாதியென்று ஆணழகன்தானறிந்து
ஆடையும்பொன்னும் அனுப்பவேதானறிந்து
சேலையும்பொன்னும் கொடுத்தனுப்பவேயிருந்தோம்
துக்கம்பெரிதானேம் துன்னீலங்கண்ணளே
விசனம்பெரிதானேம் வேல்புருவங்கண்ணனே
அனந்தல்பெரிதானேம் ஆனந்தவாழ்மாரி
உந்தனுக்கேதுமம்மா உத்தமியாள்தாதியரே
உந்தனுக்குத்துக்கம் இருக்குதளமூந்திரம்மா
தாமக்குழலாளுந் தாதியவளேதுசொல்வாள்
ஆளுமதுரைவிட்டு அத்திபுரம்வந்ததென்ன
செங்கோல்மதுரைவிட்டு தேசம்வந்துசேர்ந்ததென்ன
வந்தவகையேது மன்னவரேசொல்லுமென்றாள்
ஏன்வந்தீரிந்திரரே எனக்கரியச்சொல்லுமென்றாள்

புனந்திரன் தாதிக்குச் சேதியுரைப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திரனரேதுசொல்வார்
பேரப்பாரப்பா பெரியப்பாதங்களுக்கு
ஐவரையரும் ஆழிவசந்தரரும்
வேந்தர்பெருமாளும் வெளிமண்டபஞ்சேர்ந்து
யிடையருளவிட்டார்கள் வேந்தர்பெருமாளும்
துன்னீலங்கண்ணனும் தூதுரைக்கவந்தேனென்றான்
தாமக்கருங்குழலாள் தாதியவள்கேட்டு
முன்னேயும்பூசை முடிந்துயிருக்குதே
முத்துமுடிபாண்டியனும் பட்டமிருக்கையிலே
இப்பவும்பூசை யெழுப்பினர்பஞ்சவர்கள்

அரசாளும்நாயகியாள் அறிவழிந்தாளானுர்கள்
வையகத்தையாண்டும் மதிகுலேந்தாளானலே
இப்போதும்பிள்ளைகளை ஏக்கம்வரவிட்டாளே
மாற்றான்படைநடுவே மைந்தர்வரவிட்டாளே
எதிரிப்படைநடுவே இந்திரரைவிட்டாளே
என்றுமவளுரைக்க ஏதுசொல்வாரிந்திரரும்
ஐவரரையும் ஆழிவசந்தரரும்
அவர்க்கேதெரியாது நமக்குத்தெரிந்திடுமோ
என்னைபெற்றதந்தையருக் குரைத்தானென்றுசொல்லுமென்ரா

புனந்திரன் தான்வந்ததாகத் தாதியைவிட்டுத் தூரியனுக்குச்
சமாசாரஞ் சொல்லச்சொன்னது.

தாதிஅவள்கேட்டு தான்வணங்கிதெண்டனிட்டாள்
அருளருளுமென்னையரு அப்படிக்கேயாகுதென்ருள்
சொல்லப்பெற்றேனென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்று கும்பிட்டெழுந்திருந்து
எட்டடியும்ஓரடியாய் பதறிவழியறிந்து
தேசத்தையாளும் திரியோதிரன்முன்வந்து
சிம்மாதனத்தருகே சென்றிரங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகையைவைத்து
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்ருர்
தாமக்குழலாளுந் தாதியவளேதுசொல்வாள்
பாரமதயானை பஞ்சவர்களேவருக்கு
உருவமதயானை உத்தமர்களேவருக்கும்
ஐவர்பஞ்சபாண்டவற்கும் அவருடையதேவியற்கும்
பஞ்சவர்களேவருக்கு பட்சமுள்ளதாதியர்கள்
உத்தமர்களேவருக்கும் உருக்கமுள்ளதாதியர்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
நீயிங்கேவந்ததென்ன யெனக்கரியச்சொல்லுமென்ருன்

தாதி சேதியுரைப்பது.

தாமக்குழலாளுந் தாதியவளேதுசொல்வாள்
ஐவர்கள்பெற்றெடுத்த பாண்டிவளநாட்டான்
பஞ்சவர்கள்பெற்றெடுத்த பாண்டிவளநாட்டான்
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தருடபுத்திரர்காண்
அழகியசீர்கொம்பனையாள் அல்லித்திருமகன்காண்
ஆருயிரம்பாண்டியற்கு அழகானபேரனையா
ஐவருக்கும்உங்களுக்கும் அருமையுள்ளபுத்திரன்காண்
பேரப்பாரப்பா பெரியப்பாவுங்களுக்கு
துன்னீலங்கண்ணுளன் தூதுரைக்கவந்தான்காண்

புத்திரர்கண்டேயருமை புகழ்ந்துரைக்கவந்தேன்காண்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
மகுடமுடியசக்கி மன்னவனுஞ்சார்ந்திருந்தான்
பாரமொழியான் பராபரியாய்த்தானிருந்தான்
தாமக்குழலாளுந் தாதியவள்பார்த்து

தாதி மறுபடியும் எடுத்துரைப்பது.

தேசமுடிமன்னனுக்கு பின்னுந்தொழுதுரைப்பாள்
காடெல்லாம்யானை கரும்பெல்லாம்மாணிக்கம்
நீரெல்லாமுத்து நிலமெல்லாஞ்செங்கழனி
வாரிக்கொண்டுவனம்போன வைகைக்கரையுடையான்
சித்தந்திருப்பாலன் மாயன்சிவன்யான்
புத்திரர்கண்டடுமை புகழ்ந்துரைக்கவந்தேன்
தங்களிஷ்டமேயென்று இணையடிக்கைதொழுதாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
மகுடமுடியசக்கி மன்னவனும்வீற்றிருந்தான்
பாரமொழியான் பராபரியாய்த்தானிருந்தான்
தாமக்குழலாளுந் தாதியவள்பார்த்து
தேசமுடிமன்னனுக்கு பின்னுந்தொழுதுரைப்பாள்
பாலன்சிரசு பகைத்தார்முடியறிவான்
தேவன்சிறித்தான் சினத்தார்முடியறிவான்
தங்களிஷ்டமேயென்று சீரடிக்கைதொழுதான்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு

திரியோதிரன்கோபித்து கர்னரையழைத்து தாதியை
சிரசாக்கினை செய்யச்சொல்வது.

கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
கட்டறுத்தநாகங் கனற்பொரிபோல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகமதாய்
சூரியமண்டலத்தைக் கிட்டச்சுவாலயமாய்
கருணர்முகம்நோக்கி கட்டழகனேதுசொல்வான்
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமாளே
சீர்பதத்தைமாற்றிச் சிறையிலடையுமென்றான்
மற்றுபதமாற்றிப் போடுமென்றான்காவலிலே
தாமக்குழலாளுந் தாதியவள்கேட்டு
போரஞ்சாமன்னர் புலந்திரனார்வாளாலே
உங்கள்தலையறுக்க வந்ததுகாலமென்று
சொல்லியவள்நடந்தாள் சுந்தரப்பூந்தாதியவள்
எட்டடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியும்ஓரடியாய் பதறிமிகநடந்து
போரஞ்சாமன்னன் புனந்திரனார்முன்னேவந்து
யானையின்கீழே அடிவணங்கிதெண்டனிட்டாள்

தெண்டனிட்டதாதி திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
போரஞ்சமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
போய்வந்தகாரியங்கள் புதுமைகளத்தனையும்
என்னைப்பெற்றதந்தையர்கள் என்னென்னசொன்னார்
ஒன்றும்ஒளியாம லுத்தமியேசொல்லுமென்றார்
தாமக்குழலாளுந் தாதியவளேதுசொல்வாள்
உன்னைப்பெற்றதந்தையரும் மெத்தபிணங்கினார்
சொன்னதெல்லாந்தான்கேட்டு சிறையிலடையுமென்றார்
கட்டழகாயெந்தனுக்கு கால்விலங்குபோடுமென்றார்
அந்தவிசேஷம் அதுகேட்டுவந்தேனென்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனுமேதுசொல்வான

புனந்திரர் தாதிக்குத் தேறுதலுரைப்பது.

மூன்றுநாளார்பொழுதீ முடிமன்னராளுவது
நாலாநாள்நம்மது ஆகுதுபார்ராச்சியங்கள்
பார்த்தன்கையம்பாலே படுவதுநிச்சயங்காண்
வீமர்கையம்பாலே வேந்தர்மடிந்திடுவார்
மன்னர்கையம்பாலே மாண்டிடுவாரெல்லோரும்
தருமருக்குமிப்போது சனியன்ஒழிந்தது
வீமருக்குமிப்போது விடுதிஒழிந்தது
ஐவருக்குமிப்போது அடுத்ததுநற்காலம்
மாதுமயிர்முடிக்க நாளாச்சுமங்கையரே
கோதிகுழல்முடிக்க நாளாச்சுமங்கையரே
பத்தினியாள்சாபம் பலித்ததுயிவர்களுக்கு
உத்தமியாள்சாபம் உடனேபலித்தது
சிறையிட்டயிந்திரனும் குறைவிட்டுத்தானழுதான்
காலனுயரவந்து கடுகவாவென்றனே
எமன்வுயரவந்து இங்கேவாவென்றனே
இன்னஞ்சிலகால மிருந்தரசையாளாமல்
நாளைதெரியுதுகாண் ராசர்படைபோறதெல்லாம்
பின்னைதெரியுதுகாண் மன்னர்படும்பாடு
ஆரணங்குதாதியரை அரண்மனைக்குச்செல்லுமென்றார்
மாதரிடதாதியரை மாளிகைக்குச்செல்லுமென்றார்
போகவிடைகொடுத்தார் பொன்னும்புனந்திரனார்
விடைபெற்றுத்தாதியரும் மாளிகையில்போய்புகுந்தாள்
அங்கேவிடைபெற்று அரண்மனைக்குப்போய்புகுந்தாள்

புனந்திரன் வார்கொள்ளிவாசலுக்கு வருகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரனார்வீரியரும்
அவ்வீதிவீதி நடந்தாரழகாக
மற்றுமொருவீதி தாண்டியந்தமன்னவனும்
வாசலணிகாக்கின்ற வார்கொள்ளிவீதிவந்தார்

வாசல்படிகாக்கின்ற மங்கைநல்லாரடீ
ஆரடிதாதியரே யப்பாலேநில்லுமென்றார்
வாழ்பாண்டிநாட்டார்க்கு வழிவிட்டுநில்லுமென்றார்
வையைவளநாட்டார்க்கு வழிவிட்டுநில்லுமென்றார்
வாசலணிகாக்கின்ற வார்கொள்ளிதான்கேட்டு
யார்காணுமன்னவனே யப்பாலேநில்லுமென்றாள்
எவர்காணுமன்னவனே யிங்கேவராதேயென்றாள்
அரண்மனையார்வுத்திரவு அப்படிக்குச்சொன்னார்கள்
உலகாண்டராசாக்கள் உள்ளேவிடாதேயென்றார்
திரியோதிரனருகில் சென்றுவருமளவும்
ராசர்திருமுகத்தைக் கண்டுவருமளவும்
உத்திரவுபெற்றுவந்து உங்களுக்குவழிவிடுவேன்
அந்தமட்டுநில்லுமென்றார் ஆரணங்குபோய்நடந்தாள்

வார்கொள்ளி திரியனை உத்திரவுகேட்கப்போகிறது.

எட்டடியும்ஓரடியாய் விட்டுமிகநடந்து
பத்தடியும்ஓரடியாய் பற்றிமிகநடந்து
ஒட்டம்பெருநடையாய் ஓடிவந்தாள்தாதியரும்
ஆடம்பலத்தில் அவ்வையார்சபைநடுவே
பேரம்பலத்தில் பெரியோர்சபைநடுவே
திரியோதிரன்முன்னேவந்து சொல்லுவாளொருவார்த்தை
ஐயாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
உமக்குமொருஐயாண்டு எனக்குமொருமூவாண்டு
மூன்றுவருஷமது முடிமன்னர்வாசலிலே
ஐந்துவருஷமது அணிமன்னர்வாசலிலே
வாளெடுத்துக்கைகொடுத்து வாசலிலேநில்லுமென்றீர்
கத்தியைக்கைக்கொடுத்து தலைவாசல்காருமென்றீர்
அன்றுமுதலின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
காணாதகாட்சியெல்லாம் கண்டேன்நெடுநாளாய்
பாராதகாட்சியெல்லாம் பார்த்தேன்நெடுநாளாய்
மண்டலத்துராசாக்கள் வாராதபேருமில்லை
சீமையுள்ளராசாக்கள் செல்லாதபேருமில்லை
காணாதராசரெல்லாங் கண்டதிந்தவாசலிலே
முடியோடுமுடிநெருங்கும் முடிமன்னரம்பலத்தில்
தங்கமுடிநெருங்கும் தார்வேந்தரம்பலத்தில்
அப்பெரியமன்னரெல்லாம் அடியென்றுசொன்னதில்லை
அடியென்றழைத்தவர்கள் ஆருமில்லைவையகத்தில்
வாடியென்றுசொன்னவர்கள் யாருமில்லைவையகத்தில்

வார்கொள்ளி திரியனுக்கு புனந்திரனுடைய பராக்கிரமங்கூறல்.

அவன்அடிஅடியென்றானே அண்டமதிர்ந்துவிழ
பிடிபிடியென்றானே பிண்டங்கலங்கிவிழ

பார்த்தால்பிராயம் பதினாறுங்காணவில்லை
எண்ணால்பிராயம் இருபதுங்காணவில்லை
துடுக்கென்றமீசையும் சூரக்கருங்குழலும்
சோலைக்கெதிராக மாதளம்பூச்சூரியனை
சாலைக்கெதிராக சந்திரனைப்போல்விளங்கும்
காஞ்சிநாடாளுங் கருணர்திருமுகமும்
தக்கப்புகழுடைய தருமரிடமேனியையும்
வெற்றிமதயானை வீமரிடகால்நடையும்
காண்டாவனமெரித்த காளையுடைகைவீச்சும்
நாமமுடியான் நகுலனிடையழகும்
அரையின்சொருகழகும் கத்திகட்டுவுள்மருங்கும்
கத்திசொருகழகும் கத்திகட்டுவுள்மருங்கும்
கச்சைகட்டுவுள்மருங்கும் கனிவாயுங்கண்மலரும்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டழகும்
பாரப்பதக்கம் பருத்தமுத்துத்தாவடமும்
தாளிப்பதக்கமுஞ் சன்னபின்னல்தாவடமும்
ஐந்துவிரல்களிலே அழகானமோதிரமும்
பத்துவிரலிலே பாங்கானமோதிரமும்
அவன்-ஆபரணஞ்சோதிமின்ன அடிஅடியென்றானே
அடிஅடியென்றானே அண்டமதிர்ந்துவிழ
பிடிபிடியென்றானே பிண்டங்கலங்கிவிழ
அவனுடையவாயாலே அடியென்னநாளாச்சோ
மன்னனிடவாயாலே வாடியென்னநாளாச்சே
இன்னமெந்தராசாக்கள் என்னடியென்பாரோ

வார்கொள்ளி கோபித்து வழிநடப்பது.

இனியிருப்பதில்லையென்று எழுந்திருந்தாள்மங்கையரும்
வாளெடுத்துகீழ்போட்டு வழியிட்டாள்மங்கையரும்
கத்திசுழட்டிவிட்டுக் கடுகெனவேபோகலுற்றாள்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
தட்டிநகைத்தார்கள் தார்வேந்தரெல்லாரும்
கைகொட்டிதானழைத்தார் கட்டழகரெல்லாரும்
துய்யர்குலத்திலே துரோணரவர்பார்த்து
அவர்-அங்காணிதொப்பை பசையமருங்கசைய
வாரோடிவாரோடி வார்கொள்ளிவாரோடி
அடியென்றுசொன்னவனும் ஆரென்றுநீயிருந்தாய்
எட்டாதபொன்னுலகங் கிட்டகெதிபெறுவேன்
வானேழுலோகம் வழியுங்கதிபெறுவேன்
தேவர்கள்சொர்க்கமது சேறுங்கதிபெறுவேன்
உன்னையடியென்றவனை தன்பேருரைக்கிறேன்கேள்

துரோணர் வார்கொள்ளிக்கு பதிலுரைப்பது.

உன்னை-வாடியென்றுசொன்னவன்தான் வானவர்கள்புத்திரனே
வானவர்கள்புத்திரண்டி மங்கைமணவாளனடி
தேவர்கள்புத்திரண்டி தேவிமணவாளனடி
கருநீலம்பூங்குழலாள் கலந்தாரிநாயகண்டி
தோகைமயிலனையாள் துற்சடையாள்புத்திரண்டி
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தீபன்புத்திரண்டி
ஆணலழகுமன்னன் அர்ச்சுனனார்புத்திரண்டி
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அழகானபுத்திரண்டி
ஆயிரம்பாண்டியற்கு அழகானபேரமைதான்
தேசத்தையாளுந் திரியோதிரன்புத்திரண்டி
நாலாங்கடுந்திரளார் நூற்றொருவர்புத்திரண்டி
அவனடியென்றதனால் ஆரணங்கேபழுதுமில்லை
என்றுமவருரைக்கயேதுசொல்வார்கொள்ளியும்

வார்கொள்ளி பதிலுரைப்பது.

வானவர்கள்புத்திரன் எண்ணுந்தரமறியேன்
மங்கைமணவாளன் எண்ணும்வகையறியேன்
தேவர்கள்புத்திரன் எண்ணுந்தரமறியேன்
வையைவளநாடான் எண்ணுந்தவமறியேன்
என்றுமவளுரைத்து எழுந்துநடக்கலுற்றாள்
வாளுருவிகைபிடித்து வந்தாளேமங்கையவள்
போரஞ்சாமன்னர் புனந்திரன்முன்னேவந்து
யானையின்கீழே அடிவணங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டமாதர் திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
போரஞ்சாமன்னர் புனந்திரற்கேதுசொல்வாள்
ஐயாபுனந்திரரே அடியேனொருவார்த்தை

வார்கொள்ளி புனந்திரனுக்கு வழிவிட்டது.

வானவர்கள்புத்திரன் எண்ணும்வகையறியேன்
மங்கைமணவாளன் எண்ணுந்தரமறியேன்
தேவற்குப்புத்திர னென்னுந்தரமறியேன்
தேவிமணவாளன் எண்ணுந்தரமறியேன்
வாழ்பாண்டிநாட்டானே வழிவிட்டுநீங்கினேன்
பாசத்திளவரையன் படைகூட்டந்தன்னுடனே
ஓடமயில்கண்ணனே வுட்கட்டில்போங்காணும்
என்றுமவருரைக்க ஏதுசொல்வாரிந்திரரும்
தர்மர்மகனுகையினால் தர்மமாய்நான்பொறுத்தேன்

வீமர்மகன்வந்தாக்கால் என்படுமோயுன்வாசல்
அர்ச்சுனனூர்புத்திர னுகையால்நான்பொறுத்தேன்
வீமன்மகன்வந்தாக்கால் வெட்டியெறிந்திடுவான்
வெட்டியெறிந்திடுவான் வீரமணிவாளாலே
குத்தியெறிந்திடுவான் குடல்கள்சரிந்திடவே
புண்ணியத்தையெண்ணிப் பொறுத்தேன்காண்வுத்தமியே

புனந்திரன் வார்கொள்ளிக்கு தேறுதல்புத்தியுரைப்பது.

வாழ்பாண்டிநாட்டார் வருவார்சிலபேர்கள்
வந்தபடைமன்னவர்க்கு வழிவிட்டுநீங்கிநின்று
மூன்றுநாளார்பொழுது முடிமன்னராளுவது
நாலாநாள்எங்களது ஆகுதுகாண்ராச்சியங்கள்
ரெட்டிப்புசம்பளம் நானேதருகிறேன்காண்
அஞ்சாதேஅஞ்சாதே ஆணழகியஞ்சாதே
எதுக்குமஞ்சாதே யிருமென்றுனிந்திரனும்
நல்லதிருமென்று நடந்தாரேபுனந்திரனும்
மற்றோர்படிநடந்தான் மன்னவனும்போகலுற்றான்
அங்கிருக்கும்வண்மைகளைக் கண்டானேமன்னவனும்
ஆனந்தவாதினமும் அவியாத்திருவிளக்கும்
ஆகுதுகாவலென்றான் அல்லித்திருமகனும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரைகளெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாமல்
நின்றபுனந்திரற்கு நீதிசொல்லமாட்டாமல்
நெஞ்சுலர்ந்துகாவலர் நித்திலங்குபூமுடியார்
பச்சைமுகங்கருகி பால்முகம்வேறுபட்டு
மன்னர்மனஞ்சலித்து மருமமாய்வீற்றிருந்தார்

புனந்திரரை தாதிவந்து காணுகிறது.

அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
இரங்கியேயானைமுன்னே எதிராகதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பயெழுந்திருந்து
மோதிரமின்னமுடிமேலேகைதொழுது
போரஞ்சாமன்னர் புனந்திரற்கேதுசொல்வாள்
தக்கப்புகழுடைய தருமரிடபூமுடியும்
வெற்றிமதயானை வீமரிடபூமுடியும்
காண்டாவனமெரித்த காளையவர்பூமுடியும்
நாமமுடியான் நகுலரிடபூமுடியும்
சாஸ்திரக்கொடியுடைய சகாதேவர்பூமுடியும்
ஐவருடமுடியும் அறிவேன்அறிவேனென்று
அறிவேன்அறிவேனென்று ஆணழகன்சோதித்தான்

அப்போதுதாதி அறியவெடுத்துரைப்பாள்
ஆணழகராதினமும் அழியாத்திருவிளக்கும்
மனுஷர்களேறாத மண்டபமுந்திருவிளக்கும்
காஞ்சிநாடாளுநங் கருணரிடகாவலென்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்தான்பார்த்து

புனந்திரன்கோபித்து கானருடைய மாளிகையை
யானையைவிட்டு இடிக்கிறது.

கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபம்பெரிதாகி
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தை கட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
சித்துடம்புவேர்த்துச் சிறுகண்சிவப்பேரி
ஐராவதம்போலே யானையைத்தானழைத்து
இடித்துநகத்தி எமபுரஞ்சேருமென்றான்
குத்திப்பிளந்துஅதைக் கோளாறுசெய்யுமென்றான்
யானையதுகேட்டு அப்படிக்கேநல்லதென்று
வெங்கண்சிவந்து வெளிவால்மிகமுறுக்கி
தும்பிக்கையைதூக்கி வருகுதுகாண் அவ்வானை
மண்டபந்தன்னருகில் மதயானைவந்துநின்று
கொம்பையசைக்கிக் குளம்பால்நிலம்பேர்த்து
தும்பிக்கையாலே சுழட்டிஅடிக்கிறது
மண்டபத்தைவேர்பிடிங்கி மண்ணோடேசாடிடுமாம்
அவியாதிருவிளக்கை அங்கனவேசாடிடுமாம்
ஆளேறுமண்டபத்தை யடங்கலுந்தானிடித்து
ஆகோரமுள்ளடக்கி அவ்வானைதான்திரும்பி
போரஞ்சாமன்னர் புனந்திரற்குதெண்டனிட்டு
இடித்துநகர்த்தினேன் எமபுரஞ்சேர்த்துவந்தேன்
என்றுமேசொல்லி யிருந்ததுஅவ்வானை
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
இன்னஞ்சிலதூதுவரை மன்னவனுந்தானழைத்து

புனந்திரன் தூதுவரைவிட்டு தனக்குசிம்மாதன
மண்டபம் நிருமிக்கிறது.

அங்குமொருவாதினங்கள் அழகாகசோடியென்றான்
அந்தநல்லதூதுவர்கள் அவ்வார்த்தைதான்கேட்டு

சொன்னபொழுதிலவர் சோடித்தார்மண்டபங்கள்
புனந்திரனுர்சொன்னபடி பொட்டெனவேசோடித்தான்
சோடித்துஆச்சுதென்று தொழுதிரங்கிதெண்டனிட்டார்
அப்போபுனந்திரனுர் அவ்வார்த்தைதான்கேட்டு
ஆளேறுவாகனமும் அழியாத்திருவிளக்கும்
மண்டபங்களுண்டுபண்ணி மன்னவனுமேலேறி

புனந்திரன் சபதம்.

நாலால்கடுந்திரளாற் நூற்றொருவர்பூமுடியை
காஞ்சிநாடாளுங் கருணரிடபூமுடியும்
தங்கைமணவாளன் தறுதலையன்பூமுடியும்
சாமத்துரோகி சகுனியு பூமுடியும்
தாமமுடியான் தைலாட்டன்பூமுடியும்
அறிவேன் அறிவேனென்று ஆதினங்கள்ஏறினன்
ஒறுமிக்க அறுத்திடுவேன் என்றுமிகயேறினன்
ஏறியேதானிருந்து இறங்கினன்மன்னவனும்
மண்டபத்தைவிட்டலவோ மன்னவனுஞ்சீழ்குதித்து

புலந்திரன் திரியோதிரன் கொலுவுக்குச் செல்லுகிற ஜனங்களைப்பார்த்து அதிசயப்படுகிறது.

படிபடியென்றான் யடிந்ததுஅவ்வானை
முகக்கம்பந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
கைத்தலத்வததட்டி கறுத்தானையேறினன்
அம்மானுந்தானும் அழகானையேறினன்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனங்களேறுமென்றான்
அப்படிக்கேநல்லதென்று அனைவோரும்ஏறினர்கள்
ஏறினபோதே யெடுத்தார்ரணவிருது
வாகனங்களேறியபின் வாசித்தார்சங்கத்தொனி
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
மற்றோர்படிகடந்தான் மன்னர்படையுயர்ந்தான்
மற்றோர் படிதாண்டி மன்னவனும்போகலுற்றார்
திரியோதிரன்கொலுவில் செல்லுசின்றராசாக்களும்
முடியோடேமுடிநெருங்கும் முடிமன்னரம்பலத்தில்
இரத்தினமுடிநெருங்க இராசாக்கள்போய்கடந்தார்
வச்சிரமுடிநெருங்க வாரார்கள்மன்னவர்கள்
செம்பொன்முடிநெருங்க சேனைபேர்சூழ்ந்திருப்பார்
தங்கமுடிநெருங்கத் தார்வேந்தர் அங்கிருக்க
தூரத்துராசாக்கள் சுருளோலைகொண்டுநிற்க
காதத்துராசாக்கள் கையோலைகொண்டுநிற்க

தேசத்துராசாக்கள் சேனைபேர்வந்திடுவார்
அங்கங்கேவத்துகளும் அரிச்சந்திரநாடகமும்
வாரவழிதனிலே வண்ணநல்லகூத்துகளும்
நடக்கும்வழிதனிலே ராசாக்கள்கூட்டங்களும
அத்தனையுங்கண்டானே ஆணலழகுமன்னன்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்தான்பார்த்து

புனந்திரன் போரெழுதி அம்மானுக்கு
திரியன் செல்வச்சிறப்பு கூறுதல்.

பொன்னுமலைநாடாளும் அண்ணுமுகம்நோக்கி
அய்யாவேநீர்கேளும் அடியேனொருவார்த்ஸத
என்னையாநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
இவர்பெருமையாருக்குண்டு இந்திரற்குநேராக
தேவேந்திரராசன் சிறப்புடையனென்பார்கள்
இந்திரராசாவும் இவருக்குஈடலவே
தேவேந்திரன்தானும் இவர்சிறப்புக்கீடலவே
குபேரனதுபட்டணங்கள் கோடியுண்டுஎன்பார்கள்
இவருடையராச்சியத்துக் கீடுசொல்லலாகாது
உத்தமனார்பட்டணத்துக் குவமைசொல்லலாகாது
அத்திபுரத்திற்கு அளகாபுரியீடலவே
வாழ்மதுரைபட்டணமும் மன்னர்பதிக்கீடலவே
எங்கள்-அத்திபுரத்தானுக்கு யாருமெதிரலவே
இந்திரராசாவும் இப்படிக்கேசொல்லனுமே
பொன்னுமலைநாடாளும் அண்ணுவும்ஏதுசொல்வார்

பொன்னுமலைநாடான் புனந்திரற்கு சொல்லுவது.

ஏன்காணுமன்னவனே இந்தமதியுந்தனுக்கு
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
அன்பத்தறுகாதம் ஆண்டிருந்தராச்சியங்கள்
அப்பெரியராச்சியத்தை ஆண்டிருந்தார்பாண்டியர்கள்
மைந்தருமில்லாதே மன்னர்மனஞ்சலித்து
மாளுகிறோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
ஆருயிரவர்க்கும் ஆணுமவள்பெண்ணுமவள்
பெண்பட்டங்கட்டியல்லோ பூமியரசாளுகின்றார்
எல்லையரசாண்டு யிருந்தாளே அல்லியம்மாள்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை

வெட்டித்தலைபிளந்து வீரபட்டமாண்டாளே
மன்னர் அருச்சுனனார் மாலையிடவேணுமென்று
கட்டழகியல்லியரைக் கலியாணம்பண்ணவென்று
மதுரைக்குவந்திருந்தார் மாயவரும் அருச்சுனரும்
மாறுவடிவுகொண்டு மறைந்திருந்தார்மன்னவரும்
வேல்புருவங்கண்ணாளும் வேட்டைக்குப்போனாள்காண்
கானகத்துவேட்டைகளாடிவருகையிலே
பெண்வேஷங்கொண்டாரே போர்விசையப்பெருமாளும்
ஆணழகியல்லியற்கு அம்புபொறுக்கித்தந்தார்
காலும்பிடித்தானே கதையொன்றுரைத்தானே
கதையொன்றுரைக்கையிலே கண்டாளேயல்லியரும்
ஆண்பிள்ளையென்றுசொல்லி யதட்டியெழுந்தாளே
கத்தியெடுக்கையிலே கடுகிநடந்துவிட்டார்
வேட்டைகளாடிவந்தாள் வேல்புருவங்கண்ணாளும்
மற்றுநாள்காலமே மன்னர் அருச்சுனரும்
தண்ணிக்குளத்தருகே தார்வேந்தர்வந்திறங்கி
அல்லியென்றுமெல்லியென்றும் அழுதுபுலம்புகிறார்
தண்ணிக்குவந்ததொரு தாதியர்கள்தான்கேட்டு
அல்லிக்குரைத்தார்கள் ஆக்கினைசெய்யவென்று
அப்போது அல்லியம்மாள் ஆக்கினைகள்செய்யலுற்றாள்
தூக்குமரத்திலே போடச்செலவுதந்தாள்
போனதொருசெங்கமலம் பொன்னுலகம்போய்ச்சேர்ந்தாள்
ஆற்றுமணலிலே போட்டுப்பிரட்டுமென்றாள்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்காண் அருச்சுனரும்
மாயனிடபுண்ணியத்தில் மன்னவருந்தான்பிழைத்தார்
காளியம்மன்கோவிலுக்கு காவுகொடுங்களென்றாள்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்காண்புண்ணியனும்
பூதக்கிடங்குதனில் போட்டடைக்கச்செலவுதந்தாள்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்காண்புண்ணியனும்
பாம்புகளைவிட்டுமே கொல்லுமென்றாளல்லியம்மாள்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்காண்மன்னவனும்
யானைமதமேற்றிக் கொல்லுமென்றாளல்லியரும்
அத்தாலுஞ்சாகாமல் பிழைத்தார்காண்புண்ணியனும்
நாகமதமேற்றிக் கொல்லுமென்றாள்நாயகியும்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்காண் அருச்சுனரும்
பைங்கிளியாள்தங்கையிலே பாவைப்பிச்சைவாங்கி
அள்ளியேநீருமிட்டு ஆணழகன்போய்நடந்தார்

மற்றுமொருநாளில் மாதவள் அல்லியம்மாள்
வேட்டைகளாடிவந்தாள் வேல்புருவங்கண்ணாளும்
தண்ணிக்களையாகித் தவித்துப்புலம்புகையில்
மாயன்பெருமாளும் மன்னவனாருச்சுனரும்
பார்ப்பானும்பாப்பாத்தி போலேவடிவெடுத்து
தண்ணிப்பந்தல்போட்டார்கள் தாங்களிருவருமாய்
அல்லிக்குத்தாகங் கொடுத்தார்காண் அருச்சுனரும்
வந்தசனங்களெல்லாந் தாகந்தெளிந்தபின்பு

அல்லி கிருஷ்ணாருச்சுனரை வளப்பம்விசாரித்தது.

ஆரம்மாவென்றுசொல்லி அல்லியவள்கேட்க
சின்னவயதல்லோ தெய்வப்பிராமணப்பெண்
குஷ்டரோகிஎன்புருஷன் கண்டீரோ ஆச்சியரே
இலட்சுமிநோன்பதுதான் நாளைக்குவருகுதம்வா
கையிலேகாசுமில்லை கடன்கொடுப்பாராருமில்லை
என்றுபுலப்புகையில் ஏதுசொல்வாளல்லியரும்
ஆனால்கேள்ஆச்சியரே அரண்மனைக்குவந்தாக்கால்
வேண்டியதுநான்தருவேன் விரதமுடித்திடுவாய்
கேட்டதுநான்தருவேன் நோன்புமுடித்திடுவாய்
அப்படிக்கேநல்லதென்று ஆரணங்குசம்மதித்தாள்
கூடிவந்துசேர்ந்தார்கள் கொம்பேரிடையாளை
மாளிகைவாசலிலே வந்தாரிருவருமாய்
இலட்சுமிநோன்பதுதான் நடத்துமென்றாள்மங்கையரும்

அல்லிக்குத் திருட்டுத்தாலி சம்பவித்தது.

சடங்குகள்செய்தாளே சதிரானபாப்பாத்தி
விஸ்தாரமாகவேதான் வேள்விநடத்தினளே
நடுச்சாமவேளையிலே நடத்துகிறார்நோன்புதனை
அந்தச்சமயத்தில் அல்லியருந்தூங்கிவிட்டாள்
அந்தச்சமயம் அதுவேளை தானறிந்து
யானைத்தலைபோலே அழகானமங்கிலியம்
அல்லியம்மாள்தன்கழுத்தில் கட்டினனப்போது
மங்கிலியந்தரித்து மன்னர்மறைந்துவிட்டார்
தாலிதரித்து நடந்தாரேஅர்ச்சுனரும்
கட்டினவிருதழுத்துக் கடுகெனவேபோய்நடந்தார்
பொழுதுவிடிந்தது பகவானுதித்தது
அங்கம்மாள்கோவிலுக்கு திருகாப்புஞ்சென்றது
சுந்தரமனைதாதியர்கள் அனைவோருங்கண்முழித்தார்

பவளசேனை தன்னுடனே பத்தினியுங்கண்முழித்தார்
கழுத்திலேமங்கிலியங் கண்டாளே அல்லியம்மாள்
அறித்துயெறிவோமென்றால் அறிவாளொடிந்துபோகும்
கத்திகொண்டறுத்தாலுங் கத்திரெண்டுதுண்டாகும்
ஆருயிரம்பாண்டியரும் அல்லியருந்தான்கூடி
ஆலோசனைகள்பண்ணி யல்லிப்பெருமாளும்

பாண்டியர்களும் அல்லியும் ராசாக்களுக்கு ஓலையெழுதி
சத்தியங்கூறச் சொன்னது.

அன்பத்தாறுதேசத்துக்கு அனுப்பினாரோலைதன்னை
அன்பத்தாறுதேசத்து ராசாக்கள்வந்தார்கள்
மண்டலத்திலுள்ளதொரு மந்திரிகள்வந்தார்கள்
சொக்கரிடவாலயத்தின் சிவகாமிச்சன்னதிமுன்
வந்தவந்தராசரெல்லாம் அந்தமுடன்வீற்றிருந்தார்
நெய்குடத்தைகாச்சியல்லோ கைதோயுமென்றாளே
நெய்குடத்தில்கைவைத்து நெல்லைகிமிட்டிவிட்டார்
வெற்றிமதயானை வீமரவரோடிவந்து

வீமன்நெய்குடித்தது.

நெய்குடத்தில்கைதோய்த்து நெய்யைக்குடித்துவிட்டார்
அம்பாரநெல்லையெல்லாம் அருச்சுனனார்வந்தெதித்தார்
அத்தையறிந்தாளே அல்லிப்பெருமாளும்
அவர்பேரும்ஊரும் அறிந்தாளே அல்லியம்மாள்
பட்டணத்திலுள்ள படைமன்னர் அத்தனையும்
யானைத்திரள்படையும் அழகானசேனைகளும்
குதிரைப்படைசேனைகளை கூட்டினாளல்லியரும்
ஐவர்மேற்சண்டைசெய்ய ஆணழகிவந்துவிட்டாள்
வந்துஅடித்தாளே வண்ணவண்ணகூடாரம்
அடித்தாள்ரணபேரி யண்டரண்டந்தானதிர
சண்டைக்குவந்தேனென்று தானடித்தாள்பேரிகைகள்
அந்தவிசேஷம் அதுவரிந்துதருமலிங்கம்
வீமனையும்மாயவரை யிருவரையுங்கூட்டிவிட்டார்
வீமரும்மாயவரும் வந்துமேபோர்கொடுத்தார்
இருவருமாய்சண்டைபண்ணி எதிர்நிற்கமாட்டாமல்
புறங்கொடுத்துஓடினார் பெருமாட்கஞ்சியல்லோ
ஆணுலழகுமன்னன் அருச்சுனனார்வந்தெதிர்த்தார்
அவராலேபோர்கொடுக்க மாளாதேமன்னவனும்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கையில்கணைசோர்ந்து
தேரொடிந்துவில்முறிந்து தேரைவிட்டுக்கீழ்குதித்து
உற்றவுயிர்சோர்ந்து ஓடினார்அருச்சுனரும்

சகாதேவன் அல்லியைக் கூண்டிலடைத்த சமர்த்துக்கூறல்.

சாத்திரக்கொடிவேந்தன் சகாதேவன் தானறிந்து
கூண்டுஒன்றுசொப்பனிட்டுக் கொண்டுவந்தான் தார்வேந்தன்
சூத்தானகூண்டென்று தோன்றுமலல்லியற்கு
சதிசெய்துவென்றாரே சமர்த்தன்சகாதேவன்
அல்லியம்மாள்தோற்றாளென்று அடித்தார்கள்பேரிகையை
எல்லவருந்தானறிய அரண்மனைக்குகொண்டுசென்று
சந்தோஷப்பட்டார்கள் சமர்த்தானராசாக்கள்
ஆறாயிரம்பாண்டியர்கள் அய்யன்மார்தாமறிய
மங்கிலியந்தான்பொருந்தி மன்னவனையுன்னைப்பெற்றார்
மதுரையாளுதற்கு மன்னவனையுன்னைப்பெற்றார்
பூலோகமாளுதற்கு புனந்திரரையீன்றெடுத்த
இப்பெருமையாருக்கு இந்திரரேசொல்லுமையா
பெண்பெருமையாருக்குண்டு புனந்திரரேசொல்லுமையா
அத்திபுரமும் அவராளுமரசுகளும்
மதுரைப்பெருஞ்சீமையது மண்டலத்துக்கீடாமோ
வையைப்பெருநாடு வாழ்மதுரைக்கீடாமோ
அல்லிப்பெருமையது அளவிடக்கூடாது
பெண்பெருமாள்தன்பெருமை புகழ்ந்திடலாகுமோதான்
இப்படிக்குச்சொல்லி யெடுத்துரைத்தார்மன்னனுந்தான்

புனந்திரர் மாமா பொன்னுமலை நாடானுக்கு
கோபவார்த்தை யுரைக்கிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
கதிக்குகதிமண்டி கண்கள்எரிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புத்தணலாகி
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபம்பெரிதாகி
நெற்றிப்புருவம் நெருப்பாய்அனல்பறந்து
சூரியமண்டலத்தை எட்டிச்சுவாலையமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலையமாய்
அண்ணுமுகம்நோக்கி மன்னவனார்ஏதுசொல்வார்
மாமாமுகம்நோக்கி மன்னவனார்ஏதுசொல்வார்
அம்பலத்துராசருக்கு ஆணழகியீடாமோ
மண்டலத்துராசருக்கு மாதரெதிராமோ
முத்துமுடிதரித்த ராசாக்கள்தன்னுடனே
வச்சிரமுடிதரித்த மண்டலீகர்தன்னுடனே

சரியாகச்சொன்னீரே தாரார்குழலாளே
வில்பிடித்துவேட்டையாட வல்லவியாள்என்றலவோ
பட்சமுடனுக மெச்சியெடுத்துரைத்தீர்
நீங்களோசொன்னகதை மற்றொருவர்சொன்னுக்கால்
மற்றொருவர்சொன்னுலே வாளுக்கிரையிடுவேன்
வாளுக்கிரையிடுவேன் மண்டைபிளந்திடுவேன்
ஆதிசிவனுனாலும் ஆண்மைகொண்டுயுத்தம்பண்ணி
பரமசிவனுனாலும் பத்திப்பிளந்திடுவேன்
மாயவனேயானுலும் யவன்மண்டைபிளந்திடுவேன்
ஈஸ்வரனேயானுலும் இருதுண்டாய்ப்போட்டிடுவேன்
தேவர்களேயானுலும் தெரிந்துஅடித்திடுவேன்
முனிவர்களானுலும் முறியஉடல்பிளப்பேன்
ஊருக்குமேற்கே உயிர்க்கழுவில்போட்டிடுவேன்
தாமணிக்கட்டி தரித்திடுவேன்பூமுடியை
மூக்கோடேநாக்கரிந்து மூன்முடியைசங்கரிப்பேன்
நாக்கோடேமூக்கறுத்து நகரைவிட்டுஒட்டிடுவேன்
என்றுமவருரைத்தா ரிந்திரராசர்வும்

புனந்திரனுக்கு சபையார் எடுத்துரைப்பது.

அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரைகளெல்லாம்
புனந்திரராசருக்கு புண்ணியர்களேதுசொல்வார்
பொன்னுமலைநாடாளும் அண்ணுவுரைத்ததற்கு
கோபித்துக்கண்சிவந்தீர் கொற்றவனுர்வீரியரே
வாடிமுகந்தளர்ந்தீர் மன்னர்பெருமாளே
ஆச்சியுடன்பெருமை அண்ணுயெடுத்துரைத்தார்
எதிரிகளைப்புகழ்ந்து இகழ்ந்தீரேஅண்ணுவே
மாற்றுனைத்தான்புகழ்ந்து வைத்தீரேஅண்ணுவே
என்றுமனந்தேற்றி இந்திரரைக்கொண்டணைத்தார்
கொற்றவனுர்கோபங் குணப்படுத்திக்கொண்டார்கள்
மன்னவனுர்கோபம் வழிப்படுத்திக்கொண்டார்கள்
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
ஆறினுர்கோபம் அமர்ந்தார்கொலுமேடை
தேறினுர்கோபம் தெளிந்தார்கொலுமேடை
பொன்னுமலைநாடாளும் அண்ணுமனங்குளிர்ந்து
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
இருவருங்கோபந் தணித்தார்களப்பொழுது
போரஞ்சாமன்னன் புனந்திரவீரியனும்
மற்றோர்படிகடந்தான் மன்னன்படையுயர்ந்தான்
மற்றோர்படிதாண்டி மன்னவனும்போய்புகுந்தான்

புணந்திரன் சின்னமெடுத் தூதுவது.

ஊதினான்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை உலகுதலை துழுக்க
செம்பொன்னாற்காளை திசைவிளங்கஊதினான்
பொன்னினாற்காளை பொருந்துமென்றாதினான்
என்னவென்றுஊதினான் இந்திரராசாவும்
கோனாதமாதவத்து குந்தியம்மாளென்பாட்டி
பாண்டுமகாராசன் பட்டத்தரசியவள்
பட்டத்தரசியவள் பாஞ்சாலிகுந்தியம்மாள்
தூருவாசர்மந்திரத்தால் துலங்கவந்தார்பஞ்சவர்கள்
பாண்டுராசன்பெற்றெடுத்த பஞ்சவர்களைவருண்டு
ஐவர்பஞ்சபாண்டவரை ஆச்சிபயின்றெடுத்தாள்
வாசமாம்குந்தி வடமதுரைவாழுதற்கு
காப்புடையகன்னியவள் காரணத்தால்வந்துதித்த
கோப்புடையகுந்தி குருமணியென்றாதினான்
ஏத்தம்மாவென்று இரணியனை மார்பிளந்து
தோற்றமாந்தூணிலே நின்றசுடரதுபோல்
அதற்கு-வாய்த்தமருமகனான் வந்தேனென்றாதினார்

ஐவர்மகனென்று புணந்திரன் சின்னமூதுவது.

பொய்யாதவாசகனார் புகழுடையதருமலிங்கம்
தக்கப்புகழுடைய தர்மரிடபுத்திரனார்
புத்திரனான்வந்தேனென்று ஊதினான்சின்னத்தொனி
பாரியதிண்டோளன் பகவிடும்பன்பற்பிடுங்கி
சாடிப்பொன்கொண்டுவந்தோன் தன்மகனென்றாதினான்
பெட்டிப்பொன்கொண்டுவந்தோன் புத்திரனென்றாதினான்
கைலைப்பதிநோக்கிக் கர்த்தரைக்கண்டலவோ
பரமருடன்வாதாடி பாசுபதம்பேறுபெற்றாய்
பாசுபதம்பேறுபெற்ற பர்த்தரிடபுத்திரனான்
அர்ச்சுனனார்புத்திர னறைந்தான்விருதோசை
எட்டாதபொன்னுலகம் ஏறிப்போயிந்திரபடை
கச்சேதிபுட்பமலர் கொண்டுவருஞ்சகாதேவர்
சகாதேவர்புத்திரனார் என்றுமவறாதினான்
நாமக்கொடியுடைய நகுலமகாராசர்
என்னைப்-பெற்றார்புழுப்புலியார்பிள்ளையென்றாதினான்
என்னைபெற்றதந்தையர்கள் என்றுமவனாதினான்

புணந்திரன் நூற்றொருவர் சின்னமூதுவது.

நூலர்ல்கடுந்திரளார் நூற்றொருவற்கென்றுசொல்லி
நூற்றொருவற்கென்றுசொல்லி சங்கெடுத்தூதினான்

தாமமுடியான் தயிலாட்டன்பூமிக்கு
சங்கெடுத்தூதினன் தழலாட்டன்பூமுடிக்கு
காஞ்சிநாடாளுங் கர்னருக்கென்றெடுத்தான்
கர்னருக்கென்றெடுத்த காளேசின்னமூதினன்
தங்கைமணவாளன் தருதலேயன்பூமுடிக்கு
தறுதலேயன்பூமுடிக்கு சங்கெடுத்தூதினன்
சாமத்துரோகிச் சகுனிபடுபாவி
இப்படியாகச்சொல்லி யெடுத்தான்விருதோசை
ஊதினன்கின்னம் உலகேழுலகதிர
ஊதினன்காளே உலகுதலே துமுக்க
செம்பொன்னற்காளே திசைவிளங்கஊதினன்
பொன்னினற்காளே பொருந்துமென்றூதினன்
இப்படிக்காயூதின னிந்திரராசாவும்

புனந்திரன் சின்னத்தொனியை திரியோதிரன்கேட்டு
கோபிக்கிறது.

ஊதினசின்னத்தொனி கேட்டாளுந்தமியும்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
உற்றுக்கேட்டானே வுத்தமனர்வீரியனும்
கோபித்துக்கண்சிவந்து கொல்லுங்குருவியைப்போல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபம்பெரிதாகி
நெற்றிப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தை சுற்றிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை யடுத்துச்சுவாலயமாய்
காஞ்சிநாடாளும் கர்னர்முகம்நோக்கி

திரியோதிரன் தர்மர்மேல் இகழ்ச்சியாக
கர்னருக்குச் சொல்லுவது.

காஞ்சிநாடாளுங் கர்னருக்கேதுசொல்வான்
கர்ண-விண்ணீர்புகழீர் விலாடநகரியிலே
தக்கபுகழுடைய தர்மரெழுந்திருந்து
அருந்ததொருபூநூலுங் கிழிந்ததொருபுத்தகமும்
அறுபதுசுக்கலாகபோனதொருபுத்தகமும்
புத்தகத்தைகைபிடித்து போர்மன்னர்தன்கொலுவில்
பஞ்சாங்கஞ்சொல்லுகிற பார்ப்பானேப்போலிருந்து
இச்சங்கள்சொல்லி யிடிச்சுண்டிருந்தானே
அவ்விருதைவூத அசந்தானேபேடிமகன்
உன்விருதுஎன்விருதும் ஊதயிவன்யார்காணும்

வீமன்பேரில் இகழ்ச்சி கூறுவது.

விண்ணீர்புகழீர் விலாடநகரியிலே
வெற்றிமதயானை வீமனவனேடிவந்து
எட்டுப்புழூட்டி அணைந்தடுப்பைதீமோதி
ஆச்சாவுந்தேக்கும் அகிலும்பிளந்தடுக்கி
நெட்டென்னகல்லை நெறித்துநெருப்பாக்கி
தென்கடலுமாணிக்கந் திரட்சியுமிசேர்த்து
வடகடலில்மாணிக்கம் வாரியுமிசேர்த்து
பானைகழுவி பனிநீரால்உலைவார்த்து
அசையாமல்சென்னீரை தூத்திமணல்பொறுக்கி
அரிசிபுகட்டி எடுத்தானே ஆணழகன்
இவ்விருதைவூத இசைந்தானேபேடிமகன்
உன்விருதும்என்விருதும் ஊதயிவர்காணும்

அருச்சுனன்பேரில் இகழ்ச்சி கூறுவது.

விண்ணீர்புகழீர் விலாடநகரியிலே
காண்டாவனமெரித்த காளையவனெழுந்து
ஆணழகுமன்னன் அருச்சுனன்தானெழுந்து
விலாடநகரியிலே வேணதொருபெண்களுக்கு
அவனுடையதேவியற்கும் வேணதொருபெண்களுக்கு
மங்கையர்கள் பூமுடிக்குமயிர்க்கோதியெண்ணெயிட்டு
மஞ்சளரைத்து மறவுக்குதண்ணீர்கொண்டு
அவர்களுக்குப்பூமுடித் தானணழகுமன்னன்
ஆட்டமுங்கூத்துகளும் அவர்க்கேற்றநாட்டியமும்
கற்றுக்கொடுத்தானே காளையருச்சுனனும்
அவ்விருதைவூத அசந்தானேபேடிமகன்
உன்விருதுமென்விருது மூதயிவர்காணும்

நகுலன்பேரில் இகழ்ச்சி கூறுவது.

நாமமுடியா னகுலனெழுந்திருந்து
கப்பல்குதிரைக் கனம்பெறவேகொண்டுவந்து
நல்லகுதிரை நலமாகக்கொண்டுவந்து
சீமைகுதிரைகளைச் சிறப்பாகக்கொண்டுவந்து
நாணயங்கள்தானுரைத்தான் ராசாக்கள்முன்பாக
குதிரைக்கதிகாரி யிவனென்றார்கொற்றவர்கள்
அப்படிக்கேநல்லதென்று ஆனந்தவாழ்மார்பன்
கொள்பிடுங்கிகொட்டினர் பில்பிடுங்கிவர்யிலிட்டான்
குதிரைகள்சாணிக் குவித்துண்டிருந்தானே

அவ்விருதைவூத அசந்தானேபேடிமகன்
உன்விருதுஎன்விருது வூதயிவர்காணும்

சகாதேவர்பேரில் இகழ்ச்சி கூறுவது.

விண்ணீர்புகழீர் விலாடநகரியிலே
தாமமுடியான் சகாதேவனேடிவந்து
இடைச்சிமனைகளெல்லா மிருந்ததொருமாடுகளை
காடுகள்மேடுகள் கண்டவிடங்களெல்லாம்
மாட்டைமிகமடக்கி மன்னவனும்பால்கறந்து
மோருக்குகணக்குசொல்லி மொக்கைப்பால்பொம்மையுண்டு
இடைச்சிமனைகளிலே இச்சகங்கள்தான்பேசி
இச்சகங்கள்தான்பேசி இருந்தானேபேடிமகன்
அவ்விருதைவூத அசந்தானேபேடிமகன்
உன்விருதும்என்விருதும் ஊதயிவர்காணும்
என்று-தேசத்தையாளுந் திரியோதிரனுரைக்க

கர்னர் கோபித்து துரியனுக்கெடுத்துரைப்பது.

காஞ்சிநாடாளும் கர்னரவர்கேட்டு
அவர்-சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நித்திலங்குபூமுடியான்
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
கதிக்குக்கதிமண்டி கண்களெரிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புத்தணலாகி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகமதாய்
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
மன்னன்மனஞ்சலித்து வார்த்தைகளேதுசொல்வான்
சொல்மாத்திசொல்லுரைப்பான் தோழன்முகங்கோணமல்
நீர்சொன்னவார்த்தையது கேளுமையாராசாவே
எப்படியிருந்ததென்றால் இந்திரராசாவே
நாராசங்காய்ச்சி நடுச்செவியில்விட்டாற்போல்
ஈயத்தைக்காய்ச்சி யிருசெவியில்விட்டாற்போல்
ஒடுருகக்காய்ச்சி வுருக்கிக்கவிழ்தாற்போல்
உச்சிமயிர்பிளக்க வுளிகொண்டிடித்தாற்போல்
வச்சுளிகள்கொண்டு மண்டைபிளந்தாற்போல்
எழைவுளியாலே எடுத்துயிழைத்தாற்போல்
பஞ்சவர்கள்பட்ட பரிபோகம்நீரறிவீர்

ஐவர்கள்பட்டதொரு ஆடல்கள்நீயறிவீர்
அம்மாத்திரமானாலும் அறிந்துமனதடக்கும்
கொஞ்சமேயானாலும் கொண்டுமேமனதடக்கும்
பஞ்சவர்கள்கையாலே படுகிறபாடத்தனையும்
நாளைத்தெரியுதப்பா ராசாக்கள்கையாலே
பின்னைதெரியுதையா மன்னவர்கள்கையாலே
என்றுமவனுரைத்து எழுந்தானேகருணராசன்
சிம்மாதனத்தைவிட்டுத் திகழக்குதித்திரங்கி
திரியன்முகம்நோக்கிச் சொல்லுவான்ஒருவார்த்தை

கருணர் திரியனை மாளிகைக்குப்போக வுத்திரவுவினவுவது.

மாளிகைக்குப்போய்வாரேன் மன்னவனேவிடையருளும்
போகச்சிலவருளும் போய்வாரேனென்றுரைத்தான்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
அப்படிக்கேபோகவென்று அரையன்விடைகொடுத்தான்
விடைபெற்றகருணராசன் விடைபட்டுவாராரே
அம்பலவாசலது தாண்டியேமன்னவனும்
போரஞ்சாமன்னர் புனந்திரனைக்காணவென்று

கருணர் புனந்திரனைக் காணவருகிறது.

எதிர்கொண்டுவாராரே எத்திலங்குபூமுடியான்
மன்னர்படைநடுவே மறுமன்னர்கூட்டத்திலே
போரஞ்சாமன்னர் புனந்திரற்குமுன்பாக
நடந்தார்கருணராசன் நாலுதிக்குந்தானதிர
எப்படிநடந்தாராம் எதிரெறிக்குஞ்சூரியன்போல்
காஞ்சிநாடாளுங் கர்ணர்வருகிறதை
போரஞ்சாமன்னர் புனந்திரனும்தான்பார்த்து
உற்றுறறுப்பார்த்தானே உத்தமனுர்சீர்வடிவை
பொன்னுமலைநாடாளும் அண்ணர்முகம்நோக்கி
மாமாமுகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
அம்மான்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
எதிர்காணவாரதொரு எத்திலங்குபூமுடியான்
தருமர்திருமுகமுந் தார்வேந்தர்பூமுடியும்
தருமர்பொருமைகளுந் தார்வேந்தர்பூமுடியும்
அன்னநடையும் அவர்போலத்தோணுகுது
தக்கப்புகழுடைய தருமரேன்றெண்ணுகிறேன்
ஆர்வரவுமாமா அரியவுரையுமென்றான்

பொன்னுமலைநாடான் கருணரென்று சொல்லுகிறது.

பொன்னுமலைநாடாளும் அண்ணவும்ஏதுசொல்வார்
ஆர்வரவுயென்று நினைத்தீர்காணணழகா

கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்பெற்றெடுத்த
தருமருக்குமூத்தவர்கள் ஆணழகாளன்றுரைத்தீர்
என்றுமவனுரைக்க ஏதுசொல்வாரிந்திரரும்
ஐவருக்குமூத்ததொரு ஆணுலழகரென்றும்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலக்கொழுந்துகருணரென்று
எனக்கும்பெரியதந்தை யிவரென்றுரைத்தீரே
ஐவருக்குமூத்தவரா யிவராயிருந்தாக்கால்
ஐயருடநகரம் அரசாண்டிருக்காரோ
பஞ்சவர்கள்தன்னுடனே பாருலகாளாமல்
திரியனதுநகரஞ் சேர்ந்திருக்கக்காரணமேன்
மாத்தானுடநகரம் வந்திருக்கக்காரணமேன்

பொன்னுமலைநாடான் புனந்திரற்கு கூறுவது.

பொன்னுமலைநாடாளும் அண்ணுவுந்தான்கேட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரற்கேதுசொல்வார்
ஆனல்கேள்மன்னவனே அந்தவரலாறு
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்நாயகியும்
அஞ்சுபிராயத்திலே அறியாதநாளையிலே
தூறுவாசமுனிக்குச் செய்தாள்பணிவிடைகள்
அந்தப்பணிவிடைக்கு மெச்சிமகாமுனியும்
ஐந்துமந்திரந்தன்னைக் கற்பித்தாரரசியற்கு
மந்திரவல்லமைக ளறிவாள்காண் ஆச்சியரும்
அதிலேயொருமந்திரத்தை தோத்தரித்தாள் அங்ஙனமே
சூரியமந்திரத்தைச் சொன்னளேவாயாலே
சொன்னவுடனகத் தோன்றினர்சூரியனும்
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்தன்னையவர்
பருவமதுண்டுசெய்து பட்சமுடனகை
கூடிக்கலந்திருந்தார் கொம்பனையாள்தன்னுடனே
அப்போதுகெற்பந் தரித்ததுஅழகாக

குந்தி சொல்வது.

கோணுதமாதவத்துக் குந்தியம்மாளேதுசொல்வாள்
அஞ்சுவயது அறியாதகாலத்திலே
நானுமொருபிள்ளைபெற்றுல் நாடெல்லாம்ஏசாதா
என்றுமவளுரைத்து சொல்லிபுலம்பினல்
பானுகுலத்துதித்த சூரியனுமேதுசொல்வார்
அஞ்சாதேபெண்மயிலே என்றுமவரெழுந்து
ஆணழகர்வீரியரும் அறைந்தார்தவடையிலே

அறைந்தஅறையாலே பிறந்தார்கருணரும்
கவசகுண்டலந்தன்னுடனே கன்னத்தில்தான்பிறந்தார்
கன்னத்தில்பிறக்கவே கருணரென்றுபெயருமிட்டு
குந்திதரித்திருந்த கோலவர்னபட்டாடை
முந்தாணிதன்னிலே கிழித்தாளொருமுழந்தான்
ஒருமுழந்தான்கிழித்து உத்தமர்க்குத்தான்போர்த்து
பஞ்சவர்னபேழையிலே குழந்தையைஉள்ளடக்கி
சாற்றியேபூட்டுவிட்டு விட்டார்கள்ஆத்துதனில்
ஆற்றில்குழந்தைவிட்டு சூரியரும்போய்நடந்தார்
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்போய்நடந்தாள்

கருணர் பேழையில் மிதப்பது.

ஆற்றிலேபேழை யமர்ந்துமிகத்தளும்பி
அத்திபுரத்தை அடுத்ததுஅப்பேழை
தேசத்தையாளுந் திரியோதிரன்தானும்
அவனுக்குத்தோழனவன் ஆணழகன்தச்சனவன்
ஆற்றங்கரையோரம் வந்தாரிருவருமாய்
ஆற்றிலேபேழையது அடித்துவரக்கண்டார்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
பெட்டிவருகிறது பேழையதுவென்னுதென்றான்
தாமமுடியானுஞ் தச்சனவனேதுசொல்வான்
பெட்டியதுவுன்னுதுகாண் பேழையதுவுள்ளிருக்கும்
பேழையதுவுள்ளிருக்கும் பூஷணங்களென்னுதென்றான்
இப்படியாகச்சொல்லி யிருந்தார்களிருவருமாய்
மேல்காற்றுமங்கே மிகவெள்ளந்தான்பெருகி
ஆறுபொங்கிநீர்தளும்பி அப்பெட்டிதான்மிதந்து
ஆற்றின்கரையோரம் அமர்ந்ததுபெட்டியது
குளத்தின்கரையோரங் கொண்டுவந்துமெதக்கிறது

தச்சனும் திரியனும் ஆற்றில் பேழையைக்கண்டெடுத்தது.

தச்சன்திரியனும் தானெடுத்தோர்பேழைதன்னை
இருவருந்தூக்கி யிசைந்துவழிநடந்தார்
மாளிகையில்நுழைந்தார்கள் மன்னவர்கள்தச்சனும்
பேழைதன்னைவுளிகொண்டு தாள்திறந்தானுத்தமனும்
பேழைதன்னைவுள்ளிருக்கும் பிள்ளையைக்கண்டார்கள்
தச்சனவனெடுத்து தானடந்தான்மாளிகைக்கு

குழந்தையயவனிடுக்கி கொற்றவனுந்தானடந்தான்

தச்சன் பிள்ளையையெடுத்துக்கொண்டுபோய்

வளர்த்துக்கொண்டிருந்தது.

மாளிகையில்கொண்டுவந்து மைந்தனை நீராட்டி
மைந்தனை நீராட்டி மலர்க்கண்ணிமையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
உச்சிதமான வுடமைகள்பலதிருத்தி
கோலவர்ணபூஷணங்கள் குழந்தைக்குத்தானணிந்து
வண்ணவண்ணபூஷணங்கள் மைந்தர்க்கலங்கரித்து
கொம்பிலேசிறுதேனும் கோதுபடாசர்க்கரையும்
மலையில்சிறுதேனும் நிகளாதசர்க்கரையும்
கூட்டிப்பிசைந்துமல்லோ கொற்றவர்க்குத்தானூட்டி
தள்ளிப்பிசைந்துமல்லோ தார்வேந்தர்தானூட்டி
பன்னீரால்வாயலம்பி பட்டாலேவாய்துடைத்து
ஈரம்உலர்த்தி யிழைசேர்ந்தபட்டுடுத்தி
மைந்தனைத்தானிடுக்கி வழிநடந்தான்மன்னவனும்
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு

தச்சன் திரியோதிரன் மாளிகைக்கு குழந்தையாகிய

கருணரை யெடுத்துக்கொண்டு போனது.

மாநகராளும் மகாராசன்மாளிசென்றான்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
அமுதுண்ணுமண்டபத்தில் ஆணழகன்போய்நுழைந்தான்
செம்பொன்முக்கால்நிறுத்தி செம்பொன்தளிகையிட்டார்
புலிமுக்கால்கள்நிறுத்தி பொன்னுற்றடுக்கையிட்டார்
இட்டதொருஆசனத்தில் ஏறியவர்வீற்றிருந்தார்
அங்குமொருதாதி அறிவுடையாள்சொல்லுகிறாள்
மாணிக்கக்கிண்ணிகளை வைத்தாரழகாக

திரியோதிரன்-௩௨-கிண்ணியில் பொசிப்பது.

முப்பத்திரண்டுகிண்ணி முடிமன்னர்க்கிட்டேவைத்தான்
அமுதுபடைத்தார்கள் ஆரணங்குதாதியர்கள்
பத்துவகைக்கறியும் பாலடிசல்போசனமும்
மற்றும்வகைக்கறியும் வண்ணவிதபோசனமும்
அத்தனையுங்கொண்டு அளித்தார்கள்தாதியர்கள்
போசனமும்வைத்து புத்துருக்குநெய்சொரிந்து
காராவின்நெய்சொரிந்து கட்டித்தயிர்வார்த்தார்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
அமுதுபொசித்திருந்தார் அழகானராசாவும்

அந்தவொருவேளையிலே வந்தானேதச்சனுந்தான்
மைந்தனைத்தானிடுக்கி வந்துபுகுந்தானே
குழந்தையைத்தாழவிட்டான் கொற்றப்போர்வீரியனும்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
அமுதுண் ணுங்கிண்ணியிலே அனேகவதிசயங்கள்
ஒருபிடிஅமுதெடுத்தால் மறுபிடியெல்லாம்புழுவாம்
மற்றுமொருகிண்ணியிலே அள்ளிப்பொசிப்பார்கள்
முப்பத்திரண்டுகிண்ணி முழுதும்புழுவாகும்
அந்தப்புழுக்களெல்லாங் கிண்ணியிலேமேய்ந்திருக்கும்

திரியோதிரன் கலத்துப் புழுவைநீக்கின குழந்தையாகிய
கர்னரை ஸ்ரீகாரங்கொண்டது.

அப்போதுகுழந்தையது அங்கேவிளையாடி
தண்டையசைய தவிழ்ந்துவிளையாடி
கிண்ணியருகில்வந்து மெள்ளெனவேகைதுவைத்தார்
கைதுவைத்தவேளையிலே கலத்துப்புழுவெல்லாம்
கலத்துப்புழுக்களெல்லாங் கண்டானேதிரியோதிரன்
புழுக்களுமாறிப் போசனங்களாச்சுதங்கே
மற்றசிலக்கிண்ணிகளை வைத்தாரெதிராக
அத்தனைகிண்ணிகளை அள்ளிற்று அக்குழந்தை
முப்பத்திரண்டுகிண்ணி முடிமன்னர்கையைவைக்க
புழுக்களுமாறி போசனங்களாச்சுதங்கே
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து

திரியோதிரன் சந்தோஷிப்பது.

பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
மைந்தனைவாரி மடிமேலேகொண்டணைத்து
கைத்தலத்தைத்தானெடுத்துக் கண்ணிலேஒத்திக்கொண்டான்
உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவிப் பவளவாய்முத்தமிட்டு
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேவைத்திருந்து
பிள்ளைமுகம்பார்த்துப் பூரித்தான்திரியோதிரன்
தச்சன்முகம்நோக்கி தார்வேந்தனேதுசொல்வான்
அப்பாவேசிற்பாச்சாரி அடியேனொருவார்த்தை
எந்தன்மனதுக் கிசைந்தர்ப்போல்வாக்கருளும்
சிந்தையிலேயெண்ணி கேட்குதற்குவாக்கருளும்
திராசுகொண்டுவந்து தட்டில்குழந்தைவைத்து
திரவுகோல்தானெடுத்து மைந்தரைத்தானிறுத்தி
குழந்தையளவுக்கு கொடுக்கிறேனிரத்தினங்கள்
பிள்ளையளவுக்குப் பேரடுகிறேனிரத்தினங்கள்

திரியோதிரன் தச்சனுக்கு குழந்தையிடைக்குப்
பொன் கொடுத்தது.

குறுக்கொன்றும்பேசாமல் குழந்தையையீந்துவிடும்
மறுவார்த்தைசொல்லாமல் மைந்தரையீந்துவிடும்
என்றுமவனுரைக்க ஏதுசொல்வான் தச்சனவன்
மன்னவனுர்கேட்டதற்கு மறுவார்த்தைசொல்லாமல்
அரண்மனையார்கேட்பதற்கு அஞ்சிபயந்தவனும்
செங்கோல்முறைமைக்குமுன் சங்கீதமேருதென்றுன்
சித்தத்துக்கேத்தபடி செய்தருளிக்கொள்ளுமென்றுன்
உந்தன்மனதின்படி உகந்தருளிக்கொள்ளுமென்றுன்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
சந்தோஷப்பட்டுச் சரீரங்கள்பூரித்து
இடைக்கிடைரத்தினங்கள் யெடுத்துநிறுத்தினர்கள்
குழந்தையிடைகண்டு கொட்டினர்ரத்தினங்கள்
மைந்தனிடைகண்டு வாரியெடுத்தார்கள்

பிராமணரையழைத்து நாமகரணஞ்சூட்டினது.

வேதப்பிராமணர் வேதியரைத்தானழைத்து
சாஸ்திரங்கள்தான்பார்த்து சாதகங்கள்தானெழுதி
நாளதுகேட்டு நடுநாள்முகூர்த்தமிட்டு
நாமமுடியானுக்கு நாமகரணம்பண்ணிவைத்து
காஞ்சிநாடாளுங் கர்ணனென்றுபெயருமிட்டு
மூன்றும்வயதிலே முத்துமுடிதரித்து
நாலாம்வயதினிலே நாடாளச்சொப்பனிட்டு
ஐந்தாம்வயதிலே ஆணழகர்கர்ணருக்கு
இராச்சியமுறைமைகளை நன்றாய்தெரியவைத்து
ஏழாம்வயதிலே இளையபட்டங்கட்டிவைத்து

காசிநாட்டை கர்ணருக்குப் பட்டஞ்சமர்ப்பித்தது.

போதேவருந்தடங்கும் பொன்னுருவிநாயகியை
மாலைமுடியாற்கு மணமுகூர்த்தம்பண்ணிவைத்து
அன்றுமுதலின்றளவும் ஆண்டிருந்தார்ராச்சியத்தை
மனதுகுறையில்லாமல் வையகத்தையாண்டிருந்தார்
ஏதுகுரையில்லாமல் இனியரசையாண்டிருந்தார்
இழிகுலத்தான்மாளிகையில் யிருந்தபடியாலே
தேர்ப்பாகனென்றுசொல்லி எங்குமேபேராச்சு
காசிவளநாடாளுங் கர்னர்பெருமாளும்
ஐவர்க்குமூத்ததொரு ஆனந்தவாழ்மார்பன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலக்கொழுந்துயிவர்காணும்
உனக்குப்பெரியதந்தை என்றுரேஉத்தமனார்

புனந்திரன் கர்ணரைக்காணுகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்கேட்டு

யானைவிட்டுக்கீழிறங்கி யானந்தவாழ்மார்பன்
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருந்தானெடுத்து
காஞ்சிநாடாளுங் கர்ணருக்கெதிரேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
தந்தையார்சீர்பாதம் வணங்கினான்தார்வேந்தன்
வந்துபணிந்தவரைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து

கர்னர் புனந்திரனை வாழ்த்துகிறது.

வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சூட்டிடுவீர்
சினத்தார்கள்முடியைச் செண்டாட்டமாட்டிடுவீர்
பகைத்தார்கள்பூமுடியை பருந்தாட்டமாட்டிடுவீர்
மாத்தான்படைநடுவில் மன்னர்களைவென்றிடுவீர்
மதுரைப்பதியாள மைந்தர்களைப்பெற்றிடுவீர்
அத்திபுரமாள ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
மாதர்களைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவீர்
கன்னிகளைமாலையிட்டுக் காளைகளைப்பெற்றிடுவீர்
பெண்களைமாலையிட்டு புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைகளபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்த்திவிடைகொடுத்து மாரோடேகொண்டணைத்து
காளைமுகம்நோக்கி கட்டழகரேதுசொல்வார்

மறுபடியும் கர்னருரைப்பது.

தர்மர்வலுவெழுந்தீர் தம்பிமார்தோளெழுந்தீர்
வீமர்வலுவெழுந்தீர் விசையனார்தோளெழுந்தீர்
ஒப்பிவிட்டவாளை வுரையுருவிவிட்டாற்போல்
தப்பிவிட்டீர்நீருமிப்போ தம்பிபுனந்திரரே
வாயாரவாழ்த்தி மனதைப்பெரிதுபண்ணி

ஐயாபுனந்திரரே ஆணழகாநீர்கேளும்
வந்தவகையறியேன் மன்னுபுனந்திரரே
தேசத்தையாளுந் திரியோதிரன்சபையில்
தாமமுடியான் தைலாட்டானங்கிருப்பான்
அவரைநீகண்டாலே ஆசாரம்பண்ணுமென்றார்
ஆசாரம்பண்ணி அகலப்போய்நில்லுமென்றான்
கோணுதமாதவத்துக் குருக்களுமங்கிருப்பார்
அவரைநீகண்டாலே ஆசாரஞ்செய்யுமென்றார்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான் —
அம்பலத்துவாசலிலே ஆசனங்கள்சொப்பனிட்டான்
நீவந்தவிசேஷ மதுவறிந்துமன்னவனும்
ஆழக்குழிதோண்டி அமைத்தான்படுகுழிகள்
ஈட்டிபிடிமன்னவர்கள் ஏழுநூறுகோடியுண்டு
கத்திபிடிமன்னவர்கள் கஸ்தியர்கோடியுண்டு
வாள்கத்திசூலாயுதம் வளவுதடிசக்கரங்கள்
இத்தனையுங்கொண்டு அமைத்தான்படுகுழியில்

மறுபடியும் கர்னர் புத்திகூறுவது.

படுகுழிக்குமேலாக பச்சைதுகில்விரித்து
பூவாலேஆதிணங்கள் போட்டார்கள்புனந்திரற்கு
ஆணழகனம்பலத்தில் ஆசனஞ்சென்றேற
தட்டோடேவெற்றிலையும் சாதிக்காய்லவங்கங்களும்
கொத்தோடேபழக்குலையும் குடுமியுள்ளதேங்காயும்
மல்லிகைப்பூமாலைகளும் மார்நிறைந்ததாவடமும்
கச்சாயவர்க்கமெல்லாங் கட்டழகன்தானெடுத்து
உன்னையெதிர்காண வருவார்காணுத்தமனே
மன்னவன்கையிலே மாலைதரித்தாலே
மாலைதரித்தாலே மைந்தர்புனந்திரரே
கச்சாயந்தீண்டாதே கட்டகர்வீரியனே
இத்தனையுஞ்சொல்லி யிருந்தாரேகர்னரப்போ
போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்கேட்டு
அப்படிக்கேநல்லதென்று அடிவணங்கிதெண்டனிட்டான்
தெண்டனிட்டமைந்தனைக் கண்டுமந்தகர்னருமே
ஏற்குமோஏற்குமோ யிழிகுலத்தானவற்கு
ஏற்குமோயெந்தனுக்கு உந்தனிடகும்பிடுதான்
சாதிகெட்டவெந்தனுக்கு உந்தனிடகும்பிடுதான்
ஐயாபுனந்திரரே ஆகாதுவென்றுரைத்து
என்றவுரைகேட்டு ஏதுசொல்வானிந்திரனும்
அதேதுஎன்னையா அதிசயமாய்நீருரைத்தீர்

புனந்திரர் கர்னனுக்குச்சொல்வது.

ஐவருக்குமூத்தவர்நீர் அப்படிக்குச்சொல்லலாமோ
என்றுமவனுரைத்து யிந்திரராசாவும்

சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்து
அரகராவென்று அமர்த்திஅலேதாரன்
ஐயாநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னையாநீர்கேளும் யின்னமொருவார்த்தை
ஐயரிடராச்சியத்தை யாளுதுங்காணுத்தமனே
மதுரைபெரும்பட்டணத்தை யாளுமென்றூர்மன்னவனும்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
மாயனருளாலே மன்னவனேநானறுப்பேன்
சொக்கரருளாலே அறுப்பேனொருக்ஷணத்தில்
அவர்கள்குடிவேரறுத்து அரசாளவைப்பேன்யான்
அத்திபுரத்தை அரசாளுமையாவே
ஐவரும்நீரும் அரசாண்டிருந்தாக்கால்
தர்மரும்வீமரும் தார்வேந்தரர்ச்சுனரும்
நகுலசகாதேவ ராசாக்களைந்துபேரும்
உமக்குகைகட்டிமெய்யுரைத்து கட்டழகர்தாமிருப்பார்
அடிகீழ்முடிசாய்ப்பார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
அப்படிக்கேநீரிருந்து ஆளுமென்றான்ராச்சியத்தை
காஞ்சிநாடாளுங் கர்ணரதுகேட்டு
மைந்தர்முகம்நோக்கி மறுவார்த்தையேதுசொல்வார்

கர்னர் புனந்திரற்கு உரைப்பது.

ஐயாபுனந்திரரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்கேள்
தேசத்தையாளுந் திரியோதிரராசன்
என்னை-வளர்த்தஅருமைகளும் வைத்திருந்தநேர்த்திகளும்
பிள்ளையருமைகளும் பேரிட்டநேர்த்திகளும்
எனக்காசுப்பட்டதிவ ரெத்தனையோகோடியுண்டு
நான்வேட்டைக்குப்போனாலே வேல்பொருதுங்கண்ணனும்
மாளிவந்துசேருமட்டும் மண்டபஞ்சென்றேறான்காண்
எனக்காகப்பட்டதவம் எத்தனையோகோடியுண்டு
எழுதமுடியாது யேட்டிலடங்காது
பேர்தேவருந்தடங்கும் பொன்னுருவிநாயகிக்கு
மாலைதரிப்பதற்கு மன்னர்கள்தானறிய
அம்பத்தாறுதேசத்துக்கு அறைந்தார்பறையோசை
மண்டலத்துராசாக்கள் வந்தார்கள்பந்தலுக்கு
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
என்னைவரவழைத்து யெனக்குமிகவலங்கரித்து
என்னையழைத்து நடந்தார்காண்பந்தலுக்கு

இழிகுலத்தானென்றுசொல்லி கர்ணரையிகழ்ந்தது.

ஆசாரிப்பிள்ளையென்று அனைவோருமாகாதென்றார்
தச்சனிடபிள்ளையென்று தள்ளிவிட்டாரென்னையவர்
அப்போதிரியோதிரன் அரசாளும்ராசமன்னன்
சிம்மாசனமேறித் தேன்மொழியான்வீற்றிருந்தான்

என்னையவர்தள்ளிவிட்ட சேதியவரறிந்து
மண்டலத்தார்தானறிய மடிமேலேகொண்டணைத்தார்
மண்டலத்துராசாக்கள் வந்தசபைநடுவே
தேசத்துராசாக்கள் யிருக்கும்சபைநடுவே
போதேவருந்தடங்கண் பொன்னுருவியென்னுச்சி
மாதரிளங்கொடியாள் மாலைசுழற்றிவந்தாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
மாலையிடுங்களென்று மாயவரைத்தானழைத்தான்
மாயர்பெருமாளும் மாயமாய்வந்துவிட்டார்

ஸ்ரீகிருஷ்ணர்வந்தது.

கெருடன்வடிவெடுத்து கெற்சனையிட்டுமல்லோ
மாதினிடகைமாலை பறித்தாரேமாயவரும்
மாலையிவர்பறித்த சேதியிவனறிந்து
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமாள்
கணையாழிமோதிரத்தைக் கழட்டிவிட்டார்பூமியிலே
என்னைக்குனிந்து யெடுமென்றார்மோதிரத்தை
குனிந்துஎடுக்கையிலே கோபாலர்மைத்துனரும்
மாலைநழுகவிட்டார் வந்துவிழுந்ததுகாண்
எந்தனிடகழுத்தில் விழுந்ததுபூமாலை
அங்கிருக்கும்ராசாக்கள் அனைவோருந்தான்பார்த்து
இழிகுலத்தான்தன்கழுத்தில் விழுந்ததுபூமாலை
தட்டிநகைத்துமல்லோ தார்வேந்தர்போய்நடந்தார்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்போய்நடந்தார்
போதவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
ஐம்பதுபேரய்யன்மார் ஆச்சிமாரம்பதுபேர்
அத்தண்டபேர்களும் அனைவோருமேதுசெய்தார்

பொன்னுருவி தாய்தகப்பன்மார் புறக்கடையாலோடுகிறது.

அடிசில்சமைத்திருக்க அத்தனையுந்தானெடுத்து
மண்ணைவெட்டித்தான்புதைத்து மன்னவர்கள்ஓடலுற்றார்
புறக்கடைவீதியிலே போய்நடந்தார்மன்னவர்கள்
அன்றுமுதலின்றளவும் அவர்கள்வரவுமில்லை
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
போதவருந்தடங்கண் பொன்னுருவிநாயகிக்கு
ஐயன்மார்சீர்போல நடத்தினானழகன்
ஏதுகுறையில்லாமல் யின்றளவுந்தான்பட்டான்
எனக்காகப்பட்டதவம் எத்தனையோகோடியுண்டு
மனமாறப்பட்டதவம் மன்னவனேகோடியுண்டு
மற்றுமொருநாளில் மன்னவரேயெந்தனுக்கு
காய்ச்சலடிக்கிறதும் கண்ணைச்சொருகிறதும்
விக்கலெடுக்கிறதும் வில்லாட்டம்வாடுகிறதும்
எட்டுநாளங்கனமா யிருந்தேன்படுக்கையிலே

பத்தியங்களுண்டு படுக்காவேயாகாதென்று
பேடைமயில்கண்ணுள் பெருந்திருவாள்நாயகியை
திரியோதிரன்பஞ்சணைமேல் நாமிருவர்வீற்றிருந்து
சொக்கட்டான்சூது சதுரங்கமாடினேன்காண்
திரியோதிரன்தேவி தோற்றாள்பெருந்திருவாள்
மாலைமுடியானும் மறவுக்குப்போகவென்று
எழுந்துநடக்கையிலே எத்திலங்குபூமுடியாள்
அவள்-முந்தாணிபற்றி யிழுத்தேன்காண்மன்னவனே
துகிலாடைபற்றி யிழுத்துமிருக்கையிலே
முத்தாலேகோர்த்த துகிலாடையத்தனையும்
பற்றியிழுக்கையிலே பலபலென்று தான்விழுந்து
கோர்த்தநூலற்று குலைந்ததுமுத்துகள்தான்
நிர்வாணமானாளே நித்திலங்குபூமுடியாள்
மானங்குலைந்து மறைவாகவோடுகிறாள்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
மாலைமுடியானும் வனவேட்டையாடியல்லோ
மான்வேட்டையாடியல்லோ வந்தாரரண்மனைக்கு
அங்கேநடந்த அதிசயமுள்ளதெல்லாம்
சொக்கட்டான்சூது சதுரங்கமாடினதும்
கோத்தமுத்துதாவடங்கள் குவிந்துகிடக்கிறதும்
ஆடைகளைந்துமவள் அம்பலமானதுவும்
மாலைமுடியாள் மறைவாய்ப்பிணங்கினதும்
அத்தனையுங்கண்டானே ஆளுழகுமன்னன்
அங்கிருக்குந்தாதியர்கள் அனேகம்பேரேதுசொல்வார்

தாதிகள்சொல்வது.

இன்றுகர்ணர் மடிந்திடுவாரென்பார்கள்
செத்தான்கர்ணனென்று சொல்வார்களனேகம்பேர்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
தன்மேலிருந்த துகிலாடைதான்களைந்து
மாலைகுழலாட்கு மங்கையர்க்குத்தான்கொடுத்து
வாருங்காண்மங்கையரே என்றுமனந்தேற்றி
மாலைக்குழலாளை மடிமேலேகொண்டணைத்து
எந்தன்முகம்நோக்கி எனக்கிதவுதானுரைத்தார்
அந்தசகாயம் அதுதான்மறப்பேனே
எனக்காகப்பட்டதவம் எத்தனையோகோடியுண்டு
படவேணும்படவேணும் பார்த்தன்கையாலே
இன்னம்படவேணும் எழில்விசையனம்பாலே
தேசத்தையாளுந் திரியோதிரனுக்கு
செஞ்சோற்றுக்கடன்கழிக்க வேணுங்காணிந்திரரே

என்றுமவருரைத்து யெழுந்தார்கர்ணராசர்
போகவிடைதாருமென்று போர்கருணர்தான்கேட்க
கைதொழுதுயிந்திரனர் கட்டழகரேதுசொல்வார்
போய்வாருமென்றுசொல்லிப் பொன்னடிக்குதெண்டனிட்டார்
விடைபெற்றுத்தானெழுந்தார் வேந்தர்கர்ணராசன்
கர்ணரவர்போனபின்பு கட்டழகனிந்திரனும்

புனந்திரன் போவது.

மற்றோர்படிகடந்தான் மன்னன்படைஅயர்ந்தான்
மற்றோர்படிகடந்து மன்னவன்போகலுற்றான்
காசிவளநாடாளுங் கர்ணர்பெருமானும்
அம்பலஞ்சென்றேறி யானந்தவாழ்மார்பன்
தேசத்தையாளுந் திரியோதிரன்கொலுவில்
வந்துமிவர்வீற்றிருந்தார் மன்னர்கர்ணரங்கே
தேசத்தையாளுந் திரியோதிரராசருக்கு
காஞ்சிநாடாளுங் கர்ணரவரேதுசொல்வார்

கர்ணர் திரியனுக்குச் சொல்வது.

மதுரைப்பதியாளும் வாழ்பாண்டிநாட்டானும்
தம்பிபரிகொடுத்து வந்தானேதார்வேந்தன்
எதிரேபோய்காணுமென்றான் எத்திலங்குபூமுடியான்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
கச்சாயம்பூமலரும் கனம்பெறவேதானெடுத்து
தட்டோடேவெற்றிலையுஞ் சாதிக்காயேலங்களும்
கொத்தோடேபழவகையும் கொற்றவனர்தானெடுத்து
ஆளுந்தலையி லெடுப்பித்தானணழகன்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூசல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூசல்லடமாம்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
அத்தண்டவீரருடன் வாரானேதிரியோதிரன்
அம்பலத்துவாசல்விட்டு வாரானேஆணழகன்
போரஞ்சாமன்னர் புனந்திரன்முன்னேவந்து
ஐவர்வரவுகண்டு ஆணழகனிந்திரனும்

புனந்திரன் யானையின்மேலிருந்து வினவுகிறது.

ஆனையின்மேல்தானே யிருந்தபடியாக
வாளெடுத்துமுன்னேவந்து வணங்கினான்மன்னவனும்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
கரியானைமேலிருந்து தார்வேந்தனேதுசொல்வான்
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போற்கண்சிவந்து
குன்றுபோற்கண்சிவந்து கோபமதிகரித்து
நெத்திப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தை கிட்டிவருவதுபோல்

அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
போரஞ்சாமன்னர் புனந்திரரைத்தான்பார்த்து
தேசத்தையாளுந் திரியோதிரனேதுசொல்வான்

திரியோதிரன் சொல்வது.

ஐவர்கள்பெற்றெடுத்த ஆணழகவீரியரே
காளையர்கள்பெற்றெடுத்த சட்டழகனிந்திரரே
அழகியசீர்கொம்பனையா ளல்லித்திருமகனே
யானைவிட்டுக்கீழிறங்கி யடிபணிந்தாலாகாதோ
குதிரைவிட்டுக்கீழிறங்கி கும்பிட்டாலாகாதோ
வாளெடுத்துக்கீழிறங்கி வணங்கினாலாகாதோ
ஐவரிடவம்மிசத்துக் காகாதோமன்னவனே
குருகுலத்தார்வங்கிஷத்துக் கொவ்வாதோமன்னவனே
என்றுமவனுரைத்து ஏதுசொல்வான்திரியோதிரன்
கொண்டுவந்தகச்சாயங் கொற்றவர்க்குமுன்னேவைத்து
தான்கொண்டுவந்ததெல்லாந் தார்வேந்தர்முன்னேவைத்து
விந்திரர்முகம்நோக்கி யேதுசொல்வான்திரியோதிரன்

மறுபடியும் திரியோதிரன் சொல்வது.

தம்பிவலுவிழந்தீர் தம்பிமார்சீரழிந்தீர்
வீமர்வலுவிழந்தீர் விசையனார்சீரழிந்தீர்
ஒப்பிட்டவாளை வுறையுருவிவிட்டாற்போல்
தப்பிட்டீர்நீருமிப்போ தம்பிதனஞ்செயரே
ஆளப்பிறந்த அபிமர்முடியிழந்தீர்
அத்தானுந்தீராத அரவான்முடியிழந்தீர்
தாமமுடியான் கடோற்கஜன்முடியிழந்தீர்
ஆறிவிடும்ஆறிவிடும் அப்பாவேஆறிவிடும்
தேறிவிடுந்தேறிவிடும் தேவனேதேறிவிடும்
கச்சாயங்கொண்டுவந்தேன் காளைபொசியுமென்றான்
பலகாரங்கொண்டுவந்தேன் பாலகனேபுசியுமென்றான்
உண்டுபசியாறும் உத்தமனார்வீரியரே
தின்றுபசியாறும் காளையுடபுத்திரனே
இந்தாருமென்று யெடுத்துமவன்கைநீட்டி

புனந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
தம்பியைநான்கொடுத்து தற்சோர்ந்துநிற்கையிலே
உடற்பிறப்பைநான்தோற்று உயிர்சோர்ந்துநிற்கையிலே
ஒருவர்கள்தன்மனையில் உண்ணேனென்றான்பாலமிர்தம்
ஞாதங்கள்தீராதே திண்ணேன்காண்பாலமிர்தம்
மாலைதரிப்பதில்லை மன்னர்பெருமானே
தக்கோலந்தின்பதில்லை தனஞ்செயரேயென்றுரைத்தான்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு

மகுடமுடியசக்கி மர்மமுரையாமல்
அப்பலத்துவாசலிலே ஆணழகன்வந்தாலே
மண்டையுடைத்திடுவேன் வல்லுயிரைவாங்கிடுவேன்
பொய்யாசனமிடுவோம் பொற்கைவளர்பாண்டியற்கு
அத்தாலுஞ்சாகாமல் தப்பிப்பிழைத்தாரே
தப்பிப்பிழைத்தாரே தார்வேந்தர்பூமுடியை
எந்தவிதமானாலும் யிறக்கவழிதேடிடுவோம்
என்றுமனதிலெண்ணி யேகிநடக்கலுற்றான்

திரியோதிரன் சிம்மாசனம்வந்துவிட்டது.

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்திரும்பி
அம்பலத்துவாசலிலே ஆணழகன்வந்துநின்று
எரிநாகங்கொண்டவனும் ஏறினான்சிம்மாசனம்
அங்கிருக்குமன்னர் அரையாதுரைகளெல்லாம்
புத்திரரைக்காண நடந்தீரே புண்ணியரே
மைந்தரைக்கண்டு புகழ்ந்துவரவோடினதும்
அத்தனையுஞ்சொல்லுமென்றார் அங்கிருக்கும்வீரியர்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
போனதுவும்வந்ததுவும் புத்திரரைக்கண்டதுவும்
அங்கேநடந்த விசேடங்களத்தனையும்
சொல்லிக்குதித்தானே துரைகளுக்குமுன்பாக
அத்தண்டபேரும் அனைவோருந்தான்கேட்டு
நல்லதென்றுவீற்றிருந்தார் நாமமுடியார்கள்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
சாமத்துரோகி சகுனியைத்தானழைத்து

திரியோதிரன் சகுனிக்கெடுத்துரைப்பது.

அம்மான்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
வையைவளநாட்டான் வாரான்கொலுவுக்கு
வளநாடாள்புத்திரனும் வாரான்கொலுக்காண
கொம்பனையாள்புத்திரனை கொல்லவகைதேடும்
மாயன்மருமகனை மாளவழிதேடுமென்றான்
சாமத்துரோகி சகுனியவன்கேட்டு
மருமகன்முகம்நோக்கி மன்னவனேதுசொல்வான்
வளநாடிப்புத்திரனைக் கொல்லவேவேணுமென்றாள்
அர்ச்சுனனார்புத்திரனை யழகுபுனந்திரன்
அவனையேகொல்லுதற்கு அநேகம்பேர்வேணுமோ
ஆனந்தமார்பனுக்கு அனேகம்பேர்வேணுமோ
பொய்யாதினமிடுங்காண் பொய்கைவளநாடனுக்கு
ஆதினஞ்சென்றேறினால் அதிலேயறிந்திடுவான்
உள்ளிருக்குமன்னவர்கள் செல்லாயெரித்திடுவார்
செத்துமடிந்திடுவான் சிவலோகஞ்சேர்ந்திடுவான்
மாண்டுமடிந்திடுவான் வைகுண்டஞ்சேர்ந்திடுவான்

என்றுமவருரைக்க யெழில்நாகந்தான்கேட்டு
அங்கிருக்குந் தூதுவரை யரணழகன் தானழைத்து

தூதுவர்கள் குழிவெட்டி சூதுமார்க்கமாயிரங்கி
மருந்துகள் புதைப்பது.

ஆழக்குழிதோண்டி பமையுமென்றான்மன்னவரை
பாதாளலோகமட்டும் படுகுழிவெட்டுகிறான்
ஆழக்குழிதோண்டி ஆச்சுதென்றுதெண்டனிட்டார்
வண்ணலட்சமன்னர்களை விட்டானதில்நிரப்பி
ஈட்டித்துப்பாக்கிகளும் ஈயகுண்டுசக்கரமும்
வாங்குநல்ல ஆயுதமும் வளைதடிசக்கரமும்
கத்திதுப்பாக்கிகளும் கஸ்கிரியர்சேனைகளும்
அத்தனையுங்கொண்டு நிறைத்தார்படுகுழியை
படுகுழிமேலாதினங்கள் சொப்பனிட்டாரிந்திரற்கு
வச்சிரமிழைத்து முகப்புல்கல்லிழைத்து
முத்துமுடியாதினங்கள் சொப்பனிட்டாரிந்திரற்கு
ஆதினங்கள்சோடித்து ஆச்சுதென்றுதெண்டனிட்டார்
நாகக்கொடிவேந்தன் கேட்டுமனமகிழ்ந்து
நிறைந்தகொலுமுகத்தில் யிருந்தான்திரியோதிரன்
இப்படியாக இவனிருக்கும்வேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்

புனந்திரன் தைலாட்டான் மண்டபங்காணுகிறது.

மற்றோர்படிகடந்தான் மன்னன்படியுயர்ந்தான்
மற்றோர்படிகடந்து வாரானேமன்னவனும்
நின்றால்நிலாவுரைக்கும் நீலக்கால்மண்டபமும்
பார்த்தால்நிலாவுரைக்கும் பவளநல்லகோபுரமும்
முத்தாலேகால்நிறுத்தி முழுதிலுஞ்சொப்பனிட்டு
பளிங்குமாமண்டபங்கள் பவளத்தால்சொப்பனிட்டு
எங்கும்நிலாவெளிச்சம் யெத்திசையும்நீர்தெளிக்கும்
கண்கொள்ளாச்சேர்வையுடன் யிருக்குமாமண்டபந்தான்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
ஆருது ஆருது என்றானலேதாரன்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
தாதைக்குத்தாதை தைலாட்டான்மண்டபங்காண்
என்றுமவருரைக்க யிந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் தைலாட்டானைத்தொழுகிறது.

ஆனைவிட்டுக்கிழிரங்கி யானந்தவாழ்மார்பன்
பூவும்புதுமலரும் பொன்னருகு அட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
தாமமுடியான் தைலாட்டான்முன்னேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து

முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டமன்னவனை கண்டுமேதைலாட்டான்
நீ-ஆர்காணும்மன்னவனே அறியவுரையுமென்றான்
கண்ணில்லாயெந்தனுக்கு காணவுரையுமென்றான்

பொன்னுமலைநாடான் சொல்லுவது.

பொன்னுமலைநாடாளும் அண்ணவுமேதுசொல்வார்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
அன்பத்தாறுகாதம் ஆண்டிருந்தார்பாண்டியர்கள்
மைந்தர்களில்லாதே மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொன்று நீலிபட்டமாண்டவள்காண்
மன்னர்விசையன் மடலூர்ந்தமாதேவி
காளைவிசையன் கட்டழகன்மாதேவி
மதுரைப்பதியாளும் வையைவளநாட்டாள்
வையைவளநாட்டாள் வளநாடியல்லியரும்
அல்லிபயின்றெடுத்த அழகுபுனந்திரனார்
காண்டாவனமெரித்த காளையும்புத்திரனார்
என்றுமவனுரைக்க விழியில்லாதான்கேட்டு

தைலாட்டானுரைப்பது.

ஐயாபுனந்திரரே அழகுள்ளகண்மணியே
ஐவர்க்குநூற்றுவர்க்கும் அழகுள்ளகண்மணியே
எங்கள்குடைவிளங்க வந்துதித்தரத்தினமே
ஐயாவருக அழகுள்ளகண்மணியே
என்றுமவருரைக்க யிந்திரருந்தான்பார்த்து
பாட்டன்திருவடியை பணிந்தானேபாண்டியனும்
காண்கிறேனென்றுசொல்லி கால்மேல்முடிசாய்த்தான்
கண்ணில்லாதான்பார்த்து கடுகெனவேவாழ்த்தலுற்றான்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வையகத்தையாண்டிடுவீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூண்போலே விளங்கஅரசாள்வீர்
என்னைப்பெறுவீர் எதித்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சூட்டிடுவீர்
சினத்தார்கள்பூமுடியைச் செண்டாட்டமாட்டிடுவீர்
பகைத்தார்கள்பூமுடியை பருந்தாட்டமாட்டிடுவீர்
மாத்தான்படைநடுவில் மன்னர்களைவென்றிடுவீர்

அத்திபுரமாள ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனமாரவாழ்த்தினார்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாயால்வாழ்த்தியபின் விழியில்லாதான்பார்த்து
எங்கியிருந்தாயிந்திரரே யென்றுமவன்வாரானே
அங்குமொருதூணை யடைவாகக்காண்பித்து
மற்றுமொருதூணில் மறைந்தாரேயிந்திரரும்

குருடன் தூணைகட்டிநெறித்தது.

கண்ணில்லான்தானெழுந்து காவலுந்தான்பார்த்து
புனந்திரனைக்கட்டி யணைப்பதுபோல்புண்ணியனும்
தூணைகட்டிதான்பிடித்தார் துன்னீலங்கண்ணனும்
அப்பாமகனேயென்று யணைத்தானேகற்றூணை
அணைத்துப்பிடித்து அழுத்திநெரித்தானே
இவன்-கட்டநெரித்ததினால் கற்றூணுநெரிந்தது
சேர்த்துபிடித்ததி லற்றதுகற்றூணு
கற்றூணுமிற்று கலங்கிறதுமண்டபங்கள்
நாடுகலங்கி நகருகள்தத்தளித்து, பூமிகலங்கிப் புழுதிபாக்கிறது
அண்டரண்டந்தானதிர ஆகாயமிற்றுவிழ
கண்டகண்டமன்னரெல்லாம் கைகள்நடுங்கலுற்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்பார்த்து
தாதைக்குத்தாதை தைலாட்டனேதுசொல்வான்
பாட்டன்முகம்நோக்கி பாண்டியனுமேதுசொல்வான்
என்னையாநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
ஆணழகர்பஞ்சவரை ஐவரைருந்தானழைத்து
வெற்றிமதயானை வீமருக்குஎண்ணையிட்ட
முழுதுங்குளந்தனிலே முழுதுமேவாசிநட்டு
குளிக்குந்துறைகளிலே கொண்டமட்டும்நட்டீரே
அத்தானுந்தப்பிப் பிழைத்தார்களாணழகர்
மாயனிடபுண்னியத்தால் மன்னர்பிழைத்தார்கள்
அன்னமிடவழைத்து அன்னத்தில்நஞ்சையிட்டீர்
மதகரியான்வீமராசன் வாரியல்லோவுண்டானே
உண்டுமடிந்தானே உத்தமனார்வீரியனும்
மாயரொருசந்நியாசி வேஷமெடுத்துமல்லோ
மருந்துப்பைதோளில்வைத்து மன்னவரையெழுப்பிவிட
அத்தானுந்தப்பி பிழைத்தார்களாணழகர்
மாயனிடபுண்ணியத்தால் மன்னர்பிழைத்தார்கள்
ஆயரிடபுண்ணியத்தால் ஐவர்பிழைத்தார்கள்
ஐவரையுந்தானழைத்து அம்பலங்களேற்றிவைத்து
மாயத்தால்சூதாடி மண்ணிழக்கமண்பறித்து

மாதைத்துகிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
சோதைத்துகிலுரிந்து கொற்றவரைக்காடோட்டி
பருக்கல்உருத்த பனிவந்தலைமோத
ஓடும்பருக்கை உள்ளங்கால்தானுறுத்த
கவிழ்ந்தமரத்தடியில கண்பள்ளிகொண்டிருந்தார்
ஐவருயிர்பிழைக்கப் புண்ணியரேமன்னவரே
பஞ்சவர்கள்மாள நினைந்தீர்கள்பாவிகளே
அப்படிக்குயென்னை நெறிக்கநினைந்தீரே
நீ.கண்ணில்லாரானதினால் கலியுகத்தில்வாசம்பண்ணீர்
விழியில்லாராகையினால் யிருந்தீரோ விண்ணுலகில்

மறுபடியும் புனந்திரன் சொல்வது.

உந்தனதுபுத்திரர்கள் நூற்றொருவரல்லாது
நூற்றொருவரல்லாது வேற்றொருவராகாதோ
மன்னவர்களல்லாமல் மற்றொருவராகாதோ
எல்லவரையுங்கொன்று ஆளணுமோராச்சியத்தை
என்றுமவனுரைத்து யெழுந்திருந்தானிந்திரனும்
படிபடிஎன்றான் படிந்தது அவ்வானை
மூதக்கம்பம்தட்டி முதுகின்மேல்கையைவைத்து
கைத்தலத்தைத்தட்டி கறுத்தானையேறினான்
அம்மானுந்தானும் அழகானையேறினார்
மாமாவுந்தானும் மதயானையேறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
மற்றோர்படிகடந்து வாறானேமன்னவனும்

புனந்திரன் திரியோதிரன் சிம்மாதனம் வருவது.

தேசத்தையாளுந் திரியோதிரன்கொலுவில்
அம்பலத்துச்சேர்வைகளும் அழகுள்ளமன்னாகளும்
அம்பலத்துவாசலிலே யனைவோரும்வீற்றிருந்தார்
தேசத்தையாளுந் திரியோதிரனாரும்
செண்டாடுமன்னன் திரியோதிரனழகும்
நூலால்கடுந்திராளார் நூற்றொருவராசாக்களும்
பாட்டனார்வீஷ்டுமரும் பாரறியத்துரோணரும்
சிற்றப்பவிதுரனுஞ் சீருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியும்
தங்கைமணவாளன் தறுதலையான்வீரியனும்
அம்மான்சகுனி யவன்தோழனானவனும்
ஈட்டிப்பிடிமன்னர் யிருபுறமுஞ்சூழ்ந்துநிற்க
கத்திபிடிமன்னவர்கள் கஸ்திரியாசூழ்ந்துநிற்க
முத்துமுடிதரித்த முடிமன்னரங்கிருக்க
இரத்தினமுடிதரித்த ராசாக்களங்கிருந்தார்
மகுடமுடிதரித்த மந்திரிகளங்கிருந்தார்
இவரைச்சுற்றிசூழ்ந்திருப்பார் உக்ரகோடிசேனைகளும்

வெளிபுரத்தில்வீற்றிருப்பார் அனேகங்கோடிமன்னவர்கள்
அந்தச்சமயத்தில் அழகுபுனந்திரனர்
வந்துவெள்ளம்சேனையுடன் வந்துமெள்ளவுள் நுழைந்தான்

புனந்திரன் திரியோதிரன் சபையில்வந்தது.

ஆனைவிட்டுக்கீழிறங்கி ஆனந்தவாழ்மார்பன்
வாளுருவிகைபிடித்து வல்லயத்தைதோளிலிட்டு
கத்தியுருவி நடந்தானேகட்டழகன்
போரஞ்சாமன்னர் புனந்திரருமுள் நுழைந்தார்
நிறைந்தகொலுநடுவே நித்திலங்குபூமுடியான்
வந்துமங்கேநின்றாரே மைந்தர்புனந்திரரும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரையரெல்லாம்
எழுந்துவந்துகைகொடுத்தா ரிந்திரானவற்கு
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
பூவும்புதுமலரும் பொன்னறுகு அட்சதையும்
கோணுதமாதவத்துக் குருக்களுக்குமுன்னே வந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்துபூமலரை குபுகுபென் றுதான்சொரிந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னன் திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
கோணுதமாதவத்துக் குருக்களவர்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்துமவர் மார்போடேதானணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்.
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வீர்
போருக்குப்போவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
மாதர்களைமாலையிட்டு மைந்தரைப்பெற்றிடுவீர்
கன்னிகளைமாலையிட்டு காளைகளைப்பெற்றிடுவீர்
பெண்களைமாலையிட்டுப் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினர்
அட்சதையும்பூவுமல்லோ அள்ளியவர்கைகொடுத்தார்
போரஞ்சாமன்னர் புனந்திராசாவும்
ஒருகையால்வாங்காம லிருகையால்தான்வாங்கி

இருகையால்தான்வாங்கி யிந்திரருந்தான்தரித்தார்
பாட்டனார்வீஷ்டுமரைப் பாதம்பணியலுற்றார்
அட்சதையும்பூவுமல்லோ அடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாயாரதான்வாழ்த்தி
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவிப் பவளவாய்முத்தமிட்டு
கைத்தலத்தைதானெடுத்துக் கண்ணிலேயொத்திக்கொண்டு
அர்ச்சுனனார்புத்திரனே யாளுலழகுமன்னன்
வந்தகருமம் வகையேதுசொல்லுமென்றார்

புனந்திரன் சொல்லல்.

அப்போபுனந்திரரும் ஆணழகரேதுசொல்வார்
ஐவரையரு ஆழியசந்தாரும்
போபெற்றுடைய பெருமாளும்பாண்டவர்கள்
வேந்தர்பெருமாளும் வெளிமண்டபத்தில்வந்திருந்து
பேரப்பாரப்பா பெரியப்பாதங்களுக்கு
தூதுரைக்கவந்தேனென்று சொல்லியவனுரைத்தான்
பாட்டனார்வீஷ்மரும் கேட்டுமனமகிழ்ந்து
வந்தகருமம் முடியுங்காண்மன்னவனே
அந்தவுரைகேட்டு ஆணழகன்போய்நடந்தான்
மற்றப்பாவிதூரருக்குச் சீரடியைத்தெண்டனிட்டான்
சிலாபோட்டுதெண்டனிட்டான் மன்னவனார்சீர்பாதம்

விதூரர் வாழ்த்துவது.

வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
வந்தகருமம் வகையாய்முடியுமென்றான்
அப்படியேநல்லதென்று ஆணழகன்போய்நடந்தான்
காங்கையன்சீர்பாதம் கட்டழகன்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
ஆயிரம்பாண்டியர்களையன்மார்தன்சுகமும்
வளநாடுஅல்லியரும் மாதுசுகமோதான்
போரஞ்சாமன்னர் புனந்திரனாரேதுசொல்வார்
ஆண்டவனார்புண்ணியத்தால் அனைவோருந்தான்சுகமே
என்றுமவருரைத்து யிருக்கின்றவேளையிலே

திரியோதிரன் கர்ணரைப்பார்த்துரைப்பது.

தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
கர்ணர்முகம்நோக்கி கட்டழகனேதுசொல்வான்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்சீர்முகமும்
காஞ்சிநாடாளுங் கர்ணரேயுன்முகமும்
இருமுகமும்ஒருமுகமா யிருக்குதேவுந்தனுக்கு

மதுரைக்கொருபயணம் மன்னவரேபோனீரே
மாதரசி அல்லியவள் முழுகிக்குளிக்கையிலே
முழுகிக்குளிக்கையிலே முகத்தில்முழித்திரோ
முகத்தில்முழித்தாளோ வயிற்றிலடைந்தானே
டந்தன்முகம்பார்த்து பெற்றுளோபுத்திரனை
போரஞ்சாமன்னன் புனந்திரனைப்பெற்றளோ
என்றுமவனுரைத்து யிருந்தான்சபைநடுவே

கர்ணர் திரியோதிரனைப்பார்த்து கோபித்தல்.

காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
கெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
தோழன்முகம்பார்த்து சொலவாரொருவார்த்தை
ஆடலம்பலத்திலே அரசர்சபைநடுவே
இப்பெரியராச ரிருக்கும்சபைநடுவே
இராசாக்கள்முன்பாக நாடாதவார்த்தைசொன்னீர்
மன்னவர்முன்பாக மதியாதவார்த்தைசொன்னீர்
அறியாதநாளையிலே அடியேனைக்கொண்டுவந்து
தெரியாதநாளையிலே தேடியெனையெடுத்து
பாலமிர்தந்தானூட்டி வளர்த்தீரழகாக
நெய்யமிர்தமூட்டி வளர்த்தீரழகாக
மூன்றுபிராயத்திலே முத்துமுடிதரித்தீர்
நாலுவயதுதனில் நாகக்கணைக்கொடுத்தீர்
ஐந்துவயதுதனில் அப்பியாசவித்தைபண்ணீர்
ஆறுவயதினிலே ஆனைமேலேற்றிவைத்தீர்
எட்டாம்வயதுதனில் எனக்குள்ளவித்தையெல்லாம்
ஒன்பதிலுங்கற்றுக் கொடுத்தீரேஉத்தமரே
பத்தாம்வயதுதனில் பாருலகமாளவைத்தீர்
அன்றுமுதலின்றுருநாள் அடாபழிவந்ததில்லை
என்னைக்கடுமுகமாய் உரைத்ததில்லைஉத்தமரே
இன்றுபழிபாவம் என்னதோநானறியேன்
என்றுமனஞ்சலித்து யிருந்தாரொருபுறமாய்
மன்னர்மனஞ்சலித்து மர்மமாய்வீற்றிருந்தார்

புனந்திரன் திரியோதிரன் முன்பாகவந்தது.

போரஞ்சாமன்னன் புனந்திரராசாவும்
மன்னர்சபைதாண்டி திரும்பினரிந்தமுகம்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
ஆதினத்தைக்காட்டி அதின்பேரில்வீற்றிரென்றுன்
காஞ்சிநாடாளுங் கர்ணர்பெருமாளும்

கண்சாடைகாட்டினார் காவலம்பூவீரியரும்
அப்பெரியசாடை யறிந்தந்தயிந்திரனார்
சிம்மாதனத்தருகே திரும்பினாரிந்திரரும்
உற்றுற்றுப்பார்த்தாரே ஒளிபிறந்தகண்ணாலே
அப்பெரியஆசனத்தை ஆணழகனேதுசெய்தான்

புனந்திரன் தமக்கிட்ட சிம்மாதனத்தை எத்தியெறிகிறது.

வாளாலேஎத்தி எறிந்தானேவல்லாயன்
கத்தியாலெத்தி எறிந்தானேவல்லாயன்
எத்தியெறிந்தவுடன் கத்திவெளியாச்சு
கத்திவெளியாச்சு கஸ்கிரியர்வந்துவிட்டார்
ஈட்டிவெளியாகி யிடிமன்னர்வந்துவிட்டார்
ஜெட்டிகளுமல்லர்களுஞ் சேரவெளியானார்
அத்தண்டபேரையெல்லாம் ஆணழகன்தான்பார்த்து
எந்தனுயிர்வாங்க யிருந்தார்குழிதனிலே
வல்லுயிர்வாங்கவென்று வந்தீரோமன்னர்களே
உங்களதுயெண்ண முடியாதுஉத்தமரே
மன்னவனாரெண்ண மாளாதுமன்னவரே
சுற்றியெறிந்திடுவேன் சற்றுமனங்கோணாமல்
எமன்பதிதனக்கு யிப்போதனுப்பிடுவேன்
நமனாரிடபதிக்கு நானே அனுப்பிடுவேன்
செத்துமடிந்திடுவீர் சிவலோகஞ்சேர்ந்திடுவீர்
மாண்டுமடிந்திடுவீர் வைகுண்டம்சேர்ந்திடுவீர்
என்றுமவருரைத்து யிந்திரராசாவும்

புனந்திரன் சொக்கரைநினைத்துச் சிம்மாசனங்கேட்கிறது.

சோலைமலருடைய சொக்கரைத்தானினைந்து
ஆனைமலையுடைய அம்மனைத்தானினைந்து
ஏழுலகமாளுகிற பெருமானைத்தானினைந்து
சோலைமலருடைய சொக்கரேயென்குருவே
அன்றொருநாள்வேளையிலே ஆதிகையிலைவிட்டு
அல்லிமலர்நாயகியை கார்த்தீரோகர்த்தாவே
ஆச்சியைக்காத்ததுபோல் அடியேனைக்காருமையா
மாதாவைக்காத்ததுபோல் மைந்தனைக்காருமையா
மாற்றான்றன்வாசலிலே மண்டபஞ்சென்றேன்காண்
எதிராளிவாசலிலே ஆதினஞ்சென்றேன்காண்
வண்ணத்துகிலாசனங்கள் வரவனுப்பவேண்டுமையா
என்றுமிகத்தொழுதா னிந்திரராசாவும்
புனந்திரனார்தோததரிக்கப் புண்ணியருந்தாமறிந்து

சொக்கர் அம்மனுக்குரைப்பது.

சொக்கர்மனமகிழ்ந்து தோகையர்க்கேதுசொல்வார்
அம்மன்முகம்நோக்கி ஆதிசிவனேதுசொல்வார்
போராஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்

சூ துரைக்கப்போனானே சுந்தரப்பூமுடியான்
எதிராளிவாசலிலே சென்றானே பூமுடியான்
ஆதினங்களில்லாமல் ஆணழகர்மின றவிட்டார்
அங்கையர்கண்சுந்தரியை ஆதினமனுப்புமென்றார்
அங்கையற்கண்மீனாட்சி அம்மன் மனமகிழ்ந்து
வண்ணலட்சம்பூதங்களை வரவழைத்தாளட்சணமே
மாணிக்கச்சிம்மாசனந் தானேயலங்கரித்து
பூதங்கள்கைகொடுத்து போவென்றாளத்திபுரம்

பூதங்கள் சிம்மாசனமெடுத்துக்கொண்டு வருவது.

அத்தண்டபூதங்களும் அம்மனுரைகேட்டு
சுவாமிதிருமுடிக்கு சாஷ்டாங்கதெண்டனிட்டு
அம்மன்திருவடிக்கு அடிவணங்கிதெண்டனிட்டு
சிம்மாசனமெடுத்து திரும்புதுபூதமெல்லாம்
ஆகாயமார்க்கத்திலே அத்தண்டபூதமெல்லாம்
மேலேயெழும்பி விசயரிடத்திற்கு
காற்றோடுமேகங் கலந்துவரும்பாவனைபோல்
ஆற்றிலேவெள்ளம் அடித்துவருவதுபோல்
காற்றாய்ப்பறந்து கடுகவழிநடந்து
போரஞ்சாமன்னர் புனந்திரனார்முன்னேவந்து
இட்டதொருஆதினங்கள் ஏழுலகந்தத்தளிக்க
போட்டதொருஆதினங்கள் பூமிகிடுகிடென்ன
அண்டாண்டந்தானதிர ஆசனங்கள்போட்டுதங்கே

புனந்திரன் மனக்களிப்புடன் சிம்மாசனமேறியது.

போரஞ்சாமன்னர் புனந்திரனார்தான்பார்த்து
சிம்மாசனந்தன்னைக் கண்டுமனமகிழ்ந்து
சோலைமலருடைய சொக்கரைக்கைதொழுது
ஆனைமலையுடைய அம்மனைதெண்டனிட்டு
ஏழுலகமாளுகிற யெம்பெருமாளடிவணங்கி
அம்மனுக்கருளென்று ஆசனஞ்சென்றேறினான்
இட்டசிம்மாசனத்தி லேறியவன்வீற்றிருந்தான்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
திரியன்முகம்நோக்கி சொல்லுவாரொருவர்த்தை
மைந்தர்புனந்திரனார் வந்தாரேஅத்திபுரம்
பிள்ளைபுனந்திரனார் வந்தாரேஅத்திபுரம்
வந்தவகையறிந்து வார்த்தைகளைநீருரைத்து
சிந்தையிலுள்ளதெல்லாம் திரமாகத்தானுரைத்து
உச்சிதமரைகொடுத்து உத்தமரேபோகவிடும்
என்றுமவருரைக்க யேதுசொல்வான்திரியோதிரன்

திரியோதிரன் புனந்திரற்குக்கூறுவது.

காண்டாவனமெரித்த காளையிடபுத்திரனே
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தரிடசிர்மகனே

ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
பகையாளிதேரில் படைபெடுத்துவந்தானே
முன்னையும்பூசை முதல்பூசைதன்னுதென்றான்
மூத்துமுடிபாண்டியனும் பட்டுவிழுத்தானே
ஆளப்பிறந்த அபிமன்னன்தேவியவள்
விலாடபுரத்தான் புத்திரியாளுத்தரையும்
உன்-தம்பியுடதேவி தார்குழலாள்மாதருக்கு
தாலிகழட்டினையோ சன்னல்பின்னல்வாங்கினையோ
ஆரங்கழட்டினையோ ஆபரணம்வாங்கினையோ
கொப்புகழட்டினையோ கோர்வைமணிவாங்கினையோ
வளையல்கழட்டினையோ வாங்கினையோபூஷணங்கள்
ஏதுகருமமெனக்கறியச்சொல்லுமென்றான்
ஒன்றுமொளியாதே உரையுமென்றுமெந்தனுக்கு
போரஞ்சாமன்னர் புனந்திருந்தான்கேட்டு
கதிக்குக்கதிமண்டி கண்கள்பொறிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புத்தணலாகி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
முத்தியநாகம் விழியதுபோல்கண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலிபோல
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவும் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்தச்சுவாலயமாய்
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
தேசத்தையாளுந் திரியோதிராசருக்கு

புனந்திரன் திரியோதிரனுக்குத் தூதுரைப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திருமேதுசொல்வார்
பதினாறுநாளையிலே படைமன்னர்சண்டையிலே
பாரதமென்று படைபொருதும்வேளையிலே
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
முன்னேயும்பூசை முதல்பூசைதன்னுதென்று
மூத்துமுடிபாண்டியனும் பட்டுவிழுந்தானே
ஆளப்பிறந்த அபிமன்னன்தேவியற்கு
தாலிகழட்டினோம் சன்னல்பின்னல்வாங்கினோம்
ஆரங்கழட்டினோம் தாவடங்கள்வாங்கினோம்
கொப்புகழட்டினோம் கோர்வைமணிவாங்கினோம்
வளையல்கழட்டினோம் வார்கொப்புவாங்கினோம்
மாலைகழட்டினோம் மண்டபமேற்றிவைத்தோம்
அவளைச்சுற்றிபெண்டுகள் அணியிழைமார்காத்திருந்தார்

வைத்துச்சிறைகாக்க மண்டலத்தில்கோடியுண்டு
எங்கள்-தேனின்முடியாளுஞ் சிறைநாத்திருப்பாள்காண்
நாளை பதினேந்தாம்நாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
பாரதமென்று படைபொருதுர்வேளையிலே
ஆடியளக்கும் அமிர்தசமர்க்களத்தில்
இரத்தாறுஓடுகிற வேளையிலேவுத்தமனும்
இரத்தக்களறியிலே ராசாக்கள்கூட்டத்திலே
பாசுபதம்பேறுபெற்று பார்த்தன்கைதப்பாலே
வில்லாளிபார்த்தர் விசையர்கையப்பாலே
உன்-தங்கைமணவாளன் தறுதலையன்பட்டாலே
யுத்தகளத்தி லெட்டியறுப்பார்கள்
உன்-தங்கைமணவாளன் தறுதலையன்பட்டாலே
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தங்களுக்கு
தோகைமயிலனையாள் துற்சடையாள்நாயகிக்கு
தாலிகழட்டாதே சன்னல்பின்னல்வாங்காதே
பாரபதக்கமும் பருத்தமுத்துதாழ்வடமும்
கோர்வைப்பதக்கமும் குடமுத்துத்தாவடமும்
கொப்புக்கழட்டாதே கோர்வைமணிவாங்காதே
வளையல்கழட்டாதே வாங்காதேபூஷணங்கள்
மாலைமுடியாளை மஞ்சள்குளிக்கவைத்து
வாரியகூந்தலது வண்ணவிதக்கொண்டையிட்டு
சிவிமயிர்முடித்துச் சிமிள்போலக்கொண்டையிட்டு
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
அவள்-நீலவிழிகண்களுக்கு நிலைக்கவேமைதீட்டி
கருங்குருவிவாலதுபோல் கண்ணுக்குமையெழுதி
மங்கைநல்லாள்பூமுடிக்கி மல்லிகைமாலைசூட்டி
கொப்புமிகத்திருத்தி கோர்வைமிகத்திருத்தி
வளையல்திருத்தியல்லோ மற்றும்பணிதிருத்தி
பச்சைவடந்திருத்தி பாவாடையுந் திருத்தி
குப்புவடம்பச்சைவடம் உத்தமிக்குமிகசாத்தி
அத்தர்கதம்பப்பொடி அள்ளிமெய்மேல்பூசி
சாதிக்காயேலந் தனிமணமுங்கொண்டுவந்து
வாடாயிலைச்சுருளும் வண்ணத்துவர்பாக்கும்
ஏலம்லவுங்கம் பின்பக்களிப்பாக்கும்
சாதிப்பெருங்கடவம் சங்குசுட்டசுண்ணம்பும்
சுருளைச்சுருள்மடித்து சுண்ணம்பைச்சூட்சமிட்டு
சுத்திவிட்டபொன்மடலுக் குள்ளேசுருளமர்த்தி
மாதரிளங்கொடிக்கு மங்கையற்குநீர்கொடுத்து
மற்றுமுள்ளமன்னவரைச் சுற்றிலுங்காவல்வைத்து
நீங்கள்-நாலால்கடுந்திரளர் நூற்றொருவராசர்களும்
தூங்காவையுந்தெருத்திண்ணையில் வாங்குமென்றுன்வட்டிக்காசு

வட்டிக்காசவராங்கியல்லோ வட்டிக்குமாறுமென்றான்
என்று-விட்டானொருதூது மண்ணதிரவிண்ணதிர
மண்ணதிரவின்குலுங்க மாற்றான் திடுக்கிடவே
விண்ணதிரமண்குலுங்க வேந்தர் திடுக்கிடவே
தேசத்தையாளுந திரியோதிரன்கேட்டு
மன்னன்மனஞ்சலித்து மர்மமாய்த்தானிருந்தான்

புனந்திரன் மறுபடியுந் தூதுரைப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
மற்றுமொருதூது மன்னவனுங்கேட்கலுற்றான்
ஆணழகர்பஞ்சவரை ஐவரையுந்தானழைத்து
உருவமதயானை வுத்தமர்களைவரையும்
மாயத்தால்சூதாடி மண்பறிக்கமண்பறித்து
மாதைத்துகிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
கோதைத்துகிலுரிந்து கொற்றவரைகாடோட்டி
பருக்கல்உறுத்த பனிவந்தலைமோத
ஓடும்பருக்கனும் உள்ளங்கால்காணுறுத்த
கவிந்தமரத்தடியில் கண்பள்ளிக்கொண்டிருந்தார்
இன்னமின்னங்காடுறைய மாட்டார்கள்பஞ்சவர்கள்
அரக்குமாமாளிகையில் ஐவரையுஞ்சுட்டெரித்தாய்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்களாணழகர்
மாயரிடபுண்ணியத்தால் மன்னர்பிழைத்தார்கள்
ஆயரருளாலே ஐவர்பிழைத்தார்கள்
நடக்கும்வழிதனிலே நட்டுவைத்தாய்வாளதனை
குளிக்கும்குளந்தனிலே தொடிஊசிநட்டுவைத்தாய்
முழுகும்குளந்தனிலே முட்களைநட்டுவைத்தாய்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்சளாணழகர்
எண்ணையிட்டுக்கொள்ளுமென்றும் மல்லர்களைத்தூதுவிட்டார்
கொல்லவந்தமல்லர்கள் கூண்டோடேதான்மடிந்தார்
சோற்றிலேநஞ்சையிட்டு சூஸ்திரமாய்க்கொல்லவந்தாய்
தண்ணீரில்நஞ்சையிட்டாய் தாமமுடியாற்கு
உண்கிறசோற்றிலே வசநாபிதான்கலந்தாய்
வசநாபியென்றுசொல்லி மதித்து அதைப்பாராமல்
வெற்றிமதயானை வீமன்மதகரியான்
அத்தனையுங்கூட்டி அமுதுபுசித்தாரே
அலைகொண்டதலைமயக்கந் தார்வேந்தர்தான்கொண்டார்
வெற்றிமதயானை வீமரவர்மாண்டாரே
மாயனொருசந்நியாசி வேஷமதுவெடுத்து
மருந்துப்பைதோளில்வைத்து வந்தாரேமாயவரும்
வெற்றிமதயானை வீமனையெழுப்பிவிட்டார்
அத்தாலுந்தப்பிப் பிழைத்தார்களைவர்களும்

மாயனருளாலே மன்னர்பிழைத்தார்கள்
ஆயாருளாலே ஐவர்களுந்தாமபிழைத்தார்
படுகுழியாதினங்கள் பஞ்சவற்குசொப்பனிட்டு
ஆழக்குழிதோண்டி ஆகாயக்கோட்டைகட்டி
மேலேகுழிதோண்டி விஷநாகக்கோட்டைகட்டி
எட்டுத்தலைவாசல் யிடிமன்னர்காவல்வைத்து
பத்துத்தலைவாசல் படைமன்னருள்ளேவைத்து
நண்டுகளுந்தேளுகளும் நல்லவிஷப்பாம்புகளும்
பாம்புகளுந்தேளுகளும் படுகுழியைரொப்பிவைத்து
ஐவரும்வீற்றிருக்க ஆசனங்கள்சொப்பனிட்டாய்
பொய்யாசனங்களிட்டாய் புண்ணியர்கள்வீற்றிருக்க
அத்தாலுந்தப்பிப் பிழைத்தாரேஐவர்களும்
மாயனருளாலே மன்னர்பிழைத்தார்கள்
ஆயாருளாலே ஐவர்பிழைத்தார்கள்
இன்னமின்னங்காடுறைய மாட்டார்கள்மன்னவர்கள்

புனந்திரன் கோபித்துரைப்பது.

நூலாள்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியும்
சாமத்துரோகி சகுனியுடபூமுடியும்
தோளுவடிவழகி துரௌபதையாள்நாயகியும்
தொட்டுத்துகிலுரிந்த படுபாவிபூமுடியும்
நாளை-பதினெட்டாநாளையிலே படைமன்னர்கையாலே
பாரதம்வென்று படைபொருதும்வேளையிலே
ஆடிப்பறக்கும் அமுர்தசமர்க்களத்தில்
வீமர்கைதண்டாலும் விசையர்கையம்பாலும்
பஞ்சவர்களம்பாலே பட்டுமடிவானே
பங்குவிட்டநாளும் பகுந்தாசுதாருமென்றான்
பாதிநாடும்அரசு பகுந்தாசுதாருமென்றான்
விட்டானொருதாது மண்ணாதிரவின்துலுங்க
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்சத்தமிட

திரியோதிரன் புனந்திரனைப் பார்த்துரைப்பது.

தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு
கதிக்குக்கதிமண்டி கண்கனெரிபறந்து
நீலவிழிக்கண்கள் நெருப்புத்தனலாகி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றப்போல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
இந்திரரைப்பார்த்து யெடுத்துரைப்பான்திரியோதிரன்
மன்னனுயிரிழந்து மாண்டுதான்போனாலும்
செத்துமடிந்தாலும் சிவலோகஞ்சேர்ந்தாலும்

மாண்டுமெடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
எள்ளளவுசீவ னிருக்கிறகாலமட்டும்
கடுகளவுசீவ னிருக்கிறகாலமட்டும்
பகையாளிபஞ்சவற்கு பாதிநாடில்லையென்றான்
பங்கிட்டநாடும் பகுந்தரசுமில்லையென்றான்
பஞ்சவர்கள்சீமை பாதிநாடில்லையென்றான்

புனந்திரன்மறுபடியுங் கோபித்துரைப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
சிற்றடம்புவேர்த்து சிறகண்சிவப்பேறி
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
தர்மருக்கிப்போ சனியன்பிரிந்தது
எங்கள்வீமருக்கிப்போ விடுதியொழிந்தது
ஐவருக்குமிப்போ அடுத்ததுநற்காலம்
மாதுமயிர்முடிக்க நாளாச்சுமன்னவரே
கோதிகுழல்முடிக்க நாளாச்சுகொற்றவரே
பத்தினியாள்சாபம் பலித்ததிவர்களுக்கு
உத்தமியாள்சாபம் உடனேபலித்தது
பார்த்தன்கையம்பாலே படுவதுநிச்சயந்தான்
எழில்விசையனம்பாலே படுவார்கள்படுவார்கள்
வேசிமகனுற்கு விடுபடக்காலமில்லை
தாசிமகனுற்கு தானிருக்ககாலமில்லை
உடன்பெற்றபிள்ளையெல்லாம் கொத்தோடேமாண்டிடுவார்
அந்தகனர்பெற்றபிள்ளை அடங்கலுமாண்டிடுவார்
இப்படிச்சொல்லி யெடுத்துரைத்தானிந்திரனும்
விட்டானொருபாணம் மண்ணதிரவின்குலுங்க
மாற்றான்திடுக்கிடவே மறமன்னர்கொக்கரிக்க
நாகக்கொடிவேந்தன் கேட்டானவ்வார்த்தைகளை
இந்திரனர்சொன்னதெல்லாம் எறிநாகன்தான்கேட்டு

திரியோதிரன் புனந்திரற்குரைப்பது.

கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தை எட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை யடித்துச்சுவாலயமாய்
போரஞ்சாமன்னர் புனந்திரற்கேதுசொல்வான்
வேசியென்றுந்தாசியென்றும் விஸ்தாரமாய்சொல்லுகிறான்
தாசிபெற்றபிள்ளையென்றும் தளர்ச்சியாய்சொல்லுகிறான்
இந்தசபைநடுவே யெடுத்தெரிந்துபேசுகிறான்

தாசிபிள்ளையென்றவனைத் தலையைப்பிளந்திடுவேன்
வேசிமகனென்றவனை வெட்டியெறிந்திடுவேன்
உலகத்தில்வாழும்பெண்கள் ஒருவனுக்குகைகொடுப்பார்
இன்னஞ்சிலவேசியர்கள் இருவருக்கைகொடுப்பார்
ஆணழகிதுரோபதைக்கு ஐந்துபேர்மாப்பிள்ளைமார்
ஐவருக்குங்கைகொடுத்தாள் அவள்தானேவேசியல்லோ
பலபேர்க்குகைகொடுத்தாள் பட்டியவள்தேவடியாள்
இப்படிக்குசொல்லிநின்றான் எரிநாகங்கொண்டவனும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரைகளெல்லாம்
பாட்டனார்வீஷ்மரும் பாரியதுரோணருக்கு
சிற்றப்பாவிதுரனுக்கு சிருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்னர்பெருமாளும்
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னன்மனஞ்சலித்து மர்மமாய்தானிருந்தார்

விகர்னனுரைப்பது.

வில்லில்பெரிய விகர்னனுமேதுரைப்பான்
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்க்கேயிளைஞன்
விகர்னப்பெருமாள் யெடுத்துமிகவுரைப்பான்
அண்ணன்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
அண்ணாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னண்ணாநீர்கேளும் இன்னமொருவார்த்தை
பஞ்சவர்களைவரையும் பார்மன்னன்சபைநடுவே
ஐவர்பஞ்சபாண்டவரை அழைத்துமேசூதாடி
மாதுநல்லாள்துரோபதையை மன்னர்சபைநடுவே
துரௌபதையைக்கொண்டுவந்து துகிலுமுரிந்தாயே
பாவையழகியரைப் பாஞ்சாலன்சீர்மகளை
உரிந்ததுகில்வளர்ந்த உத்தமியாள்நாயகிக்கு
அத்தானுஞ்சாடை யறியாமற்போனீரே
பெண்ணுளுரிந்ததுகில் போராய்க்குவிந்தது
மாதையுரிந்ததுகில் மலைபாய்வளர்ந்தது
அத்தானுஞ்சாடை யறியாமற்போனீர்கள்
பத்தினியாளென்றுசொல்லிப் பாராமற்போனீர்கள்
அரண்மனைப்பெண்டுகளை அனைவரையுந்தானழைத்து
எடுத்துவிடுங்களென்றீர் எத்திலங்குபூமுடியாள்
அந்தவிசேஷ மதுகேட்டுமங்கையர்கள்

திரியோதிரன் பெண்டுகள் மானங்குலைந்தது.

அத்தண்டசேலையெல்லாம் அவர்களெடுத்துடுத்தி
வர்னவிதசேலையெல்லாம் மாதர்கள்தானுடுத்தி
அம்பலத்துவாசலிலே ஆணழகர்பெண்டுகளும்
மானங்குலைந்தார்கள் மதிகுலைந்துபோனார்கள்

வெட்கங்குலைந்தார்கள் வெட்கித்துநடந்தார்கள்
பத்தினியாள்சாபம் பலித்துதேகம்பனுக்கு
உத்தமியாள்சாபம் முடனேபலித்ததல்லோ
அத்தானுஞ்சாடை யறியாமற்போனீரே
பத்தினியாளென்றுசொல்லிப் பாராமற்போனீரே
இப்பெரியநாடும் எழில்பெரியஆதினமும்
அத்திபுரமும் அடங்கலும்நம்மதென்றான்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
எல்லையுலகங்கள் யிருந்தரசுஆள்வோமென்று
எண்ணியிருந்தீரே அண்ணாவேநீர்கேளும்

புனந்திரன் சொல்வது.

பதினெட்டாநாளையிலே படைமன்னர்சண்டையிலே
பாரதமென்று படைபொருதும்வேளையிலே
ஆடிப்பறக்கும் அமுர்தசமர்க்களத்தில்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெற்றிமதயானை பீமரதுதெண்டாலே
பட்டுவிழுந்தாலே படைமன்னர்சபைநடுவே
தோளுவடிவழகி துரௌபதைநாயகியாள்
உன்மார்மேலேயேறி மயிரைமுடிக்கவென்று
குடல்மாலைதானெடுத்து கொண்டைக்கயராக்கி
மார்பெலும்பைத்தானெடுத்து வண்ணவிதசீப்பாக்கி
மாருதிரந்தானெடுத்து மயிர்கூந்தல்தான்தடவி
சம்பங்கிஎண்ணையது போலேதடவியவள்
வாரிமயிர்முடிக்க நாளாச்சேமன்னவனே
கோதிகுழல்முடிக்க நாளாச்சேகொற்றவரே
இன்னம்மனதில் வைராக்கியம்வேண்டாங்காண்
பங்குவிட்டநாடும் பகுந்தரசுதந்துவிடும்
பாதிநகரமல்லோ பஞ்சவர்க்குநீகொடுத்து
ஒத்துப்பிழையுமென்று உத்தமனார்வீரியனும்
கலந்துப்பிழையுமென்றான் கட்டழகன்வீரியனும்

திரியோதிரன் கோபித்து விகர்னருக் குரைப்பது.

இவன்சொன்னவார்த்தையெல்லாம் யெரிநாகன்தான்கேட்டு
விகர்னனுடனுரைப்பதற்கு வெகுண்டுமனங்குதித்து
தம்பிமுகம்நோக்கி தார்வேந்தனேதுசொல்வான்
தூதுரைக்கவந்தானே தன்னிலங்கண்ணனும்
வேசிபெற்றபிள்ளை விடுபட்டுவந்தானே
தாசிபெற்றபிள்ளையிவன் தனதுரைக்கவந்தானே
அவனுடனேகூடி அடுத்துபோர்செய்தாலும்
நீங்கள்-ஒருமிக்கக்கூடியல்லோ யுத்தங்கள்செய்தாலும்
எந்தன்முடிசிந்தி யிறந்துநான்போனாலும்
மகுடமுடிசிந்தி மாண்டுமடிந்தாலும்

மாண்டுமடிந்தாலும் வைகுண்டஞ்சேர்ந்தாலும்
செத்துமடிந்தாலுஞ் சிவலோகஞ்சேர்ந்தாலும்
பஞ்சவர்களைவருக்கும் பாதிநாடில்லையென்றான்
பாதியோடும் பகுந்தரசுமில்லையென்றான்
உத்தமர்களைவருக்கு மொன்றுங்கொடுப்பதில்லை
அவர்களாலானமட்டும் கண்டுவிடச்சொல்லுமென்றான்
பார்த்தனாலானமட்டும் பார்த்துவிடச்சொல்லுமென்றான்
வீமனாலானமட்டும் வீம்புசெலுத்துமென்றான்
போரஞ்சாமன்னர் புனந்திரனாலானமட்டும்
புனந்திரனாலானமட்டும் போர்கொடுத்துவெல்லுமென்றான்

புனந்திரர் கோபித்துரைப்பது.

பொங்கிமனந்தளர்ந்து போரஞ்சாபுத்திரனும்
அங்கிருக்குமன்னர் அரையர்முகம்நோக்கி
தேசத்தையாளுந் திரியோதிரன்தானும்
இப்படிக்குச்சொன்னமட்டும் யினிபொறுக்கமாட்டேனையா
வெற்றிமதயானை வீமர்சபதமது
மன்னன்பெருஞ்சபதம் மாளட்டுமென்றிருந்தேன்
இவனுக்குகாலம் முடிந்ததுமன்னர்களே
எமனுயரவந்து யிவனைவாவென்றழைக்க
நமனுருயரவந்து நாடியழைத்திருக்க
சிறைபட்டயிந்திரனுங் குறைபட்டுத்தானழைக்க
எரிநாகங்கொண்டவனுக் கிருக்கப்பதமுமில்லை
என்றுமவனெழுந்து யெடுத்தானேவில்லதனை
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
வில்லைக்குணத்தொனித்து வில்மாரிதான்பொழிய
சண்டைக்குமுஸ்தீபாய் நின்றானேயிந்திரனும்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து

திரியோதிரன் சண்டைக்கு ஆயத்தப்பட்டது.

வில்லெடுத்துவாளெடுத்து வில்லைக்குணத்தொனித்து
வட்டாபயலேயுன்னை வாரியறைந்திடுவேன்
தாசிமகனேயுன் தலையையுடைத்திடுவேன்
என்றுயெழுந்தானே எழில்நாகங்கொண்டவனும்
வேசிமகனென்று விஸ்தாரஞ்சொன்னதெல்லாம்
வேசிமகனனதெல்லாம் வெளியாகக்காண்பிப்பேன்
தாசிமகனென்பதெல்லாந் தானேதெரியுதுபார்
என்றுதிரியோதிரன் யிடும்பாயுரைக்கையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரராசருக்கு
மீசைதுடித்துவிழ மின்மீசையொப்பமிட

புனந்திரன் திரியோதிரனுபரணங்களை தவிடுபொடியாகச்செய்தது.

கண்கள்பொறிபறக்க காந்தாளமாகுதங்கே
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
விட்டானொருபாணம் மண்ணதிரவிண்ணதிர
மண்ணதிரவிண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
மற்றுமொருகணையை மறுகணையைத்தான்தொடுத்தான்
தேசத்தையாளுந் திரியோதிரன்வீற்றிருக்கும்
சிம்மாசனங்களெல்லாம் தவிடுபொடியாகுதங்கே
முத்துமுடிகளெல்லாம் முறிபட்டுத்தானுதிர
தங்கமுடிகளெல்லாந் தரையில்பிரண்டுருள
வாள்கத்தியம்புகளும் வளைதடிசக்கரமும்
அத்தனையுமற்றுவிழ மற்றுங்கணைதொடுத்தான்
சரம்மேற்சரம்பொழிந்தான் சாமர்த்தியமுள்ளவனும்
இப்படியாக இவன்விடும்பாணமெல்லாம்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து

திரியோதிரன் கோபித்து புனந்திரனைப்பார்த்துரைப்பது.

கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை யடுத்துச்சுவாலயமாய்
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
மீசைதுடிதுடிக்க விழிகள்பொறிபறக்க
கண்கள்பொறிபறக்க காந்தாளம்பொங்கிவர
இந்திரனைப்பார்த்து யெடுத்துரைப்பான்திரியோதிரன்
சாணுண்டுபையாவுன் சாமர்த்தியம்நானறிப்பேன்
சௌரியத்தைநான்குலைத்து தலையையுடைத்திடுவேன்
நாகக்கணையாலே நானேதலையுடைப்பேன்
அறுதலைபெற்றபிள்ளை ஆட்டிவைப்பேனம்பலத்தில்
என்றுகணையெடுத்தா னிந்திரன்மேலேவிட
இவனுரைத்தவார்த்தையெல்லாம் யிந்திரனுந்தான்கேட்டு
தேசத்தையாளுந் திரியனுக்கேதுசொல்வான்

புனந்திரன் திரியனுக்குரைப்பது.

பச்சைமடல்விரியும் பாளைவிரிபூமணக்கும்
பாஞ்சாலமகாராசன் சுயம்வரப்பந்தலிலே
தேராவடிவழகி துரௌபதிநாயகியை
மாலையிடவந்தவர்கள் வர்ணலட்சம்ராசாக்கள்
அவர்களுடனேக வந்தீரேஆணழகா

மெல்லியாள் துரோபதையை வில்வளைத்தநாளையிலே
வில்வளைப்பதற்கு உன்னாலாகாதே
வேந்தர்சபைநடுவே மானங்குலைந்தாயே
அன்றுபட்டபாடு மறந்தாயோ ஆணழகா
இன்னமுமெந்தனுடன் எதிர்மின்றுபேசவந்தாய்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் யாகம்வளர்த்தினர்கள்
யாகமதுபார்க்க வந்தாயே ஆணழகா
சந்தனச்சேற்றில் நடக்கவறியாமல்
சவுரியங்களற்று சறக்கிவிழுந்தாயே
ஆண்மைகளற்றுமல்லோ அங்கேவிழுந்தாயே
மன்னர்சபைநடுவே மானங்குலைந்தாயே
தோளுவடிவழகி துரோபதையாளென்னச்சி
பாங்கியர்க்குமுன்னாகப் பார்த்துநகைத்தாளே
அத்தாலுஞ்சாரிலியே ஆணழகாயுன்னுடம்பு
நீ-ஆண்பிள்ளைபோல அமருக்குவந்தாயே
வில்லெடுத்துயுத்தம்பண்ண வந்தாயேவேந்தர்முன்னே
கைதனிலேவில்லெடுக்க அறிவாயோகட்டழகா
சாணுண்டுபையலவன் சாமர்த்தியம்பாருமென்றான்
அறியாதயெந்தனிட ஆண்மைகளைப்பாருமென்றான்

திரியோதிரன்பேரில் பாணம்விட்டது.

விட்டானொருபாணம் மண்ணதிரவிண்ணதிர
மண்ணதிரவிண்ணதிர மாற்றான்திடுக்கிடவே
எதிரிதிடுக்கிடவே யெல்லையதிர்ந்துவிழ
மற்றுமொருகணையை மறுகணைபைதானெடுத்தான்
அந்தவொருபாணம் வந்துவிழுமனேகம்
திரியோதிரன்முடிமேல் யிருக்குஞ்சிகரங்களும்
அவன்கையிலாயுதமும் அத்தனையுந்தான்பார்த்து
வந்துவிழுந்தது மன்னனிடங்கைதலத்தில்
மற்றுமொருகணையை மன்னனிடகைதலத்தில்
திரியோதிரன்தினமுஞ் சேனைத்திரள்படையும்
அத்தனையுந்தெத்தி நடந்துதேபாணமது
போரஞ்சாமன்னன் புனந்திரனுரேதுசொல்வார்

புனந்திரன் சொல்வது.

பஞ்சவர்களைவரும் பாரவனந்தாண்டி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்சென்றாரே
பன்னிரண்டுதன்வருஷம் ஆண்டாரேகானகத்தில்
அவர்களைத்தேடியல்லோ யனுப்பினர்மல்லர்களை
மல்லர்களைவிட்டவரைக் கொல்லுமென்றுவாக்களித்தார்

அவர்களைக்காணும லனுத்துவந்தமல்லர்களும்
தூறுவாசமாமுனியைத் தொழுது தவம்புரிந்து
ஆணழகர்பஞ்சவரை அவனை விட்டுகொல்லுமென்றார்
ஐவரைதேடி நடந்தார்வனம்நோக்கி
ஐவரையுங்கண்டாரே அப்பெரியதூறுவாசர்
ஐவர்பஞ்சபாண்டவரும் மாமுனியைகண்டவுடன்
மாமுனியானவற்கு மன்னர்பஞ்சபாண்டவரும்
ஆசனங்கள்தான்போட்டு அவர்க்களித்தார்போசனங்கள்
பலாயிலையில்போசனங்கள் படைத்தாரேமாமுனிக்கு
அமுதுண்டுமாமுனியும் ஆசித்தவர்மறந்து
ஐவரையும்வாழ்த்தி நடந்தாரேகானகத்தில்
மற்றுமொருவனத்தில் மன்னரொளித்திருந்தார்
தங்கைமணவாளன் தந்தலையன்தானழைத்து
ஐவர்பஞ்சபாண்டவர்க்கும் அபிஷேகபத்தினியாள்
அபிஷேகபத்தினியாள் ஆரணங்குதுரோபதையும்
அவளழகுமொப்பனையும் ஆருமில்லைவையகத்தில்
துரௌபதையைக்கொண்டு தாங்குமஞ்சமேற்றிவைத்தால்
அப்பெரியநாடு மெழில்பெரியஆதினமும்
உன்னுடையநாடுங் கர்ணர்யதியாதினமும்
அத்தனையுந்தாரேனென்றார் ஆனந்தமார்பனுக்கு
நல்லதென்றுசம்மதித்தானும்முடியானும்
ஒளித்திருக்கும்தனத்தை வுத்தமியைத்தான்தேடி
பத்தினியைத்தேடியல்லோ வந்தானேகானகத்தில்
சூதுரைத்துதுரௌபதையைத் தூக்கிநடந்தானே
கபடமவனுரைத்துக் கட்டழகன்போய்நடந்தான்
ஆரணங்குபோனதை ஐவர்களுந்தானறிந்து
பாதகன்கொண்டுபோக சேதியவரறிந்து
தேரையுடைத்தவர்கள் செம்புரவிதூண்டித்து
இரதத்தையவருடைத்து நால்புரவிதூண்டித்து
பாவையழகியரைப் பத்தினியைக்கொண்டுவந்து

சயிந்தவனைக் கழுதையாக்கினது.

கட்டழகன்சயிந்தவனைக் கழுதைவடிவாக்கி
கழுதையைத்தொட்டதொரு கட்டழகரானவர்கள்
ஓட்டிவருகவென்று யிட்டாள்பெருஞ்சாபம்
எங்கள்-வம்மிசத்தார்தொட்டாலே விட்டுவிடவேணுமென்றான்
மிருகவடிவாக்கி யனுப்பினருங்களன்னை
கட்டழகர்மைத்துனனை கழுதையாயாக்கிவிட்டார்
அன்றுமேகண்டாயே அவனுடையவீரியத்தை
இன்னமுங்காண்பாய்காண் யெங்களிடசௌரியங்கள்
மற்றுமொருவனத்தில் வாசம்பண்ணூர்மன்னவர்கள்

இன்னஞ்சிலகால சென்றபிறகாக
ஆகாயகெந்தருவன் அவனுமிழ்ந்தான்தம்பலங்கள்
மாயவரிடகைதலத்தில் வந்துவிழுந்தது
அவன்தலையைவாங்கிவைக்க ஆயர்வரெழுந்தார்
ஆகாயகெந்தருவன் அவன்பயந்துஓடிவந்து
அர்ச்சுனராசரண்டை அபயமிட்டோடிவந்தான்
அர்ச்சுனராசர் அவனையெடுத்தணைத்தார்
அந்தவிசேஷம் அதுவறிந்துமாயவரும்
மன்னர்மனதறிய மாயர்படையெடுத்தார்
உந்தன்கெருவம் அடக்கமனதிலெண்ணி
அத்தானுஞ்சாடை அறியாமற்போனீரே
மாயருக்குமெங்களுக்கும் மச்சான்முறைகளுண்டு
உன்படையுமவர்படையு மொன்றாகக்கூட்டினார்
ஐவர்மேல்சண்டைபண்ண வந்தீர்களெல்லாரும்
வெற்றிமதயானை வீமருமர்ச்சுனரும்
உந்தன்படைத்தளத்தை ஒருமிக்கவோறுத்து
மாயன்படையையெல்லாம் மண்ணுக்கிரையாக்கிவிட்டார்

மாயர் அருச்சுனன்மேல் சந்தோஷப்பட்டது.

மாயரதுதெரிந்து மர்மம்வெளிவிடாமல்
தேரைவிட்டுக்கீழிறங்கி நடந்தந்தமாயவரும்
வீமருக்குமருச்சுனற்கும் எதிராகவந்துமவர்
அர்ச்சுனரைக்கட்டி யணைத்துவுறவாடி
வீமரைக்கட்டி வெகுவாயுறவாடி
மாயவருமருச்சுனனும் மனங்குளிர்ந்தாரன்னேரம்
ஆயரும்வீமரும் அங்கேமனங்குளிர்ந்தார்
அத்தானுஞ்சாடை யறியாமற்போனாயே
இன்னமின்னம்பார்க்கணுமோ எங்களுடவீரியங்கள்

திரியோதிரன்மாடுபிடிசண்டையிலே முதுகுகொடுத்தோடினது

மாடுபிடிசண்டையிலே மன்னவரேவந்தீர்கள்
பேடியவர்சண்டையிலே பின்னிடைந்தோடினீர்கள்
அர்ச்சுனனார்சண்டையிலே ஆண்மைகுலைந்தீர்கள்
வீமனார்சண்டையிலே வெற்றிகுலைந்தீர்கள்
யானைபெருஞ்சேனைகளும் அத்தனையும்நீதோற்று
சேனையொருவெள்ளம் திரள்வேந்தாகையைவிட்டு
முடிதரித்தராஜாக்கள் முதுகிட்டோடினீர்கள்
கணைபிடித்தராஜாக்கள் கால்நடுங்கஓடினீர்கள்
அறியாதபையனிட ஆண்மைகளைக்கண்டீரோ
தெரியாதஎன்னுடைய சௌரியத்தைப்பார்த்தீரோ
இன்னென்னமென்னுடைய சௌரியங்கள்பார்க்கணுமோ

பார்த்தமட்டும்போதாதோ பாம்புக்கொடியோனே
பதிகெட்டாகாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அமுர்தசமர்க்களத்தில்
யுத்தங்கடந்து ரத்தா றுஓடையிலே
உங்கள்முடிகளெல்லாஞ் சிதரியுடையயிலே
காணுதசௌரியங்கள் காண்பாயுன்கண்ணுலே
பாருதவீரியங்கள் பார்த்திடுவாய்முன்னுலே
இந்தக்கணையாலே வுந்தன்தலையுடைப்பேன்
என்றுமனங்கொதித்து யிந்திராசாவும்
அங்கிருக்குமன்னர் அரையர்துரையரெல்லாம்
பாட்டனுர்வீஷ்மரும் பாரறியதுரோணரும்
சிற்றப்பாவிதுரனுஞ் சிருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்னசிகாமணியும்
வில்லில்திரமுடைய விகர்னப்பெருமாளும்
இந்தக்கணையாலே யியற்றிடுவான்பூமுடியை
இந்திரன்வாளாலே யியற்றுவிடும்பூமுடிதான்
இவன்தலையற்றுலே என்படுமோஉன்வாசல்
வெற்றிமதயானை வீமனதுசபதங்களும்
தோருவடிவழகி துரோபதைநாயகியாள்
இட்டபெருஞ்சபதம் யிதுமுடிக்கவேணுமென்று
எல்லவருங்கூடி யின்பமாயெழுந்திருந்து
பாட்டனுர்வீஷ்மரும் பாரறியதுரோணரும்

புனக்திரன் திரியோதிரன்பேரில் பாணம்விட்டது.

வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
விட்டான்சரபாணம் மண்ணதிரவின்குலுங்க
மண்ணதிரவிண்குலுங்க மாற்றுன்திடுக்கிடவே
மாற்றுன்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
எதிரிதிடுக்கிடவே யிருந்தமன்னர்கொக்கரிக்க
பாணம்வரும்வேகம் பார்க்கமுடிபோகாது
அம்புவரும்வேகம் ஆற்றமுடிப்போகாது
சிற்றப்பாவிதுரனுஞ் சிருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடானுங் கர்னசிகாமணியே

கர்ணர் விதுரர் வீஷ்மர் விகர்னனிவர்கள்
திரியோதிரனுக்கு கோபந்தணித்தது.

தேசத்தையாளும் திரியோதிரன்முன்னேவந்து
அம்மையுமமையுமையா ஆனந்தவாழ்மார்பா
தூதுரைக்கவந்தவனைத் தொடர்ந்துகொல்லஞாயமுண்டோ
வார்த்தைசொல்லவந்தவனை வாளெடுத்துகொல்லலாமோ
புத்திரரைக்கொல்வாரும் உண்டோவுலகுதனில்
மைந்தரைக்கொல்வாரும் உண்டோதான்வையகத்தில்
என்றுமனந்தேற்றி எத்திலங்குபூமுடியான்

கொற்றவனார்கோபம் குணப்படுத்திக்கொண்டார்
மன்னவனார்கோபம் வசப்படுத்தியானபின்பு
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
ஆறினான்கோபம் அமர்ந்தான்கொலுமுகத்தில்
தேறினான்கோபந் தெளிந்தான்கொலுதனிலே
எரிதாகங்கொண்டவனு மிருக்கின்றவேளையிலே

கர்னர் விதுரர் வீஷ்மர் துரோணர் இவர்கள் புனந்திரனுக்கு

சமாதானவார்த்தை கூறல்.

தந்தைமேல்பாணம் எடுப்பாரோதார்வேந்தா
அய்யர்மேல்பாணம் எடுப்பாரோஆணழகா
மன்னர்மேல்பாணம் எடுப்பாரோமந்திரியே •
அமையுமமையுமென்று ஆணழகரிந்திரரே

புனந்திரனை குருக்களணைத்து சமாதானங்கூறல்.

கோணுதமாதவத்துக் குருக்களவர்ஓடிவந்து
ஆனந்தமார்பனை யணைத்துமடியில்வைத்து
உச்சிமுகந்துமவர் உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவிப் பவளவாய்முத்தமிட்டு
கைதுடைத்துவாய்துடைத்து கனிவாய்முகந்துடைத்து
கொற்றவனார்கோபம் குணப்படுத்திக்கொண்டவரும்
மன்னவனார்கோபம் வசப்படுத்திக்கொண்டவர்கள்
அனுப்பினபாணமதை யழைத்துவுறையினிலே
போரஞ்சாமன்னர் புனந்திரருமுன்னேவந்து
இராசனுக்கு யேதுசொல்வார்மன்னர்கள்
அமையுமமையுமையா ஐவரிடபுத்திரனே
சண்டையமையுமையா இந்திரராசாவே
போரையடக்குமையா புனந்திரவீரியரே
பாணம்விலக்குமையா மாயர்மருமகனே
மாயன்மருமகனே மாதுமணவாளா
செல்லவிட்டபாணமதை சேரவழைத்துவிடும்
என்றுமவருரைக்க யேதுசொல்வாரிந்திரரும்
உங்களதுபாணம்போ லென்னுதீரென்கைவில்லே
உங்களதுவில்லதுபோ லென்னுதீரென்பாணம்
போவென்றால்போய்விடும் வாவென்றால்வந்துவிடும்
நில்லென்றால்நின்றுவிடும் நீங்கள்பிடித்தபாணம்
வல்லுயிர்களற்றவற்கும் பாணத்திறமுமுண்டோ
மந்திரவல்லமைகள் யில்லாதபேர்களுக்கு
பாணத்திறமுமில்லை படைமன்னர்பயமுமில்லை

வில்லுதிறமுமில்லை வேந்தர்பகையுமில்லை
உங்களதுபாணம்போல் என்னைநினைத்தீர்களோ
எந்தனிடகைபாணம் மிதின்வலுமைசொல்லுகிறேன்

புனந்திரன் பாணத்தின் மகிமைகூறல்.

எதிர்குறிகாணாதே வுறைசொல்லமாட்டாதே
உதிரங்கள் கண்டாலே வுறைவந்துசேர்ந்துவிடும்
இரத்தக்குறிகண்டாலே உரைவந்துசேர்ந்துவிடும்
என்-பாணத்தின் தன்மகிமை யறியீரோமன்னர்களே
என்னுடையவில்திரத்தை யறியீரோமன்னவரே
இரத்தக்குறிகண்டாலே உறைவந்துசேர்ந்துவிடும்
உதிரகுறிகாட்டுமென்றான் உத்தமனாரிந்திரரும்
அங்கிருக்குமன்னர் அரையர் துரைகளெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாமல்
நெஞ்சுலர்ந்துநாவறண்டு நித்திலங்குபூமுடியார்
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னர்முகம்பார்த்து மர்மமாய்வீற்றிருந்தார்

கர்னர் புனந்திரனுக்கு திரியோதிர னுயிர்த்துணைக்
கண்சாடையாய்க் காட்டினது.

காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியும்
மன்னர்முகம்நோக்கி மர்மமாயேதுசொல்வார்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்பாக
இருவருக்குமுயிர்த்துணை நித்திலங்குபூமுடியாள்
கண்சாடைகாட்டினார் கர்ணசிகாமணியும்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
காளையிடபுத்திரனும் கைபாணம்நழுகவிட்டு
வேந்தனிலகைபாணம் வீறிட்டெழுந்தது
புனந்திரன்பாணமது பொறிபறக்கத்தானெழுந்து
ஆகாயவீதியெல்லாம் அங்கேசுழன்றுவிழ
உயிர்த்துணைகட்கு உரைவந்துசேர்ந்ததப்போ
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஆறினன்கோபம் அமர்ந்தான்கொலுமேடை
தேறினன்கோபம் தெளிந்தான்கொலுமேடை
கொற்றவனார்கோபம் குளிர்ந்தசலம்போலானார்
மன்னவனார்கோபம் மனதாறிவீற்றிருந்தார்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
உயிர்துணைபோனவுடன் உற்றபலமிழந்தான்

திரியோதிரன் ஆங்காரபலமிழந்தது.

வாடிமனந்தளர்ந்தான் வனுமன்னராசாவும்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கையில்கணைசோர்ந்தான்
உற்றபலங்குறைந்து ஒங்கிமனந்தளர்ந்து
எரிகாகங்கொண்டவனும் யிருந்தசபைநடுவே
மூர்ச்சையடைந்தானே முடிமன்னராசர்கள்முன்
களையாகிவிழுந்தானே கட்டழகன்வீரியனும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

திரியோதிரனுக்கு களைமாறச்செய்தது.

சாதிமணிக்கவரி சந்தனத்தாலூதுவத்தி
கோலமணிக்கவரி குங்குமத்தாலூதுவத்தி
வீசினார்தூதுவர்கள் வேல்புருவக்கண்ணனுக்கு
திறவாதகண்கள்ரெண்டுந் திறந்துமவன்பார்த்து
முழியாதகண்கள்ரெண்டும் முழித்தான்திரியோதிரன்
தாகமதுகொண்டல்லவோ தார்வேந்தன்வீற்றிருந்தான்
இப்படியாக இவனிருக்கும்வேளையிலே

புனர்திரன் உத்தரவுகேட்கிறது.

போரஞ்சாமன்னர் புனர்திரனரப்போது
வந்துமிகப்பொழுதாச்சு மன்னர்பெரியவரே
போகவிடைதாரும் என்றுமன்னன்கைதொழுதான்
பாட்டனும்வீஷ்மரும் பாராளுந்துரோணரும்
சிற்றப்பாவிதுரனுக்கும் சீருள்ளகாங்கையற்கும்
காஞ்சிநாடாளுங் கர்னர்பெருமாளுக்கும்
தேசத்தையாளுந் திரியோதிரனுற்கும்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
தெண்டனிட்டமன்னவனை வாரியெடுத்தணைத்து
வாரியெடுத்தணைத்து மார்மேலேகொண்டணைத்து
போய்வாருமையா புனர்திரராசாவே
ஆறுயிரம்பாண்டியற்கும் ஐயர்மார்பாண்டவற்கும்
ஐவர்பஞ்சபாண்டவற்கும் அல்லித்திருநாயகிக்கும்
எங்களதுசென்மம் யெடுத்துரையுமிந்திரரே
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தார்
போரஞ்சாமன்னர் புனர்திரராசாவும்

பேரிகை முழங்குவது.

அந்தத்தெருவீதியிலே அடித்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னம் உலகேழுந்தானதிர
செம்பொன்னார்காளை திசைவிளங்கவூதினான்
பொன்னினாற்காளை பொருந்திநின்றூதினான்
இந்திரனுன்போறேனென்று யெடுத்தான்விருதோசை
செயம்பெற்றுவாறேனென்று ஊதினான்சங்கெடுத்து
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்பெற்றெடுத்த
வேல்பொருதுங்கண்ணாலும் விஸ்வகேதுதான்கேட்டு

கர்ணர்குமாரன் விஸ்வகேது யுத்தத்திற்கு புறப்பட்டது.

எந்தவூராசாவோ யெவ்விடத்துமந்திரியோ
கொச்சிதேசமாளுங் குணமுள்ளராசாவே
மாற்றான்படையோதா னிவ்வீதிவந்ததென்ன
எதிராளிபடையோதா னிவ்வீதிவந்ததென்ன
செயம்பெற்றுவந்தோமென்று ரணபேரியடிபடுது
வந்ததொருராசாக்கள் மன்னரைநாம்பார்ப்போமென்று
சென்றதொருராஜாக்கள் சேவகத்தைக்காண்போமென்று
சினத்துமவனெழுந்து தேர்விஜயன்செல்வனமே
தேர்ப்பாகனையழைத்து தேர்கொண்டுவாருமென்றான்
அப்படியேநல்லதென்று ஆணழகனோடிவந்து
தேரையலங்கரித்து தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
தேர்வந்ததென்றுசொல்லி தீர்க்கமுடன்தெண்டனிட்டான்
வேல்புருவங்கண்ணாலும் விஸ்வகேதுதானெழுந்து
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு தூத்திப்பூச்சல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குறிஞ்சிப்பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துக்கட்டி தாமரைப்பூச்சுங்குவிட்டு
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
வாளெடுத்துவில்லெடுத்து வளைதடிகையெடுத்து
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிதானெடுத்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
மாலைமுடியானு மணிரதத்தின்முன்னேவந்து
தேரைச்சுற்றிதெண்டனிட்டு தேரின்மேலேறினான்

பச்சைக்குடையாம் பவளநெடுங்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியப்பொற்குடையாம்
முத்துக்குடைபிடிக்க முடிமன்னர்தேர்நடக்க
பவளக்குடைபிடிக்க பார்மன்னர்தேர்நடக்க
ரத்தினக்குடைபிடிக்க ராசர்கள்தேர்நடக்க
போரஞ்சாமன்னர் புனந்திரருஞ்சேவகரும்
அர்ச்சுனனார்புத்திரனும் அவருடையசேனைகளும்
அப்பலத்துவசல் நடந்தாரழகாக
குருவனிடவாசலெல்லாந் தாண்டியந்தகொற்றவனும்
பத்துபடித்தளமும் பதினெட்டு மண்டபமும்
எட்டுப்படித்தளமும் யிராசாக்கள் மண்டபமும்
அத்தனையுந்தாண்டிவந்தார் ஆணகரிந்திரரும்
வாசலதைக்காற்கின்ற வார்கொள்ளிமுன்னம்வந்தாள்

வார்கொள்ளி புனந்திரனைச் செய்திகேட்பது.

வாசல்தடைக்காரி வார்கொள்ளியேது சொல்வாள்
வானவர்கள்புத்திரனே வந்தீரே தூதுரைக்க
மாதுமணவாளர் தூதுரைத்துமீண்டீரோ
தூதுரைத்துவந்ததெல்லாம் சொல்லுமையாயெந்தனுக்கு
சொல்லுமையாவென்றுசொல்லி தொழுதிரங்கிதெண்டனிட்டாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனேதுசொல்வார்
போனவிசேஷம் புதுமைநடந்ததுவும்
நாலிரண்டுவார்த்தையால் நடப்பித்தாரிந்திரரும்
அந்தவிசேஷம் அதுகேட்டுவார்கொள்ளியும்
கேட்டுமனமகிழ்ந்து கிளிபவளச்செவ்வாயாள்

வார்கொள்ளி யுரைப்பது.

அத்திபுரத்தை யரசாளவாருமையா
அங்கவளநாடு அரசாளவாருமையா
உங்கள் ஐவரிடசீமை முழுதுமேயாளுமென்று
போய்வாருமென்றுசொல்லி பொன்னடிக்குத்தெண்டனிட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
மூன்றுநாளார்பொழுது முடிமன்னராளுவது
நாளாநாளெங்களது ஆகுதுகாண்ராச்சியங்கள்
ரெட்டிப்புசம்பளங்கள் நானேதருகிறேன்காண்
எதுக்குமஞ்சாதே யிளங்கொடியேவீற்றிரென்றான்
சொல்லித்திருப்பினான் தன்னீலங்கண்ணனும்
அத்திபுரத்தில் நெடும்வீதிவாரார்கள்

திரியோதிரனை புனந்திரனுத்தரவு கேட்டதற்கு மௌனமாய் தலையையசைத்தது.

தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டார்
வந்துபணிந்தவனை வாழ்த்திவிடைதாராமல்
வாரியெடுக்காமல் வண்ணமுடிவைக்காமல்
மகுடமுடியசைக்கி மௌனமாய்த்தானிருந்தார்
முத்துமுடியசைக்கி மெத்தவேதானிருந்தார்
பேரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஆகட்டுமென்றுசொல்லி ஆணழகர்சொல்லலுற்றார்
படிபடியென்றுசொல்லி படிந்ததுஅவ்வானை
முடிக்கம்பம்தட்டி முதுகின்மேல்கையைவைத்து
கைத்தலத்தைத்தட்டிக் கறுத்தானையேறினான்

புனந்திரன் பிரயாணப்பட்டு வருகிறது.

மத்தகசத்தைத்தட்டி மதயானையேறினான்
அம்மானுந்தானும் மதயானையேறினார்
மாமாவுந்தானும் மதயானையேறினார்
சிலமன்னரெல்லோரும் திடுக்கிட்டெழுந்திருந்து
சரியானையேறினார் தன்னோடொத்தராசாக்கள்
முன்னானையேறினார் மூன்றுலட்சம்ராசாக்கள்
பின்னானையேறினார் பேருலகராசாக்கள்
முன்னைமுரசெடுத்து முன்னானைமேல்போட்டார்
பின்னைமுரசெடுத்து பின்னானைமேல்போட்டார்
சிலமன்னரெல்லோரும் தேரின்மேலேறினார்கள்
பலமன்னரெல்லோரும் பல்லக்குயேறினார்கள்
குலமன்னரெல்லோரும் குதிரையின்மேலேறினார்கள்
அழகானமல்லரெல்லாம் ஆனைமேலேறினார்கள்
பட்டபுலவர் பதினெட்டுமந்திரிகள்
சித்தர்புலவர் சிறப்பானமந்திரிகள்
சிங்கங்கரடிபுலி சேரமுழங்கினார்
யானைகரடிபுலி யருகில்வந்துமுழங்கினார்
அவரவர்கள்வாகனத்தில் அவரவர்களேறினார்
ஏறினபோதே யெடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடைகள் முழுவயிரப்பொற்குடையும்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்

சிவசங்கராவென்றுசொல்லி தேறின்மேலேறினான்
ஒருஅக்ரோணிசேனையுடன் உத்தமனும்வாரானே
சிலமன்னரெல்லாம் தேறின்மேலேறினார்
பலமன்னரெல்லாம் பல்லக்கிலேறினார்
தன்னோடொத்தராஜாக்கள் அழகானையேறினார்
அழகானையேறினார் ஐந்துலட்சம்ராஜாக்கள்

குடையின் சிறப்பு.

ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடையாம் முழுவயிரப்பொற்குடையாம்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பச்சைக்குடையாம் பவளநெடுங்குடையாம்
எடுத்துநிறைந்தார்கள் எண்ணூறிரங்கோடி
சுத்திநிறைந்தார்கள் சூரியனைக்கண்மறைக்க
பக்கம்நிறைந்தார்கள் பகவானைக்கண்மறைக்க
ஒற்றைக்குடைநடுவில் வாரானேவீரியனும்
காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியும்
வேல்புருவங்கண்ணனும் விஸ்வகேதுவாரேனென்று

விஸ்வகேது விருதுமுழக்கினது.

விஸ்வகேதுவாறேனென்று விருதுமுழக்கிவிட்டான்
சண்டைக்குவந்தேனென்று ஊதினான்தாரைசின்னம்
ரெணங்கள்ரெணங்களென்று ரணபேரியடிபடுது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிமுரசடிபடுது
நடந்தானேவிஸ்வகேது நாலுதிக்குந்தானதிர
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
வந்துவளைந்தானே வல்லிடிபோல்விஸ்வகேது
போரஞ்சாமன்னர் புனந்திரரைத்தான்பார்த்து
கட்டழகன்விஸ்வகேது காளையற்கேதுரைப்பான்
ஆரடாமன்னவனே அறிவுகெட்டபாதகனே
எந்தவூர்சண்டைபண்ணி யிந்தவூர்செயிக்கவந்தாய்
எந்தவூர்வெற்றிகொண்டு யிந்தவூர்கெலிக்கவந்தாய்
நில்லடாமன்னவனே நிமிஷத்தில்வென்றிடுவேன்
வாணுயிர்பிளந்து வல்லுயிரைக்கொள்ளைகொண்டு
எமனுலகுதேடி யிப்போதனிப்பிடுவேன்
நமனுருலகத்துக்கு நானேயனுப்பிடுவேன்
என்றுமவன்வில்லெடுத்தா னித்திலங்குபூமுடியான்

புனந்திரனுக்கும் விஸ்வகேதுவுக்கும் உயுத்தம்.

வில்லைக்குணத்தொனித்து விட்டானொருபாணம்
விட்டானொருபாணம் விண்ணதிரமண்ணதிர
மண்ணதிரவிண்குலுங்க மாற்றான்படைநடுங்க
எதிரிதிடுக்கிடவே யெல்லையதிர்ந்துவிழ
இப்பெரியபிடியை யிந்திரனார்தான்பார்த்து
இவனார்காண்முனியென்று ஆணழகனெச்சரித்து
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
வில்லைக்குணத்தொனித்து விட்டான்சரபாணம்
விட்டான்சரபாணம் விண்ணதிரமண்குலுங்க
விண்ணதிரமண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
எதிரிதிடுக்கிடவே யிடிமன்னர்கொக்கரிக்க
இப்படிக்குச்சண்டைபண்ணு ரிருநிலத்துராசாக்கள்
இவருடையசண்டைகளில் தும்பிப்பறக்காது
குருவிபறக்காது கோட்டானும்நாடாது
ஆகாயவீதியெல்லாம் ஆணழகர்பந்தலிட்டார்
பாதாளலோகமெல்லாம் பாணத்தால்பந்தலிட்டார்
அம்புவரும்விதங்கள் ஆற்றமுடிபோகாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிபோகாது
கோடானகோடியுண்டு கொற்றவர்கள்பாணமது
கண்டுமுடியாது கணக்கிடைங்காது
சொல்லமுடியாது சுந்தரனார்பாணமது
ஒருவர்விடும்பாணம் ஒருவர்விலக்கிடுவார்
வேல்புருவங்கண்ணனும் விஸ்வகேதுபாணம்விட்டான்
போரஞ்சாமன்னர் புனந்திரனார்முன்னேவந்து
மல்லிகைப்பூவாம் வணங்குதுபாணமது
போரஞ்சாமன்னர் புனந்திரனார்பாணம்விட்டார்
மல்லிகைப்பூவாம் வணங்குதவர்பாதம்
வேல்புருவக்கண்ணனும் விஸ்வகேதுபாணம்விட்டார்
வந்துவணங்குது மன்னவர்பாணங்கள்

புனந்திரன் அம்மான் பொன்னுமலைநாடானுக் குரைப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்பார்த்து
பொன்னுமலைநாடானும் அண்ணர்முகம்நோக்கி
போரஞ்சாமன்னர் புனந்திரனுக்கேதுசொல்வார்
அவன்விடும்பாணமெல்லாம் அய்யாவேவணங்குதுகாண்

நான்விடும்பாணமெல்லாம் அவனைவணங்குது
எதுகருமம் எனக்கறியச்சொல்லுமென்றார்

பொன்னுமலைநாடான் சொல்வது.

பொன்னுமலைநாடாளும் அன்னாளெடுத்துரைப்பார்
அவனாரும்பேரும் அதிசயங்கள்கேளுமென்றார்
நாடும்புதுமைகளாம் ராசனுடதன்பேரும்
அத்தனையுங்கேட்டால் தெரியுங்காணழகா
என்றுமவருரைக்க இந்திரருந்தான்கேட்டு
ஆர்காணும்ராசரவே ஆணலழகுமன்ன
ஊரென்னபேரென்ன வுத்தமனேசொல்லுமென்றார்
உன்னைப்பெற்றதந்தையர் பேருரையுமென்றானே
வேல்புருவங்கண்ணன் விஸ்வகேதுதான்கேட்டு
பேர்கேட்டுவேர்பிடுங்கி வந்தீரோமன்னவரே
உன்னை-சண்டைபண்ணிநான்கெலித்து சவுரியங்கள்காண்பித்து
என்-தேருக்கால்தன்னுடனே சேர்த்துநானுன்னைக்கட்டி
என்-ரதத்தின்கால்தன்னுடனே வுன்னைக்கட்டிப்போகையிலே
அப்போதுநானுரைப்பேன் அடையாளங்கேளுமென்றார்
அந்தவிசேஷம் அதுகேட்டுஇந்திரரும்
எடுத்தானேவில்லதனை எழுலகந்தத்தளிக்க

புனந்திரன் பாணம்விட்டது.

அண்டரண்டந்தானதிர ஆகாயம்அற்றுவிழ
விட்டான்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
மற்றுமொருகணை மருகணையைதான்தொடுத்தான்
வேல்புருவங்கண்ணனும் விஸ்வகேதுதான்பார்த்து
படபடென்றுபற்கடித்துப் பகறியங்கேவில்லெடுத்தான்
வில்லைக்குணத்தொனித்து வீரனவன்வில்லெடுத்தான்
விட்டான்சரபாணம் மேனியெல்லாந்தானதிர
இருதரத்தார்பாணமது எண்ணமுடியாது
தும்பிபறக்கிறது சூரியனைக்கப்புறது
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்கிறது
இப்படிக்காய்சண்டைபண்ணார் இருதரத்துராசாக்கள்
காஞ்சிநாடாளும் கர்ணர்பெருமானும்

கர்ணர் பிள்ளைகளிடம் வருகிறது.

அம்பலத்துவாசலிலே ஆணழகன்தானெழுந்து
அமுதன்னப்போரேனென்று ஆணழகன்வாரானே
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
உத்துத்துக்கேட்டாரே உத்தமனார்கருணராசன்

எவ்வுலகராசாக்கள் இங்கேவந்தார்சண்டைசெய்ய
ஆள்பெருஞ்சேவகரை யனுப்பியவர்பாருமென்றார்
தூதுவர்களோடிவந்து துரிதமுடன்கண்டார்கள்
இருதரத்துசேனைகளும் இந்திரராசாவும்
காஞ்சிநாடாளுங் கருணரிடபுத்திரனும்
இவர்களுடன்சண்டையென்று எழுந்துமிகநடந்து
காஞ்சிநாடாளுங் கருணருக்குதெண்டனிட்டு
உந்தன்குமாரனும் ஒளிவுள்ளயிந்திரனும்
விஸ்வகேதுராசாவும் விஜயனுடபுத்திரனும்
இவருடன்சண்டையென்று இணைகடகக்கைதொழுதார்
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
என்றுமனதிலெண்ணி எழுந்திருந்துஓடிவந்து
யுத்தமுகந்தனிலே வந்துநின்றுருத்தமரும்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து

புனந்திரன் கர்ணரைக் காணுகிறது.

யானைவிட்டுக்கீழிரங்கி ஆனந்தவாழ்மார்பன்
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருந்தானெடுத்து
காஞ்சிநாடாளுங் கர்ணருக்குமுன்னேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னவரைக் கண்டல்லோசீர்கர்ணர்
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
இப்படியாய்ப்பேசி இருக்கின்றவேளையிலே

விஸ்வகேது தகப்பனாகிய கருணரைக்காண்கிறது.

தேரேறிசண்டைபண்ணும் விஸ்வகேதுதான்பார்த்து
தன்னைப்பெற்றதந்தை கருணரங்கேவந்ததுவும்
அவர்-யானைவிட்டுகீழிறங்கி ஆணழகன்வந்ததுவும்
புண்ணியனார்பாதம் பூபோட்டுதொழுததுவும்
வாரியெடுததுமல்லோ மார்போடணைத்ததுவும்
அத்தனையுங்கண்டானே ஆணழகன்விஸ்வகேது
தேரைவிட்டுகீழிறங்கி துருசாகத்தானடந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து

பன்னீரால்காலலம்பி பட்டாலடி துவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்தான்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
காஞ்சிநாடாளும் கருணரவர்பார்த்து
வந்துபணிந்தவனை கண்டுமனமகிழ்ந்து
வாயாரவாழ்த்தி மனதுமிகக்குளிர்ந்து
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
இருவரையுங்கொஞ்சி யிருதொடையில்கொண்டணைத்தார்
அந்தச்சமயத்தில் விஸ்வகேதுயேது சொல்வான்
தனையர்முகம்நோக்கி ஆணழகர் ஏது சொல்வார்
மாத்தானைக்கொண்டு மடிமேலணைத்தீரே
சண்டைபண்ணவந்தவனைத் தூக்கிமடியில்வைத்தீர்
இவன்-ஆர்காணும்ஐயாவே அடியேனுக்குறையுமென்றான்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்கேட்டு

கருணர் தன்பிள்ளையாகிய விஸ்வகேதுக்கு தன்னுடைய
தோத்திரவரலாறு கூறல்.

கோணுதுமாதவத்துக் குந்தியம்மாள் என்னுச்சி
அறியாதகாலையிலே ஆச்சியருமென்னைப்பெற்றாள்
தெரியாதகாலத்திலே தேவியரும்யென்னைப்பெற்றாள்
கண்டார்நகைப்பாரென்று கட்டழகியென்னுச்சி
பேழைதனிலேவைத்து ஆற்றில்அலையவிட்டாள்
தேசத்தழகன் திரியோதிரன்தான்பார்த்து
என்னைவளர்த்தவரும் எஞ்ஞைப்பட்டங்கட்டினான்காண்
இந்தப்பெருமையா யிருந்திட்டேன்காணுமிப்போ
கோணுதமாதவத்துக் குந்தியம்மாளாச்சியரும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆணழகர்தம்பியென்று
ஆனந்தவாழ்மார்பா அறியாமல்காணிருந்தேன்
இப்போதுயெந்தனுக்கு எல்லாம்வெளியாச்சு
தக்கப்புகழுடைய தருமரவருன்தாதை
வெற்றிமதயானை வீமரவருன்தாதை
காண்டாவனமெறித்த காளையவருன்தாதை
நாமமுடியானும் நகுலனும்உன்தாதை
தாமமுடியானும் சகாதேவன்உன்தாதை
ஆனந்தமார்பாவுனக் காறுபேர்தாதையென்றான்
தோராவடிவழகி துரோபதைஉன்னுச்சி
சோரவளநங்கை சுபத்திரையாள்உன்னுச்சி
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாளுன்னுச்சி
நாகம்பயின்றெடுத்த நாககன்னிஉன்னுச்சி
பொற்கலசவாழ்முலையாள் போககவதிவுன்னுச்சி

பிறவா முடிதரித்த பெண்பெருமாளுன்னுச்சி
பங்கயஞ்சீர்கண்ணுள் பவளக்கொடிஉன்னுச்சி
போதேவருந்தடங்கு பொன்னுருவிதன்னுடனே
ஈரல்பூந்தாரர் எட்டுப்பேராச்சியென்றான்
இவர்யார்காணும்என்று கேட்டீரேஆணழகா

கருணர் விஸ்வகேதுவுக்குப் புனந்திரன் வரலாறுசொல்லல்.

யாருமல்லாஎந்தனுக்கு அழகானகண்மணியே
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தனுடபுத்திரர்காண்
காண்டாவனமெரித்த காளையுடபுத்திரன்காண்
அழகியசீர்கொம்பனையாள் அல்லியுடபுத்திரன்காண்
தோகைமயிலனையாள் துற்சடையாள்மருமகன்காண்
கருநீலம்பூங்குழலாள் கலந்தாரிநாயகன்காண்
அஞ்சுவயதுடைய அர்ச்சுனற்குதந்தையிவன்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்புத்திரன்காண்
உந்தனுக்குதம்பியென்று உரைத்தார்கருணராஜன்
அந்தஉரைகேட்டு ஆனந்தவாழ்மார்பன்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தானெழுந்து
பூவும்புதுமலரும் பொன்னருகுஅட்சதையும்
பொன்னினதுசொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்தான்
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
அப்போதுவிஸ்வகேது ஆணழகனேதுசொல்வான்

விஸ்வகேது புனந்திரனை ஆசீர்வதிக்கிறது.

வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வீர்
மாரனைக்கொன்று மறுபட்டமாண்டிடுவீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
சினத்துவந்தார்பூமுடியை செண்டாட்டமாட்டுவீர்
பகைத்துவந்தார்பூமுடியைப் பருந்தாட்டமாட்டிடுவீர்
கன்னிகளைமாலையிட்டு காளைகளைஈன்றிடுவீர்
மங்கையரைமாலையிட்டு மைந்தர்களையீன்றிடுவீர்
பெண்களைமாலையிட்டு பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
அத்திபுரமாள அரசாளஆண்பெறுவீர்
மதுரைநகராள மைந்தர்களைப்பெற்றிடுவீர்

பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனதாரவாழ்த்தினர்
வாழ்ந்திருப்பீரென்று மனதாரவாழ்த்தினர்
தம்பியைவாழ்த்தியல்லோ தார்வேந்தனேது சொல்வான்
தம்பிதனஞ்சயரை சமர்த்துள்ளவீரியனை
அரண்மனைக்குவந்து அமுதுபொசியுமென்றான்

புனந்திரன் விஸ்வகேதுவுக்கு சொல்வது.

போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
அண்ணன்முகம்நோக்கி ஆணழகனேது சொல்வான்
தமயன்முகம்நோக்கி தார்வேந்தனேதுசொல்வான்
இன்னம்-மூன்றுநாளாய்பொழுது முடிமன்னராளுவது
நாலாநாள்நம்முது ஆருதுகாண்ராச்சியங்கள்
மன்னர்பெருமைகளும் மருமன்னர்சேவகமும்
திரியன்பெருமைகளும் சேனைபேர்சேவகமும்
மூன்றுநாள்தன்னிலே சாயுதுகாண்அண்ணாவே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியும்
நூற்றொருவர்பூமுடியும் நுறுங்கஅடித்தபின்பு
சகுனிதலையுடைத்து தார்வேந்தர்போட்டபின்பு
நமதெண்ணமுடிந்தபின்பு எத்திலங்குபூமுடியே
போதேவருடந்தடங்கும் பொன்னுருவியென்னைச்சி
நமதாச்சியரண்மனையில் எல்லவருங்கூடி
ஒக்கக்கலந்து பொசிப்போங்காண்மன்னவரே
கூடக்கலந்து பொசிப்போங்காண்மன்னவரே
இப்போ-மாற்றான்தன்வாசலிலே பாலமுர்தமுண்ணலாமோ
எதிரியரண்மனையில் இருக்கமுர்தமுண்ணலாமோ
என்றவுரைத்தானே யிந்திரராசாவும்
விஸ்வகேதுதான்கேட்டு மெத்தமனமகிழ்ந்து
இவர்களுங்கொஞ்சி யிருந்தார்களந்நேரம்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்

கருணர் புனந்திரனைப்பார்த்துச் சொல்வது.

கருணரவர்பார்த்துக் கட்டழகரேதுசொல்வார்
எமதஞ்சுபேர்தம்பியரும் அவருடையபுத்திரரும்
மன்னவர்கள்ஐந்துபேரும் மன்னர்பஞ்சபாண்டவரும்
கோணதமாதவத்துக் குந்தியம்மாள்என்தாயும்
யானும்என்புத்திரனும் என்னுடையதேவியரும்
ஒக்கக்கலந்து ஒருகலத்திலுண்போமோ
கூடியிருந்துநாம் கூட்டமுதுண்போமோ
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளுங்கோவமதை

என்—கண்ணாலேகண்டு களிப்பேனேகட்டழகா
மனதாரப்பார்த்து மகிழ்வேனேமன்னவனே
என்றுமவருரைத்து ஏங்கிமனந்தளர்ந்து
துக்கித்துமன்னன் இருகண்ணும்முத்துதிர்த்தான்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவரும் அவராளும்அரசுகளும்
மதுரைவளநாடு வைகைப்பெருங்கரையும்
அத்திப்புரமும் அடங்கலும்உன்னதுகாண்
அங்கவளநாடும் அடங்கலும்உன்னதுகாண்
மன்னவர்கள்பஞ்சவர்கள் வனமேதிரிந்திடட்டும்
ஐயாவேநீரிருந்து அரசாளலாகாதோ
மன்னவரேநீரிருந்து வையகத்தையாளொணுதோ
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமானும்
மன்னர்பஞ்சபாண்டவர்க்கு உடற்பிறப்பென்றாலே
உங்களுக்குமுன்பிறந்த உத்தமனார்என்றுசொன்னார்
காவலர்களேவர்களும் காடேதிரிவார்கள்
ஐயாவேநீரிருந்து அரசாளலாகாதோ
நீரும்அவருமென நிஷ்டூரம்வேறுமுண்டோ
அண்டர்பதியாண்டால் ஆகாதேஐவருக்கும்
நீர்-மன்னர்பதியாண்டால் மனங்கொள்ளமாட்டாதோ
வந்துபதிசேரு மென்றுசொல்லிதெண்டனிட்டான்

கருணர் புனந்திரனுக்குச் சொல்வது

காஞ்சிநாடாளுங் கருணரவர்கேட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரற்குயேதுசொல்வார்
அய்யாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இந்திரரேநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
காவலனார்பஞ்சவர் கட்டழகர்ஐவரும்
என்மாதாபயின்றெடுத்த மன்னவர்களைவருக்கும்
எந்தனுடசேதி யெடுத்தொன்றுஞ்சொல்லாதீர்
கர்னருடசேதியவர் காதிலேயும்போடாதீர்
மன்னர்பஞ்சபாண்டவர்கள் என்வரலாறறிந்தாலே
ஐவர்களும்பூமிவிட்டுக் கானகத்தில்செல்வார்கள்
அவர்தோணியநாளுந் தலைத்தார்வனந்தனிலே
அவர்ஊழியுள்ளகாலமட்டும் உழன்றார்வனந்தனிலே
ஐவர்பஞ்சபாண்டவரும் அரசாளவேணுமையா
நான்படவேணும்படவேணும் பார்த்தன்கையம்பாலே
இன்னம்படவேணும் எழில்விஜயனம்பாலே
போரஞ்சாமன்னர் புனந்திரரேநீர்கேளும்
பாரதமன்று படைபொருதும்வேளையிலே
பதினெட்டாம்நாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே

ஆடிப்பறக்கும் அமூர்தசமர்க்களத்தில்
தேடியுலாவுந் திரள்வேந்தர் கூட்டத்திலே
பக்கம்யூகம்பிரிந்து சண்டைபண்ணும்வேளையிலே
ஆயனொருசாரதியாய் அருச்சுனன்தேரேறி
மாயனொருசாரதியாய் மச்சுரதமேறி
ஆணலழகுமன்னன் அர்ச்சுனராசதுரை
வாளெடுத்துவில்லெடுத்து வளவுதடிகையெடுத்து
அருச்சுனன்தானும் அடுத்துமவன்சண்டைபண்ண
நாகக்கணைதொடுக்க நடுங்கியதுவொடிய
இருவரும்யுத்தம்பண்ணும் வேளையிலேயிந்திரரே
அருச்சுனன்கைபாணம் அறுக்குமேஎன்தலையை
பார்த்தன்கையம்பதுதான் படுக்கென்றறுத்துவிடும்
பட்டுவிழுவேன் பார்த்தன்கையம்பாலே
அற்றுவிழுவேனென் அருச்சுனன்கையம்பாலே
கருணைக்கொன்று விருதுபெற்றேனென்றுசொல்லி
அருச்சுனராசனவ னூதுவான்சங்கெடுத்து
அந்தத்தொனிகேட்டு என்னாச்சிகுந்தியார்
என்னாச்சிகுந்தியம்மாள் உன்னாச்சிஅல்லியரும்
அர்ச்சுனனார்பெண்டுகள் ஐந்திரண்டுஎழுபேரும்
ஐவர்பஞ்சபாண்டவரும் அவர்களுடதேவியரும்
அத்தனைபேரும் அடியனெதிரில்வந்து
என்னைஎடுத்துஅடக்கஞ்செய்ய வேணுங்காணிந்திரனே
போதேவருந்தடக்கும் பொன்னுருவிநாயகமும்
வேல்புருவங்கண்ணனும் விஸ்வகேதுராசாவும்
இருவரையுந்தேடி இங்கேயழைக்கவேணும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்களைக்காக்கவேணும்
தேசத்தையாளும் திரியோதிரன்மாளிகையில்
என்தேவியும்புத்திரரும் இருக்கவேஆகாது
ஐவரிடஞ்சேர்ப்பேனென்று ஆணையிடுயிந்திரரே
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் ஆயாசப்படுவது.

சிவசிவாவென்று செவிதனிலேகையைவைத்து
ஈயத்தைக்காச்சி யிருசெவியில்விட்டாற்போல்
நாராசங்காச்சி நடுச்செவியில்விட்டாற்போல்
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
பச்சைமுகங்கருகி பால்முகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து மறுவார்த்தையெடுத்துரைப்பான்
ஐயர்முகம்நோக்கி ஆணழகன்ஏதுசொல்வான்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
தூலார்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை

நூற்றொருவர்பூமுடியை நொறுங்கஅடித்திடுவேன்
சகுனிதலையைத் தவிடுபொடியாக்கிடுவேன்
சைந்தலாட்டன்பூமுடியைத் தண்டாலடித்திடுவேன்
தங்கைமணவாளன் தறுதலையன்பூமுடியை
அரைநாழிக்கொள்ளையிலே அனலாயெரித்திடுவேன்
வாய்திறந்துநீருரைத்தால் வண்ணமுடிசங்கரிப்பேன்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஐயாவேநீருமல்லோ
ஒக்கயிருந்து அரசாளுமையாவே
காஞ்சிகாடாளுங் கருணரவர்கேட்டு

கருணர் புனந்திரனை ஆசீர்வதிப்பது.

போரஞ்சாமன்னர் புனந்திரரைதானெடுத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்னையாபுனந்திரனே என்னழகுள்ளகண்மணியே
கட்டிக்கரும்பே கணுவில்லாசெங்கரும்பே
முத்துமுடிதரித்த முடிமன்னன்புத்திரனே
பொன்னின்முடிதரித்த புத்திரராசாவே
நீர்சொன்னதுபோராதோ சூழ்ந்தரசையாளணுமோ
பேசினதுபோராதோ பேருலகமாளணுமோ
வாய்திறந்துசொன்னீரே மன்னர்பெருமானும்
ஐவர்பஞ்சபாண்டவரும் அடியேனுங்கூடியிருந்தால்
அரசாண்டபாவனைபோல் ஆச்சுதுகாணிந்திரரே
ஆண்மையுள்ளபுத்திரனே ஆணழகா இந்திரரே
என்தேவியும்உன்னண்ணனையும் சேர்க்கிறேன்யென்றுசொல்லி
உன்னுச்சிஅண்ணனையும் ஐவருடன்சேர்ப்பேனென்று
ஆணையிடுங்காணும் ஆணழகராசமன்னு
என்றுமவருரைக்க எதுசொல்வாரிந்திரரும்

புனந்திரன் ஆணைகூறுவது.

சோலைமலருடைய சொக்கர்திருவாணை
ஆனைமலருடைய அம்மன்திருவாணை
ஏழுலகமாளுகிற யெம்பெருமாளவராணை
ஆதிசிவனாணை ஆயர்மேல்தானாணை
பரமசிவனாணை பார்வதியாள்தன்னாணை
கோனுதமாதவத்துக் குந்தியம்பாள்தன்னாணை
ஐவர்பஞ்சபாண்டவர்கள் யாணழகர்தன்னாணை
ஐயாவேவுந்தன்மீதி லாணைபெரிதுகண்டீர்
தோராவடிவழகி துரோபதைதன்னாணை
போதேவருந்தடங்கும் பொன்னூருவிமேலாணை
பிறவாமுடிதரித்தப் பெண்பெருமாளமேலாணை
சோரவளநங்கை சுபத்திரையாள்மேலாணை
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாள்தன்னாணை.

நாகம்பயின்றெடுத்த நாககன்னி தன்னாணை
அகஸ்தியனார்பெற்றெடுத்த போகவதி தன்னாணை
மலரிலவதரித்த அல்லியம்மாள் தன்னாணை
சேராம்புராசன்பெற்ற செல்வதியாள் தன்னாணை
அஞ்சுவயதுடைய அருச்சுனனார்மேலாணை
மைந்தர் அருச்சுனனார் மேலாணை
ஆச்சியையும் அண்ணனையும் ஐவரிடம்சேர்ந்திடுவேன்
நானேயுடனிருந்துராசனுடன் சேர்ந்திடுவேன்
அஞ்சாதீர் அஞ்சாதீர் என்னுடையஐயாவே
ஏதுக்கும்அஞ்சாதீர் என்னுடையஐயாவே
ஆணைவிடுமென்றுசொல்லி ஆணழகன்தெண்டனிட்டான்
காஞ்சிநாடாளுங் கருணரவர்பார்த்து
ஆணைவிட்டேன்தோஷமில்லை ஆனந்தவாழ்மார்பா
ஒட்டுவிட்டேன்தோஷமில்லை உத்தமனார்புத்திரரே
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவே
ஆணைவிட்டேனென்றவுடன் ஆணழகனேதுசொல்வான்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டு
விடைதாருமென்றுசொல்லி வணங்கினனிந்திரனும்
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்கேட்டு
மதுரைக்குப்போரீரோ மன்னர்பெருமானே
ஆறாயிரம்பாண்டியற்கும் அல்லிமலர்நாயகிக்கும்
என்க்ஷேமமுரையுமென்றார் செல்வனார்புத்திரனார்
அடியேனுடன்சேதியனைவற்கு முறையுமென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
அப்படிக்கேநல்லதென்றான் ஆனந்தவாழ்மார்பன்

கர்ணர் சொல்வது.

காஞ்சிநாடாளுங் கருணரெடுத்துரைப்பார்
பருவமதயானைப் பஞ்சவர்களைவருக்கும்
உருவமதயானை வுத்தமர்களைவருக்கும்
என்சேதியொன்றும் உரையாதேஆணழகா
என்வரலாறுகளொன்றும் மறையாதேமன்னவனே
ஐவர்க்குஞ்சொன்னாலே ஆரணியஞ்சென்றிடுவார்
மற்றவற்குச்சொன்னாலே வெண்காடுரைந்திடுவார்
என்னையரசாள வைத்துமவர்நடப்பார்
வீமன்சபதம் முடியாதுமன்னவனே
அருச்சுனனார் தன்சபதம் முடியாதுமன்னவனே
இரட்டைகள் தன்சபதம் முடியாதுமன்னவனே
பாஞ்சாலன்பெற்றெடுத்தப் பத்தினியாள் துரோபதையாள்
மாதுசபதம்முடியாது மன்னவனே
மாதுமயிர்முடிக்க வேணுங்காண்மன்னவனே

கோதுகுழல்முடிக்க வேணுங்காண்சொற்றவரே
ஒன்றுமுறையாதே வுத்தமர்கள்புத்திரரே
என்சேதியொன்றும் எடுத்துரைக்கவேண்டாங்காண்
இங்கேவந்ததுவும் இவர்களைக்கண்டதுவும்
திரியனுடனுகச் சபதங்கள்பேசினதுவும்
அத்தனையும்நீரெடுத்து அவற்குவுறையுமென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்கேட்டு
அவனுகட்டுமென்றுசொல்லி அப்படிக்கேநல்லதென்று
வந்துமிகப்போதாச்சு எந்தனுடஐயாவே
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தண்டனிட்டான்

புனந்திரன் கர்னரைவிடைகேட்பது.

போய்வாருமிந்திரரே புத்தியுள்ளகண்மணியே
அல்லித்திருமகனே அழகுள்ளகண்மணியே
கட்டியணைத்துகனிவாயை முத்தமிட்டு
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் வேந்தர்பெருமானும்
காஞ்சிநாடாளுங் கர்ணர்முகம்நோக்கி
அங்கிருக்குமன்னவர்கள் அனைவோருங்கைதொழுதார்
கூடவேகைதொழுதார் கொற்றம்பூவீரியரும்
பொன்னுமலைநாடாளும் அண்ணவுங்கைதொழுதார்
போய்வாரோமென்றுசொல்லிப் போர்மன்னர்தான்கேட்க
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமாளும்
அப்படியேநல்லதென்று அனைவருக்கும்விடைகொடுத்தார்
போய்வாருமென்றுசொல்லிப் பொருந்திவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார்கள் வேந்தருடசேனையெல்லாம்

புனந்திரன் சேனையுடன் புறப்பட்டது.

போராஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
யானையருகில்வந்து ஆனந்தவாழ்மார்பன்
வென்றுகெலித்தோமே வேந்தர்பெருமாளே
பாசுபதம்பேறுபெற்றப் பார்த்தர்பெருமாளே
படிபடியென்றான் படுத்ததுஅவ்வானை
முக்கம்பந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
கைத்தலத்தைத்தட்டிக் கறுத்தானையேறினான்
மத்தகத்தைத்தட்டி மதயானைஏறினான்
அம்மானுடதானும் அழகானையேறினார்
மாமனுந்தானுமாய் மதயானைஏறினார்
வந்தவந்தபோர்களெல்லாம் மதயானைஏறினார்
முன்னானைஏறினார் மூன்றுலட்சம்ராசாக்கள்
சரியானைஏறினார் சரியொத்தராசாக்கள்

பக்கானையேறினார் அத்துலட்சம்ராசாக்கள்
றுகானைஏறினார்டுத்து ஞ்சுலட்சம்ராசாக்கள்
ன்னேமுரசெடுத்துப்முன்னானைமேல்போட்டார்
னேமுரசெலாருந்ரும் பின்னானைமேற்போட்டார்
லமன்னரெல்ழஅகப தேரின்மேலேரினார்
லமன்னரெல்லாரும் குதிரையிலேறினார்
குபலமன்னரெல்லரல்ல பல்லக்கிலேறினார்
ன்சிமுஅபிா னமல்லரொம் அழகானைஏறினார்
பட்டர்புலவர் பதினெட்டுமந்திரியும்
சித்தர்புலவர் சிலராசமந்திரிகள்
சிங்கங்கரடிபுலிச் சேரமுழங்கிவர
யாளிபுலிகரடி யறுகில்முழஙகிவர
தங்கள்தங்கள் வாகனத்தை தார்வேந்தரேறினான்

குடையின் பெருமை.

ஏறினபோதே எடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடையாம் முழுமாணிக்கப்பொற்குடையாம்
தங்கக்குடையாங் தவளநெடுங் தடையாம்
பட்டுங்குடையாம் பவளநெடுங்குடையாம்
இரத்தினக்குடையாம் இராஜாக்கள்நற்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியம்பொற்குடையாம்
எடுத்துநிறைந்தார்கள் உண்ணாயிரங்குடைகள்
சுத்திநிறைந்தார்கள் சூரியனைக்காணாதே
பக்கம்நிறைந்தார்கள் பகவானைக்கண்மறைக்க
ஒத்தக்குடைகள்இருந்தந்த உத்தமனும்
பூச்சக்கரகுடைநடுவில் புண்ணியனும்வாராரே
முத்துக்குடைபிடிக்க முடிமன்னர்தேர்நடக்க
இரத்தினக்குடைபிடிக்க ராசாக்கள்தேர்நடக்க
பச்சைகுடைபிடிக்க படைமன்னர்தேர்நடக்க

புனந்திரன் திரியோதிரனை தூதுரைத்து செயித்தேனென்று சின்னமூதுவது.

ஏறினானை எடுத்தார்விருதோசை
ஊதினார்சின்னம் உலமேழுலகதிர
ஊதின்காளை வுலகுதலைதுமுக்க
செம்பொன்னாற்காளை சொருந்துமென்றாதினான்
தங்கத்திருக்காளைத் தானெடுத்துஊதினான்
லென்றுவந்தேனென்றுசொல்லி விருதெடுத்தூதினான்
சாதித்துவந்தேனென்று சங்கெடுத்தூதினான்
செயங்கள்செயங்களென்று ஜெயபேரியடிபடுத
ஜெயித்துவந்தேனென்று அடித்தான்ரணபேரி
அத்திபுரத்து நெடும்வீதிவறுகையிலே

புனந்திரன் அத்திபுரத்துவீதியிலே வருகிறபோது சனங்கள் பார்த்து பேசிக்கொள்வது.

அங்கிருக்குமங்கையர்கள் அனியிழைமாரேதுசொல்வார்
கொம்பனைமாரெல்லாருங் கூடியொன்றாய்ப்பேசிக்கொள்வார்
மாயன்மருமகன்காண் மகாதேவன்புத்திரன்காண்
பாண்டியற்குபேரனிவன் பஞ்சவற்குபுத்திரன்காண்
ஆயிரம்பாண்டியற்கு அருமையுள்ளபேரனிவன்
ஐவருக்கும்நூற்றுவற்கும் ஆனதொருபுத்திரன்காண்
கருநீலாபூங்குழலாள் கலந்தாரிநாயகண்டி
தோகைமயிலனையாள் துற்சடையாள்மருமகண்டி
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்மன்னவற்கும்
பாட்டனார்வீஷ்மருக்கும் பாரறியதுரோணருக்கும்
சிற்றப்பாவிதுரருக்கும் சீருள்ளகாங்கையற்கும்
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமாளுக்கும்
சாமத்துரோகிசகுனியவன் தோழனுக்கும்
மாமன்சகுனியற்கும் மற்றுமுள்ளமன்னவற்கும்
அம்மான்சகுனியற்கும் யவன்தோஷனவற்கும்
தங்கைமணவாளன் தறுதலையானவற்கும்
அங்குள்ளசேனையற்கு அதிகமாய்த்தான்பேசி
எதிராயிருந்துமல்லோ எத்திலங்குபூமுடியான்
சரியாயிருந்துமல்லோ சாதித்தான்மன்னவர்களை
வல்லமையுள்ளப் புருஷனிவன்தாண்டி
இவனழகுஞ்சவுரியமும் ஆண்மைகளுள்ளவண்டி
கலந்தாரிநாயகிக்கு வாய்த்தமணவாளன்
தோகைமயிலனையாள் துற்சடையாள்பெற்றெடுத்த
ஏலங்குழலாளுக்குஏற்றதொரு மணவாளன்
அவரழகுக்கேற்றாப்போல அருச்சுனர்பெற்றெடுத்தார்
இவரழகுக்கொப்பானர் இந்திரருமீடல்லவே
மன்னர்அழகுக்கு மன்னர்களுமீடல்லவே
மன்னர்அழகுக்கு மன்மதனுமீடல்லவே
இப்படியாகச்சொல்லி யல்லவோயிருந்தார்
கொம்பனையாகரல்லாருங் கூட்டமாய்ப்பேசினர்கள்
இப்படியாய்ச்சொல்லி யிருக்கின்றவேளையிலே

புனந்திரன் வேறுவீதிவருகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தார்அழகாக
மற்றுமொருவீதியிலே வாழுகின்றமன்னரெல்லாம்
அந்தத்தெருவீதியிலே வாழுகிறமன்னரெல்லாம்
இந்திரனர்தன்முகத்தை ஏறெடுத்துபார்த்துமல்லோ

அருச்சுனனார்பெற்றபிள்ளை அழகுடையானென்பார்கள்
ஐவருடபுத்திரனிவன் ஆண்மையுள்ளானென்பார்கள்
ஐவருமிங்கே பெற்றுவந்தானென்பார்கள்
தூதுரைத்துமீட்டானே சுந்திரப்பூமுடியான்
எதிராகவாதாடி வென்றான்கானென்பார்கள்
இப்படியாகச்சொல்லி யிருக்கின்றவேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரனார்வீரியரும்
அந்தத்தெருதாண்டி வாரானே ஆணழகன்
மற்றுமொருவீதியிலே மன்னன்நடக்கையிலே
அந்தத்தெருவுதனில் வாழ்கின்றமன்னவர்கள்

புனந்திரனைப்பார்த்து சனங்கள்பேசுகிறது.

மாயனது மருமகனை மதிலேறிப்பார்ப்பார்கள்
எட்டிநடைநடந்துக் கிட்டவந்துபார்ப்பார்கள்
உயர்ந்தமதிலேறி வுற்றுவுற்றுப்பார்ப்பார்கள்
சன்னல்கதவைத் திறந்துமெள்ளப்பார்ப்பார்கள்
ஆணலழகுமன்னன் அர்ச்சுனராசனவன்
அவனழகுக்கேற்றதுபோல் ஆண்பிள்ளைபெற்றார்கள்
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
தன்னழகுக்கேற்றதுபோல் தான்பெற்றார்பிள்ளையென்றார்
இப்படியாய்ப்பேசி யிருக்கின்றவேளையிலே
போராஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தார் அழகாக
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
சித்திரவில் தெருவும்பலதாண்டி
அங்காடிவீதிகளும் அரண்மனையுந்தான் தாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அத்திபுரபட்டணந் தாண்டியந்தவாணழகன்
வனமாய்வனநுழைந்து வாரானேதென்மதுரை

புனந்திரன் மதுரைக்கு வருகிறது.

ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி எலுமிச்சந்தோப்புவிட்டு
சிங்கம்உலாகொடுக்குஞ் சிருநாய்வனந்தாண்டி
கோங்குபெருத்தவனங் கொன்றைகளா பூத்தவனம்
பாதரிமுல்லைப் பருத்தவனந்தாண்டி
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சந்தோப்புவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளந்தோப்புவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்தோப்புவிட்டு
காஞ்சிநாடாளுங் கருணரிடகாவல்விட்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆண்டபெருஞ்சோலைவிட்டு

மாலைமுடியானும் மதுரைதிசைநோக்கி
மதுரைதிசைநோக்கி வாரார்புனந்திரரும்

ஐவரும் மண்டபத்தில் வீற்றிருந்திந்திரனைக் காணுகிறது.

வேந்தர்பெருமான் வெளிமண்டபத்தில் வீற்றிருக்க
ஐவரரையரும் ஆழிவுசந்தாரும்
வேந்தர்பெருமானும் விலாடபுரம்விட்டல்லவோ
போரஞ்சாமன்னர் புரந்திரராசாவும்
மண்டபத்தின்முன்னேவந்து மாலைமுடியானும்
யானைவிட்டுக்கீழிறங்கி யானந்தவாழ்மார்பன்
வாளுருவிக்கைப்பிடித்து வல்லயத்தைதோளிலிட்டு
ஓடமலர்க்கண்ணனும் உள்ளேநுழைந்தான்காண்
பூவும்புதுமலரும் பொன்னுருகிஅட்சதையும்
அட்சதையும்பூபோட்டு அனைவரும்தெண்டனிட்டார்
ஆறுபேர்பாதம் மடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாயாரவாழ்த்தி மனதுபெரிதுகந்த
இருமிருமென்றுசொல்லி யிட்டார்சிம்மாதனங்கள்
இட்டசிம்மாதனத்தி லேறியவர்வீற்றிருந்தார்
ஐவரரையரும் ஆழிவுசந்தாரும்
இந்திரனைத்தரின்பார்த்து எதுயெடுத்துரைப்பார்
போரஞ்சாமன்னர் புனந்திராசாவே
தூதுரைக்கப்போதீரோ சுந்திரப்பூமுடியே
அப்போதுஇந்திரனர்; ஆணழகரேதுசொல்வார்
போனதும்வந்ததும் புதுமைநடந்ததும்
அங்கேநடந்த அதிசயமுள்ளதும்
கண்ணில்லான்மாளிகைக்கு கடுதிநடந்ததும்
கட்டியணைத்தவுடன் கற்றூணுநெரிந்ததும்
மண்டபங்கள்தானிடிந்து மண்ணோடேசாய்ந்ததும்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
ஐவருக்குநாடு கொடேனென்றுசொன்னதும்
அத்தனையுஞ்சொன்னானே யாணழகனிந்திரனும்
நாலுரெண்டுவார்த்தைகளாய் செப்பினன்ராசாவும்
ஐவரரையரும் ஆழிவுசந்தாரும்
எல்லாருங்கேட்டு வெகுவாய்மனங்குளிர்ந்து
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
ஐவரரையரும் ஆழிவுசந்தாரும்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவை

கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
திருஷ்டிகழித்துமல்லோ;சீரானபுனந்திரற்கு
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் வேந்தர்பெருமாளும்

புனந்திரன் மதுரையில் சின்னமூதுவது.

படிபடியென்றான் படிந்ததுஅவ்வானை
முகக்கம்பந்தட்டி மதயானைஏறினான்
கைக்தலத்தைத்தட்டி கறுத்தானைஏறினான்
அம்மானும்அத்தானும் அழகானைஏறினான்
மாமனும்தானும் மதவானைஏறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
அவ்வீதிவீதிநடந்தார் அழகாக
மாணாமுடியானும் மதுரைக்குவந்தானே
ஊதினான்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை வுலகுதலைதுமுக்க
வென்றுவந்தேனென்றுசொல்லி விருதெடுத்தூதினான்
செயம்பெற்றுவந்தேனென்று;சின்னமெடுத்தூதினார்
ஊதினசின்னத் தொனிகேட்டாளுத்தமியும்
பிறவாமுடிதரித்தப் பெண்பெருமாள்தான்பார்த்து

அல்லி தாதிகளைவிட்டு புனந்திரற்கு திருஷ்டி கழிக்கிறது.

தாமக்குழலாளை தாதியரைத்தான்பார்த்து
தூதுரைத்துமீண்டானே சுந்திரப்பூமுடியான்
அருச்சனனார்புததிரற்கு ஆலாத்திகாட்டுமென்றாள்
தாதியெழுந்திருந்து தானுமங்கேஓடிவந்து
முத்தினாலாலாத்தி முப்பதுநூராயிரமாம்
பவளத்தாலாத்தி பத்துநூராயிரமாம்
திருஷ்டிசுழட்டித் தெருவெங்கும்விட்டெறிந்து
கற்பூரவாலாத்திக் காட்டியந்தகாரிழையார்
ஆலாத்திகாட்டி யணியிழைமார்நீங்கின்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஆனைவிட்டுக்கீழிறங்க ஆனந்தவாழ்மார்பன்
ஓடமலர்க்கண்ணானும்;உட்கட்டில்போய்புகுந்து
கோசவளநாட்டான் கொலுவந்துவீற்றிருந்தான்

பாட்டன்மார் தாயார் அல்லி இவர்கள் முதலானவர் வந்து புனந்திரனைக் கண்டதற்கு புனந்திரன் போய்வந்த சங்கதிகளை யுரைத்து சுகமாக மதுரையை அரசாண்டிருந்தது.

ஆறாயிரம்பாண்டியர்கள் அய்யன்மார்வந்துகண்டார்
பெண்பெருமாளல்லியரும் புத்திரரைவந்துகண்டாள்
போனதும்வந்ததுவும் புதுமைகளுள்ளதுவும்

நாலுரெண்டுவார்த்தைகளால் நடப்பித்தாரிந்திரனும்
அனைவற்குந்தானுரைத்து அரசாண்டுவாழ்ந்திருந்தார்
புனந்திரனர்தன்கதையைப் பத்தியுடன்படித்தவர்கள்
இந்திரனற்தன்தூதை யின்பமுடன்சொன்னவர்கள்
பப்பிரவாகன்துதைப் பட்சமுடன்வாசித்தவர்
மண்டலத்தில்கீர்த்தி மாருமல்வாழ்ந்திடுவார்
தேசத்தில்கீர்த்திபெற்று சிறப்புடனேவாழ்ந்திடுவார்
சுந்திரனர்தூதுரைத்தோர் சொக்கர்பதம்பெறுவார்
மன்னவனர்தூதுரைத்தோர் மாயர்பதம்பெறுவார்
மாயர்பதம்பெறுவார் மாருமல்வாழ்ந்திருப்பார்
புனந்திரராசனைப்போல் பூரித்துவாழ்ந்திடுவார்
இந்திரராசனைப்போல் இருந்தரசையாண்டிடுவார்
வெங்கட்டராமபூபன் விருப்பமுடனீன்றெடுத்த
நாராயணசாமி நல்லோனுரைப்படிக்கு
தாரணியிற்கீர்த்திபெற்ற தமிழ்வல்லோன்வேதகிரி
மைந்தன்கந்தசாமியென்பவ னிக்கதையைப்பாடினர்
குற்றங்கள்நேராமல் குறைகளொன்றும்வாராமல்
தப்பிதங்களில்லாமல் தாழ்வொன்றுஞ்சேராமல்
இந்தக்கதைதன்னை இன்பமாய்க்கேட்டவர்கள்
ஆலைபோலேதழைத்து அருகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவார்
வாழிவாழியென்றுசொல்லிவரமளித்தாரீஸ்வரனர்.

வித்வ சிரோன்மணியாகிய புகழேந்திப்புலவர் அருளிச்செய்த
புனந்திரன் தூது முற்றிற்று.

ஆவணக் காப்பக நூலகம்
183457